மு. திருநாவுக்கரசு



# இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

— மு. திருநாவுக்கரசு —

# இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்.

வெளியீடு:-

*தமிழ்த்தாய் பதிப்பகம்,*
*தமிழீழம்.*

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**இலங்கை:**
**இனப்பிரச்சினையின் அடிப்படைகள்**

மு. திருநாவுக்கரசு

முதற்பதிப்பு: 1991 மார்கழி

வெளியீடு: தமிழ்த்தாய் பதிப்பகம்,
தமிழீழம்.

பதிப்பு: மாறன் பதிப்பகம்.
664, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்.

அட்டைப்படம்: நிலாந்தன்

பதிப்புரிமை: தமிழ்த்தாய் பதிப்பகம்

விலை ரூபா: 100/-

**ROOTS OF THE ETHNIC CRISIS IN SRILANKA.**

M. Thirunavukkarsu

First Edition: 1991 December

Publication: Thamil Thai Pathippaham
Tamileelam.

Printing: Maran Printers

Cover Design: Nilaanthan

Copy Right: Thamil Thai Pathippaham.

Cost Rs: 100/-

**படையல்:**

யாழ் பல்கலைக்கழக
நூலகத்திற்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கடந்தகால
வரலாற்றை
ஆராய்வதென்பது
எதிர்காலத்திற்கான
ஒளியைத் தேடிக்
கண்டு பிடிப்பதற்கே.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | |
| முன்னுரை | |
| 1. தேசியவாதம்: தேசிய இனப்பிரச்சினை ஓர் அறிமுகம். | 1 - 25 |
| 2. இலங்கையில் இனங்களின் தோற்றமும் இனப்பிரச்சினை கருக்கொண்ட விதமும். | 26 - 48 |
| 3. இலங்கை: ஐரோப்பியர் வருகையும், பிரித்தானியர் தமிழரை ஒடுக்கிய விதமும். | 49 - 82 |
| 4. சிங்கள பௌத்த எழுச்சி- முதலாம் கட்டம். | 83 - 106 |
| 5. சிங்கள, பௌத்த எழுச்சி: இரண்டாம் கட்டம். | 107-141 |
| 6. மூன்று தசாப்தங்களில் ( 1958- 1990 ) இனப்பிரச்சினையின் போக்கு - சில குறிப்புகள். | 142-157 |
| 7. பல்லின அரசமைப்பு தோல்வி அடைந்தமை: பொதுவான தர்க்கம். | 158-177 |
| 8. முடிவுரை | 178-179 |
| 9. SELECT BIBLIOGRAPHY | 180-182 |
| 10. நன்றி | 183-184 |
| 11. பிழை திருத்தம் | 185-186 |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பதிப்புரை

இலங்கையில் தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடு சிக்கலானது.

சிக்கலான ஒரு விடயத்தை மிக எளிமையாக விளக்க இந் நூல் முயன்றுள்ளது. அதில் வெற்றியும் கண்டுள்ளது.

தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடுகள் முற்றிலும் புதிய கோணத்தில் பார்க்கப்பட்டுள்ளது.

அதற்கான தரவுகள் ஆழமாக ஆராயப்பட்டு அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

தமிழர் தம் பிரச்சினைகள் குறித்து அறிவியல் ஆய்வுநூல்கள் வெளிவருவது மிக மிகக் குறைவு.

இந்நூலுக்கு சார்பாக அல்லது எதிராக வாதங்கள் எழுப்பப்படுவது அவசியம்.

" தம்மதீப " என்ற கோட்பாட்டின் காரணமாக எழுந்துள்ள தேசிய இன முரண்பாடுகளை சுட்டிக்காட்டும் இந்நூல் தமிழர்களுக்கு தனிநாடு ஒன்று தவிர வேறெதுவும் தீர்வாகாது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்னதான் இணக்கம் காணப்பட்டாலும் இறுதியாக சிங்கள - பௌத்த தம்பதிபம் அதை அழிக்கும் என்பது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சிங்களவரா, தமிழரா முதல்வந்தவர்கள்? அந்த வகையில் இத் தீவு யாருக்கு உரித்துடையது? என்ற வகையில் ஆராயாமல் முற்றிலும் வேறு கோணத்தில் நவீன எண்ணங்களின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினையை அலசியிருப்பது இந்நூலுக்குச் சிறப்பைத் தருகின்றது.

உலக அரசியல் உள்நாட்டு அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேசமயம் தமிழர், சிங்களர் தேசிய இனப்பிரச்சினை இத் தீவுக்கு அப்பாலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது.

இலங்கைத் தீவுக்குள் நடக்கும் அரசியல் மாற்றங்களைக் கொண்டு மட்டும் தமிழர் சிங்களர் தேசிய இன முரண்பாடுகள் சரியான முறையில் ஆராயப்பட முடியாது என்பது தெளிவாகவும், விரிவாகவும் காட்டப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் "சர்மா", "உதயன்" என்ற பெயர்களில் முன்னரும் பல நூல்களை எழுதியுள்ளார்.

"உதயன்" என்ற பெயரில்,
"இலங்கையில் இனங்கள், இனப்பிரச்சினை என்பவற்றின் தோற்றம்" (1984) என்ற நூலையும்,

"சர்மா" என்ற பெயரில்,
"தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியாவும்" (1985) என்ற நூலையும்,

உதயன் என்ற பெயரில் விஜயன் என்பவருடன் இணைந்து "இந்துசமுத்திரப் பிராந்தியமும், இலங்கையின் இனப்பிரச்சினையும்" (1986) என்ற நூலையும்,

உதயன் என்ற பெயரில்,
"யாருக்காக இந்த ஒப்பந்தம்" (1987) என்ற நூலையும்.

உதயன் என்ற பெயரில்,
"இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஓர் அமெரிக்க சதி" (1989) என்ற நூலையும்,

தனது இயற் பெயரில்,
"புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு" (1991) என்ற நூலையும் எழுதியுள்ளார்.

இத்துடன் "சாரணன்" என்ற பெயரில் பல அறிவியல், அரசியல் கட்டுரைகளை "சாளரம்" திங்கள் இதழிலும், ஈழநாதம் தினசரிப் பத்திரிகையிலும் தொடர்ந்து எழுதிவருகின்றார்.

தமிழீழ — சிறீலங்கா போர் நடக்கும் மிக நெருக்கடியான இக் காலகட்டத்தில் இப்படியான நூலை எழுதிய திரு. மு. திருநாவுக்கரசு அவர்களை பாராட்டும் அதே வேளை இந்நூலை வெளியிடுவதில் தமிழ்த் தாய் பதிப்பகம் மகிழ்ச்சியடைகின்றது.

மார்கழி 1991

தமிழ்த்தாய் பதிப்பகம்,
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# முன்னுரை

இந்நூல் ஏறக்குறைய எனது ஒன்றரை வருடகால உழைப்பின் வெளிப்பாடு. பாலர் வகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழகம்வரை நான் படித்தது பொதுமக்களின் பணத்தில். இலவசக்கல்வி என்பது இதுதான். ஆகவே மக்களிற்குப் பணிபுரிய வேண்டும் என்பதே எனக்கான கல்வியின் முன்நிபந்தனையும் எனது கடமையுமாகும்.

Revolt in the Temple (விகாரையுள் புரட்சி) என்ற தலைப்பில் டி. சி. விஜயவர்த்தன எழுதிய நூல் 1953 இல் வெளிவந்தது. 700 பக்கங்களைக்கொண்ட இந்நூல் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு வேதாகமம் போன்றது இக்காலகட்டத்தில் பல சிங்கள பௌத்த புத்தஜீவிகள் பேரினவாதத்தின் வளர்ச்சியின் பொருட்டு பெரும்பாடுபட்டனர்.

50 களில் இடம் பெற்ற தீவிர இன ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்து இனப்பிரச்சினை சம்பந்தமாக பல ஆய்வு நூல்கள் வெளிவந்திருக்க வேண்டிய புற நிலை யதார்த்தம் அக்காலகட்டத்தில் பெரிதும் காணப்பட்டது. ஆனால் அக்காலகட்டத்தில் எம் மத்தியிலிருந்த புத்திஜீவிகள் இத்துறை சார்ந்த ஆய்வுநூல்களை வெளியிடத்தவறி விட்டனர். சிங்களவரான தாசி விற்றாச்சி 1958 ஆம் ஆண்டின் இன அழிப்புக்கலவரம் பற்றி எழுதி வெளியிட்ட நூல் இப்பிரச்சினை சம்பந்தமாகச் சிறந்த பதிவேடு என்பதை இங்கு குறிப்பிடலாம்.

அறிவியற் துறையில் முன்னேறியவர்கள் என்று சொல்லப்படுகின்ற, அதுவும் ஒடுக்கப்படும் மக்களாகிய எம்மத்தியிலிருந்து இத்துறைசார்ந்த ஆய்வுநூல்கள் அக்காலகட்டத்தில் வெளிவராமையும் அதற்கான மனப்பாங்கு ஏற்படாமையும் துரதிஷ்டவசமானதே.

உலகம் இடையறாது மாறிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சமும் அவ்வாறே மாற்றங்களை உள்வாங்கி, ஏற்படப்போகும் மாற்றங்களை முன்னுணர்ந்து தீர்க்கதரிசனத்துடன் கருத்துக்களை முன்வைப்பதுதான் சிறந்த ஆய்வாளனின் பணி. அறி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வியற்துறையில் நாட்டமற்றோர் பதவிக்காகவும் சமூக அந்தஸ்துக்காகவும் அத்துறையை நிரப்புவது துயரமானது எம்மத்தியில் அறிவியற்தாகமும் அறிவியல்விழிப்புணர்ச்சியும் ஏற்பட வேண்டும்.

நாம் ஒரு பெரும் அறிவியல் மாற்றத்திற்குட்பட வேண்டும். எம்மத்தியிலுள்ள அறிவியற்துறையானது பிரதானமாக இரு போக்குகளுடையது. ஒன்று காலனித்துவ ஆதிக்க சக்திகளால் நிலைநிறுத்தப்பட்ட ஆய்வு முறைகளும் ஆய்வு மனப்பான்மைகளும். இத்தகைய மரபைக்கொண்ட ஆய்வுகள் தொடர்ந்தும் மேலைத்தேய ஆதிக்க சக்திகளிற்கே பணியாற்றக்கூடியவை. இரண்டு, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யாந்திரிகப் பாங்கான வரண்ட சிந்தனை முறை. இதுவும் ரஷ்யாவிற்கும், சீனாவிற்குமே சேவை செய்யக்கூடியது. மொத்தத்தில் எமது சூழலிற்கும், எமது பிரச்சினைக்கும் எமது தேவைக்கும் ஏற்ப எமக்குப் பொருத்தமான ஒரு சிந்தனை முறை எம்மிடம் இன்னும் வளர்ச்சியடையவில்லை. இத்துறையில் வரட்சியும் வறுமையும் வறுமையிலிருந்து எழுந்த போட்டியும் பொறாமையுமே பொதுப் போக்காயுள்ளது.

கருத்தைக் கருத்தாக எடுக்கும் நாகரீகம் எங்களிடம் இன்னும் வளரவில்லை. நீண்ட பெரும் போராட்டம் ஒன்றில் தொடர்ச்சியாகக் குருதி சிந்தியுள்ள போதிலும் சிந்தனைத்துறையில் மாற்றங்கள் ஏற்படாமை துயரமானது.

வரலாற்றாய்வில் ஒரு பிழையான மரபே எம்மிடம் உண்டு. வரலாறு என்பது சமூகத்தின் இயக்கப் போக்கினையும் அவ்வாறு இயங்குவதற்கேதுவான சக்திகளையும் அடையாளம் காணும் ஒரு துறையாகும். பழங்கதைகளும், சம்பவங்களின் தொகுப்பும் வரலாறாகி விடாது வெளித்தோற்றப்பாடுகளையே வரலாறு என்று விளக்கிவிடுகிறார்கள். ஆனால் அவற்றிற்கு உள்ளோடியாயிருக்கும் அம்சத்தை இவர்கள் கண்டு கொள்வதே கிடையாது. இப்படிப்பட்டவர்களிடமிருந்து வரலாற்றை விடுதலை செய்தாக வேண்டும்.

இந்நூல் தமிழ்மக்கள் ஒடுக்கப்பட்ட வரலாற்றையும் அதற்குப் பின்னாலுள்ள விதியையும் கண்டறியும் ஒரு முயற்சிதான். சிங்களப் பேரினவாதிகளாலும் ஐரோப்பியராலும் இந்தியராலும் தமிழ்மக்கள் எப்படி ஒடுக்கப்பட்டார்கள் என்பதையும், இவர்கள் இவ்வாறு தமிழ்மக்களை ஒடுக்கியமைக்கான அடிப்படையையும் இந்நூல் கண்டறிய முயல்கிறது.

முதலாம்

# அத்தியாயம்

## தேசியவாதம்; தேசிய இனப்பிரச்சினை - ஓர் அறிமுகம்

ஒரு தேசிய இனத்தைமட்டும் உள்ளடக்கிய தேசிய அரசாக அமைவது தேசியவாதம் எனப்படுவது போலவே பல்தேசிய இனங்களை உள்ளடக்கிய பல்தேசிய இன அரசாக அமைவதும் தேசியவாதம் எனப்படும். பல் தேசிய இன அரசிலுள்ள தேசிய இனங்கள் தத்தமது தனித்துவங்களைப் பேணிக்கொள்வதும் தேசியவாதம் எனப்படும். ஆனால் பல் தேசிய இன அரசில் தேசிய இனங்களுக்கிடையில் பிரச்சினை எழும்போது அப்பிரச்சினை தேசிய இனப்பிரச்சினை எனப்படும். தேசியவாதம் பற்றிப் பொதுவாகவும், தேசிய இனப் பிரச்சினை பற்றிக் குறிப்பாகவும் விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவ்வத்தியாயத்தின் முதற்பகுதியாகிய தேசிய வாதத்தை விளக்கும்போது, தேசியவாதத்தின் முக்கியத்துவம், உலகின் அரசுகளும் இனபரம்பலும், தேசிய வாதம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள் வரலாற்றுபூர்வமாக முழு உலமுகம் தேசிய வாதத்திற்கு உட்படுதல், தேசியவாதத்தின் கால, இட, வடிவ வேறுபாடுகள் தேசியவாதத்தை இனம், மதம், மொழி, பிரதேசம் போன்ற எந்த ஒரு தனிவகையிலும் பொதுமைப்படுத்த முடியாமை, தேசிய வாதத்தின் உள்ளடக்கமும் அதன் பிரதான குணாம்சங்களும் ஆகியன நோக்கப்படும். இரண்டாவது பகுதியாகிய தேசிய இனப்பிரச்சினையை விளக்குமிடத்து சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் தேசிய இனப்பிரச்சினையும் பற்றிய சுருக்கமான வரலாறும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய இனப் போராட்டங்களும் நோக்கப்படும்.

# பகுதி I

## தேசியவாதம் ( Nationalism )

தேசியவாதம் நவீன வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாகும். நவீன வரலாற்றில், மனிதநடத்தையின் மையமாக விளங்கும் இத்தேசியவாதம் மனிதகுல வரலாற்றின் ஒரு கட்டமாகும். தேசியவாதத்தை விளங்கிக் கொள்ளாமல் நவீன வரலாற்றின் எந்த ஓர் அம்சத்தையும் சரிவர விளங்கிக் கொள்ள முடியாது. சமூகம், அரசியல், பொருளாதாரம், வாழ்வு ஆகிய அனைத்தையும் குறித்து நிற்கும் ஓர் அம்சமாகத் தேசிய வாதத்தைக் குறிப்பிடலாம். இது சமூகவிஞ்ஞானத்தில் ஒரு கோட்பாடாகவும், அதேவேளை வாழ்வில் ஒரு நடைமுறையாகவும் காணப்படுகிறது.

இன்று, உலகிற் காணப்படும் தேசங்கள், தேசிய இன வேறுபாடுகள் பற்றிய விபரம் பின்வருமாறு அமைகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ அடிப்படையில் உலகில்



154 நாடுகள் இருக்கின்றன. சோவியத் ஆராய்ச்சியாளர்களின் கணிப்பின்படி உலகில் 2000 வரையிலான வேறுபட்ட மக்கட் கூட்டங்கள் (Different Ethnic Groups) அடையாளங் காணப் பட்டுள்ளன. அதேபோல உலகில் 2796 மொழிகள் இனங் காணப்பட்டுள்ளன [1]. டபிள்யு. கொனரின் கணக்கெடுப்பின் படி உலகிலுள்ள அரசுகளிற் காணப்படும் இன விகிதாசாரம் பின்வருமாறு அமைந்துள்ளது. ( சில சிறிய நாடுகள் தவிர ).

" உலகிலுள்ள 132 நாடுகளில் 12 நாடுகள் மட்டுமே (9.1 %) இன அடிப்படையில் ஒரினத்தன்மை வாய்ந்தவை. நாட்டின் மொத்த சனத்தொகையில் 90% திற்கு மேல் ஒரினத் தன்மை கொண்டவர்கள் வாழும் நாடுகளின் எண்ணிக்கை 25 (18.9 %) ஆகும். மொத்த சனத்தொகையில் 75 — 89% திற்கும் இடையில் ஒரினத்தன்மை கொண்டவர்களைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 25. மொத்த சனத்தொகையில் 50 — 75 இற்கும் இடைப்பட்ட விகிதத்தில்; அளவாற் பெரிய இனத்தைக் கொண்ட நாடுகள் 31 ( 23.5%) ஒரு நாட்டின் பல இனங்களுள் ஒரினம் அளவாற் பெரிதாக இருக்கின்ற போதிலும் நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 திற்கும் குறைவானவர்களைக் கொண்ட அரசுகள் 39 (29 5%) "[ 2 ]

எனவே உலகிலுள்ள 90 வீதத்திற்கு மேற்பட்ட நாடுகள் பல்லினத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன. ஆகவே தேசியவாதத்தைப் பொறுத்தவரையில் பல்லினத் தேசிய வாதம் என்பது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது. (பல்லினத் தேசியவாதம் — (Multi Nationalism).

பல்லினத் தேசிய வாதத்தைப் பிரதேசத் தேசியவாதம் (Territorial Nationalism) என்றும், அரசமத்தியத் தேசிய வாதம் (State Centric Nationalism) என்றும் அழைப்பதுண்டு. இவற்றுள் அரசமத்தியத் தேசியவாதமென்ற பதம் தற்போது முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

பல்லினங்களுள்ள ஒரு நாட்டில் அரசு என்பது மையக்கருத்தாக அமைய அதனைப் பொதுமையாகக் கொண்டு தேசிய வாதம் வளர்வதுண்டு, அல்லது அரசமத்தியத் தேசியவாதம் தோல்வி காண (இனங்களுக்கிடையிற் பாரபட்சம் எழும்போது) தேசிய இனப்பிரச்சினை உருப்பெற்று தேசிய இனம் சார்ந்த தேசியவாதம் வளர்வதுண்டு. எவ்வாறாயினும் புள்ளிவிபர ரீதியாக நோக்கும் போது பல்லினத் தேசியவாதம் ஒரு முக்கிய



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அம்சமாக விளங்குகின்றதென்பதும், அத்தேசியவாதம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றதென்பதும் கவனிக்கத்தக்கது.

தேசியவாதம் ஒரு வாழ்க்கை முறைமை (System) ஆகவும், சர்வதேச ஒழுங்கமைப்பாகவும் விளங்குகின்றது. தனிமனிதன் தொடக்கம், ஐக்கிய நாடுகள் சபை ஈறான சர்வதேச ஸ்தாபனங்கள் வரை, தேசியவாதமென்பது ஓர் ஒழுங்கமைப்பாக, ஒரு முறைமையாகக் காணப்படுகின்றது. தனிமனிதன் சிறு தேசிய இனமாகவோ (National Minority) அன்றேல் தேசிய இனமாகவோ (Nationality) அமைய, தேசிய இனம் தேசிய அரசாகவோ (Nation State) அல்லது பல்தேசிய இனம் (Multi Nationalities) பல்தேசிய இனஅரசாகவோ (Multi Nation — State) அமைய, அரசுகள் சர்வதேச ஸ்தாபனங்களாக அமைய, உலகம் ஓர் ஒழுங்கமைப்பைப் பெற்றுள்ளது.

தேசியவாதம் தேசங்களின் சுயநிர்ணய உரிமை (Right of Self — Determination of Nations) என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. இந்த உரிமையின் அடிப்படையிற்றான் அரசுகளும், தேசிய இனங்களும் ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென்பது பொது விதி. இந்த விதி மீறப்படும் போது இவ்வொழுங்கமைப்பும் மீறப்படுகின்றது. அரசுகளுக்கிடையேயான ஒழுங்கமைப்பு (நாடுகளின் சுயநிர்ணய உரிமை) மீறப்படும் போது அது நாடுகளுக்கிடையேயான பிரச்சினையாகவும், பல்தேசிய இன அரசுக்குள் தேசிய இன ஒழுங்கமைப்பு (தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை) மீறப்படும் போது அது தேசிய இனப் பிரச்சினையாகவும் உருவெடுக்கிறது.

எனவே தேசியவாதத்தை வாழ்விலிருந்து பிரித்து நோக்க முடியாதுள்ளது. தேசியவாதம் சமூக வாழ்வின் மையஸ்தானமாகவும், சமூக விஞ்ஞானத்தின் மையஸ்தானமாகவும் விளங்குகின்றது. அதாவது தேசியவாதத்தை விளங்கிக்கொள்ளாமல் சமூக நடத்தையைச் சரிவர விளங்கிக் கொள்ள முடியாது. சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஓர் அம்சமாகத் தேசியவாதம் காணப்படுகின்றமையால் தேசியவாதம் சமூக வாழ்வின் மையஸ்தானமாக விளங்குகின்றது. எனவே தான் சமூக விஞ்ஞானத்தின் பல்துறைசார்ந்த அறிஞர்களின் ஈடுபாட்டையும் ஒருங்கே கவரும் தன்மையுள்ளதாகத் தேசியவாதம் காணப்படுகின்றது. குறிப்பாக இன்



ஆராய்ச்சியில் வரலாறு, அரசியல், விஞ்ஞானம், பொருபளில், மானிடவியல், சமூகவியல், அரசியற்புவியியல் போன்ற பல்வேறு துறைகளையும் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். Ethnography எனும் ஒரு துறை தேசியவாதம் பற்றியும் இனப்பரம்பல் (Ethnic Distribution) இனங்களுக்கிடையேயான உறவுகள் (Ethnic Relation) பற்றியும் ஆராயும் ஒரு விசேஷ துறையாகத் தற்போது வளர்ந்து வருகின்றது.

தேசியவாதத்தைப்பற்றி ஆராய்வதில் பல்துறைசார்ந்த அறிஞர்கள் ஈடுபட்டிருப்பதுடன் பல்வேறுபட்ட கருத்துக்களும் குறிப்பிடப்படுகின்றன. சில ஆராய்ச்சியாளரின் கருத்துக்களை இங்கு நோக்குதல் அவசியமாகும்.

"ஒரு தேசிய இனம் என்பது ஒருமைப்பாட்டுணர்வாலும், பொதுப்பண்பாட்டாலும், தேசியப் பிரக்ஞையாலும் இணைக்கப்பட்டுள்ள ஒரு மக்கள்திரளைக்கொண்ட சமூகப்பிரிவாகும்." [3] என வோற்சன் (Watson) என்பவர் குறிப்பிட்டார்.

இது பற்றி ஹான்ஸ் கொன் (Hans Kohn) குறிப்பிடுகையில்: "தேசிய இனப்பண்புகள் என்பன இந்த இயங்கிக்கொண்டிருக்கும் வரலாற்று உயர் சக்திகளால் உருவாக்கப்படுபவை ஆகும். எனவே அவை நெகிழ்ச்சிக்குட்பட்டவையாக சிக்கல் வாய்ந்தவையாக இருப்பதோடு இவை இப்படித்தான் என ஒரு திட்டவட்டமான வரையறைக்குட்படுத்திக் கூறப்பட முடியாதவையாகவும் உள்ளன. பொதுப்பூர்வீகம், பொது மொழி, தொடர்ச்சியான நிலப்பரப்பு, அரசியல் இருப்பு, பழக்க வழக்கங்கள், மரபுகள், சமயங்கள் போன்ற புற நிலை வேறுபாடுகளிற்கேற்ப தேசியமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது......... தேசிய இனங்களின் உருவாக்கத்திற்குப் புறநிலைக்காரணிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தபோதிலும் உயிர்த்துடிப்பும், செயல்முனைப்பும் கொண்ட ஒரு பொதுமனப்பாங்கே இன்றியமையாத ஒரு கூறாக இருக்கிறது. இப் பொதுமனப்பாங்கை நாம் தேசியவாதம் என அழைக்கின்றோம். இம்மனநிலை மக்கள் கூட்டத்தின் பெரும்பான்மையோரிற்கு எழுச்சி உணர்வை ஊட்டுகின்றது. அக்கூட்டத்தில் அடங்கும் எல்லோரிற்கும் அது உணர்வூட்டுவதாக, அது தன்னை இனங்காட்டுகிறது" [4]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

றிச்சேர்ட் (Richard) என்பவரின் கருத்துப்படி: ''தேசியவாதம், பல சிறு அரசியல்கூறுகளை ஒன்றிணைத்து அரசியல் புவியியல் ரீதியாக ஒரு பெரிய அலகை ஆக்குகிறது. வணிக வளர்ச்சிக்குத் தடையாக இருந்தவற்றை அகற்றி பெரிய உள்நாட்டுச் சந்தைகளை உருவாக்கி அளவுத்திட்ட சிக்கனங்களை ஏற்படுத்தி அது பொருள் உற்பத்தி ஆதிக்கத்துடன் ஒத்துழைக்கின்றது. ஒரு பொது மொழி இவ்வகையிலான தொடர்புகளை எளிதாக்குகின்றது. அத்துடன் அம்மொழியைப் பேசும் மக்களை அது உணர்ச்சி ரீதியாக பிணைக்கின்றது. தேசிய இலக்கியமும் தேசிய மொழியும் நம்பிக்கைக்கு வழிகோலுகின்றன. பொதுப்பண்பாடு, சமயம், , பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, குழவுள்ள உலகைப்பற்றி நோக்குகள் போன்ற இவையாவும் சமுதாயப்பிணைப்பை மேலும் வலுப்படுத்துகின்றன.'' [5]

லெனினின் கருத்துப்படி: ''சமுதாய வளர்ச்சிப்படிகளின் ஒரு கட்டத்தில் முதலாளித்துவத்தின் ஒரு தவிர்க்க முடியாதவடிவமாக தேசிய இனங்கள் உருப்பெற்றன.''

உலகம் முழுவதிலும் நிலமானியமுறையை முதலாளித்துவம் இறுதியாகத் தோற்கடித்த காலப்பகுதி தேசிய இயக்கங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

'' நிலமானிய முறையும், எதேச்சாதிகாரமும் வீழ்ச்சியுற்ற அதேசமயம் முதலாளித்துவ ஜனநாயக சமுதாயமும், தேசிய அரசுகளும் உருவான காலப்பகுதியுமான இக்காலகட்டத்தில்தான் முதன்முறையாக தேசிய இயக்கங்கள் வெகுசன இயக்கங்களாக மாறின. மேலும் பத்திரிகைத்துறையூடாகவும் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்குபற்றுவதன் மூலமும் மற்றும் வழிகளினாலும் எல்லா வர்க்கத்தினரையும் ஏதோ ஒரு வழியில் இத்தேசிய இயக்கங்களே அரசியல்துறையில் பிரவேசிக்கச்செய்தன.

'' ஒடுக்கப்படும் எந்தவொரு முதலாளித்துவ தேசியவாதத்திலும் கூட ஜனநாயகம் அதன் உள்ளடக்கமாக அமைந்துள்ளது'' [6]

கார் (Carr) என்பவருடைய கருத்துப்படி: '' மத்திய கால ஒழுங்கமைப்பைப் பேணிவந்த உள்ளூர் சந்தைகளையும், கட்டுப்பாட்டு விதிகளையும், பொருளாதாரத் தனித்தன்மைகளையும், வணிகவாதம் உள்நாட்டுரீதியாகத் தகர்த்தெறிந்தது. மேலும்



அரசு ஒரு பொதுப்பொருளாதார அலகாக விளங்குவதற்கும் வர்த்தகம்,உற்பத்தி போன்றவிடயங்களில் அதற்குரியநிலப்பரப்பு முழுவதிலும் அது தனது பகிரப்படாத முழு அதிகாரங்களையும் நிலைநாட்டுவதற்கும் வணிகவாதம் வழிகோலியது. வெளிநாட்டுரீதியாகப்பார்க்கும் போது வணிகவாதம் அரசின் செல்வத்தைப் பெருக்கி அதன்மூலம் அரசின் வல்லமையையும் சக்தியையும் அதிகரிக்க உதவியது.

'' பல உள்ளூர் பொருளாதார அமைப்புகளிற்குப்பதிலாக அந்த இடத்தில் தனியொரு பொருளாதார அமைப்பை பதிலீடு செய்து தேசிய அரசியல் அலகொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அரசு அதிகாரமும் பொருளாதார வல்லமையும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்தன.'' [7]

தேசியவாதம் பற்றி ஆராய்ச்சியாளரிடையே பலவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றபோதிலும் பல ஒத்தகருத்துக்களும் நிலவுகின்றன. தேசிய வாதத்தில் இரு கட்டங்கள் உண்டென்றும் அதில் முதலாவது கட்டம் ஜனநாயகத்தன்மை (Democratic Coatent) வாய்ந்ததென்ற கருத்து பொதுவாக எல்லா ஆராய்ச்சியாளரிடமும் உண்டு. இதில் கூறப்படும் இரண்டாவது கட்டமென்பது, ஏனைய இனங்களை ஒடுக்குவதாகவோ அல்லது ஏனைய அரசுகளை ஆக்கிரமிப்பதாகவோ மாறும் கட்டமாகும். இதை இன்னொரு விதத்தில் தேசியவெறி என வர்ணிக்கலாம். எனவே தேசியவாதத்தில் குறிப்பிடப்படும் முதலாவது கட்டம் முற்போக்கானதாக அமைய இரண்டாவது கட்டம் பிற்போக்கானதாய் அமைகிறது. இன்றைய சிங்கள பௌத்த தேசியவாதம், யூத தேசியவாதம் என்பன இரண்டாவது கட்டத்தையே சார்ந்தனவாகும்.

தேசியவாதத்தைப்பிரஞ்சுத் தேசியவாதத்துடன் தொடர்புறுத்தாத ஆராய்ச்சியாளர்களே இல்லையெனலாம். மார்க்சிச ஆராய்ச்சியாளர்களும் சரி, மார்க்சிஸ்ட் அல்லாத ஆராய்ச்சியாளர்களும் சரி பிரெஞ்சுப் புரட்சியை தேசியவாதத்தின் முக்கிய வெளிப்பாடாகக் கொள்கின்றனர். முதலாளித்துவத்தின் தோற்றத்தோடும் வளர்ச்சியோடும் தேசியவாதத்தை அடையாளம் காணும் மார்க்சிஸ்டுக்கள் பிரெஞ்சுப் புரட்சியை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாகக் குறிப்பிட்டு, தேசியவாதத்துடன் இணைத்துக் காட்டுகின்றனர். பொதுவாக பிரெஞ்சுப் புரட்சியைத் தேசியவாதத்துடன் இணைத்து விளக்குவதற்கு ஒரு நல்ல உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிடலாம்: "1789 இல் பிரான்சில் ஏற்பட்ட புரட்சியோடு பிரென்ஸ் அரசானது மன்னன் அரசு என்ற நிலைமாறி மக்கள் அரசாகியது. அது தேசிய அரசாக தாய்நாடாக மாறிற்று. இத்துடன் மன்னர் அரசுகளின் காலகட்டம் முடிந்தது."

பிரெஞ்சுப் புரட்சி புதிய சமூகத்தை, புதிய அரசு நிறுவனத்தை, புதிய சமூக நிறுவனத்தை, புதிய பொருளாதார, நிறுவனத்தை, புதிய சட்ட ஒழுங்கமைப்பைக் குறித்து நின்றது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகள் புரட்சியின் சுலோகங்களாய் இருந்தன. பிரெஞ்சுப் புரட்சியுடன் அரசியலானது ஒரு வெகுஜன அரசியலாக வடிவம் பெற்றது. இறைமை என்ற சொல்லிற்குப் புது அர்த்தம் பிறந்தது. மக்கள் இறைமை ( Popular Sovereignity ) என்ற பதம் வரலாற்றில் பிரவேசித்தது. தேசிய வாதம்; சமூக அரசியல் பொருளாதார விடுதலையையும், சமத்துவத்தையும் ( Equality ) மக்கள் இறைமையையும் குறித்து நின்றது என்ற வகையில் இதனைப் பிரெஞ்சுப் புரட்சியுடன் தொடர்புபடுத்துவது இயல்பானதாகவே உள்ளது.

மேலும், நவீன தேசியவாதத்தின் பிறப்பிடம் மேற்கைரோப்பா என்பதிலும் ஆராய்ச்சியாளர்களிடம் கருத்து வேற்றுமை இல்லை. தேசியவாதம் தோற்றம் பெற்ற காலப்பகுதி பற்றி கருத்து வேற்றுமைகள் உள்ள போதிலும் 10ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்தே தேசியவாதத்தைத் தெளிவாக அடையாளம்காணமுடியும் என்பதில் ஆராய்ச்சியாளரிடையே ஒற்றுமை காணப்படுகின்றது. 10ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இதனைத் தெளிவாக அடையாளம் காணக்கூடியதாயுள்ள போதிலும், இதன் மூலக் கூறுகள் இக்காலத்துக்கு முன்பிருந்தே வளர்ந்து வந்துள்ளன.

தேசியவாதம் உலகின் நாலாபுறத்திலும் ஏக காலத்தில் ஒரே வடிவத்தில் தோற்றம் பெற்றதல்ல. அது இடம் காலம் போன்ற வேறுபாடுகளைக் கொண்டிருப்பதுடன், இடம் காலம் போன்ற வேறுபாட்டிற்கேற்ப வேறுபாடான அம்சங்களையும், போக்குகளையும் கொண்டு காணப்படுகின்றது. அதாவது ஒரு தேசியவாதம் சார்ந்துள்ள வரலாற்றுச் சூழலுக்கேற்ப அது வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. கைத்தொழில் வளர்ச்சி, பொருளாதார வளம், பிரதேச காவல், பேரரசுகள், குடியேற்ற நாடுகள் போன்ற வேறுபட்ட அம்சங்களிற்கேற்ப தேசியவாதத்திலும் வேறுபட்ட வடிவங்கள் காணப்படுகின்றன.



இத்தகைய வேறுபாடுகள் தேசியவாதத்தில் காணப்படும் போதிலும் அடிப்படையில் அது ஒரு பொதுத்தன்மை உடையதாக உள்ளது.

தேசியவாதம் பற்றி உலகம் தழுவிய வரலாற்றுப் போக்கை இங்கு பொதுப்பட நோக்குதல் அவசியமாகும். 16ம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றில் இருந்து நவீன தேசியவாதத்தின் மூலக் கூறுகளை அடையாளம் காணலாம். மேற்கைரோப்பாவை எடுத்து நோக்கும்போது இக்கால கட்டத்தில் வணிகவாதம், நாடு பிடிக்கும் போட்டி, அதிகாரங்கள் குவிக்கப்பட்ட பேரரசர்களின் எழுச்சி ( Despotism ) போன்றனவும், மேலும் மறுமலர்ச்சி, மதச் சீர்திருத்தம், கைத்தொழிற் புரட்சி, சுதேச மொழிகள், சுதேச கலாச்சாரங்கள் என்பன முதன்மையடைந்தமை போன்ற அம்சங்கள் அனைத்தும் இணைந்து தேசியவாதமாக வடிவம்பெற்றது. 18ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து அடையாளம் காணமுடிகின்றது. இவ்வாறு இடம்பெற்று வந்த சகல மாற்றங்களினதும் மொத்த வெளிப்பாடாகப் பிரெஞ்சுப் புரட்சி அமைந்தது எனக் கொள்ள இடமுண்டு. எனவேதான் இது தேசியவாதத்துடன் சேர்ந்து இனங்காணப்படும் புரட்சியாகவும், அதே வேளை உலகு முழுவதிற்கும் முக்கியத்துவம் மிக்க புரட்சியாகவும், கொள்ளப்படுகின்றது. இவ்வாறாக தேசியவாதம் முதலில் வடிவம் பெற்ற பிரதான மேற்கைரோப்பிய நாடுகளாக பிரான்ஸ், பிரிட்டன், போர்த்துக்கல்; ஒல்லாந்து என்பன விளங்குகின்றன.

வட ஐரோப்பாவில்; ஜேர்மனியும், தென் ஐரோப்பாவில் இத்தாலியும் மேற்கைரோப்பியத் தேசியவாத நிலைமைகளிலிருந்து சற்று வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளன, மேற்கைரோப்பிய நிலைமைகளுடன் கூடுதலாக மேலும் ஒரு அம்சத்தை இங்கு காணலாம். பிரிந்து பல்வேறு சிறு ராஜ்ஜியங்களாக இருந்த ஜேர்மனி ஒரு ஐக்கிய அரசாக உருப்பெற்றது. இதேபோல இத்தாலியும் ஐக்கியமடைந்தது. இவை 19ம் நூற்றாண்டின் முக்காற் பகுதியில் தான் தேசிய அரசுகளாக ஐக்கியப்பட்டன.

தேசிய வாதம் தோற்றம் பெற்றதிலுள்ள கால பிரதேச வேறுபாடுகளையும், அது தோற்றம் பெறுகையில் நிலவிய வேறுபட்ட சூழ்நிலைகள், காரணங்கள் என்பவற்றையும் சற்று மேலோட்டமாகப் பின்வருமாறு விளக்கலாம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குடியேற்ற நாடுகளில் முதலில் தேசிய அரசாக உருப்பெற்றது ஐக்கிய அமெரிக்காதான். 1776 இல் ஐக்கிய அமெரிக்கா பிரித்தானியாவிடமிருந்து விடுதலைபெற்றது. 1776 இல் இது விடுதலையடைந்த போதிலும் அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தோடுதான் ( 1860களில் ) ஐக்கிய அமெரிக்கா ஒரு நவீன தேசிய அரசாக உருப்பெற்றது. இந்த உள்நாட்டு யுத்தத்தின் மூலம் தான் இங்கு குடியேறி வாழ்ந்துவந்த பல்வேறுவகைப்பட்ட மக்கள் மத்தியிலும் நிலவிய பல்வேறு வேறுபாடுகளும் நீக்கப்பட்டு ஒரு தொடர்பும், ஐக்கியமும், தேசியத்தன்மையும் உருப்பெற்றது. இது பற்றி ஹான்ஸ்கொன் குறிப்பிடும் கருத்து நோக்கத்தக்கது:

"தனிமனித சுதந்திரத்திலும் சகிப்புத் தன்மையிலும் அமெரிக்கத் தேசிய இலட்சியம் முதலில் கட்டியெழுப்பப்பட்டிருந்த போதிலும், இந்த உள்நாட்டு யுத்தத்தின் மூலமாகத்தான் அங்குள்ள குழுக்களிடையே நிலவிய வேறுபாடுகள் தோற்கடிக்கப்பட்டதுடன், பல்வேறு இன, மதப் பின்னணிகளில் இருந்து குடிபெயர்ந்து வந்த கோடிக் கணக்கான மக்களை தேசியத் தன்மை வாய்ந்த ஒரு முழுமையான அமைப்பாக ஒன்றிணைக்கவும் முடிந்தது" [ 9 ]

அமெரிக்கத் தேசியவாதம் இருவகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒன்று ஐரோப்பாக்கண்டத்திற்கு வெளியில் தேசியவாதம் தோற்றம் பெற்ற முதலாவது நாடு என்ற வகையிலும் மற்றது தேசியவாதம் தோற்றம் பெற்ற குடியேற்ற நாடு என்ற வகையிலுமாகும்.

தேசம், தேசிய இனம், தேசியவாதம் என்பன பற்றிய கோட்பாடு ஐரோப்பாவில் உருவாகி அது உலகம் முழுவதிலும் விரிவடைந்துள்ளது. எனவே ஐரோப்பிய நோக்கு நிலையில் இருந்து ஐரோப்பா அல்லாத தேசங்களின் தேசியவாதத்தைப் பார்க்கின்ற போக்கு இயல்பாகவே இடம்பெற்று வந்துள்ளது. இவ்வாறு பார்ப்பது குறைபாடுள்ள விளக்கங்களிற்கு வழிகோலுகின்றது என்ற அபிப்பிராயம் தற்போது ஆராய்ச்சியாளரிடையே ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் உருப்பெற்ற தேசியவாதமானது அதன் தன்னியல்பான உள்நாட்டு அரசியல், சமூக, பொருளாதார மாற்றப்போக்கோடும், நாடு பிடித்தற் போட்டியோடும் தொடர்புடையதாக அமைய, ஐரோப்பாவல்லாத தேசங்களின்



அந்நியரால் அந்நாடுகளின் சமூக, அரசியல், பொருளாதாரப் போக்குகள் பலாத்காரமாக மாற்றப்பட்டதிலிருந்தும் அந்நாடுகளின் வாழ்வு ஏகாதிபத்திய நலன்களுக்குகந்த வகையில் சீரழிக்கப்பட்டதிலிருந்தும் தமது தேசங்களில் நிலைகொண்டுள்ள அன்னிய அரசுகளைத் துரத்துவதுடன் தொடர்புற்றிருந்தன.

எனவே இத் தேசியவாத சகாப்தத்தில் ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றுச் சூழ்நிலை, வரலாற்றுத் தேவைகள், வரலாற்றுப் போக்கு என்பவற்றிலிருந்து ஐரோப்பாவல்லாத நாடுகளின் வரலாற்றுத்தேவை, வரலாற்றுப்போக்கு என்பன வித்தியாசப்படுகின்றன. இவ்வாறு வேறுபட்ட வரலாற்றுச் சூழ்நிலை, வரலாற்றுத்தேவை, வரலாற்றுப்போக்கு என்பனவற்றை இவை கொண்டிருந்தபோதிலும் ஐரோப்பிய அரசுகள் ஈட்டிய சமூக, பொருளாதார, அரசியற் சாதனைகளை ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடும் ஈட்டும் நோக்கத்தைக் கொண்டிருந்தமையாலும், அதாவது ஒத்த நோக்கங்களின் அடிப்படையில் ஐரோப்பிய அரசுகளைப் போன்ற ஒத்த சமூக, அரசியற், பொருளாதார நிறுவன அமைப்புக்களை நிர்மாணித்தமையாலும், தேசியவாதம் என்ற உலகப் பொது வரைவிலக்கணத்தின் கீழ் சகல அரசுகளும் உட்பட்டன. எனவே உலகிற் காணப்படும் அரசுகள் அனைத்துக்குமிடையே தேசியவாதத்தில் வேறுபட்ட தன்மைகள் காணப்பட்டாலும், இவை தேசியவாதம் என்ற பொது அடிப்படையைக் கொண்டிருப்பதன் ரகசியமும் இதுவே.

ஐரோப்பாவிற்கு வெளியே அமெரிக்காவிற் தேசியவாதம் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் தேசியவாதம் தோற்றம் பெற்றது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பை மையமாகக் கொண்ட தேசியவாதம் உருப்பெற்றது. முதலாம் உலக மகா யுத்தத்தை ஒட்டிய காலகட்டத்தில் இவ்வாறான தேசியவாதம் வீறுபெறத் தொடங்கியது. இரண்டாம் உலக மகாயுத்தத்தோடு இந்நாடுகளின் மீதிருந்த ஏகாதிபத்தியத்தின் பிடிகள் தளரத்தொடங்கின.

தேசியவாதமானது பல்வகைப் பரிமாணங்களைக் கொண்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய வாதத்தின் ஒரு பக்கம் தான். ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் தாக்கத்தில் இருந்து அவற்றின் விளைவாக தேசியவாதம் பரிணாமம் பெற்றது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளை ஏகாதிபத்திய அரசுகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கைப்பற்றித் தமது ஏகாதிபத்திய நலனிற்கேற்ப புதிய அரசியல் பொருளாதார ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவந்தன. இப்பிராந்தியத்தில் உள்ள பல்வேறு சிறு அரசுகளை ஒரு அரசமைப்பின் கீழ் ஒருங்கிணைத்தன. தமது இலகுவான அரசியல் நிர்வாகத்தின் பொருட்டு பல்வேறுவகைப்பட்ட மக்கட் கூட்டத்தை பிரதேச ரீதியில் ஒரு நிர்வாக அலகின் கீழ் கொண்டுவந்தனர். வேறுபட்ட, நீண்டபெரும் பிரதேசங்களை எல்லாம் வீதிகள் அமைத்தும், புகையிரதப் பாதைகளை அமைத்தும், தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தியும் ஒருங்கிணைத்தனர் வர்த்தகம், பொருளுற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பொருளாதார ரீதியாக நாட்டு மக்களை ஒருங்கிணைத்தனர். மேலும் பொது அரச நிறுவனங்களை உருவாக்கி உள்ளூர்சட்டங்களை நீக்கி, பொதுச்சட்ட வரையறைகளை ஏற்படுத்தினர். அத்துடன் கல்வி, மற்றும் பொது அரங்கப் பங்கெடுப்பு, பத்திரிகைகளின் தோற்றம் என்பவற்றால் பொதுமைப்பாடான தன்மைகள் வளர்ந்தன. ஏகாதிபத்தியம் தோற்றுவித்த இத்தகைய அம்சங்கள் அனைத்தும் தேசியவாதத்திற்கான பௌதிக அடித்தளத்தை அமைத்தன. ஏகாதிபத்தியம் தன்நோக்கு நிலையிலிருந்து செயற்பட்டதாயினும், அதன் விளைவு தேசியத்திற்குத் துணைபுரிந்துள்ளது. இப்பௌதிகக் காரணிகளைத் தளமாகக்கொண்டு தேசிய உணர்வு மக்கள் மத்தியில் எழுச்சி பெறலாயிற்று. ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்க்கும் வகையில் தேசிய உணர்வுகளை தேசியத்தலைவர்களும், கலை இலக்கியங்களும், பத்திரிகைகளும் வளர்த்தெடுத்தன. இதனால் மக்கள் ஒரு தேசிய சமூகமாக வளர்வதற்கான அகப்புறக் காரணிகள் கனிவடைந்தன. இக்கருத்திற்கு நிகராக இந்தியாவிற் பிரித்தானியர் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றி மார்க்ஸின் கருத்தை நோக்குதல் பொருத்தமானதாகும்.

> "மாபெரும் மொகலாயர் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகமாக இந்தியாவின் ஐக்கியம் விஸ்தரிக்கப்பட்டது, உறுதிப்படுத்தப்பட்டது. அதன் புனர் நிர்மாணத்திற்கு இது முதற் தேவையாக இருந்தது. பிரிட்டனின் உடைவாளாற் திணிக்கப்பட்ட அந்த ஐக்கியம், இப்பொழுது மின்சாரத் தந்தி மூலம் பலப்படுத்தப்பட்டு, நிரந்தரமாக்கப்படும். ஆங்கிலேய ராணுவ அதிகாரிகளால் உருவாக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட சுதேசி இராணுவம் இந்தியாவில் சுய விமோசனத்திற்கு முன் தேவையாக இருந்தது;



> மேலும், முதல் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிற்குப் பலியாவிடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இது முன் தேவையாக இருந்தது" [10]

இப்பிராந்தியங்களில் பிரதேச தேசியவாதமே தோற்றம் பெற்றதால் ஒரு பிரதேசத்தில் அடங்கும் பல்லின மக்கள் சம்பந்தமாக சிக்கலான வளர்ச்சிகளையும் இவ்வரசுகள் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

அந்நியனால் கைப்பற்றப்பட்டு பிரதேசரீதியில் ஓரரசின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த பல்வேறு இன, மொழி, மதங்களைச் சார்ந்த மக்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடிப்படையில் பிரதேச ரீதியாக ஒன்றுபட்டனர். ஆனால், சுதந்திரத்தின் பின்பு இந்நாடுகளில் பல்லின மக்களிடையே தேசிய ஐக்கியத்திற்கான முயற்சிகள் ஒரு புறமும்; தேசிய இனங்களின் தனித்தன்மையும், அவை விழிப்படைதல் மறுபுறமுமான நிகழ்வுகள் இடம்பெறலாயின.

தேசியவாத அடிப்படையில் ஒரு அரசை அமைக்கும் போது அதனை இனம், மதம், மொழி என்ற எந்தவொரு தனி வகையிலும் பொதுமைப்படுத்தி விட முடியாது. மானிட இனக்கூறுகளின் அடிப்படையில் தேசியவாதத்தைப் பொதுமைப் படுத்துவதாயின் உலகில் 4 அல்லது 5 அரசுகளே இருக்க முடியும், மத அடிப்படையிலும் இவ்வாறு 5 அல்லது ஆறு அரசுகளே அமையமுடியும் பிரதேச அடிப்படையிலெனில், கண்டங்களைக் கணக்கிலெடுத்தால் 7 அரசுகள்தான் இருக்க முடியும். மொழி அடிப்படையிலோ ஏறக்குறைய 3,000 அரசுகள் இருக்க வேண்டும். ஆனால் இன்று உலகில் அரசுகளின் எண்ணிக்கை இவ்வாறில்லை மாறாக, ஒரு மொழி பல அரசுகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக ஆங்கில மொழி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய அரசுகளைக் கொண்டுள்ளது. அதே வேளை ஒரு அரசு பல மொழிகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக இந்தியா, சோவியத் யூனியன் போன்றவை. இனம், மதம், மொழி, பிரதேசம் என்பவற்றின் அடிப்படையில் தேசியவாதத்தைப் பொதுமைப் படுத்த முடியாததைப்போலவே, ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடிப்படையிலும் தேசியவாதத்தைப் பொதுமைப்படுத்த முடியாது.

உதாரணமாக, பிரித்தானிய ஏகாபத்தியத்தின் கீழ், ஒரே நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்த, இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரு அரசாக உருவாகாமல் சுதந்திரத்தின்போது இரு வேறு அரசுகளாகவே சுதந்திரமடைந்தன. எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற காரணி இந்துக்களையும், முஸ்லிம்களையும் இணைந்து ஒரு அரசுக்குரிய தேசியவாதத்தைத் தோற்றுவிப்பதில் வெற்றிபெறவில்லை.

இனம், மதம், மொழி, பிரதேசம் அந்நிய எதிர்ப்பு ஆகிய எந்த அடிப்படையிலும் தேசியவாதத்தைப் பொதுமைப்படுத்த முடியாமைக்கு மொத்தத்தில் ஒரு சிறந்த உதாரணமாக மேற்காசியாவைக் குறிப்பிடலாம். இங்கு மேற்குறிப்பிட்ட மொழி, இனம், மதம், பிரதேசம் அந்நிய எதிர்ப்பு ஆகிய சகல பொதுமைகளிலிருந்தும் மேற்காசியா ஒரு பொது அரசாக இராமல் பல அரசுகளாகவே பிளவுபட்டிருக்கின்றது. அகமட் எல் கோட்சே (Ahamad El Kodsy) என்பவரின் வாக்கியங்கள் இதைத்தெளிவாக விளக்குகின்றன

''அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கரையோரமாகக் கொண்டுள்ள மொரோக்கோ, தொடக்கம் பாரசீக வளைகுடா வரை, மத்தியதரைக் கடலிலிருந்து சஹாராவினதும் மேல் நைல் நதியினதும் நடுப்பகுதி வரை 80 மில்லியன் மக்களுக்கு மேலாக சாராம்சத்தில் ஒரே மொழியையே பேசுகின்றனர். ஒரே மதத்தையே அனுஷ்டிக்கின்றனர். ஒரே வானொலி நிகழ்ச்சிகளையே கேட்கின்றனர். ஒரே நூல்களையே வாசிக்கின்றனர். ஒரே திரைப்படங்களையே பார்க்கின்றனர். இதற்கும் மேலாக எமது காலத்தில் ஒரே ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். ஆனால், இந்த மக்களில் எவரையேனும் பார்த்து நீங்கள் எந்தத்தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள் என வினவினால், கிட்டத்தட்ட ஒருவர் தானும் இயல்பாக அராபியர் என்று விடையளிக்க மாட்டார்கள். பதிலாக மொரோக்கன் என்றோ, எகிப்தியன் என்றோ, யேமனியன் என்றோதான் பதிலளிப்பார்கள்'' [11

இத்தகைய மேற்காசியாவின் தேசியவாதத்தை அரச தேசியவாதம் [ State Nationalism ] என்று ஆராய்ச்சியாளர்கள் அழைக்கிறார்கள்.

தேசியவாதத்தை எந்தவொரு தனியம்சத்தைக் கொண்டும், பொதுமைப்படுத்த முடியாதுள்ள போதிலும் குறித்த



ஒரு தேசியவாதத்தைப் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றில் வகைப்படுத்த முயல்வதுண்டு.
அவையாவன: கலாச்சார அல்லது சமய தேசிய வாதம் (Culturalor Religious Nationalism), பிரதேச தேசியவாதம் அல்லது அரச மத்தியதேசியவாதம் (Terriforial or state centric Nationalism) மொழி வழித் தேசியவாதம் (Linguistic Nationalism), அரச தேசியவாதம் (Slate Nationalism), பரந்த தேசியவாதம் (Pan-Nationalism) என்பனவாகும்.

எனவே இவை அனைத்தையும் மனதிற் கொண்டு மொத்தமாக நோக்குமிடத்து, வாழ்வின் சகல நலன்களும் தேச அரசு என்பதை மையமாகக் கொண்டு நிர்ணயம் பெற்ற ஒரு முறைமைதான் தேசியவாதம் எனப்படும். தேசஅரசு என்பது வடிவம் பெறுவதில் பல விசேச காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன, மொழி, இனம், பிரதேசம், பொதுவரலாறு போன்ற காரணிகள் கூட்டாகவோ அன்றி தனியாகவோ செல்வாக்குச் செலுத்துகின்றன. மேற்கூறியவற்றிலுள்ள வேறுபாடுகளிற்கேற்ப உலகம் பல்வேறுதேச அரசுகளாகப் பிரிந்துள்ளது. தேச அரசு மனிதனின் சகல நலன்களதும் குவிமையமாகும்போது குறித்த தேசத்தின் பிரசைகள் அனைவரும் அத்தேசத்தில் சமபங்குடையவர்களாயும், சம உரிமை உடையவர்களாயும் ஆகின்றனர். இந்தவகையில் தேசம் என்பது ஒரு பிரசையின் வாழ்வம்சமாக மாறியபோது அது உள்நாட்டு ரீதியாக சுதந்திரம், சமத்துவம், பொருளாதார நலன், சமூகநலன் என்பவற்றையும் வெளிநாட்டு ரீதியாகப் பாதுகாப்பையும் பிரதானமாகக் குறித்து நிற்கின்றது. இவ்வரசில் எந்தவொரு மனிதனும் பிறப்பாலோ அல்லது கொடையாலோ ஆதிக்கமின்றி சகல பிரசைகளிற்கும் சமபங்கும், சம உரிமையும் உண்டு என்பதே தேசியவாதத்தின் அடிப்படை அம்சமாகும். இதன் அடிப்படையில் தான் பொதுமக்கள் இறைமை (Popular sovereignty) என்ற கோட்பாடு உருப்பெற்றது. இப் பொதுசன இறைமை தான் ஜனநாயகம் எனப்படுவதாகும். எனவே தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகம் என்று கூறுவதன் முக்கியத்துவம் இதுவே.

இவ்வாறு தேசத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறை, அது ஜனநாயகத்தை உள்ளடக்கமாகக் கொண்டு உருப்பெற்றமை என்பது திடீரென்று ஒரு நாளில் தோற்றம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெற்றதல்ல. அது பல்வேறு தடைகளையும் மீறி, பல்வேறு கட்டங்களையும் தாண்டி வளர்ச்சியடைந்த ஒன்றாகும். றிச்சார்ட் டபிள்யூ ஸ்டேர்லிங்கின் ( Richard .W. sterling ) பின்வரும் கூற்று இதை விளக்கிக்கொள்ள உதவும்: "மக்களை ஆள்வதற்கு தாமே உரிமையுடையவர்கள் என்று கூறிவந்த மதகுருக்கள் ஆட்சி வாதத்தையும் (Theocracy), நிலமானிய முறையையும், பரம்பரை ஆட்சி வாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும், தேசியவாதமானது எதிர்த்துச்சவால்விட்டு அவற்றின் நியாயப்பாட்டைத் ( Legitimacy ) தகர்த்தெறிந்தது [12]

எனவே தேசியவாதத்தின் உள்ளடக்கம் என்னவெனில்: சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றிற்கு முரணான பல்வேறு வகைப்பட்ட தடைகளையும் உடைப்பதை விழுமியமாகக் கொண்டதும், வரலாற்று பூர்வமான குறித்த ஒரு பொதுமையின் அடிப்படையில் மக்கள் தம்மை ஒரு சமூகமாக ஒருங்கிணைத்துக் கொள்வதால் ஏற்படும் ஒரு மக்கள் பிரிவாகும்.

## தேசியம் பற்றிய சாராம்சம்

தேசியம் என்பது மனிதகுலம் இதுவரை காலம் கண்ட வாழ்வு முறைகளுள் ஓர் உயர்ந்த கட்டமாகும். ஒருகாலம், குழு அல்லது கிராம எல்லைக்குள் தனது வாழ்வின் தேவைகளை மனிதன் நிறைவு செய்தான். அக்காலத்தில் அவனது உற்பத்திகள் மிக எளிமையானவை, குறைவானவை. கால்நடை வளர்ப்பு, விவசாயம், மீன்பிடி சிறு உபகரணங்கள் ஆகியவற்றோடு அவனது வாழ்வு நிறைவுபெற்றது. ஓரளவு கிராமிய எல்லைக்குள் இவற்றை அவனாற் பூர்த்தி செய்ய முடிந்தது. ஆனால் பின்பு உற்பத்தி முறை மாறியது. இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தேவைகள் பல்கிப்பெருகின. உற்பத்தி அதிகரித்தது.

எனவே இத்தகைய வளர்ச்சியைக் கிராமிய எல்லைக்குள் பூர்த்தி செய்யமுடியாத நிலை தோன்றியது. உற்பத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் மூலவளத் குவியலுக்கும் ஒரு கிராமம் இன்னொரு கிராமத்திற் தங்கி நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் கிராமங்களின் எல்லைகள் உடைந்தன. கிராமங்கள் பல பொதுத் தேவைகளின் அடிப்படையிற் கூட்டாய் இணைந்தன. ஒரு கிராமத்துடன் இன்னொரு கிரா



மம் பின்னிப் பிணைந்தது. இவ்வாறு கிராமிய மட்டத்திலான வாழ்வும் எல்லைகளும் உடைந்தபோது கிராம மட்டத்திலான ஒழுக்கங்கள், சட்டங்கள், கிராமிய தலைமைத்துவம் என்பன உடைந்தன. இதனால் அனைவருக்குமான பொதுவான சட்டங்களும், பொதுவான நிர்வாக அமைப்புக்களும், புதிய ஒழுங்குகளும் தேவைப்பட்டன. இதுவே தேசிய சமூகம், தேசிய வாழ்வு, தேசிய சட்டம், தேசிய அரசு என்ற உயர்ந்த கட்டத்தினை உருவாக்கியது.

இதுவரை இருந்துவந்த பிரபு, குடியானவன் என்பதற்கான வேறுபட்ட சட்டங்கள், சாதியால் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதற்கான வேறுபட்ட சட்டங்கள் போன்ற பிறப்பின் அடிப்படையிலான சலுகைகளும் ஏற்றத் தாழ்வுகளும் தகர்க்கப்பட்டு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற ஒரு புதிய சிந்தனையும் நடைமுறையும் உருவாகியது. இது ஐரோப்பாவிற் கருக்கொண்டு உலகின் ஏனைய பாகங்களுக்குப் பல்வேறு வடிவங்களிற் பரவியது. கிராமிய மட்டத்தில் வாழ்ந்த மக்கள்; மொழி அல்லது மதம், அல்லது பண்பாடு, அல்லது பிரதேசம், அல்லது இவை அனைத்தும் என்ற அடிப்படையில் ஒரு தேசியம் ஆக ஒருங்கிணைந்து கொண்டனர். இவ்வாறு ஒருங்கிணைந்த அந்தக் கூட்டுத்தான் தேசியவாதம் எனப்படும்.

பிறப்பாலான ஏற்றத்தாழ்வுகளும் கிராமிய அல்லது உள்ளூர் சட்டதிட்டங்களும் நீக்கப்பட்ட போது பொதுச் சட்டமும் பொது அரசியல் அமைப்புக்களும் உருவாகின. இதுவரை காலமும் பிறப்புரிமையின் பெயரால் மன்னனின் கையிலிருந்த இறைமை இப்போது மக்களின் கைக்கு மாறியது. ஒரு தேசிய எல்லைக்குள் வாழும் சகல பிரஜைகளும் அரசியலிற் சம பங்குடையவர்களானார்கள். இதுவே ஜனநாயகம் எனப்படுவதாகும் எனவே தேசியவாதம் எனப்படுவது ஜனநாயக உள்ளடக்கத்தைக் கொண்டதாகவும் உருப்பெற்றது இந்த வகையிற் தேசியவாதம் என்பது 18 ஆம் நூற்றாண்டின் பின் உருவான ஒரு நவீன அம்சமாகும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பகுதி II

## தேசிய இனப்பிரச்சினை (National Question)

முற்பகுதியிற் கூறியதுபோல பல்தேசிய இனங்களைக்கொண்ட ஓர் அரசில் அங்குள்ள சகல இனங்களையும் தழுவிய தேசியவாதத்தைப் பல்லினத்தேசியவாதமென்றோ, பிரதேசத் தேசியவாதமென்றோ, அரசமத்திய தேசியவாதமென்றோ, அழைப்பர் பல இனங்களும் பொதுமையான ஒரு தேசியவாதத்தைக் கொண்டுள்ள அதேவேளை அங்குள்ள ஒவ்வொரு இனமும் தமக்கென உரிய தனித்துவமான தேசியப்பண்புகளை பேண எடுக்கும் முயற்சி உபதேசியவாதம் எனப்படும். ஆனால் இப்பல்லினங்களிற்கிடையே பிரச்சினைகள் எழும்போது, ஒன்றை மற்றொன்று தடுக்க முற்படும்போது அதுவே தேசிய இனப்பிரச்சினையாகும் என்பதை மேலே பார்த்திருந்தோம். முதற்பகுதியில் தேசியவாதம் பற்றிப்பொதுவாக நோக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதியிற் தேசிய இனப்பிரச்சினை பற்றிக் குறிப்பாக நோக்குவோம்.

தேசிய இனப்பிரச்சினையிலிருந்து சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைப் பிரித்து நோக்கமுடியாது. எனவே சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டின் வரலாற்றை விளக்குவதன் மூலம் தேசிய இனப்பிரச்சினை பற்றிய வரலாற்றுப்போக்கை விளக்குவது இலகுவாகும். சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு ஆரம்பத்தில் தேச அரசுகள் சம்பந்தமாகவே தோற்றம்பெற்றது. பின்பு இக்கோட்பாடு காலகதியில் தேசிய இனங்களிற்கும் உரியதாக வளர்ச்சியுற்றது.

தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு தோற்றம் பெறுவதற்கான ஆரம்ப அறிகுறிகளை முதலாவது போலந்துப் பங்கீட்டில் (First Polish Partition - 1772) இருந்து அடையாளம் காணலாம். அமெரிக்க சுதந்திரப்போர் (1776)பிரென்ஸ் சுப்புரட்சி (1789) என்பன தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டிற்கான முக்கிய வெளிப்பாடுகளாய் அமைந்தன. [13] ஆனால் இக்காலம்வரை இது ஒரு கோட்பாடாக உருப்



பெறவில்லை சர்வதேசரீதியாக சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு கோட்பாட்டளவில் உருப்பெறுவதற்கான தொடக்கப்புள்ளிகளை வியன்னா மகாநாடு (1815) இலிருந்து அடையாளம் காணலாம். முதலாம் உலகப்போர் முடிவடைந்ததும் வேனஷிசில் நடைபெற்ற மகாநாட்டில் (1919) தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டது. இது ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளைக் கருத்திற் கொண்டிருந்ததேதவிர முழுஉலகையும் கருத்திற் கொண்டிருக்கவில்லை. மேலும், இது தேசங்களைக் கருத்திற் கொண்டிருந்ததேதவிர தேசிய இனங்களைக் கருத்திற் கொண்டிருக்கவில்லை. பொதுவாக இது ஒரு கொள்கைரீதியிலான அங்கீகாரமே தவிர செயல் பூர்வமானதாக அப்பொழுது அமைந்திருக்கவில்லை

இரண்டாம் உலகயுத்தகாலகட்டத்தில் ஏகாதிபத்தியம் நிலைகுலைய தேசியப் போராட்டங்கள் வலுவடைய சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு பொதுப்படையாக செயல்பூர்வமாகியது. இக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு இதனை மேலும் செயல் பூர்வமாக்குவதற்கான போராட்டம் உலகில் இன்றுவரை நீடித்துக்கொண்டேயிருக்கிறது. இரண்டாம் உலகயுத்தம் முடிவடைந்ததும் ஐ. நா. சபையின் சாசனத்தில் சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு முழுஉலகு தழுவியதாக, தேசிய இனங்களையும் கருத்திற்கொண்டதாக இடம்பெற்றுள்ளது.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டைப் பொறுத்து அயர்லாந்துப் பிரச்சினை ஒரு முக்கிய தொடக்க ஸ்தானத்தை வகிக்கின்றது. அயர்லாந்து பிரித்தானியாவிலிருந்து பிரிந்து தனி அரசாக அமைவதை ஆரம்பத்தில் கார்ல் மார்க்ஸ் அங்கீகரிக்கவில்லை. தேசங்கள் மேலும் மேலும் இணைந்து செல்லும் போக்குடையவை என்ற சிந்தனையைக் கொண்டிருந்த மார்க்ஸ் ஒரு தேசம் மேலும் பல தேசங்களாகப் பிரிந்து செல்லும் என்பதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் அயர்லாந்துப்பிரச்சினை கொடுத்த புதிய அனுபவங்களைக் கொண்டு அதனை மேலும் ஆழமாக ஆராய்வதன்மூலம் தனது முந்திய முடிவில் மாற்றம் செய்துகொண்டார். இம் மாற்றமே சுயநிர்ணய உரிமையானது தேசிய இனம் சார்ந்த கோட்பாட்டுவடிவம் பெற்றதன் முதற்கட்டமாகும், மார்க்ஸ் இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: " இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிந்து செல்வது சாத்தியமற்றது என நான் முன்னர் நினைத்தேன். இப்பொழுது அது தவிர்க்க முடியாதது என நினைக்கின்றேன். [14]" ஆழ்ந்து ஆராய்ந்ததில் எதிர் நிலை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யில் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது, என இப்பொழுது நம்புகிறேன். அயர்லாந்தைக் கைவிடும்வரை ஆங்கிலத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை." [15]

எனவே சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் ரீதியாக ஒரு தேசிய இனம்பிரிந்து செல்லலாம் என்ற அர்த்தத்தை உள்ளடக்கியதாக உருப்பெற்று வளரத்தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய வரலாற்றுச் சூழ்நிலை தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக அதிக வாதப் பிரதிவாதங்களிற்கு வழிவகுத்தது. ஏனெனில், ருஷ்ஷிய சாம்ராச்சியத்தில் மட்டும் 100 வரையிலான தேசிய இனங்களும், தேசிய இனங்களாகக் கூடிய இனங்களுமிருந்தன, எனவே 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தேசிய இனங்கள் பற்றிய அதிக வாதப்பிரதிவாதங்கள் இங்கு இடம்பெற்றன ருஷ்யப் புரட்சிக்கு சற்று முந்திய காலத்தில் அதற்குத் தலைமை தாங்கிய லெனின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்கு திட்டவட்டமான வரைவிலக்கணம் கொடுக்க முற்பட்டார். அவரது வரைவிலக்கணம் பின்வருமாறு அமைந்தது.

"தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் ரீதியில் சுதந்திரத்திற்கான உரிமையைக் குறிக்கும். அடக்கி ஒடுக்கும் தேசிய இனத்திடமிருந்து அரசியல் ரீதியாகப் பிரிந்து செல்லும் உரிமையைக் குறிக்கும். சுட்டிப்பாக அரசியல் ஜனநாயகத்திற்கான இக்கோரிக்கை பிரிந்து செல்வதற்கான பூரண உரிமையையும் இவ்வாறு பிரிந்து செல்வதற்கு, பிரிந்து செல்லும் தேசிய இனத்தின் கருத்தை அறிவதற்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்கான உரிமையையும் குறிக்கும்" [16]

1917 ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சி நடைபெற்றதும் வரையப்பட்ட அரசியற் திட்டத்தில் ஒரு தேசிய இனத்திற்கு பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து செல்லும் உரிமை உண்டென்பது வரையப்பட்டது. (The Principle of Self Determination And The Method of Plebiseile) அமெரிக்க ஜனாதிபதி வில்சனின் (Wilson) 1918 பெப்ரவரிப் பிரகடனத்தில்: " சுயநிர்ணயம்; செயலுக்கு உந்தும் தவிர்க்கமுடியாத அடிப்படைக் கோட்பாடாக இருந்தது " [16] என வற்புறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஐ. நா. சாசனம் பொதுஜனவாக்கெடுப்புடன் கூடிய பிரிந்து செல்லும் உரிமைக்கு வகை செய்கின்றது.



சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஆசிய ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்தவரை முதலாம் உலகப் போரின் பின்புதான் பிரபல்யம் பெறத்தொடங்கியது குடியேற்ற அரசுகளிடமிருந்து தேசவிடுதலை என்ற அர்த்தத்தில் இக்கோட்பாடு பிரபல்யம் பெற்றதே தவிர தேசிய இனங்கள் என்ற அர்த்தத்தில் அல்ல.

" ஆசிய, ஆபிரிக்க சுதந்திர இயக்கங்களில் ஒரு தனித்துவமான இயல்பு காணப்படுகின்றது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற பெயரில் அவை நடாத்தப்பட்டிருந்த போதிலும். அவை உண்மையில் அரசியல் சுதந்திரத்திற்கான கோரிக்கைகளாக இருந்தனவே தவிர இனத்துவ அமைப்பிற்கு, பிரிப்பீட்டிற்கு (Distribution) ஏற்ப, அச்சுதந்திரக் கோரிக்கை இருக்கவில்லை [18] என்று கோணெர் ( Connor.W ) குறிப்பிட்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

இந்நாடுகள் சுதந்திரமடைந்த பின்பு தான் இக்கோட்பாடு தேசிய இனங்கள் சம்பந்தமாகவும் பிரயோகிக்கப் பட வேண்டும் என்ற நிலை உருவாகத் தொடங்கியது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பல்லினங்களை உள்ளடக்கிய ஒரு தேசத்தை கட்டி வளர்த்தல் என்பது பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. உலகம் முழுவதும் இப்பிரச்சினை உள்ள போதிலும் ஆசிய, ஆபிரிக்க, கிழக்கைரோப்பிய நாடுகளிற்தான் இது ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆபிரிக்காவைப்பற்றிக் குறிப்பிடுகையில் ஆர்னல்ட் ரிவ்கின் (Arnold Rivkin) இனுடைய கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

" இனம், இனக்குழு, சமயம், வரலாற்றுப் பின்னணி ஆகிய வேறுபாடுகளால், பல்வேறு மக்கள் பிரிவுகளாகப் பிரிந்து காணப்படும் ஆபிரிக்காவில் தேசிய அரசை நிர்மாணிப்பதென்பது ஒரு பெரிய பிரச்சினையாகவே உள்ளது " [19]

ஆசியாவைப் பொறுத்தவரையிலும் இனம், மதம், மொழி வரலாற்றுப் பின்னணி என்பன அரச மத்தியத் தேசியவாதத்திற்குப் பெரும் சவாலாக உள்ளன.

பொதுவாகத் தேசிய இனப்பிரச்சினைகளிற்கான காரணங்கள் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றுள் முக்கியமானவை சில வருமாறு:



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

(1) தேசிய இனப்பிரச்சினை அடிப்படையில் ஒரு வர்க்கப் பிரச்சினையாகும்.

(2) தேசிய இனப்பிரச்சினை ஒரு கட்டத்தில் வர்க்கப் பிரச்சினையோடு தொடர்புள்ளதாகவும், இன்னொருகட்டத்தில் அவ்வாறில்லாமலும் இருக்கின்றது.

"தேசிய இனப்பிரச்சினையும் வர்க்கப் பிரச்சினையும் சூழலுக்கேற்ப வேறுபடுகின்றன. குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் இவ்விரு பிரச்சினைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாக உள்ளன, குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் வர்க்க அடித்தளம் தேசிய இனங்களிற்கிடையிலான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் ஆனால், அதற்காகத் தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் வர்க்கப் பிரச்சினைதான் என்று கூறிவிட முடியாது." [20]

(3) உணர்ச்சி வசமானது.

(4) நவீன மயமாக்கத்தால் தேசிய இனப்பிரச்சினை உருவாகியது.

எனப் பல கருத்துக்கள் உள்ளன. தேசியவாதம் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு அம்சங்களுக்கூடாக, வெவ்வேறு வடிவங்களில் உருவாகின்றது,

எப்படியோ தேசிய இனப்பிரச்சினை இன்று உலகின் நாலாபுறத்திலும் ஏதோ ஒரு வடிவிற் காணப்படுகின்றது. சமகால வரலாற்றில் இதுவொரு முக்கிய நடைமுறைப் பிரச்சினையாக உள்ளது. "உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள், பல்லின அரசுகளைக் கொண்ட நாடுகள். இங்கெல்லாம் அண்மைக் காலங்களில், இனவுணர்வு நிச்சயமாக அதிகரிக்கின்றதே தவிர, குறையவில்லை." என்ற கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

வரலாற்றில் தேசிய இனப்பிரச்சினை எழுமிடத்து அது; காலம், சூழ்நிலை என்பவற்றிற்கேற்ப பல்வேறு கோரிக்கைகளாக எழுகின்றது.

(1) குறிப்பிட்ட சில உரிமைக் கோரிக்கைகள் (குறிப்பாகச்சில மொழி, மத உரிமைகள்)

(2) சமஷ்டிக் கோரிக்கை



(I) சமஷ்டியைவிடக் கூடுதல் அதிகாரங்களைக் கோருதல்

(II) இறைமையுடைய கூட்டாட்சி (Sovereignty - Association) போன்ற கோரிக்கை.

(3) தனிநாட்டுக் கோரிக்கை.

உலகில் பொதுவாகத் தேசிய இனப்பிரச்சினை எழும்போது உடனடியாகவே பிரிந்து செல்லும் கோரிக்கையை அவை முன்வைப்பதில்லை. சமஷ்டிக் கோரிக்கை வெற்றியளிக்காத இடத்திலேயே தனிநாட்டுக் கோரிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. பிலிப்பைன்ஸ், இந்தியா, கனடா, இலங்கை ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமைகளை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகச் சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கை நிறைவேறாத கட்டத்தில், 1972-இல் முதலாவது குடியரசு அரசியற் திட்டத்தில் இலங்கை ஓர் ஒற்றை ஆட்சி நாடு என வரையப்பட்ட பின்பு, 1974இல் தமிழீழம் என்ற தனிநாட்டிற்கான கோரிக்கை எழுந்தது. இவ்வாறு சமஷ்டிக் கோரிக்கை தோல்வியுறும் போது தனிநாட்டுக்கோரிக்கை எழுகின்றது.

தேசிய இனப்பிரச்சினையானது, தனிநாட்டுக்கோரிக்கையாக எழுந்துள்ள தேசிய இனங்களையும், அவற்றின் பிரதேச, பொருளாதாரத் தன்மைகளையும், அவற்றின் போக்குகளையும், ஹோரோவிட்ஸ் (Horowitz) என்பவர் பின்வருமாறு அட்டவணைப்படுத்துகிறார்.

(அட்டவணை 25-ம் பக்கம் பார்க்க)

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் நிலவிய கெடுபிடி யுத்த சூழலில் உலகளாவியரீதியில் தேசிய இனங்களின் பிரச்சினை பெருவல்லரசுகளின் நன்மைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டு வந்தது. இதனால் தேசிய இனங்களிற் கெதிரான ஒடுக்குமுறை அதிகம் உறுதிப்படுத்தப்பட்டது. சில விதிவிலக்குகளைத் தவிர பொதுவாக ஒடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக இருந்தன. ஆனால் கெடுபிடி யுத்தம் குலைந்த பின் தோன்றிய புதிய சூழலில் தேசிய இனங்களின் பிரச்சினை முக்கியத்துவம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளன. இன்று சோவியத்யூனியன் உலக அரங்கில் தளர்ந்துள்ள நிலையில் இப்பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்காவின் கை ஓங்கியுள்ளது.

சோவியத் யூனியனைப் பலவீனப்படுத்துவது அமெரிக்காவிற்கும், மேற்கைரோப்பிய நாடுகளிற்கும் லாபமானது. எனவே

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இன்று சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள ஸ்திரமின்மையைப் பயன்படுத்தித் தேசிய இனப்பிரச்சினைகளின் பெயரால் சோவியத் யூனியனை ஓரளவு துண்டாட மேற்குலகம் முற்படும். ஒரு புறம் தேசிய இனங்களின் நோக்கு நிலையில் தேசிய இனங்கள் சார்ந்த கோட்பாட்டு வளர்ச்சிக்கு இது அனுகூலமானது; அதே வேளை மறுபுறம் உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் பல்லினத் தன்மை வாய்ந்தவைகளாய் இருப்பதனால், அமெரிக்கா - தேசிய இனங்களின் பிரச்சினையை தனது நோக்குநிலையிலிருந்து கையாளுவதும் இலகுவாகிவிட்டது.

கிழக்கைரோப்பிய நாடுகளில் இன்றேற்பட்டுள்ள தேசிய இனவிடுதலை பற்றிய கருத்துக்களும் அதற்கான அங்கீகாரமும்- அவ்வினங்கள் தம்நோக்கு நிலையிலிருந்து ஈட்டவுள்ள வெற்றிகளும் உலகிலுள்ள ஏனைய இனங்களிற்கும் பொதுவான வளர்ச்சி விதிகளைத் தோற்றுவிக்கும். எவ்வாறாயினும் தேசிய இனங்களின் பிரச்சினை பற்றிய போக்குகளைத் தீர்மானிப்பதில் அமெரிக்காவிற்குக் கணிசமான அளவு பங்கு உலக அரங்கில் இருக்கப் போகின்றது. அமெரிக்கா தனது நலனிற்கேற்ப இப் பிரச்சினைகளை நல்லவிதத்திலோ அல்லது கெட்ட விதத்திலோ கையாளும் என்றாலும், இன்றைய நிலையில் தேசிய இனங்களின் பிரச்சினை வரலாற்று ரீதியாகச் சற்று வளர்ந்த கட்டத்திற்குரியதாகிவிட்டது.



முதலாம் அத்தியாயம்

## ஆதாரங்கள்


1 I Rgrigulevich ( E D ), Ethnocultural Prosses and National Problems in the Modern World, Moscow (1979), P. 228.

2. W. Connor, " Nation Building or Nation Destroing " ? World Politics, ( April 1972 ), P. 320

3 Hugh Selon - Watson, Nations and States, London, ( 1977 ), P. 1.

4 Hans Kohn, Nationalism: Its Meaning and History, Princeton, ( 1955 ) PP. 9 — 10

5 Richard: W. Sterling, Mecropolitics: International Relations in A Global Society. Newyork, ( 1974 ), P. 183.

6 Marx, Engels and Lenin, On Scientific Communism, Moscow, ( 1967 ), PP. 370 – 378


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

7. E. H. Carr, Nationalism and After, London, ( 1968 ), PP. 5 - 6.

8. Hans Kohn, ( 1955 ), P. 15.

9 IBID, P. 64.

11. Ahamad EL Kodsy and Eli Lobel, The Arab World and Israel, New York, ( 1970 ), P.1.

12. Richard W. Sterling, ( 1974 ), P.179

13. W Connor, ' Self-Determination: The New Phase '', World Politics, Vol. xx Oct. 1967 — July 1968, P. 23.

14. Marx And Engels, Ireland and The Irish Question Moscow, ( 1971 ), P. 143.

15. IBID, P. 284.

16. V. I. Lenin, " The Socialist Revolution and The Right of Nations to Self - Determination ", Collected Works Vol. 22, P. 146.

17. Cited in W. Connor ( April 1972), 321.

19. Cited in R. N. Ismagilova Ethnic Problems of the Tropical Africa Can They be Solbed?, Moscow, (1928). P. 14

20. " Is The National Question Essentially A Class Question?" Beijing Review, No. 34, Aug. 25, 1980, P. 17.

21. D. Horowitz, " Patterns of Ethnic Separatism " Comparative Studies in Society and History, April 1981, P. 160.

அட்டவணை

| | முன்னேறாத போராட்டங்கள் | முன்னேற்றமடைந்த போராட்டங்கள் |
|---|---|---|
| முன்னேறாத பிரதேசம் பொருளாதாரம் | தென் சூடான் போராட்டம்.<br>பர்மாவின் கரென் போராட்டம்.<br>பிலிப்பைன்சில், முஸ்லீம்களின் போராட்டம் (மிந்தானாப் போராட்டம்)<br>சாட்டில், முஸ்லீம்களின் போராட்டம்.<br>ஈராக்கில், குர்டிஷ் போராட்டம்.<br>இந்தியாவின் நாகாலாந்து, மிசோராம் போராட்டங்கள். | இலங்கைத் தமிழர் போராட்டம்(தமிழீழப் போராட்டம்)<br>நைஜீரியாவின், இபோ போராட்டம்.<br>சாஹிர் நாட்டில், பாஹிலாப் போராட்டம்.<br>சாம்பியாவின் லோசாப் போராட்டம். |
| முன்னேறிய பிரதேசம் பொருளாதாரம் | தாய்லாந்தில் முஸ்லிம்களின் போராட்டம்<br>சாஹிர் நாட்டில் ஒண்டாப் போராட்டம் உகண்டாவில், பாகொன்ஞோப்போராட்டம். | ஸ்பெயினில், பாஸ்குயெஸ் போராட்டம். |

## இரண்டாம் அத்தியாயம்

# இலங்கையில் இனங்களின் தோற்றமும் இனப்பிரச்சினை கருக்கொண்ட விதமும்

இலங்கையில் இன்று நிலவும் தேசிய இனப்பிரச்சினையானது சிங்கள பௌத்த ஐதிகம் ஒன்றைமையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இது சுருக்கமாக தம்மதீப கோட்பாடு எனப்படும். அதாவது பௌத்த தர்மத்தைப் பேணிப் பாதுகாக்கவென புத்தபிரானாலே தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு என்பதாகும். இக்கோட்பாடு பற்றிய ஐதிகக்கதை பின்வருமாறு அமைகிறது: புத்தபிரான் பரிநிர்வாணமடைந்து கொண்டிருந்த விசாகப் பௌர்ணமி தினத்தில் விஜயனும் அவனது குழுவினரும் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்தனர். இவ்வாறு இலங்கையில் காலடி எடுத்து வைத்துக்கொண்டிருந்த விஜயனும் அவனதுவழித் தோன்றல்களுமே பௌத்தத்தைப் பாதுகாக்கப்போகின்றனர் என்று பரிநிர்வாணமடைந்துகொண்டிருந்த புத்த



பிரான் கூறியதாக மகாவம்சத்திலுள்ளது. மேலும் அவ்விஜயன் இலங்கையில் அரசமைத்து ஆட்சி செலுத்தினான் என்றும்; அதனைத்தொடர்ந்து சிங்கள பௌத்த அரசமைப்பு உருவானதென்றும மகாவமசம் வர்ணிக்கின்றது. இம்மகாவம்சம் ஐதிகத்தின் பிரகாரம் பின்வரும் முடிவுகளிற்குத் தெளிவாக வரலாம்.

1. இலங்கை பௌத்த மதத்தின் பொருட்டு புத்தபிரானால் தெரிந்தெடுக்கப்பட்ட தீவு.
2. விஜயனே இலங்கையில் முதல் மனிதன்.
3. விஜயனும் அவனது வழித்தோன்றல்களுமே பௌத்தத்திற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள்.
4. விஜயனுடனேயே இலங்கையில் அரசு என்பது உருவானது.

அவ்வாறாயின் 'தம்மதீப' என்ற இந்த ஐதீகம் இனம், மதம், மொழி, நாடு, அரசு ஆகிய இவ்வைந்து அம்சங்களையும் ஒன்றாகப் பின்னிப்பிணைத்த ஒரு கோட்பாடாகும்.

இத் 'தம்மதீப' கோட்பாட்டின்படி, இலங்கைத் தீவானது ஓரினம், ஒரு மதம், ஒரு மொழி, ஓர் அரசு என்பவற்றிற்கு மட்டுமே உரியதென்று ஆகிவிட்டது. இது பல்லின, பலமத, பல அரசு என்ற தன்மையை நிராகரிக்கின்றது. ஆதலினால் தமிழ், சிங்கள, முஸ்லீம் என்ற பல்லினத்தன்மைக்கு இவ் ஐதிகத்தின் பிரகாரம் இடமில்லாது போகவே இனங்களுக்கிடையே பிரச்சினைகள் தோன்றி அமைதியற்ற தீவாக இலங்கை மாறியது.

இக்கோட்பாடானது சிங்களவர்களை இலங்கையின் மூதாதையர்களாக்கியது. அதன் பிரகாரம் சிங்களவர்களே மண்ணின் மைந்தர்கள் என்றும், ஏனையவர்கள் வந்தேறு குடிகள் என்றும் அவர்களை இந்நாட்டிற்கு அந்நியர்கள் என்றும் அது வர்ணிக்கிறது. குறிப்பாகத் தமிழர்களை அது படையெடுப்பாளர்களாக வர்ணிக்கிறது. ஆனால் இன்று உலகிலுள்ள பெரும்பான்மை நாடுகள் பல்லினத்தன்மை கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. எனவே தற்கால வரலாறானது நவீன சிந்தனைகளினூடாகப் பார்க்கப்படவேண்டியதே ஒழிய ஐதிகங்களிற் கூடாக அல்ல.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இலங்கைக்கு முதல் வந்தவர்கள் தமிழர்களா, அல்லது சிங்களவர்களா? என்ற வாதப்பிரதி வாதங்கள் அநாவசிய மானவை. தேசியவாதமென்பது நவீன சிந்தனைகளில் ஒன்று அது வரலாற்றின் உருவாக்கம். அது வரலாற்றின் ஒரு வளர்ச்சிக் கட்டமும் கூட. எனவே உலகப் பொதுமையான வகையில் அதை நவீனத்தன்மைகளுடன் ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக வெறும் பழமைக்குள் மூழ்கிச் சீரழிவது மிகப் பிழையானது.

தமிழரா, சிங்களவரா முதல் வந்தவர்கள் என ஆராய்வது எமது நோக்கமல்ல. ஆனால் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் ஆகிய மூன்று பண்பாட்டுப் பிரிவினரும் அடிப்படையில் ஒரே மக்கள் பிரிவிலிருந்து தோன்றிய உப பிரிவுகளே. இக்கருத்தை வரலாற்று ரீதியாக நிரூபிப்பதன் மூலம், ஒரு முக்கியமான வரலாற்று மயக்கத்தை அகற்றலாம், சிங்கள பௌத்த ஒடுக்கு முறைக்கான பிரதான காரணத்தையும் தகர்க்கலாம். மேலும் இலங்கையின் இயல்பான வரலாற்றுப் போக்கை விளங்கவும் இது உதவும்.

# பகுதி I

ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாறானது அது சார்ந்துள்ள இயற்கையால், கணிசமான அளவு நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது அவர்கள் வாழும் இடத்தின் புவியியல் அமைவிடம், புவியியல் தன்மைகள், தட்பவெப்பநிலை, இயற்கை வளங்கள், மூலவளங்கள் ஆகிய அம்சங்களின் தன்மைக்கும் போக்கிற்கும் ஏற்ப அக்குறித்த மக்கள் கூட்டத்தின் வரலாற்றுப் போக்கின் சில இயல்புகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த வகையில் இலங்கைத்தீவின் புவியியல் அமைவிடமும் அதன் ஏனைய அம்சங்களும் இலங்கைக்கே உரிய சில சிறப்பான வரலாற்று இயல்புகளை நிர்ணயித்துள்ளன எனலாம்.

இந்து சமுத்திரத்தில் கடல்வழிப் போக்குவரத்தின் மையத்தில் இலங்கைத்தீவு அமைந்திருப்பதால் வெளித்தொடர்புகளிற்கான அதிக வாய்ப்பை இது கொண்டுள்ளது. பல் வேறு தேசத்தவர்களும் தொடர்ச்சியாக வந்துபோகக்கூடிய சூழல் காணப்படுவதால் வெளித்தாக்கங்களுக்கோ அல்லது செல்வாக்கிற்கோ இலங்கை உட்படுவது இலகுவானதாக உள்ளது. இவ்வாறு பல்தேசத்தாக்கங்களிற்குரிய அமைவிடத்தில் இலங்கை



அமைந்துள்ள போதும், இந்தியாவிற்கு மிக அருகிலான இதன் அமைவிடத்தின் பிரகாரமே மிகப்பெருமளவிற்கு இந்தியாவின் தாக்கத்திற்கும், செல்வாக்கிற்கும் இது உட்பட்டுள்ளது. இலங்கைத் தீவானது கடந்த காலம் முழுவதும் இந்தியாவின் தாக்கத்திலிருந்தோ அல்லது செல்வாக்கிலிருந்தோ விடுபட முடியாத அடிப்படை இயல்பைக் கொண்டுள்ளது.

இந்தியச் செல்வாக்கிலும் குறிப்பாகத் தென்னிந்தியச் செல்வாக்கே இங்கு பிரதான இடத்தை வகித்து வந்துள்ளது. இலங்கைத்தீவில் இன்று தமிழர்'' சிங்களவர், முஸ்லீம்கள் என மூன்று பண்பாட்டுப்பிரிவினர் வாழ்கின்றபோதிலும் இம் மூன்று பிரிவினரும் அடிப்படையில் ஒரு பொதுமையான திராவிடப் பண்பாட்டு மக்கள் கூட்டத்திலிருந்து தோன்றி வளர்ந்த பண்பாட்டுப்பிரிவினரே. கலாநிதி சி. க. சிற்றம்பலத்தால் பூனா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கோள் காட்டி, பொ. ரகுபதி கூறுகையில்:-

''பொதுவானதொரு பெருங்கற் பண்பாடு தென்னிந்தியாவில் எவ்வாறு தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், எனப்பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவித்ததோ அதே போலவே சிங்களப்பண்பாடும் இப்பெருங்கற் பண்பாட்டிலிருந்தே முகிழ்ந்தது.'' [1] என்று குறிப்பிட்டமை கவனிக்கத் தக்கது.

தொல்பொருட் சான்றுகளை ஆதாரம் காட்டி கி.மு. 28,000 ஆண்டுகளிற்கு முன்பே இலங்கையில் மனிதர்கள் வாழ்ந்ததாக தெரணியாகல தெரிவிக்கிறார் [2]. அதாவது விஜயன் வருகைக்கு முன்பே இலங்கையில் மனிதர்கள் வாழ்ந்ததையும், இலங்கையின் பிற்கால வரலாறு இதனை அடியொற்றியது என்பதனையும் இது காட்டுகின்றது.

இலங்கையில் நிலவிய குறுணிக்கற்கால பண்பாடு பற்றி பொ. ரகுபதி பல ஆராய்ச்சியாளர்களை ஆதாரம் காட்டி எழுதுகையில்:

'இது (குறுணிக்கற் பண்பாடு) தமிழ் நாட்டுக் குறுணிக்கற் பண்பாட்டுடன்தொடர்புடையது என்பது ஆய்வாளர் கருத்தாகும். ஏறத்தாள 10,000 ஆண்டுகளிற்கு முன்பிருந்தே இப்பண்பாடு இலங்கையில் நிலவியதாகத் தெரிகிறது. சமீபகாலத்தில் இலங்கைத்தொல்லியல் திணைக்களத்தைச்சேர்ந்த திரு. சிறான் தெரணியகல அவர்களது ஆய்வுகளால் இப்பண்பாடு பற்றிய அறிவு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விரிவடைந்துள்ளது. (இதற்கு இவரது கட்டுரையொன்றை ஆதாரம் காட்டுகின்றார் [3]) யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தவிர இலங்கைத்தீவடங்கிலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட, இப்பண்பாட்டு எச்சங்கள் காணப்படுகின்றன. தொல்லியல் திணைக்களத்துடன் கூட்டாகக் கடந்த ஆண்டு நாம் மேற்கொண்ட ஆய்வொன்றில் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குச் சமீபமாக பூநகரிப் பகுதியிலும் (யாழ். மாவட்டம்) இப்பண்பாடு நிலவியமை அறியப்பட்டுள்ளது.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திற்குரியதாகிய (Pre Historic Period) இக் குறுணிக்கற் பண்பாட்டை அடுத்து இலங்கையில் வரலாறு தொடங்கும் காலத்தில் (Proto Historic Period) அதற்கும் காரணமாய் அமைந்தது. தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டின் வருகை என்பதே இப்போது தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இது இலங்கைக்கு ஆரியர் வந்தமை குறித்து இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்த பாரம்பரியக் கருத்துக்களிற்கு முற்றிலும் முரணானதாகும். இலங்கைக்கு ஆரியர் வந்தமைக்கு எவ்வித தொல்லியல் ஆதாரங்களும் காணப்படவில்லை என்றும், மாறாகத் தென்னிந்திய வரலாற்றுத் தொடக்ககால பெருங்கற்பண்பாடே இலங்கையிலும், வரலாற்றுத் தொடக்கத்தைக் கொணர்ந்தது என்ற கருத்து அண்மைக்காலத்தில் பலமடைந்து வருகிறது. (இதற்கு சுசந்தகுணதிலகவினதும் இந்திரபாலாவினதும் கட்டுரைகளை இவர் ஆதாரம் காட்டுகிறார் [4]).' [5]

பெருங்கற்பண்பாடு பற்றி பேராசிரியர் இந்திரபாலா கூறும் கருத்துக்களை நோக்குவோம். ''இற்றைக்கு ஏறக்குறைய 2000 ஆண்டுகளிற்கு முன்பிருந்து குறைந்தது ஓராயிரம் ஆண்டு காலம் ஆவது அக்குடியேற்றம் [பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்றம்] இருந்திருக்கலாம் என மேலெழுந்தவாரியாகக் கூறமுடிகின்றது.

இற்றைக்கு 2, 500 ஆண்டுகளிற்கு முன்பு இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஒரே தன்மையிலான பண்பாட்டைத் தழுவிய மக்கள் வாழ்ந்தனர் என்ற கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது.

சில நாட்களிற்கு முன் [டிசம்பர் 1980] யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தென்னாசியவியற் கருத்தரங்கின் கூட்ட



மொன்றில் உரையாற்றிய கலாநிதி சுசந்தகுணதிலக அவர்கள் இலங்கையில் ஆரியக் குடியேற்றம்பற்றி பேசுவதற்கு இடமில்லை. என்றும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பௌத்தம் பரவிய காலத்திலே ஒரே இனமக்களே வாழ்ந்தார்கள் என்றும் பெருங்கற் பண்பாடு இவர்கள் மத்தியில் நிலவியதென்றும் ஆணித்தரமாக எடுத்துரைத்தமை அண்மைக்கால ஆராய்ச்சிகளால் ஏற்பட்டுவரும் திருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது' [6]

மேலும் பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்துப்படி: ''கி. மு மூன்றாம் நூற்றாண்டிற்கும், கி. மு முதலாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பெருங்கற் சமாதிகள் பொம்பரிப்பு, குருகல்ஹின்ன, கதிரவெளி, படியகம்பொல, கொண்டதெவிய, வளவைப்பகுதி, நெக்கலே, குல்ஹொ ஹொனகனதே ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன'' [7]

இப்பெருங்கற் பண்பாடுபற்றி இரகுபதி கூறுகையில் "கந்தரோடைக்குடியிருப்பு பெருங்கற் பண்பாட்டுடன் ஆரம்பமானதாகவும்; இதன்காலம் கி. மு. 4ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் அகழ்வாய்வை நடாத்திய விமலா பேக்லி (VIMALA BEGLY) குறிப்பிட்டுள்ளார். காபன் காலக் கணிப்புக்கள் (C14) பெறப்படாத நிலையில் தற்காலிகமாகவே இக்கணிப்பினை அவர் வெளியிட்டார். கந்தரோடை அகழ்வுக்கான காபன்காலக் கணிப்புக்கள் பென்சில்வேனிய ஆய்வுக்குழுவின் மற்றொரு உறுப்பினரான பென்னற் புரொன்சனிடம் (BENNET BRONSON) இருந்து தொல்லியற் திணைக்களத்தினரால் அண்மையில் பெறப்பட்டன. இவற்றுள் இரு சான்றுப் பொருட்களிற்கான காலம் கி. மு. 1000 ஆண்டை ஒட்டிக்கிடைத்திருப்பது வியப்புக்குரியது'' [8] இது பற்றி இன்னொரு ஆராய்ச்சியாளர் (இந்திரபாலா?) குறிப்பிடுகையில் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட குடியிருப்பின் காலம் கி. மு 1200 ற்கும் கி. மு. முதலாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது என்று கூறியுள்ளார் [9].

'..... யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் பெருங்கற் பண்பாட்டிற்குரியவர்கள் என்பதும் பௌத்தத்தின் வருகைக்கு முன்பே அவர்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதும் ஐயமற நிறுவப்பட்டுள்ளன'' என இரகுபதி கூறுகிறார் [10].

'' யாழ்ப்பாணம் இக்காலகட்டத்தில் [கி. மு. 5 இலையளவில்] தென்னிந்தியாவிற்கும் தென்னிலங்கைக்கும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இடையில் பண்பாடுகள் சந்திக்கும் இடைக்குறு நிலமாகவும், இந்திய உபகண்டத்தில் குறிப்பாகத் தென்னிந்தியாவில் தோன்றிய புதிய அலைகளை முதலில் ஏற்றுக்கொள்ளும் படிக்கல்லாகவும் இருந்திருக்கலாம். இந்நாட்டிற்கு பௌத்தத்தின் வருகை யாழ்ப்பாணத்தின் சம்புத்துறையூடாக வந்தமை போலவே பின் தென்னிந்தியாவில் ஏற்பட்ட 'பிராமணிய மறுமலர்ச்சியும் இங்கு வந்திருக்கக் கூடும்.

எவ்வாறாயினும் யாழ்ப்பாண வரலாற்றியல் இலக்கியங்கள் யாவும் புகைபடர்ந்த ஆனால் ஏகோபித்த ஒரு தகவலைத் தருகின்றன. அது ஆரியச்சக்கரவர்த்திகள் கால யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னரே கதிரமலையில் [கந்தரோடை] இருந்து யாழ்ப்பாணம் ஆளப்பட்ட ஒரு செய்தியாகும். சோழர் வருகையுடன் இவ்வரசு முடிவடைந்ததை இலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன. கதிரமலையில் இருந்து அரசாண்ட உக்கிரசிங்கன் சோழ இளவரசி மாருதப்புரவல்லியைத் திருமணம் செய்த பின்னர் கதிரமலை இந்நூல்களால் மறக்கப்பட்டுவிடுகிறது.

"யாழ்ப்பாண இராச்சியத்திற்கு முன்னர் இருந்ததொரு யாழ்ப்பாண அரசு பற்றி இலக்கிய ஆதாரங்கள் அறியத் தரும் செய்தியையும், இவ்வரசு கதிரமலை என்ற கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டதென முதலியார் ராஜநாயகம் முன்வைத்த கருத்தினையும், இங்கு விபரித்த தொல்லியல் சான்றுகள் பலப்படுத்துவதாகவே தோன்றுகின்றன. கந்தரோடையைத் தலைநகராகக்கொண்ட குறுநில அரசாவது இங்கு இருந்திருக்கக்கூடும் என்பதையே நாம் மேற்கொண்ட யாழ்ப்பாணத்து ஆதிக்குடியிருப்பமைப்பு ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இந்த அமைப்பு பெருங்கற் பண்பாட்டு அடிப்படையில் உருவானது என்பதையும் அவை உணர்த்துகின்றன."[11] என இரகுபதி எழுதியுள்ளார்.

"இலங்கையில் முதன் முதலாக நகரங்கள் தோன்றியமைக்கும் வரலாறு தொடங்கியமைக்கும் பெருங்கற் பண்பாடு அடிப்படையாக இருந்தது என்பதில் ஐயமில்லை." [12] என்று பெருங்கற் பண்பாட்டைப் பற்றி இரகுபதி விவரிக்கின்றார்.

எனவே இவற்றிலிருந்து இலங்கையில் நகரங்களின் தோற்றம், அரசுகளின் தோற்றம் என்பன பெருங்கற்பண்பாட்டை அடிப்படையாகக்கொண்டே அமைந்துள்ளன எனக்



கூறலாம். இது தெற்கிற்கும் வடக்கிற்கும் பொதுவானது. எனவே இலங்கையின் வரலாற்றுக்கால கருவூல மக்கள் பெருங்கற்பண்பாட்டு மக்களே என்பதில் ஐயமில்லை.

எனவே இலங்கையில் உள்ள பெருங்கற்பண்பாடு என்பது தென்னிந்திய பெருங்கற்பண்பாட்டை ஒத்ததாகவும், அதனுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டதாகவும் காணப்படுவதுடன் அவ்வாறான ஒரு பெருங்கற்பண்பாட்டிலிருந்துதான் தமிழ், சிங்களம் எனும் இரு பண்பாட்டுப்பிரிவுகளும் தோன்றி வளர்ந்தன என்பது புலனாகிறது. தொடர்ந்தும் பல வகைகளில் தென்னிந்திய அலைக்கு இலங்கை வரலாறு உட்பட்டே வந்துள்ளது. தென்னிந்தியாவிலிருந்து தொடர்ச்சியாக இலங்கைக்கு மக்கள் வருவது பலவகைகளிலும் இருந்துள்ளது. சலாகம, துறாவ ஆகிய சாதியினரைப் போன்றே கறவா சாதியினரும் அண்மையில் இலங்கையில் குடியேறிய திராவிடக்குடியேற்ற வாசிகளைப் பெரும்பாலும் உள்ளடக்கிய ஒரு சாதியினர் என்று மைக்கல் றொபேர்ட்ஸ் கூறுகிறார்.[13] இது தமிழர்கள் சிங்களவர்களாக மாறிச் சென்ற ஒரு போக்கையே காட்டுகிறது.

மேலும் இன்று நீர்கொழும்புப்பகுதியில் வாழ்கின்ற சிங்களவராக மாறிக்கொண்டிருக்கும் தமிழர் தென்னிந்தியாவிலிருந்து மீன்பிடித்தொழிலுக்காக வந்து குடியேறிய தமிழராவர். அத்துடன், அனுராதபுர இராச்சியக்காலத்தில் அங்கு வாழ்ந்து வந்த தமிழர் காலப்போக்கில் சிங்களவராக மாறினர் எனக்கருதப்படுகிறது. 17ம் நூற்றாண்டில் கண்டி இராச்சியத்தில் கைதியாக இருந்த ரொபேர்ட் நொக்ஸ் என்பவர் தப்பியோடி அனுராதபுரத்தை அடைந்தபோது அங்கு வாழ்ந்த ஒரு பகுதி மக்கள் சிங்களம் புரியாத மலபார் எனப்படும் தமிழர் என அவர் கூறுகிறார் [14].

இவ்வாறாகத்தான் தொடர்ந்தும் முற்பட்ட காலத்தில் இருந்தே தமிழரில் இருந்து சிங்களவர் பண்பாட்டுமாற்றம் பெற்றுவந்தனர் என்பதை இம்மாற்றப்போக்கு உணர்த்திநிற்பதாகக் கொள்ளலாம்.

இலங்கையில் உருவான முஸ்லீம் சமூகத்தின் தோற்றத்தை நோக்குவோமானால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அராபியர்களின் வர்த்தகத்தொடர்பு இலங்கைக்கு இருந்த போதும், சோழப் பேரரசின் வீழ்ச்சியைத்தொடர்ந்து தென்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

னிந்தியாவில் உருவான முஸ்லீம் சமூகமானது இலங்கைக்கும் பரவியது. கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் குஜராத்திலிருந்து கேரளா வரையான கரையோரப்பகுதிகளில் முஸ்லீம் வர்த்தகர்கள் குடியேறத்தொடங்கினர். அராபியர், எகிப்தியர், பாரசீகர் போன்ற பல்வேறு முஸ்லீம் பிரிவுகள் இப்பகுதிக்கு வந்தபோதிலும் குஜராத்தில் உருவான உள்ளூர் முஸ்லீம்கள் தென்னிந்திய வர்த்தகத்தில் அதிகம் ஈடுபட்டனர். உள்ளூரில் உருவான முஸ்லீம்கள் என்ற பதம் கவனத்திற்குரியது. அதாவது பாரசீகம், அரபு, எகிப்து ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்த முஸ்லீம்கள் தமது வர்த்தகத் துறைமுகப் பகுதிகளில் இடைக்காலப் பெண் எடுப்பு, திருமண உறவு என்பவற்றின் மூலமும், உள்ளூர் மக்கள் மதமாற்றம் செய்யப்பட்டதன் மூலமும் உள்ளூர் முஸ்லீம் சமூகம் உருவானது எனலாம். 12ஆம் நூற்றாண்டு சோழப்பேரரசு வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து ஆந்திரா, தமிழகம் போன்ற மாநிலங்களில் இதே பாணியில் முஸ்லீம் சமூகங்கள் தோற்றம்பெற்றன. குறிப்பாகத் தமிழகத்தில் காயல்பட்டினத்தில் முஸ்லீம் சமூகத்திற்கான மையம் கருக்கொண்டது. 13ம் நூற்றாண்டில் காயல் பட்டினத்திற்கும் இலங்கைக்குமான வர்த்தகத்தின் மூலம் காயல்பட்டினத்திலிருந்து முஸ்லீம்களின் வருகை இலங்கைக்குள் நிகழ்ந்தது. தமிழகத்தில் சாதிப்பிரச்சினையைப் பயன்படுத்தி உருவான மதமாற்றத்தினாலும் இடைக்காலப்பெண் எடுப்பாலும் திருமண உறவுகளினாலும், உள்ளூர் தமிழ், முஸ்லீம் சமூகம் உருவானது(15). இத்தமிழ் முஸ்லீம்களும், பிற தென்னிந்திய மாநிலங்களிலிருந்து வந்த முஸ்லீம்களுமே இன்று இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லீம்களின் மூதாதையர்கள் ஆவர் சுருக்கமாகப்பார்த்தால் அராபியர், பாரசீகர், மற்றும் உள்ளூர் குஜராத்திய முஸ்லீம்கள் ஆகிய முஸ்லீம் ஆண்பால் அடியிலிருந்து (பொதுவாக) தென்னிந்திய, குறிப்பாகத் தமிழக உள்ளூர் முஸ்லீம்களின் தோற்றம் உருவானது. எனவே சிறுகலப்புடன் பெருமளவு தென்னிந்திய அடியிலிருந்தே இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லீம் சமூகம் உருவானது.

எனவே இலங்கையிலுள்ள மக்கள் கூட்டத்தின் வரலாறை நோக்குகையில் அது தென்னிந்தியாவை அடியொற்றியதாகவும்; அடிப்படையில் அதிலிருந்தே தமிழ், சிங்கள, முஸ்லீம் என்ற பண்பாட்டுப் பிரிவுகள் தோற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.



# பகுதி II

இவ்வாறாக இலங்கையில் இனங்களின் தோற்றம் பற்றிய வரலாற்றை இதுவரை நோக்கினோம். அடுத்து இவ்வினங்களிற்கிடையிலான பிரச்சினை எந்த அடிப்படையில் எவ்வாறு கருக்கொண்டது? என்பதை நோக்குவோம்.

வட இந்தியாவில் உருவான பௌத்தம் தென்னிந்தியா வரை பரவியதுடன் இந்தியாவுக்கு வெளியிலும் பரவலாயிற்று. இந்தியாவின் ஏற்படும் அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையைப் பாதிப்பது வழக்கம். இவ்வகையில் அரசுடன் இணைந்து இந்தியாவில் பௌத்தம் எழுச்சி அடைந்ததும் அது இலங்கையிலும் பரவலாயிற்று. வடக்கே தோன்றிய பௌத்தம் தென் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் விரிவடைந்தது. இலங்கையில் வாழ்ந்த பெருங்கற் பண்பாட்டு மக்கள் மத்தியில் பௌத்தம் பரவலாயிற்று. அத்துடன் அநுராதபுர இராச்சியத்தில் அது அரச மதமாகியது.

கி. பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியளவிலும் பௌத்தத்திற் பிளவு ஏற்பட்டது. தேரவாதம் மகாயானம் என இரு பிரிவுகள் தோன்றின. மகாயானம் தென்னிந்தியாவிற்கும் பரவலாயிற்று. கி.பி. 3ம் நூற்றாண்டளவில் தென்னிந்தியாவிலிருந்து மகாயானக்கருத்துக்கள் இலங்கைக்கும் வரலாயின. இதனால் இலங்கையில் தேரவாதம் -மகாயான வாதம் என்பவற்றிற்கு இடையில் முரண்பாடுகள் உருவாகலாயின. இம்முரண்பாடானது நாடு கடத்தல், வன்முறை போன்ற வடிவங்களை அமைத்தது. சங்கமித்தர் எனப்படும் தென்னிந்திய தமிழ் பிக்கு மன்னன் மகாசேனனை மகாயான பிரிவிற்கு மதமாற்றம் செய்தார். இதனால் தேரவாதப்பிரிவு இலங்கையில் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. இவ்வாறு மகாயான பௌத்தத்திலிருந்து, தேரவாத பௌத்தத்தை பாதுகாப்பதற்கான எண்ணமும் முயற்சியுமே சிங்கள - தமிழ் இனப்பிரச்சினைக்கான முதற்கரு எனலாம். இது சம்பந்தமாக பேராசிரியர் எஸ். பத்மநாதனின் கருத்தை இங்கு நோக்குவது பொருத்தமானது.

“ மகாசேனன் ஆட்சிக்காலத்தில் ( கி. பி. 274 - 30 ) மகாயான தத்துவங்களை எடுத்துரைத்தவர்களின் செல்வாக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிற்கு அரசசபை உட்பட்டது. மகாசேனன் மகாயானத்தைத் தழுவிக் கொண்டான்; சோழ நாட்டிலிருந்து வந்த சங்கமித்தர் என்ற பிக்குவே அரசனை மதம் மாற்றினார் சங்கமித்தரின் தலைமையில் மகாயான வாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் மகாவிகாரை பெரிதும் பாதிப்புற்றது. மகாசேனன் ஆட்சிக்காலத்தில் மகாவிகாரரை அடக்கி ஒடுக்கப்பட்டமை, அதன் ஆதரவாளர்களின், மனதில் மிகக்கசப்பான நினைவுகளை ஆழப்பதித்தது. இந்த நிகழ்வின் விளைவாக தமிழர்களின் அரசியற் பண்பாட்டுச் செல்வாக்குகளிற்கெதிரான பகைமையுணர்வு வலுப்பெற்றது '' [ 16 ]

'' பௌத்த மதம் சிங்கள இனத்தின் இணைப்பாக்க ( Synthetic ) சமயமாயிற்று. ஆனால் அது தமிழ் நாட்டில் ஒரு போதும் முன்னிலையில் நின்றதில்லை. அதுசெழிப்புற்றிருந்த நிலையங்கள் ( பௌத்த நிலையங்கள் ) மகாயான செல்வாக்கிற்குட்பட்டிருந்தன. இந்நிலையங்களிலிருந்து மகாயான சிந்தனைகள் இத்தீவிற்குப் பரவின. மகா விகாரையின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் அழித்துவிடக் கூடிய அளவிற்கு மகாயானச் செல்வாக்கு ஓங்கியிருந்தது '' [ 17 ] என பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.

ஆதலினால் மகாயானம், தேரவாதம் என்ற இரு பௌத்தப் பிரிவுகளிற்கிடையே ஏற்பட்ட போராட்டமே சிங்கள - தமிழ் இனப் பிரச்சினையின் கரு என்ற கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது. இதனை மேலும் விளங்குவதற்கு இன்னொரு அம்சத்தையும் நோக்குவோம்.

ஆரம்பத்தில் சிங்கள பிக்குகள், தமிழ் பிக்குகள், இந்திய பிக்குகள் என்ற வேறுபாடுகள் பௌத்த பிக்குகள் மத்தியில் இருக்கவில்லை. இந்த இன, மொழி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து மகாயானம் - தேரவாதம் என்ற பிரிவு வேறுபாடுகள் இருந்தன. இது பற்றி பேராசிரியர் கா. இந்திரபாலாவின் கருத்துக்களை நோக்குவோம். முதலில் அவர் தென்னிந்திய தமிழ் பிக்குகள் பற்றிக் கூறிய குறிப்பை நோக்கிப் பின் ஏனைய விடயங்களிற்கு வருவோம்.

' பிரசித்தி பெற்ற பௌத்த தர்க்கவியல் அறிஞராகிய திக்குநாகர், பதினான்கு உரை நூல்களை எழுதியவரும் வட இந்தியாவிலே நாலந்தா கலைக்கழகத்தின் தலைவராகப் பதவி பெற்று புகழடைந்தவருமான தர்மபாலதேரர்,



போதிதர்மதேரர் ஆகியோர் காஞ்சியைச் சேர்ந்தவர்கள்'' இது தமிழ் பிக்குகள் பிரசித்தி பெற்றவர்களாக இருந்ததுடன் பல இன, மொழி பிக்குகளுக்கும் பயிலும் பிரசித்தி பெற்ற நாலந்தா கலைக்கழகத்தின் தலைவராக இருந்துள்ளமையையும் அதன் மூலம் இன, மொழி, பிரதேச வேறுபாடற்றநிலை இருந்தமையையும் உணரமுடிகிறது.

'' 6ஆம் நூற்றாண்டின் பின்பு தமிழ் நாட்டிலே பௌத்தத்திற்கெதிராக நடைபெற்ற இயக்கத்தினால் முன்னைவிடக் கூடிய அளவில் தமிழ் நாட்டுப் பௌத்தர்கள் இலங்கைக்கு வந்தனர் என்று கொள்ள இடமுண்டு. அதே போல தமிழ் நாட்டிலே பௌத்தத்திற்கு எதிராக ஏற்பட்ட ஆபத்தைக் கண்டு, அம்மதத்தைப் பாதுகாக்க முயற்சி எடுப்பதற்காக, ஈழத்துப் பௌத்த அறிஞர்கள் தமிழ் நாட்டிற்குச் சென்றனர் என்று கொள்ள இடமுண்டு''

'' 7ஆம் நூற்றாண்டிலே சீன யாத்திரிகனாகிய ஹுவான் - ஸாங் காஞ்சிக்குச் சென்றிருந்த போது அங்கு 300 ஈழ நாட்டுப் பிக்குகளைச் சந்தித்தானென அறிகிறோம். 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளிலே தமிழ் நாட்டில் பௌத்தத்திற்கேற்பட்ட ஆபத்தின் விளைவாக, பௌத்த சமயத்தைத் தமிழ் நாட்டிலே பாதுகாப்பதற்கு ஈழத்துப் பிக்குகளும் முயற்சியிலீடுபட்டிருந்தனர் எனத்தோன்றுகிறது.

'' இலங்கையில் மகாயானத்தைப் பரப்புவதற்கும் மகாயானத்திற்கு ஆபத்து ஏற்படும் போது அதனைப் பாதுகாப்பதற்கும் எவ்வாறு தமிழ் நாட்டு பிக்குகள் இலங்கைக்கு வந்து வாதுக்களை நடாத்தியும், பிறநடவடிக்கைகளை எடுத்தும் உதவினரோ அதே போல ஈழத்து பிக்குகளும் தமிழ் நாட்டு பௌத்தர்களிற்கு ஆபத்து நேரங்களில் உதவுவதற்குச் சென்றிருந்தனர் என்பதில் ஐயமில்லை'' [18]

எனவே ஆரம்பத்தில் இனம், மொழி, பிரதேசம் என்ற வேறுபாடுகளைக் கடந்து, பௌத்த பிரிவுகளிற்கிடையிலான போராட்டமே இருந்தது என்பது மேற்சொன்ன கருத்துக்களால் புலனாகிறது. ஆனால் தென்னிந்தியாவில் இருந்தே மகாயான அலை இலங்கைக்கு வீசிக்கொண்டிருந்தமையால் அதில் ஓர் இன, மொழி, பிரதேச வேறுபாட்டைக் கையாள்வது இலங்கையிலிருந்த தேரவாதப் பிரிவைப் பாதுகாப்பதற்கான சிறந்த உத்தியாகவிருந்தது. தென்னிந்தியாவிலிருந்து



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இங்கு ஏற்படும் தாக்கத்தைத் தடுப்பதற்கான முயற்சியானது அதாவது இந்திய எதிர்ப்பானது தமிழின எதிர்ப்பாக வடிவம் பெற்றது. இதனை இன்னும் தெளிவாக்குவதாயின், மகாயானத்தை இலங்கைக்குக் கொண்டு வருபவர்கள் தென்னிந்தியத் தமிழர்கள் என்பதாலும், தென்னிந்தியாவில் ஏற்படும் மாற்றங்களை தென்னிந்தியாவின் வாசற் படியென்று வர்ணிக்கப்படும் வட இலங்கைத்தமிழர்கள் முதலில் ஏற்றுப் பின்னர் அதை முழு இலங்கைக்கும் பரப்பிவிடுவர் என்பதாலும் தென்னிந்தியாவை எதிர்ப்பதென்பது இலங்கையில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களையும் எதிர்ப்பது என்று மாறியது. இவ்வாறாகத்தான் சிங்கள பௌத்தர்களிடம் இருந்த இந்திய எதிர்ப்பானது ஈழத்தமிழர் எதிர்ப்பாக உரு மாறியது

ஆரம்பத்தில் தேரவாதம், மகாயானம் என்ற போராட்டம் பின்பு இந்து -பௌத்த போராட்டமாக முழுவளர்ச்சியடைந்தது. கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பகுதியிலிருந்தே பௌத்தத்தில் சரிவு ஏற்பட்டு இந்துமதம் படிப்படியாக முன்னிலை அடையும் நிலை தோன்றி 6ஆம் நூற்றாண்டளவில் பௌத்தத்தை இந்து மதம் வலுவாக எதிர்க்கும் நிலை ஏற்பட்டது. மகாயான பௌத்தத்தை இந்துமதம் உள்வாங்கித் தனக்குள் கரைத்துக்கொண்டது. மகாயானம் பற்றிய கே. எம். பணிக்கரின் கருத்துக்களை நோக்குவது பொருத்தமானது.

"கி.பி ஆறாம் நூற்றாண்டளவில் புத்த பிரான் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அவர் வழிபாட்டிற்குரிய கடவுளாக பிரகடனப்படுத்தப்பட்டார் மச்ச புராணத்தில் இவர் அவதாரங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளார்... பாகவத புராணமும் புத்தபிரானை விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்று கூறுகிறது -- 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டின் மூலம் தென்னிந்தியாவிலும் புத்த பிரான் ஒரு அவதாரமாகக் கணிக்கப்பட்டார் என அறியமுடிகிறது" [19]

இவ்வாறாக மகாயானமும் இந்து மதத்துள்கரைந்து பௌத்தமே இந்தியாவில் அருகிச்செல்லும் நிலை தோன்றியது இம்மாற்றம் இலங்கையிலும் ஏற்படும் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே. பொதுவாக இந்தியாவில் ஏற்படும்மாற்றங்கள் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதால், தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்டுவந்த மாற்றங்களால் பௌத்தத்திற்கு ஏற்பட்ட சரிவு- இலங்கையில் பௌத்தம் பாதிக்கப்படக் கூடாது என்ற



எண்ணம் மகாசங்கத்தினரிடம் தோன்றியிருக்க வேண்டும். எனவே தேரவாதத்தை மகாயானத்திடம் இருந்து பாதுகாத்தல் பௌத்தத்தை இந்து மதத்திடம் இருந்து பாதுகாத்தல் என்பன இணைந்து சிங்கள பௌத்த எண்ணக்கரு வலுவடையலாயிற்று. ஆதனால் இந்த மாற்றங்களின் பிறப்பிடமாகிய இந்தியாவை எதிர்ப்பதும், அந்த இந்தியத்தாக்கத்திற்கு முதலில் இலக்காகும் தமிழரை எதிர்ப்பதும் ஒன்றிணைந்து தமிழின எதிர்ப்பு என்ற கொள்கை உருப்பெறலாயிற்று எனலாம். எனவே சிங்கள பௌத்தரின் தமிழின எதிர்ப்பின் ஊற்று இந்திய எதிர்ப்பாகும். ஆனால் அதற்குப் பலியாவதோ ஈழத்தமிழர்களாகும். இவ்வாறான எதிர்ப்பு தோற்றம் பெற்ற காலத்தில் அது சிங்கள - தமிழ் மக்களுக்கிடையிலான பகைமையாக இருக்கவில்லை அதற்கான ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. பௌத்த மதத்தில் ஆதிக்கம் செலுத்திய, உயர் பதவிகளில் அமர்ந்திருந்த, அறிஞர்களிடமே அது முதலில் இருந்தது.

3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த மதப் பிரிவுகளிடையேயான முரண்பாடுகள் ஏற்பட முன்பு, இலங்கையில் இனங்களுக்கிடையில் போர் எதுவும் நிகழவில்லை. எல்லாளன்-துட்டகாமினி என்பவர்களிடையிலான போர் கூட வெறுமனே அரசவம்ச யுத்தம் தான்.

"எல்லாளன் அநுராதபுரத்திலே நல்லாட்சி நடத்தினான் என்பதை பாளி வரலாற்று நூல்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளன. அவன் பௌத்தனாக இருக்கவில்லை, எனினும் அவனிற்குப் போதிய ஆதரவு அநுராதபுரத்து இராச்சிய மக்களாலேயே கொடுக்கப்பட்டது. அநுராதபுரத்தின் மன்னன் பௌத்தனாகவும் சிங்களவனாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் தோன்றாத காலம் அது" [20] என்கிறார் இந்திரபாலா.

"பாண்டிய அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கொள்ளத்தக்க ஐந்து தமிழர் கி. பி. 5ம் நூற்றாண்டில் ஆட்சியைக் கைப்பற்றி அநுராதபுரத்திலிருந்து 27 வருடங்கள் ஆட்சி செய்தனர். தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழர்களால் அவ்வப்போது சிங்கள மேலாண்மைக்கு ஏற்பட்ட சவால்கள் நிகழ்ந்த சில நூற்றாண்டுகளில் தமிழரிற்கும் சிங்களவரிற்கும் இடையிலிருந்த பண்பாட்டு வேறுபாடுகள் கூர்மையாகின" [21]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் பெரிதும் பொறுப்பாயிருந்த பிக்குகள் மகாவிகாரையை சிங்களமன்னர்களால் மட்டும் தான் பேணிப்பாதுகாக்க முடியுமென்றும் இதற்குத் தென்னிந்திய அழுக்கங்களை எதிர்க்க வேண்டும் என்றும் நம்பியிருக்கக்கூடும். பௌத்தமும் சிங்கள இனமும் ஒன்றிணைவதற்கான கருத்துருவத்தின் அடிப்படையாக இந்த நம்பிக்கை அமைந்தது. சிங்கள வரலாற்றின் முதல் 5 அல்லது 6 நூற்றாண்டுகளின் போது தென்னிந்திய செல்வாக்குகளால் ஏற்பட்ட குழப்பங்களும், வரலாற்றியல் மரபின் (Historyogrphic Tradition) முக்கிய வளர்ச்சிக் கட்டங்களும் காலத்தால் பொருந்தி இணைவது குறிப்பிடத்தக்கது. மகாவம்சத்தை இயற்றிய மகாநாம என்பவர் தாதுசேனனின் மாமனார் ஆகும். இந்தத் தாதுசேனன் தான் 27 ஆண்டுகளாகத் தமிழரின் ஆட்சியில் இருந்த அநுராதபுரத்தை விடுவித்தான். தனது காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களினூடாகவே மகாநாம இறந்தகாலத்தை நோக்கினார். எல்லாளனுக்கும் துட்டகாமினிக்கும் இடையே நடைபெற்ற சண்டையை - சராம்சத்தில் அது அரசவம்ச,அரசியல் சார்ந்த ஒன்று – மகாநாம தேசிய விடுதலைப் போராட்ட காவியமாக்கி, பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட புனிதப்போராக வர்ணிக்கிறார். ஆகவே மகாநாம முந்திய வரலாற்று மரபை உருமாற்றி, பண்டைய, நவீன வரலாறு சார்ந்த சிந்தனை மீது ஆழமான (பிழையான) பாதிப்பை ஏற்படுத்தினார். இதன் விளைவாக தமிழரிற்கும் சிங்களவரிற்கும் இடையிலான உறவு எப்பொழுதும் நிலையான பகைமை வாய்ந்ததாக நோக்கப்படலாயிற்று. ஆனால் அகழ்வாரய்ச்சியால் பெறப்பட்ட சான்றுகள் இந்நிலைப்பாட்டை ஆதாரமற்ற ஒன்றாக ஆக்குகின்றன'' [22] என்று பத்மநாதன் குறிப்பிட்டுள்ளனர்.

தென்னிந்தியாவில் இருந்து படையெடுப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருந்த சூழலில், வளர்ந்து கொண்டிருந்த மதம், இனம் என்ற எண்ணத்துடன் அரசியலும் இணைந்துகொண்டது. அரசியல் மாற்றங்கள் மதமாற்றத்தை ஏற்படுத்தி விடும் என்பதால் சிங்கள பௌத்த மன்னர்கள் பதவியிலிருந்துதான் பௌத்தத்தைப்பாதுகாக்க உகந்தது என்ற முடிவிற்கு இலகுவாகவே பௌத்த பிக்குகள் வந்திருப்பர். பௌத்தம் அரசமதமாக இருந்த சூழலும் இதற்கு வாய்ப்பானது



இந்நிலையில் சிங்கள மன்னர்களும் தமக்கு பாதுகாப்பையும், அங்கீகாரத்தையும் (Legitmacy) பெறுவதற்கு பௌத்த மதத்தை ஒரு கருவியாகவும் கொண்டனர். இதனால் தென்னிந்தியாவிலிருந்து வரும் படையெடுப்புக்களிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்வது சிங்கள அரசர்களிற்கு வசதியாயிருந்தது.

பிற்பட்ட நூற்றாண்டுகளில் எல்லாம் இத்தகைய போக்கு உறுதியடைந்துள்ளது. உதாரணமாக 4ஆம் மகிந்தனது கி. பி. 956—972 ) ஜெயதேவனராம சாசனத்தின்படி போதிசத்துவர்களைத்தவிர வேறுயாரும் இலங்கையின் அரசர்களாய் வரக்கூடாது என்பது பொறிக்கப்பட்டுள்ளது. [ 23]

நிசங்க மல்லவின் (1187—1196) சாசனத்தின் படி இலங்கை பௌத்தத்திற்குச் சொந்தமானது ஆகவே பௌத்தரல்லாத சோழர்கள், மலையாளிகள் போன்ற எவரிற்கும் இலங்கையில் முடி சூடும் உரிமை இல்லை, என்று பொறிக்கப்பட்டுள்ளது. (24)

13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூஜாவலிய என்ற நூலின் '' இலங்கைத்தீவு புத்தபிரானுக்குரியது. இது மும்மணிகளால் நிரப்பப்பட்ட புதையலைப் போன்றது. ஆகவே, எப்படி இத்தீவு இயக்கர்களிற்கு நிரந்தரமற்றதாகியதோ அப்படியே பௌத்தர்களல்லாத எவருக்கும் இத்தீவு நிரந்தரமற்றதாகும். சிலவேளைகளில் பௌத்தனல்லாத ஒருவன் பலாத்காரமான முறையில் இத்தீவிற்கு ஆட்சியாளனாகினாலும் கூட புத்தபிரானின் வலிமையால் அவன் தன்னை இங்கு ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியாது ஆகவே இலங்கை பௌத்த மன்னர்களிற்கு மட்டுமே பொருத்தமானதாகும். எனவே பௌத்த மன்னர்களின் ஆட்சி மட்டுமே இங்கு புத்தபிரானால் ஸ்திரப்படுத்தப்படும் என உறுதியாகச்சொல்லலாம்'' (25)

எனவே அரசாட்சியும் பௌத்தமும் பின்னிப்பிணைக்கப்பட்டு பௌத்த சங்கத்திற்கு அரசன் பலமாகவும், அரசனிற்கு பௌத்தசங்கம் பலமாகவும் ஒருவர் மற்றவரைத் தங்கி நிற்கும் நிலையும், அதற்குரிய கோட்பாடும் வளர்ச்சியுற்று வந்தது.

▣



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## முடிவுரை

இலங்கையின் இட அமைவு காரணமாக பல்லினங்களும் வந்து கலக்கக் கூடிய வாய்ப்பு இருந்துள்ளது. ஆயினும் தென்னிந்திய மக்களே இலங்கையிற்தோன்றிய மக்கள் கூட்டத்திற்கு அடிப்படையானவர்கள். தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டத்தில் இருந்து முறையே ஈழத்து தமிழர், சிங்களவர் எனும் இருபண்பாட்டுப் பிரிவினரும் தோன்றினர். இதேபோல பிற்காலத்தில் (13 ஆம் நூற்றாண்டைத்தொடர்ந்து) அடிப்படையில் தென்னிந்திய மக்களிடமிருந்து உருவான முஸ்லீம் சமூகம் இலங்கையில் உருவாகியது.

இந்தியாவிற்தோன்றிய பௌத்தம் தென்னாசியா முழுவதும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட தசாப்தத்தில் பரவியது. ஆனால் கிறிஸ்து தசாப்தத்தை ஒட்டிய காலங்களில் (கி. மு. முதலாம் நூற்றாண்டிற்கும், இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடையில்) பௌத்தம் இந்தியாவில் மங்கத்தொடங்கியது. ஒன்று பௌத்தத்தால் தேரவாதம், மகாயானவாதம் என்ற பிளவு ஏற்பட்டமை, இரண்டு இந்துமதம் மீண்டும் உயிர்பெறத் தொடங்கியமை ஆகிய காரணங்களினால் பௌத்தம் தோன்றிய இந்தியாவிலேயே அது வீழ்ச்சியுறும் அறிகுறிகள் இக்காலப்பகுதியில் தென்படலாயின. எனவே இலங்கையில் இருந்த மகாசங்கத்தினர் இலங்கைத்தீவிலாவது பௌத்தத்தைப்பாதுகாக்கும் எண்ணத்துடன் அதற்குரிய கருத்துக்களை விதைக்கத்தொடங்கினர் எனலாம். இவ்வாறாகவே தம்மதீபக் கோட்பாட்டின் வேர் இக்காலகட்டத்தில் உருவாகியிருத்தல் கூடும். ஆயினும் அது இந்திய எதிர்ப்பாயோ தமிழின எதிர்ப்பாயோ அமையவில்லை. பௌத்தமதமும் அதன் கோட்பாடுகளுமே அசோகச்சக்கரவர்த்தியின் கீழ் இலங்கை உள்



ளிட்ட அகண்ட இந்தியப்பேரரசை உருவாக்கியது. ஆனால் இந்தியாவில் பௌத்தமும், பேரரசும் சரியலாயின. இந்நிலையில் இலங்கை இந்தியாவிலிருந்து விடுபட்டுச் சிந்திக்கலாயிற்று.

மகாயானம் தென்னிந்தியாவில் வளர்ச்சி அடைந்து மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியத் தமிழ் பிக்குகள் மூலமாக இலங்கை வந்தடைந்தது. ஆதலால் தென்னிந்தியாவிலிருந்து வரும் மகாயான அலையைத்தடுக்க வேண்டிய அவசியம் மகாசங்கத்திற்கு ஏற்பட்டது. இலங்கையில் மட்டுமே சிங்கள இனம் உருப்பெற்றுவந்த நிலையில் இந்திய அலையை எதிர்ப்பதற்கு, பௌத்தத்தைச் சிங்கள இனத்திற்கு மட்டும் உரியதாகப் பிரகடனப்படுத்துதல் ஒரு இலகுவான தற்பாதுகாப்பாக அமையக்கூடிய வாய்ப்பிருந்தது. எனவே தேரவாதம் சிங்கள இனத்திற்கு மட்டும் உரியதாய், இந்திய எதிர்ப்புத்தன்மை வாய்ந்ததாய் அமைந்தது. ஆனால் இந்தியாவிலிருந்து தமிழ்பிக்குகளே மகாயானத்தைக்கொண்டு வந்தமையால் அந்த இந்திய எதிர்ப்பு என்பது தமிழின எதிர்ப்பு என்ற வடிவம் பெறுவது இலகுவானதாகியது. இதன் அடிப்படை என்னவெனில் இந்தியாவில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கைக்கு வரக்கூடாது என்பதே. இந்தியாவிலிருந்து வரக்கூடிய மாற்றங்களைத் தடுப்பது என்பது ஈழத்தமிழினத்தை எதிர்ப்பதாக மாறியது.

முதலில் இலங்கை பௌத்தத்திற்குரியது என்று வேர்விட்டு பின்பு இலங்கையில் வாழும் சிங்களவர்களே தேரவாத பௌத்தத்தின் காவலர்கள் என்பதாக வளர்ச்சியுற்று அதன் பின் பௌத்த சிங்களவர்களிற்கே தீவு சொந்தமென்றாகியது. இவ்வாறாக பௌத்தம் - சிங்களம் - தீவு எனும் மூன்றும் ஒரு [illegible]ல் சந்தித்தன. இவ்வகையில், தேரவாதம்-



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மகாயானவாதம் என்ற பிரச்சினையும் அதன் பெயரான இந்திய எதிர்ப்பின் அவசியமுமே இனப் பிரச்சினையின் கருவாகியது.

கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தென்னிந்தியாவிலிருந்து வருபவர்களால் இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுவந்தன. ஆயினும் அத்தகைய அரசியல் வம்சமாற்றங்கள் பௌத்தத்தைப்பாதிக்காததால் மகாசங்கம் மன்னர் எதிர்ப்பைக்கொள்ளவில்லை. ஆனால் தென்னிந்தியாவில் பௌத்தத்தில் மாற்றமும் வீழ்ச்சியும் ஏற்படத்தொடங்கி அது இலங்கைக்குப் பரவும் நிலையில் தென்னிந்தியாவிலிருந்து வரும் அரசவம்சங்கள் பௌததத்தைப் புறக்கணித்துவிடும் என்பதால் தற்போது தென்னிந்திய அரசவம்சங்களின் வரவையும் எதிர்க்கவேண்டிய அவசியம் மகாசங்கத்திற்கு ஏற்பட்டது.

இவ்வாறு மாற்றம் உண்டான சூழலில் கி. பி. 5 இல் தென்னிந்தியாவில் இருந்து வந்த 5 அரசர்கள் தொடர்ச்சியாக 27 ஆண்டுகள் ஆட்சிசெய்து வந்தமையும் அதனை இறுதியாகத் தாதுசேனன் தோற்கடித்து சிங்களபௌத்த ஆட்சியை உருவாக்கியமையும் நிகழ்ந்த அரசியற் பின்னணியிற்தான், தாதுசேனனது மாமனாகக் கருதப்படும் மகாநாம- மகாவம்சம் என்ற நூலை எழுதினார். எனவே இச் சூழலில் பௌத்தத்தைக்காக்கக்கூடிய வகையில் மன்னனும் சிங்கள பௌத்தனாக இருக்கவேண்டும் என்ற ஒரு திருப்பம் ஏற்பட்டது. இத்துடன் பௌத்தம் - தீவு- இனம் -அரசு - அரசன் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்ட 'தம்மதீப' என்ற கருத்துருவக் கோட்பாடு முழு வடிவம் பெற்றது. எனவே இக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கான வரலாற்றுப் போக்கையும், அதற்குரிய கால அளவையும் ஏறக்குறைய கி. பி. 2 இலிருந்து 6 வரை நோக்கவேண்டும். எனவே இக்கோட்பாடு ஒரு நாளில் உருவானதல்ல. ஏறக்குறைய நான்கு நூற்றாண்டு கால வளர்ச்சிப்போக்கில் இது கருக்கொண்டு வளர்ச்சியுற்றது எனலாம்.



இவை அனைத்தையும் தொகுத்துப்பார்த்தால் முதலில் பரந்த அளவில் தென்னாசியா முழுவதும் பௌத்தம் என்ற நிலையிருந்தது. பின்பு அதைப் பேணிப்பாதுகாப்பதற்கு இலங்கை மட்டுமே உரியது என்ற நிலை ஏற்பட்டது. அதன் பின்பு அதனைப் பேண ஒரு குறித்த இனம் மட்டும் வேண்டும் என்ற நிலை உருவானது. தொடர்ந்து இதனைப்பேண சிங்களபௌத்த அரசனும், சிங்களபௌத்த அரசும் தேவை என்றபோக்கு உருவானது. இவை அனைத்தினதும் கூட்டு மொத்த விளைவே 'தம்மதீப'க்கோட்பாடாகும். இத் 'தம்மதீப'க்கோட்பாடு மகாசங்கத்தினர் மத்தியிலும் அரசவம்சத்தினர் மத்தியிலுமாக ஓர் உயர்குழாம் மட்டத்திலிருந்ததே தவிர மக்கள் மட்டத்திலல்ல. ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 'தம்மதீப'க்கோட்பாடு முழுஉருவம்பெற்றதுடன், சோழப்படையெடுப்புப் போன்ற பிற்கால நிகழ்வுகளும் இக்கோட்பாட்டை மகாசங்கம் வலுப்படுத்த உதவின. ஆரம்பத்தில் இக்கோட்பாடு உயர்குழாத்தின் மத்தியில் இருந்தாலும் பிற்காலத்தில் வரலாற்று வளர்ச்சிப்போக்கில் இது மக்கள் மயப்பட்டது.

பொதுவாக இந்தியாவின் தாக்கத்திற்கேற்ப மாறிக்கொண்டுவந்த இலங்கை, இந்தியாவிலிருந்தே பௌத்தத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அந்த பௌத்தத்தைத்தொடர்ந்து ஏற்பட்டுவந்த இந்திய மாற்றங்களால் பாதிக்கப்படாது பாதுகாக்க விரும்பி, அதனைப்பாதிக்கும் நோக்கம் கொண்டிருந்த சாராம்சத்தில் இந்திய எதிர்ப்பானது பின்பு தமிழின எதிர்ப்பு எனும் வடிவத்தை அடைந்தது.

குறிப்பாக மகாவம்சத்தின் நலனை, அது கொண்டுள்ள மதரீதியான சித்தாந்தத்தைப் பாதிக்காத



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எந்த இந்தியச் செல்வாக்கையும், மாற்றங்களையும் இலங்கை வழமைபோல பெற்றே வந்துள்ளது. மகா சங்கம் என்ற இறுக்கமான நிறுவனம் இலங்கையில் தோன்றி வளர்ச்சி பெற்றிருந்ததால் அது இந்தியாவிலிருந்துவரும் மாற்றங்களை எதிர்க்கும் வலிமையோடு காணப்பட்டது. அது தனது நலன்களைப் பாதிக்கும் இந்திய மாற்றங்களை எதிர்த்தும் சாதகமான மாற்றங்களை செரித்தும் கொண்டது. உண்மையில் இலங்கையில் உள்ள தேரவாதமானது கோட்பாட்டு ரீதியில் மட்டுமே தேரவாதமாக உள்ளதென்பதையும் நடைமுறையில் அது மகாயானமாக மாறிவிட்டது என்பதையும் கவனித்தால், இந்தியச் செல்வாக்கிற்கு எவ்வாறோ தன்னை இசைவாக்கிக் கொண்டதைப் புரிந்துகொள்ளலாம். ஆயினும் இவ்விசைவாக்கம் மகாசங்கத்தின் நலனைப்பேணியதே தவிர அழிக்கவில்லை. ஆகவே சிங்கள பேரினவாதத்தின் கருத்துருவம் பௌத்தமத நோக்கத்திலிருந்தும் மகாசங்கத்தின் நலன்களிலிருந்தும் உற்பத்தியாகியது.



இரண்டாம்
# அத்தியாயம்

ஆதாரங்கள்.

1. S. K. Sitrampalan, The **Megalithic Culture in Sri Lanka**, Ph. D. Thesis, (Unpublished) University of Poona, 1980, cited in பொ. இரகுபதி, பெருங்கற்கால **யாழ்ப்பாணம்**, தெல்லிப்பழை, 1983, பக். 6
2. S. U. Deraniyagala, " Sri Lanka 28,000 B. C, ' **Ancient Ceylon**, No. 5 1984.
3. __________, " Pre, Historic Research in Sri Lanka 1885 – 1980 '' P. E. P. Deraniyagala Commemoration Volume, 1980 பக்.125 207;

   " Was There A Paleolithic (Old Stone Age) in Sri Lanka ? '' **Ancient Ceylon**, No. 4. 1981, பப. 143-156.
4. Susantha Gunatilake, " The Formation of Sri Lankan Culture '', **Ancient Ceylon**, No. 4, 1981;

   கா. இந்திரபாலா, கோணேசர் ஆலய கும்பாபிஷேகமலர் 1981, பக் 49
5. பொ. இரகுபதி 1983, பப 4 - 5
6. கா. இந்திரபாலா, '' ஆனைக்கோட்டையில் ஒரு ஆதிக் குடியேற்றம் '', வீரகேசரி, 7 - 12 - 1980.
7. __________, '' தமிழர் சிங்களவர் தொடர்புகள் '' வீரகேசரி, 22 - 06 - 1969
8. பொ. இரகுபதி, பக். 7
9. K. Indrapala ? " History '' **Jaffna Hand Book**, ( Printed - unpublished ), Jaffna, 1981, pp 11 - 21
10. பொ. இரகுபதி பக்.10
11. மேற்படி, பக் 13 - 14



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

12. மேற்படி, பக். 6.

13. Michael Roberts, **Caste Conflict and Elite Formation: The Rise of a karava Elite in Sri Lanka, 1500 - 1931**, Colombo, 1982, பக். 1

14. Robert knox, **An Historical Relation of Ceylon**, Ceylon, ( 1958 ), p 268

15. K. Indrabala, " Muslim Minorities in Sri Lanka, South and South East Asia:

The Role of Peninsular, Indian Muslim Trading Communities in the Indian Ocean trade ", International Centre for Ethnic Studies Naleemiah Institute of Islamic Research, ( Jan, 5 — 9. 1984 ) பப. 1 — 24

16. S. Pathmanathan, " Historical Writings in Medieval Sri Lanka: The Reign of Parakramabaho I " **Journal of the Sri Lanka Branch of the Royal Asiatic Society**, New series vol. XX, 1976, பக். 5 — 6

17. IBID, ப. 5

18. கா. இந்திரபாலா, " தமிழ்நாட்டுப் பௌத்தத்தின் செல்வாக்கு. **வீரகேசரி**, 05-08-1969

19. K. M. Pannikar, A Survey of Indian History பக். 98

20. கா. இந்திரபாலா, " ஆதி இலங்கையில் தமிழர் ", **வீரகேசரி**, 17 - 06 - 1960.

21. S. Pathmanathan, Historical writings...... பக். 5

22. IBID, பக். 6

23. Cited in Waipola Ragula, **History of buddhism in Ceylon** Colombo, ( 1956 ), பக். 62

24. Ibid.

25. Ibid, பக். 63



மூன்றாம்

# அத்தியாயம்

## இலங்கை:

## ஐரோப்பியர் வருகையும்.

## பிரித்தானியர் தமிழரை ஒடுக்கிய விதமும்

### பகுதி I

இலங்கையின் வரலாற்றுருவாக்கப் போக்கில் யாழ்ப்பாணம் கண்டி, கொழும்பு என மூன்று அரசுகள் தோன்றின. இவற்றை விட சில வன்னிச் சிற்றரசுகளும் காணப்பட்டன. கண்டி, கொழும்பு, அரசுகள் சிங்கள பௌத்தரை மையமாகக் கொண்டவையாகவும், யாழ்ப்பாண அரசு தமிழரை மையமாகக் கொண்டதாயும் காணப்பட்டது. இவ்வாறு மூன்று அரசுகள் நிலவிவந்த காலத்தில்தான் ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர் 16 ஆம் நூற்றாண்டின் முற்கூறில் இலங்கைக்கு வந்தனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் கோட்டை அரசு சகோதரர்களிற்கிடையில் மூன்று துண்டுகளாகப் பிளவுபட்டிருந்தது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இலங்கை பொதுவாக இந்தியாவின் படையெடுப்பிற்குள்ளாவதே புவியியல் ரீதியாக வழக்கமாயிருந்துவந்தது. ஆனால் 16 ஆம் நூற்றாண்டில் கண்டம் விட்டுக் கண்டம் படையெடுக்கும் அளவிற்கு விஞ்ஞானம், தொழில் நுட்பம் வளர்வாயிற்று. திசையறிகருவி கண்டுபிடிக்கப்பட்டமை, கப்பல் கட்டும் துறையின் வளர்ச்சி துப்பாக்கி, பீரங்கிபோன்றன கண்டுபிடிக்கப்பட்டமை ஆகியன அனைத்தும் இணைந்து கண்டம் விட்டுக் கணடம் படையெடுக்கும் சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தின. இதனால் இதுவரைகாலமும் பயமுறுத்தலாயிருந்த இந்தியப்படையெடுப்பு என்ற நிலைமாறி இலங்கை ஐரோப்பியப்படையெடுப்பிற்கும் களமாகியது.

கொழும்பில் நிலவிய மூன்று அரசுகளிற்கிடையில், சகோதரர்களிற்கிடையில்- இருந்த போட்டியானது போர்த்துக்கேயர் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. போர்த்துக்கேயரின் தயவைக் கோட்டை அரசனான புவனேகபாகு நாடினான். தமது அரசைக்காப்பாற்ற போர்த்துக்கேயரிடம் படைஉதவி பெறவேண்டிய நிலையில் பௌத்தத்தை விட்டு கத்தோலிக்கத்திற்கு மதம் மாறவும் மன்னர் பரம்பரை தயாரானது. சிம்மாசனத்தைப் பாதுகாக்க இதுவரை மகாசங்கத்தின் பலத்தை நம்பியிருந்த மன்னர்கள் இப்போது சங்கத்தைவிடப் பலம் வாய்ந்ததாகத் தெரிந்த போர்த்துக்கேயப் பீரங்கிகளைக் கண்டதும் அதன் பக்கம் சாலானார்கள். இதனால் புவனேகபாகுவின் பேரன் பௌத்தத்தைக் கைவிட்டு, மகாசங்கத்தை மீறிக் கத்தோலிக்கத்தில் சேர்ந்து டொான் யுவான் தர்மபால - எனத்தன்னைப் பெயர் மாற்றிக் கொண்டான்.

1597 இல் கோட்டை போர்த்துக்கேயர் கைக்கு உத்தியோக பூர்வமாக மாறியது. யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் பலமுறை போரிட்டு இறுதியாக 1620 இல் வெற்றி கொண்டனர் கண்டி அரசு தவிர்ந்த ஏனைய கரையோர அரசுகள் யாவும் போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியுற்றன. கரையோரம் முழுவதும் போர்த்துக்கேயர் வசமான பின்பு மிஞ்சியிருந்த கண்டி அரசே சிங்களபௌத்த மையமாக விளங்கியது. போர்த்துக்கேயர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியபோதும் யாழ்ப்பாண ராஜதானியின் கீழிருந்த ஆள்நிலத்தையும் கோட்டை ராஜதானியின் கீழிருந்த ஆழ் நிலத்தையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவில்லை. அவற்றைத் தனித்தனி நிர்வாக அலகுகளாகவே ஆண்டுவந்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

னர் ஆனால் இப்பகுதியில் வாழ்ந்துவந்த மக்களைக் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுவதற்குப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். கரையோரச் சிங்களவரில் கணிசமான பகுதியினர் கத்தோலிக்கராயினர். தமிழர்களிலும் குறிப்பிடக்கூடிய அளவு மக்கள் கத்தோலிக்கத்திற்கு மதம் மாறினர். கண்டிச் சிங்களவர் போர்த்துக்கேயரது ஆட்சிக்குட்பட்ட சிங்களவர்களைத் தரம் குறைந்தவர்களாகக் கருதினர். அன்னியர் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு அந்நிய 'மதத்திற்கு மாறி அந்நியப்பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்கள் என இழிவாக நோக்கினர். கண்டிச் சிங்களவர் தங்களை, அந்நியரிடம் சரணடையாத, பௌத்தத்தைப் பாதுகாக்கின்ற உயர் பிரிவினராகக் கருதினர். டச்சு ஆதிக்கத்தின் கீழும் இப்போக்கே தொடர்ந்தது.

போர்த்துக்கேயரிடம் இருந்து டச்சுக்காரர் இலங்கையின் கரையோர மாகணங்களை இறுதியாக 1658 ஆம் ஆண்டு தமது ஆதிக்கத்துள் கொண்டுவந்தனர். இவ்வாறு தொடர்ந்தும் ஐரோப்பிய அரசுகளிடம் ஆட்சியதிகாரம் கைமாறும் நிலையே இருந்துவந்தது. இதனால் இந்திய எதிர்ப்பு என்ற நிலை தணிந்து ஐரோப்பியச்சவாலிற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியது. தொடர்ந்து டச்சுக்காரரிடம் இருந்து ஆங்கிலேயர் 1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோர மகாணங்களைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களைத் தமது ஆதிக்கத்துட் கொண்டுவந்த பின்பும், போர்த்துக்கேயர், டச்சுக்காரரைப் போலவே யாழ்ப்பாணத்தையும், கோட்டையையும் தனித்தனியாக நிர்வகித்து வந்தனர். 1815 இல் கண்டி உட்பட இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தபோதிலும் இலங்கை ஒரு ஒற்றையாட்சி நிர்வாக முறையின் கீழ் அப்போதும் கொண்டுவரப்படவில்லை. தமிழ்ப்பகுதி தனி அலகாகவே நிர்வகிக்கப்பட்டது. கண்டியும் கொழும்பும் அவ்வாறே

இறுதியாக 1833 ஆம் ஆண்டிற்தான் இலங்கை கோல்புறூக்- கமரன் சீர்திருத்தத்தின்படி ஒன்றிணைக்கப்பட்ட ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பின் கீழ் (UNITED AND UNITARY) கொண்டுவரப்பட்டது. கொழும்பை மையமாகக் கொண்ட ஐக்கிய இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் பிரித்தானியர்களால் முதன் முறையாக இலங்கைத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர்.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியதன் பிரதான நோக்கம் பிரித்தானிய இந்தியாவைப் பாதுகாப்பதாகும். கடலை ஆழ்பவனே தரையை ஆழ்வான் என்ற கோட்பாடு நிலவிய காலம் அது. கடல் மார்க்கத்திற்கேற்பவே தொழில் நுட்பமும் வளர்ச்சியுற்றிருந்த காலம் அது. ஏனைய ஐரோப்பிய வல்லரசுகள், பிரித்தானிய இந்தியாவைத் தன்னிடமிருந்து கைப்பற்றவிடாது பாதுகாப்பதே பிரித்தானியரின் பிரதான நோக்கமாகும். இந்தியாவிற்கான கடல்வழி மையத்தில் இலங்கை அமைந்திருந்தது. தெற்கே கடல்வழியாக இந்தியாவின் நுழைவாயில் இலங்கைதான். பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்திற்கு தேனும் பாலும் ஊறும் இடம் என வர்ணிக்கப்பட்ட இந்தியாவை எப்பாடுபட்டும் பாதுகாக்கவேண்டிய கட்டாயம் பிரித்தானியாவிற்கிருந்தது. எனவே அவ்வாறு அதைப்பாதுகாப்பதற்கு ஏதுவான கேந்திரஸ்தானத்தில் அமைந்திருந்த இலங்கையை அதன் பொருட்டு பிரித்தானியர் பேணலாயினர். எனவே இங்கும் இலங்கைபற்றி பிரித்தானியரின் கண்ணோட்டம் இந்தியா சார்ந்ததாகவே அமைந்திருந்தது.

## பகுதி II

இலங்கையின் இனப்பிரச்சினையில் முக்கிய தாக்கம் விளைவிக்கும் ஒரு காரணியாக இலங்கையுடன் தொடர்புற்றதான இந்தியப்பின்னணி அமைந்துள்ளது. இந்தியப்பின்னணி அடிப்படையில்தான் பிரித்தானியா இலங்கைக்கான அரசியல் நடவடிக்கைகளைக்கைக்கொண்டனர். பிரித்தாளும் தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள் பிரித்தானியர்கள். சிறுபான்மை இனத்தை அணைத்துக்கொள்வதன் மூலம் சிறுபான்மை - பெரும்பான்மை இனங்களுக்கிடையில் பகைமையை உருவாக்கி சகல இனங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு ஏதுவான ஒரு முறையே இந்தப்பிரித்தாளும் தந்திரமாகும்.

இந்தியாவில் இந்து, பௌத்தம், இஸ்லாம் என்ற அடிப்படையில் பிரிவினைக் கொள்கைகளை பிரித்தானியர் வளர்த்தனர். இந்தியாவில் சிறுபான்மையினரான பௌத்தர்களுக்குச் '' சார்பாக '' நடந்து பின்பு பல உள்நோக்கங்களின் அடிப்படையில் பௌத்தர்கள் வாழ்ந்த பர்மியப் பகுதியை 1935ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பிரித்து தனி அரச அமைப்பின் கீழ்க் கொண்டு வந்தனர். அதேபோல் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்குச் ' சார்பாக ' நடந்து இறுதியில் 1947ஆம்



ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தானியர் பிரித்து தனியரசாக்கினர் [ 1 ].

இவ்வாறு சிறுபான்மையினருக்கு ' சார்பாக ' நடந்து கொள்வதே பிரித்தாளும் கொள்கையின் மூலத் தந்திரமாகும். ஆனால் இலங்கையில் பிரித்தானியர் சிறுபான்மையினத்தவரான தமிழர்களுக்குப் பாதகமாக நடந்து பெரும்பான்மை இனமான சிங்கள - பௌத்தர்களுடன் கைகோர்த்துள்ளனர். இந்த முரண்பாடு ஏன் நிகழ்ந்தது ? எப்படி நிகழ்ந்தது ?

நானூறுக்கும் மேற்பட்ட தனித்தனி இராச்சியங்களாக இருந்த இந்தியப்பிராந்தியத்தை ஓர் அரச அமைப்பின் கீழ்க் கொண்டு வந்த பிரித்தானியரால் இலங்கைத் தீவையும் இந்தியாவுடன் இணைப்பது ஓர் இயலாத காரியமாய் இருந்திருக்கும் என்றில்லை. முதலில் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் கரையோர மாகாணங்கள் ஆரம்பத்தில் மட்றாஸில் இருந்த பிரித்தானிய அரசாங்கத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்டதாய் இருந்தது. பின்பு முற்று முழுவதுமாக இலங்கை ஒரு தனி அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. நிர்வாக இலகு, பொருளாதார நலன், மற்றும் பரிபாலன வசதி என்பனவற்றின் அடிப்படையில் பல்வேறு இராச்சியங்களாக இருந்த இந்தியாவை ஒரு பெரும் அலகாக ஆக்கி வைத்திருக்கவேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் இலங்கையை அந்த அலகுடன் இணைக்காது ஒரு சிறு தனி அலகாக வைத்திருந்தமைக்கு பல உள்நோக்கங்கள் இருந்தன. இலங்கையின் அமைவிடமும் அதன் கேந்திர முக்கியத்துவமுமே அதனை ஒரு தனி அரசாக வைத்திருக்க வேண்டியதற்கான அடிப்படைக் காரணமாய் அமைந்தது. இந்தியாவுடன் இலங்கையை இணையவிடாது வைத்திருப்பதிலும், பார்த்துக்கொள்வதிலும் பிரித்தானியர் அக்கறையாய் இருக்கத்தொடங்கினர்.

இலங்கையை ஒரு தனி அலகாக வைத்திருப்பதில் தீர்க்கமான தீர்மானம் எடுத்துக்கொண்ட பிரித்தானியர்கள் அதனை பரிபாலிக்கும் முறை சம்பந்தமாக போதிய முன்னறிவற்ற தீர்மானங்களுக்கு முதலில் வந்தனர். அதாவது ஏனைய இடங்களில் நடந்து கொள்வது போலவே இலங்கையிலும் சிறுபான்மையினருக்குச் ' சார்பாக ' நடந்து இனங்களுக்கிடையே பகைமையை வளர்த்து முழு நாட்டையும் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் முறையைக் கைக்கொண்டனர். 1920 வரை இலங்கையில் இது நிகழ்ந்தது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரித்தானியர் தமிழ்த் தலைவர்களை அணைப்பதில் அக்கறையாய் இருந்தனர். பிரித்தானியரால் இலங்கையில் 'சேர்' ('Sir') பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் இலங்கையர், தமிழரான சேர். முத்துக்குமாரசுவாமி ஆவார் [ 2 ]

ஈழநாதம் முதலாம் ஆண்டு மலரில் கட்டுரையாகவெளிவந்த இப்பகுதியின் முடிவில் மேலும் சில கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

1833ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சட்ட நிருபண சபையில் தமிழர் சார்பில் ஒரு பிரதிநிதியும் சிங்களவர்கள் சார்பில் ஒரு பிரதிநிதியும் இடம்பெற்றனர். இதில் சிங்களவரும் தமிழரும் சம பிரதிநிதித்துவமாக இருந்தனர்

சிங்களவர் மத்தியில் கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற வேறுபாடுகள் இருப்பதை அவதானித்து அதனை வளர்த்து விடுவது தமக்குச் சாதகமானது என்பதை விளங்கிக் கொண்ட பிரித்தானியர் பிரித்தாளும் கொள்கையின் அடிப்படையில் சிங்கள இனத்தையே மேலும் இரண்டாகப்பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் பிரகாரம் 1889 ஆம் ஆண்டு கண்டிச் சிங்களவர்களுக்கு என ஒரு பிரதி நிதித்துவம் சட்ட நிருபண சபையில் ஒதுக்கப்பட்டது. எனவே தற்போது மூன்று வேறுபட்ட சமூகங்களாகக் கருதப்பட்டு ஒரு தமிழ்ப்பிரதிநிதித்துவம் ஒரு கரையோர பிரதிநிதித்துவம், ஒரு கண்டிச் சிங்களப், பிரதிநிதித்துவம் என உருவாக்கினர். இவற்றை தமிழ் பிரதிநிதிகள் சிங்கள பிரதிநிதிகள் என எடுத்துக்கொண்டால் ஒரு தமிழ் பிரதிநிதிக்கு இரு சிங்கள பிரதிநிதி என வரும். ஆனால் 1912ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின்படி ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் ஒரு கரையோர சிங்களப்பிரதிநிதித்துவம் என அதிகரிக்க தமிழ் சிங்கள பிரதிநிதித்துவம் இரண்டு தமிழுக்கு மூன்று சிங்களத்திற்கு என விகிதாசாரம் மாறியது. இது தமிழ் தலைவர்களுக்குத் திருப்தி அளித்தது. [ 3 ] அத்துடன் 1912ஆம் ஆண்டு அரசியற் திருத்தப்படி கல்வி கற்ற இலங்கையர்க்கான தெரிந்தெடுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இதில் மாக்கஸ் பெர்னாண்டோ எனப்படும் கரையோரச் சிங்கள நபரை எதிர்த்துப்போட்டியிட்ட தமிழராகிய சேர் பொன். இராமநாதன் வெற்றி பெற்றார். இதன் மூலம் பிரதிநிதித்துவம் மூன்றுக்கு மூன்று என வந்தது. கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற வேறுபாடும் வேறு சில காரணிகளும் சேர்ந்து இராமநாதனை வெல்லவைத்



தன. இத்தேர்தலுக்கு அடிப்படையான கல்வித் தகைமையிலான வாக்குரிமை முறையும், இந்தவெற்றியும் தமிழ்த்தலைமையைத்திருப்திப்படுத்தியது. [ 4 ]

அப்போது ( 1912 ) ஆறு இலட்சம் ( 6 00,000 ) தமிழ் மக்களின் சனத்தொகையில் 1346 தமிழர்கள் கல்வித்தகைமையின் அடிப்படையில் வாக்குரிமை பெற்றிருந்தனர். இருபத்தெட்டு இலட்சம் ( 28,00,000 ) சிங்கள மக்களின் சனத்தொகையில் 1748 சிங்களவர்களே கல்வித்தகைமையின் அடிப்படையில் வாக்குரிமைபெற்றிருந்தனர். [5]

இவ்வாறாக தமிழ்த்தலைவர்கள் திருப்தி அடைந்து வந்த அரசியற் போக்கானது 1921ஆம் ஆண்டு மன்னிங் அரசியத் திட்டத்திருத்தத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. இதில் மூன்று தமிழர்களுக்கு பதின்மூன்று சிங்களவர் என்ற அளவில் சட்ட நிருபண சபை அமைந்தது. சேர். பொன் அருணாசலம் தலைமையிலான தமிழர்கள் இந்த அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தனர். [ 6 ]

தமிழ்த் தலைவர்கள் இதனைக்கண்டு பெரிதும் அதிருப்தி அடைந்தனர். தமிழ்த் தலைவர்கள் இவ்வாறு அதிருப்தி அடைவதற்கு இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த கொள்கைக்கு மாறாக பிரித்தானியர்கள் தமது கொள்கையில் மாற்றம் செய்திருந்தனர் ? இந்த அரசியல் அமைப்புத் திட்டத்தின் கர்த்தா ஆள்பதி மன்னிங். அக்காலகட்ட யதார்த்தத்தினை அவதானித்த மன்னிங் சில உள் நோக்கங்களின் அடிப்படையில் புதிய திட்டத்தை வரைந்தார். 1920 வரை தமிழர்பற்றி பிரித்தானியர் கொண்டிருந்த கருத்தினை நோக்குதல் இங்கு பொருத்தமாகும்.

> 'இலங்கை மக்களில் ஒருபகுதியினராகிய தமிழர்கள் காலனித்துவ ஆதிக்கத்தின் நல்வாழ்வுக்கும் பொருளாதார நலனுக்கும் மிகவும் அத்தியாவசியமானவர்கள்'' [ 7 ]

என்று இலங்கையின் ஆள்பதியாக இருந்த சேர். கென்றி மக்கலம் 1909 ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாய் (The Secratary of State for Colonies ) இருந்த குறூ பிரபுவுக்கு (Lord Crewe) எழுதிய அறிக்கையில்மேற்படி குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக தமது நலனின் பொருட்டு தமிழரைப் பலவாறாகப் புகழ்ந்து வந்த பிரித்தானியர்கள் ஏன் பின்பு தமிழர்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதிருப்தியடையக் கூடிய வகையில் அரசியல் திட்டத்தை வகுத்தனர்? இதற்கான காரணங்கள் ஓரளவு துலக்கப்படக்கூடியவையே.

இந்தியதேசிய காங்கிரஸ் பூரண சுய இராஜ்யம் என்ற கொள்கையை முன் வைத்திராத அந்தக் காலகட்டத்தில் சேர். பொன். அருணாசலம், இந்திய தேசிய காங்கிரஸின் கோரிக்கையையும் விட தீவிரமான கோரிக்கையுடன் 1919 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸை ஆரம்பித்தார். [ 8 ] 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கைச் சீர்திருத்தக் கழகம் ( Ceylon Reform League ) வாயிலாக அருணாசலம் அரசியல் சீர்திருத்தம் கோரிமிகத் துடிப்புடன் பிரித்தானியர்களுக்குத் தலையிடி கொடுத்தார்.

இந்திய சமஷ்டி அமைப்பில் சுதந்திர இலங்கையையும் ஓர் அங்கமாக இணைத்துவிட வேண்டும் என்ற விருப்பத்தை சேர். பொன். அருணாசலம் 1918ஆம் ஆண்டளவில் கொண்டிருந்தார் [ 9 ] என்ற கருத்தும் இங்கு கவனிக்கத் தக்கது.

1915ஆம் ஆண்டு கலகத்தின் போது பெரும்பான்மையினரான பிரித்தானியர் சிங்களவர்களைப் பெரிதும் ஒடுக்கியபோது அருணாசலத்தின் சகோதரனாகிய சேர். பொன். இராமநாதன் 1ஆம் உலக யுத்த சூழலைக் கூட கருத்திற்கொள்ளாது இங்கிலாந்து சென்று அங்கு சிங்களத்தலைவர்களுக்காக நியாயம் கேட்டமை,சிங்களத்தலைவர்களுக்கு தமிழ்த்தலைவர்கள் மீது ஒரு மரியாதையை ஏற்படுத்திவிருந்தது.

இப் பின்னணியில் சேர். பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸின் தலைவராக சிங்களத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையை அவதானித்த பிரித்தானியர் தமிழ், சிங்கள மக்கள் இணைந்த ஒரு தேசிய போராட்டம் பிரித்தானியருக்கு எதிராக எழுந்து விடுமோ என்று ஐயப்பட்டனர். இந்திய தேசிய காங்கிரஸின் வாடையும் இலங்கையிற் சற்று வீசியது. இந்நிலையில் இனவேறுபாடுகளைக்கடந்து முழு இலங்கையரும் ஐக்கியப்பட்டுப் போராடக் கூடியதான ஒரு கரு தோன்றுவதை அடையாளம் கண்ட பிரித்தானியர் தமிழரையும் சிங்களவரையும் கொழுவி விடுவதற்காக தமிழரை ''அணைத்து வந்தமைக்குப் பதிலாக சிங்களவரை ''அணைக்கும்'' கொள்கைக்கு மாறினர். இந்த இடத்தில் ஓர் எடுகோள் ஒன்றினையும் நாம் கருத்திற்கு எடுத்தல் பொருத்தமுடையதாகும்.



'' பிரித்தானிய குடியேற்ற அரசு ஆரம்பத்தில் தமிழர்களுக்குச் சலுகைகளை வழங்கிக்கொண்டு வந்தது. ஆயினும் படிப்படியாகச் சிங்களவர் சார்பாக செயற்படத் தொடங்கியது. இதற்கான காரணம் முதலாம் உலக யுத்தத்திற்குப் பின் இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய விடுதலை இயக்கத்தினரால் இலங்கைத்தமிழரிடையே தோன்றிய தேசிய உணர்வைப் பிரிட்டிஷ் குடியேற்ற அரசு விரும்பாமையே '' [ 10 ]

தமிழ் - சிங்களத்தலைவர்களிடையே பிரச்சினையை உருவாக்குவதில் மன்னிங் மிகவும் அக்கறையாக இருந்தவர். ஒருபுறம் அருணாசலத்தின் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் பாணியில் நடந்து அவரைத் தூண்டுவதில் ஈடுபட்டார். மறுபுறம் சிங்களத் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவகையில் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினார். 1920 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத்திட்டம் சிங்களவர்களுக்குத் திருப்தி அளித்தது. தமிழர்கள் அதிருப்தி அடைந்தனர். சிங்கள தமிழ்த் தலைவர்களிடையேயான உறவு உடைந்தது. சேர். பொன். அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறி தமிழர் மகா சபையை அமைத்தார். இலங்கைத் தேசிய காங்கிரஸை அதன் கரு நிலையிலேயே'' ஆரம்பத்திலேயே உடைப்பதில் மன்னிங் வெற்றி கண்டார். தேசிய காங்கிரஸை உடைத்தமைக்குரிய ''பெருமை'' மன்னிங்கைச் சாரும். [11]

மேலும்;

''இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆள்பதிகளுள் மன்னிங் மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒருவர். இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்துள்ள மிகப்பெரும் சவாலாக இலங்கைத் தேசிய காங்கிரஸைக் கருதினார். ஆதலினால் சற்றும் தயவு தாட்சண்யம் அற்றமுறையில் அதனை உடைத்தெறிய முற்பட்டார். [12]

என்று கே. எம். டி. சில்வா கூறியுள்ள கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு ஒரு விடயம் தெளிவாகிறது. சிறுபான்மையினராகிய தமிழர்களுக்குச் 'சார்பாக'' நடந்து பெரும்பான்மை இனத்தையும் சிறுபான்மை இனத்தையும் பகைமை நிலைக்குத் தள்ளி இருவரும்இணைந்த ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் உருவாகவிடாது பிரித்தானியர் பார்த்துக்கொண்டு வந்தனர். பின்பு சிறுபான்மை இனத்தவரான அருணாசலம் சிங்கள, தமிழ் இனங்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களை இணைத்த வகையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் தோன்றிவிடும் என்று பிரித்தானியர் அச்சமடைந்ததால், அந்த உறவை உடைப்பதற்கு சிங்களவர்களுக்குச் ''சார்பாக'' நடத்தல் பொருத்தமுடையது எனக்கருதி 1920 ஆம் ஆண்டு அரசியற் சீர்திருத்தத்தினை உருவாக்கினார் அந்தக் கால கட்டத்தில் அருணாசலம் சில குறைபாடுகளுக்கு மத்தியிலும் முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்தார் அவர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் வாதப் பிரதிவாதத்துக்கு உரியவை. தமிழரும் சிங்களவரும் இணைந்த தேசிய வாதம் வெற்றிக்குரியதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இரு இனங்களும் இணைந்த தலைமை உருவாகிவிடுமா என்ற அச்சத்தை பிரித்தானியர் அடைந்தனர். எனவே, 'பிரித்தானியர் அருணாசலம் தலைமையைப் பார்த்து இன ஐக்கியம் உருவாகிவிடும் என அடைந்த அச்சத்தின் விளைவே சிங்களத்தலைவர்களை திருப்திப்படுத்தக் கூடியதான அரசியற் திருத்தத்தைச் செய்தமை ஆகும்

ஆயினும் மிகக் குறுகிய காலத்தில் சிங்கள தமிழ்ப் பிரிவினை கைகூடியதை பிரித்தானியர் உணர்ந்தனர். அரசியற் பகைமை இருபக்கத் தலைவர்கள் மத்தியிலும் போதியளவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பகைமை வெற்றியளித்துள்ள சூழலில் பிரித்தானியர் மறுவழமாக யோசிக்கத் தலைப்பட்டனர். சிறுபான்மை இனங்களை வெற்றிகொள்ளக் கூடியவகையில் பெரும்பான்மை இனத்தைப் பலப்படுத்தி விடுவது தமக்கு ஆபத்தானது என பிரித்தானியர் பின்பு எண்ணத் தலைப்பட்டனர்.

பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாக இருந்த டிவேன் செயர்க்கு (The Duke of Devonshire) மன்னிங் 1922 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி எழுதிய ஓர் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> ''ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் பலமும் அரசியல் முக்கியத்துவமும் குறையும் வகையில் கண்டிச்சிங்களவரும், கரையோரச் சிங்களவரும் பிரதிநிதித்துவத்தில் மேலான பங்கு பலத்தைப் பெறக்கூடியதாக இன்றைய நிலை உள்ளது'' [13]

குடியேற்ற நாட்டுக்கான மந்திரி டிவோன்சயரின் ஆலோசனைப்படி மன்னிங் அரசியல் அமைப்புத் திட்டத்தில் 1924 ஆம் ஆண்டு மாற்றம் கொண்டுவந்தார். அருணாசலம் கோரி இருந்த



படி மேல் மாகாணத்தில் தமிழருக்கு என ஒதுக்கப்பட்ட ஒரு தொகுதி உருவாக்கப்பட்டது. கரையோரச் சிங்களவரின் தலைமையிலான இலங்கைத் தேசிய காங்கிரஸ் முன்வைத்த திட்டத்தை மன்னிங் நிராகரித்தார் [14]

மன்னிங்கின் புதிய அரசியல் அமைப்புத் திருத்தப்படி எந்த ஒரு சமூகமும் சட்ட நிருபண சபையில் அறுதிப் பெரும் பான்மை பெற முடியாதவாறு அமைத்தார். [15] பெரும்பான்மையினருக்கு 50% ஆசனங்களாயின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் 50% ஆசனங்கள் என்ற வகையில் டிவோன்சயர் அமைத்தார். அந்தக் கொள்கையின் அடிப்படையில் மன்னிங் 1924 ஆம் ஆண்டுத் திட்டத்தை வகுத்தார் தனிப்பட்ட முறையில் எந்த ஓர் இனமும் பெரும்பான்மைப் பலம் அற்றதாக இருக்கின்ற போதும் அரசாங்கம் தனது நலனுக்கான எந்தஒரு சட்டத்தையும்கொண்டு வந்து உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்கள், ஐரோப்பிய உறுப்பினர்கள் மற்றும் பறங்கியர் உறுப்பினர்கள் ஆகியோரின் வாக்கைப் பெற்று நிறைவேற்றக் கூடியதாகவும் வகை செய்யப்பட்டிருந்தது. [16]

சரியோ பிழையோ மன்னிங்கின் இந்த அரசியல் திட்டத்தைக் கண்டு தமிழ்த்தலைவர்கள் திருப்தி அடைந்தனர். [17] ஆனால் மிகச் சிறிது காலத்திற்குள் பிரித்தானியரின் அணுகு முறையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது இலங்கையின் ஆள்பதியாக இருந்த சேர். கியூவ் கிளிபேட் (Sir Hugh clifford) இலங்கைக்கான அணுகுமுறையில் மாற்றம் வேண்டுமென்று ஓர் இரகசிய அறிக்கையை பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியிடம் நேரடியாகச் சென்று 1926 ஆம் ஆண்டு சமர்ப்பித்தார். நீண்ட தீவிர ஆலோசனையின் பின்பு மறு ஆண்டு (1927) இலங்கைக்கு அனுப்பப்பட்ட டொனமூர் குழுவினர் உருவாக்கிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் பிரகாரம் தமிழர் அரசியலில் சக்தி அற்றவர்களாக்கப்பட்டனர். எதனை நினைத்துக் கொண்டு, எவ்வாறு நிலைமையை புரிந்துகொண்டு தமிழரை நிர்க்கதியாக்கும் நிலையை டொனமூர் குழுவினர் உருவாக்கினர்?

நல்லநோக்கம், ஆனால் அதீத கற்பனையுடன் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1920 களின் மத்தியில் உதயமாகியது. இந்த மாணவர் காங்கிரசின் உதயத்துடன் தமிழருக்கு எதிரான பிரித்தானியரின் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகியது என



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த மாணவ காங்கிரசின் பிரதமகர்த்தாவாக கன்ரி பேரின்பநாயகம் இருந்தார். இந்திய தேசிய காங்கிரஸினால் பெரிதும் கவரப்பட்டிருந்த இந்த மாணவர் காங்கிரஸ் காந்தியையும், ஜவஹர்லால் நேருவையும் மூன்னுதாரணம் மிக்க தலைவர்களாகக் கொண்டியங்கியது. இந்தியப் பாணியைப் பின்பற்றி இலங்கையில் தேசியப் போராட்டத்தை வளர்க்க விரும்பியது. இவர்களின் கதர் உடை அணியும் தன்மை இவர்களை நேரடியாக இந்தியாவுடன் அடையாளம் காட்டியது.

வகுப்பு வாதத்தைப் பெரிதும் எதிர்த்த இந்த மாணவர் காங்கிரஸ் தேசிய ஐக்கியம், ஐக்கிய இலங்கை போன்ற எண்ணங்களுக்காக பெரிதும் குரல்கொடுத்தது. மிகக் கோலாகலமாக ஆண்டுவிழாக்கள் கொண்டாடப்பட்டன. மூன்று நாட்கள் வரை நீடித்த அவ் விழாவில் அரசியற் கருத்தரங்குகள், விவாதங்கள் என்பன இடம்பெற்றன. 1925ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுவிழாவிற்கு சிங்களவரான பி. டி. எஸ். குலரத்ன தென் இலங்கையில் இருந்து வரைவழைக்கப்பட்டார். அவ்விழாவின் போது குலரத்ன யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1927 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியும், அதனைத் தொடர்ந்து சத்தியமூர்த்தி, கலியாண சுந்தரனார், கமலாதேவி, சட்டோபாத்தியாய போன்ற இந்தியத் தலைவர்களும் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு பல வகையிலும் முற்போக்குடனும் விழிப்புணர்வுடனும் அது காணப்பட்டது. [18] அக்காலத்தில் (1920 களின் மத்தியில்) இலங்கை முழுவதிலும் காணப்பட்ட அந்த ஒரு அரசியற் பகுதியினரையும் விட யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் கூடியளவு தேசியத் தன்மை கொண்டதும், விடுதலை எண்ணம் கொண்டதும், முற்போக்கானதுமாகும்.

இக்காலகட்டத்தில் இலங்கையின் ஆள்பதியாக இருந்த சேர். கியூவ் கிளிபேட்டிற்கு மாணவ காங்கிரஸின் நிகழ்வுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். 1910களின் பிற்பகுதியில் சேர். பொன். அருணாசலம் தமிழ், சிங்கள இனங்களை இணைத்த தேசிய போராட்டத்திற்கு தலைமைதாங்க முற்பட்டது போல மீண்டும் தமிழர்பக்கம் இருந்து பிரித்தானியர் ஆதிக்கத்துக்கு எதிரான இலங்கையர் தேசியத்திற்கான அறிகுறிகள் தென்பட்டதை கிளிபேட் பெரிதும் கருத்தில் எடுத்திருக்க வேண்டும்.

பெரும் அரசியல் இடர் இலங்கையில் ஏற்பட்டிருப்பதாகக் கருதிய கியூவ் கிளிபேட்,



" நிலைமையை ஆராய்ந்து இடரைத் தாண்டி வெற்றி கொள்ளக்கூடிய சிறந்த வழிவகைகளைக் காண ஒரு விசாரணைக் குழுவை அமைக்குமாறு " [19] பிரித்தானிய அரசைக் கோரினார்.

1924ஆம் ஆண்டு அரசியல் திருத்தத்தை நீண்ட காலத்துக்கு நடைமுறைப்படுத்துமாறு ஆள்பதி மன்னிங்கும் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரி டிவோன்சயரும் முன்பு கூறியிருந்தனர். அப்படி இருந்தும் அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய இடர் இரண்டு, மூன்று வருடத்துக்குள் எப்படித்தான் ஏற்பட்டது, அந்த இடர்தான் என்ன ?

அந்த மூன்று வருட காலத்திற்குள் இலங்கை அரசியலில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் தோன்றி வளர்ந்ததைத் தவிர வேறு அரசியல் முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் எதுவும் தோன்றியிருக்கவில்லை. எனவே கிளிபேட் இடர் எனக்கருதியது யாழ்ப்பாணத்திலிருந்து தேசியத்தன்மையுடன் ஓர் அமைப்பு வளர்ந்து பிரித்தானிய ஆதிக்கத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பதுதான்.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் இனவாதத்தை வெற்றி கொண்டு இலங்கை முழுவதற்கும் தேசியப்போராட்டத்தை வளர்த்து விடும் என்று எண்ணி கிளிபேட் அஞ்சினாரா ? அல்லது மாணவ காங்கிரசின் நடவடிக்கைகள் பிற்காலத்தில் இலங்கை முழுவதையும் இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து விடும் என்று அஞ்சினாரா ? இந்த இரண்டில் எதனைக் கிளிபேட் கருதினார் என்பதைத் தெளிவுற அடையாளம் காண்பது சற்றுக் கடினம்.

இந்தியாவுடன் இணைக்கும் வகையிலோ அல்லது இணையாமலோ இலங்கையர் அனைவரையும் தழுவிய வகையில் பிரித்தானிய காலனித்துவத்திற்கு எதிரான போராட்டம் யாழ்ப்பாணத்தில் கருக்கொள்வதாக கிளிபேட் அஞ்சினார் என்று பெருமளவு கருத இடமுண்டு.

விசாரணைக்குழு அனுப்பப்பட வேண்டுமென்று கிளிபேட் 1926ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேண்டிய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு 1927 நவம்பர் மாதம் 13ஆம் திகதி டொனமூர் குழுவினர் இலங்கையில் கால் வைத்தனர். அன்றைய தினம் மகாத்மா காந்தியும் யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அழைப்பின் பேரில் கொழும்பிற்கு வந்தார். காந்திக்கு கொழும்பில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. டொனமூர் குழுவை யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் உதாசீனம் செய்தது. காந்தியைப் பல சிங்களத் தலைவர்களும் சந்தித்தனர்.

காந்தி கொழும்பு, கண்டி, காலி போன்ற பல இடங்களுக்கும் விஜயம் செய்து உரைநிகழ்த்தினார். இறுதியாக 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். 1927ஆம் ஆண்டு இலங்கையிற் காந்தி அலைவீசியது. காந்தியின் கதர் இயக்கத்திற்கு இலங்கை முழுவதும் நிதி சேகரிக்கப்பட்டது. மொத்தமாகச் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாவில் யாழ்ப்பாணத்தில் சேர்க்கப்பட்ட பதினெண்ணாயிரம் (18,000) ரூபா தவிர ஏனையவை இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் சேகரிக்கப்பட்டன. [ 20 ]

சிங்கள-தமிழ் தலைவர்கள் தம்மிடையேயான வேற்றுமைகளைக் கடந்து காந்தியை வரவேற்றனர். காந்தியின் இலங்கை விஜயமும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளும் டொனமூர் குழுவினரின் மனதிற் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பைக் கொடுத்தன.

ஏழு வாரங்கள் மட்டும் இலங்கையில் தங்கி நின்று விசாரணை நடத்திவிட்டு நாடு திரும்பிய டொனமூர் குழுவினர் புதிய அரசியலமைப்புத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தனர். சிங்களவரின் கையில் அதிக அரசியல் அதிகாரங்களை ஒப்படைக்கக் கூடிய வகையிலும், தமிழர் இலங்கை அரசியலில் எந்தவித அதிகாரமும் அற்றவர்களாக இருக்கக்கூடிய வகையிலும் அரசியல் அமைப்புத் திட்டத்தை டொனமூர் குழுவினர் உருவாக்கினர்.

வரலாற்று ரீதியாக தமிழின எதிர்ப்பு சிங்களத்தலைவர்களிடம் இருப்பதால், தமிழரை பாதிக்கக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையின் பொருட்டும் சிங்களத் தலைவர்கள் பிரித்தானியரை அரவணைத்துக் கொள்ள முயற்சிப்பர் என்பது பிரித்தானியரால் புரிய முடியாத ஒன்றல்ல.

இந்தியாவுடன் இலங்கை இணைவதற்குரிய அறிகுறிகள் தென்பட்ட சூழலில் அதனை தடுக்கும் முகமாக சிங்களவரைத் தம்பக்கம் வென்றெடுத்தற் பொருட்டு தமிழருக்கு பாதகமானதும், சிங்களவருக்குச் சாதகமானதுமான அரசியற் திட்டத்தை



டொனமூர் குழுவினர் உருவாக்கினர். இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சிங்களவர் இணைந்து கொள்வதற்குரிய தேவையை இல்லாது செய்வதற்காக சிங்களவருக்கு அதிக பங்கும் உரிமையும் வழங்கும் கொள்கைக்குப் பிரித்தானியர் வந்தனர். எல்லாவகையிலும் சிங்களவரை திருப்திப்படுத்துவது டொனமூர் குழுவின் உள்நோக்கமாய் இருந்திருக்க வேண்டும்.

டொனமூர் குழுவினரின் உள்நோக்கங்களை தெளிவாக பரிசிலனை செய்யவேண்டும். ஆயினும் சுருக்கமாக இங்கு நோக்குதல் போதும்.

இலங்கையில் இருந்த இனவாரி பிரதி நிதித்துவத்தைப் பற்றி டொனமூர் குழுவினர் தமது அறிக்கையில் குறைகூறியுள்ளனர் அல்லது கண்டித்துள்ளனர்.

ஆனால் அந்த இனவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தியது யார்? பிரித்தானியர்தானே!

இனவாரி பிரதி நிதித்துவத்தை பிரித்தானியர் ஏற்படுத்தியிருந்தமைக்காக ஒரு சமாளிப்பு காரணம் கூறியுள்ளார் டொனமூர், அதாவது

"பல்வேறு இனங்களும் சமயங்களும் உள்ள நாடுகளில் மக்களாட்சி நிலையங்களை வளர்த்தற்பொருட்டு தேர்தலின் போது பல பகுதியினரின் மோதலைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையினால் இனவாரிப் பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டது. அது சமூகத்திலுள்ள பல்வேறு மக்களினத்தாருக்கும் நற்பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய சட்ட சபையை அமைதியுடன் அளித்து மக்களிடையே ஒற்றுமையை வளர்க்குமென எதிர்பார்க்கப்பட்டது". [ 21 ]

இது உண்மையா என்பதை இனவாரி கொள்கையுடைய இன்னொரு பிரித்தானியராகிய லெப்ரினன் கேர்ணல் கொக் என்பவரது கூற்றின் வாயிலாக நோக்குவோம்.

"பல்வேறு சமயங்கள், இனங்களுக்கிடையிலுள்ள வேற்றுமையை முழு விசையுடன் ஆதரிப்பதே நமது முயற்சியாக இருக்கவேண்டுமேயன்றி, அவற்றை இணைப்பதாக இருக்கக் கூடாது. நாட்டை பிரித்தாள வேண்டும் என்பதே இந்திய [ அப்போது பிரித்தானிய – இந்தியா ] அரசின் கொள்கையாக இருக்க வேண்டும்" [ 24 ]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்று இந்தியாவைப் பிரித்தாண்ட ஆங்கிலேயன் கூறினான். இந்திய விவகாரங்களுக்கான பிரித்தானிய நிபுணன் சேர். ஜோன் இஸ்டிராக்கி இனவேறுபாடு பற்றி கூறுகையில்,

> ''பகைமை கொண்ட இந்த மதங்கள் அடுத்தடுத்து இருப்பது இந்தியாவில் நம் [பிரித்தானியரின்] அரசியலின் நிலைக்கு ஒரு வலுவான அம்சம் என்பது தெளிவான உண்மை'' [23]

எனவே ''இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்கும்'' நன்நோக்கம் நம்மிடமிருந்ததாக டொனமூர் கூறுவதை யார் தான் நம்பமுடியும். டொனமூர் குழுவினரின் உள்நோக்கங்களை மேலும் துலக்க இது உதவும்.

விதிவிலக்காக ஏ. ஈ. குணசிங்காவை தவிர இலங்கையில் வேறுயாரும் சர்வசன வாக்குரிமையை கோரவில்லை. சிங்களவர்களால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைத்தேசிய காங்கிரஸ் கூட வரையறைக்குட்பட்ட முறையிலான வாக்குரிமையையே டொனமூர் குழுவினரிடம் கோரியது, அப்படி இருந்தும் வயது வந்த ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமையை டொனமூர் குழுவினர் வழங்கினர், கேட்கும் உரிமையை கொடுக்காதவர்கள் கேளாத ஓர் உரிமையை ஏன் கொடுத்தார்கள்? சிங்களவர்களை அதிகம் திருப்திப்படுத்தவும். தமிழருக்கு எதிரான அதிக அரசியல் அதிகாரம் அவர்களின் கையில் குவியும் என்பதனாலும் தான்.

> ''முழு யாழ்ப்பாணத்தவர்களும், இந்தியர்களும், முஸ்லீம்களும், சில பறங்கியர்களும் டொனமூரின் அரசியல் சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். சிங்களவர்களின் நாடு சிங்களவர்களால் ஆளப்பட வேண்டும் என்று லண்டன் ரைம்ஸ் பத்திரிகை கூறுகிறது. இப்போது ஒரு சந்தர்ப்பம் எம்மை நாடிவந்துள்ளது. ஏன் நாம் இதனை ஏறக்கக்கூடாது'' [24]

என்று சிங்கள மக்களின் அன்றைய தலைவராக இருந்த பரன் ஜெயதிலகா கம்பகாவில் 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். சிங்களத்தலைவர்கள் தமக்கு சாதகமானது என்றவுடன் அரசியல் திட்டத்தைக் கவ்விப்பிடிக்கும் நிலையையும் இதில் காணமுடிகிறது.



சர்வசன வாக்குரிமை பற்றிய பிரித்தானியரின் நோக்கை அறிய இன்னொரு வரலாற்று நிகழ்வையும் பரிசீலித்தால் உண்மை துலங்கும்.

1860களின் மத்தியில் அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றது. அமெரிக்காவின் தென்பகுதி வடபகுதியிலிருந்து பிரிந்து தனியரசாகப் போகும் போராட்டத்தை நடத்தியது. தென்னமெரிக்காப் பகுதியின் பொருளாதாரம் அடிமை உழைப்பை மையமாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரமாக இருந்தது. கறுப்பின அடிமை மக்களை விடுதலை செய்வதன் மூலம் தென்பகுதியின் பொருளாதாரம் நலிவடைந்து விடுதலைப் போராட்டம் கைவிடப்பட்டு விடும் என ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் கருதினார். அந்த நோக்கில் அவர் அடிமை முறை ஒழிப்புச்சட்டத்தை 1863 ஆம் ஆண்டு கொண்டு வந்தார். [25] அவர் எதிர்பார்த்த பலனும் கிட்டியது. அமெரிக்க உள்நாட்டு யுத்தம் பற்றி ஜவஹர்லால் நேரு அழகுற எழுதிய கட்டுரையில் இக்கருத்தை மிகத் தெளிவாக விபரித்துள்ளார்.

அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற நன்நோக்கம் லிங்கனிடம் முதன்மை பெறவில்லை. அது அமெரிக்க ஐக்கியம் எனும் உள்நோக்கத்திற்கான ஒரு வழியாக இருந்தது. அதேபோலத்தான் இலங்கைவாழ் மக்கள் அனைவரும் வாக்குரிமை பெறவேண்டும் என்ற நன்நோக்கம் டொனமூர் குழுவிடம் இருக்கவில்லை. பிரித்தானியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் ஒரு பொதுமையான அரசியல் பாரம்பரியம் உண்டு. லிங்கனிடமிருந்து இதை டொனமூர் கற்றிருக்கலாம். அமெரிக்காவின் அடிமை முறை விடுதலைக்கும், இலங்கையிற் சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டமைக்கும் இடையில் அரசியல் உள்நோக்கத்தைப் பொறுத்து அதிக வேறுபாடு தெரியவில்லை.

இலங்கையர் கோராத சர்வசன வாக்குரிமையை இலங்கைக்கு அளித்த டொனமூர் கண்டியர், சங்கம் கோரிய சமஷ்டி முறையை நிராகரித்தார். இது ஏன்? ஒருகாலத்தில் தமது தேவைக்கேற்ப சிங்களவர்களை கண்டி, கரையோரம் என இரண்டாகப் பிரித்து மோத விடுவதற்காக இன ரீதியாக கண்டியர் பிரதிநிதித்துவத்தை உருவாக்கினார். ஆனால் தற்போது சிங்களவரை ஐக்கியப்படுத்த வேண்டிய சூழல் நில[illegible] கண்டியர் கோரிக்கையை நிராகரித்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தமிழர்கள் இந்த அரசியல் திட்டத்தை எதிர்த்தனர். சேர். பொன். இராமநாதன் அறிக்கைகளை சமர்ப்பித்தும், இங்கிலாந்து சென்று நேரடியாக உரியவர்களைச் சந்தித்து விளக்கியும் அவரது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. இராமநாதனின் கோரிக்கை சரியானதென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் தமிழரின் பிரச்சினை சரியானது. அவர்களுக்கு ஒரு தீர்வு வேண்டியிருந்தது. ஆனால் அந்த அரசியல் அமைப்பு தமிழரின் மனக்குறைகளை கருத்தில் எடுக்காது தமிழரின் உரிமைகளை நிராகரித்தது.

குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாக இருந்த பஸ்பீல்ட் பிரபுவை (Lord Pass Field) இராமநாதன் லண்டனில் சந்தித்து இந்த அரசியல் அமைப்புத் திட்டத்தில் இருந்த குறைகளை எடுத்துக் கூறினார். அதனைச் செவிமடுத்த பஸ்பீல்ட் தனது கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டதாகக் கூறும் இராமநாதன், பின்பு பஸ்பீல்ட் கூறியதாக எழுதியுள்ள வார்த்தைகளின் சுருக்கத்தை நோக்குவோம்.

"அரசாங்கம் இந்த அரசியல் திட்டத்தை ஆதரிக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தனது கரங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் பிரித்தானியப் பாராளுமன்றம் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுக்கு விடயத்தை எடுத்து விளக்குமாறும், அதன்மூலம் பாராளுமன்றம் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென தீர்மானித்தால் தான் அதனை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன் எனவும் கூறினார். [26]

இப்படிப்பட்ட கூற்றினை உண்மையென்று நம்பும் அளவிற்குத்தான் இராமநாதன் இருந்தார். கூட்டு மொத்தத்தில் தமிழருக்குப் பாதகமான அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் பிரித்தானியர்கள் முன்கூட்டியே முடிவுடன் இருந்தனர். டொனமூர் ஐரோப்பாவின் தாராண்மை வாதக் கருத்துக்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு நல்ல தாராண்மை வாதியென்றும், அதனாற்றான் இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமையையும், தாராண்மை தன்மை மிக்க அரசியல் அமைப்புத் திட்டத்தினையும் உருவாக்கினார் என்றும் கருதுவோர் உளர். ஆனால், ஒன்றை மனதில் கொள்வது நலம். டொனமூர் காலனித்துவ அரசின் தன்மையைப் பேணுவதற்



குரிய அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கே காலனித்துவ அரசால் நியமிக்கப்பட்டவர் என்பது. காப்புக் கடை நடத்துமாறு நியமிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு ஆட்டை மலரணையில் படுக்க வைத்து தாலாட்டுப்பாடமாட்டார் என்பது உண்மையோ, அந்தளவிற்குத்தான் டொனமூரின் நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்ய முடியும். எனவே யாழ்ப்பாணத்தில் எழுந்த மாணவ காங்கிரஸின் போராட்டத்தைக் கண்டு அஞ்சிய பிரித்தானியர் இந்தியாவை பின்னணியாகக் கொண்ட தமது நோக்கின் பிரகாரம் இலங்கையை இந்தியாவுடன் இணைய விடாது தடுக்கும் முன்னேற்பாட்டின் பொருட்டு சிங்களவர்களை திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் தமிழரின் உரிமைகள் முற்றும்முழுவதுமாக பலியிடப்பட்டன.

ஹென்ரி பேரின்பநாயகம் நல்லநோக்கின் அடிப்படையில் காந்தியை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தார். இந்த நிகழ்வின் மூலம் எதிர்வழமாகப் பார்த்தால் தமிழரைப் பொறுத்து காந்தி வந்தார். உரிமை போய்ச்சு என்பதுதான் உண்மை.

வரலாற்றில் சில நல்ல நிகழ்வுகள் தீய விளைவுகளை பிரசவித்து விடுவதுண்டு.

ஒருபுறம் தமிழர்களின் உரிமைகளை முற்றும் முழுவதுமாக பறித்த பிரித்தானியர்கள், மறுபுறம் தமிழர்கள் தம்மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கக் கூடிய வாறும் நடந்து கொண்டனர். தமிழருக்கு எதிராக நடந்த பிரித்தானியர்கள் தமிழரின் ஆதரவைப்பெற முடிந்தமை ஒரு விசித்திரமான விடயம்தான். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன, ஒன்று தமிழரின் ஆத்திரம் சிங்களவர் பக்கமே திசை திருப்பப்பட்டிருந்தது. இரண்டாவது தமிழரின் உரிமைகளைப் பறித்த பிரித்தானியர் தமிழரின் ஜீவாதார வாழ்வுக்கான சலுகைகளை வழங்கிக் கொண்டிருந்தனர். அதாவது இலங்கைக்கு வெளியே கடல் கடந்த நாடுகளில் (உதாரணமாக மலேசியா) தமிழருக்கு உத்தியோகங்களை வழங்கினர். இது பிரித்தானியர் தமது அரசு இயந்திரத்தை சிறப்பாகவும் குறைந்த செலவிலும் நாடத்துவதற்கான வழி. ஆனால் இதனைக் கண்டு தமிழர் பிரித்தானியர் மீது ஒருவகை விருப்பம் கொண்டனர்.

அதே போல இலங்கையிலும் தமிழருக்குச் சிறுரக உத்தியோகங்களை அதிகம் வழங்கினர். பெரும் தீர்மானம் எடுக்கக் கூடிய பெரிய உத்தியோகங்களில் ஐரோப்பியரும், பறங்கியரும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கரைநாட்டுச் சிங்களவர்களுமே அதிகம் இருந்தனர். இத்தகைய மிக உயர்ந்த உத்தியோகங்களில் தமிழர் மிகக் குறைந்த அளவினரே என்ற உண்மையே எல். பியதாஸ என்ற சிங்கள நபர் தனது நூலில் [27] தெளிவாக எழுதியுள்ளார். எப்படியோ கிள்ளித் தெளிக்கும் சிறுரக உத்தியோகங்களில் தமிழர் தமது விகிதாசாரத்தையும் விட கூடிய அளவில் பிரித்தானியரால் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஆனால் இது தமிழருக்கு ''வெள்ளைக்காரர்'' மீது நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. இந்த வகையில் தமிழரை அணைப்பதில் பிரித்தானியர் அக்கறையாய் இருந்தனர்.

1935 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆள்பதி சேர். எல்வேட் ஸ்ரப்ஸ் பருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்.

''இந்த நாட்டின் நல்லாட்சிக்கு தமிழரின் மூளைத் திறனும், சுறுசுறுப்பான அவர்களின் உழைப்பும் கடந்த காலங்களில் மிகவும் பலனுள்ளதாய் அமைந்தது. அதே போல எதிர்காலத்திலும் இவர்கள் விலைமதிக்க முடியாத பங்கை ஆற்றுவர். நாட்டின் நல்லாட்சிக்கு பிரித்தானியர்கள் எப்போதும் தமிழரின் ஒத்தாசையை வேண்டி நிற்பர்'' [28]

தமிழரின் மனங்களைக் குளிரவைக்கும் இத்தகைய செயல்களினால் உரிமையைப் பறித்து சலுகையைக் கொடுப்பதினால் தம்மீதான தமிழரின் நல்லபிப்பிராயத்தை பிரித்தானியர் சம்பாதித்துக் கொண்டனர்.

சிறிய அரசுகள் எதிர்காலத்தில் நிலைக்க முடியாது போகும் என்ற கருத்து இரண்டாம் உலக மகாயுத்த காலகட்டத்தில் உலகரங்கிற் தோன்றியிருந்தது. அவ்வாறான கருத்துத் தோன்றுவதற்கு அந்த உலக யுத்த சூழல் பிரதான காரணமாய் அமைந்தது. சிறிய அரசுகள் நிலைக்க முடியாது போகும் என்ற மேற்படி கருத்தை சிங்களத் தலைவர்களும் கொண்டிருந்தனர்.

ஜவஹர்லால் நேருவுக்கு முகவரியிட்டு, இலக்கைத் தேசிய காங்கிரஸின் சார்பில் இந்திய தேசிய காங்கிரஸிற்கு ஜே. ஆர். ஜயவர்த்தனா 1940 ஆம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் இந்தியாவுடன் இலங்கை சமஷ்டி அமைப்பு முறையில் இணைவதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது.



''சுதந்திர இந்தியாவுடன் சுதந்திர இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சி முறையோ அல்லது நெருக்கமான கூட்டாட்சி முறையோ ( Federrtion or Close Union) அமைப்பது பற்றி உங்களுடன் நாங்கள் கலந்துரையாட விரும்புகிறோம்'' [29]

இக்கடிதத்திற்கு 1940 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி ஜே. ஆருக்கு முகவரியிட்டு நேரு பதில் எழுதுகையில்.

''சிறிய அரசுகளின் காலம் முடிந்து விட்டது சமஷ்டி அமைப்பு முறையிலான பெரிய அரசுகளோ அன்றி இறுக்கமான பிணைப்புக்களைக் கொண்ட பெரிய சாம்பிராச்சியங்களேதான் எதிர்காலத்திற் தப்பிப் பிழைக்கமுடியும்.

''எதிர்கால உலகில் தனித்து நிற்க முடியாத அளவிற்கு இலங்கை அரசியற் பொருளாதார ரீதியில் ஒரு மிகச் சிறிய அரசே ஆகும். இத்தகைய சூழலில் மிகப்பெரும் ஆபத்து எதிர்காலத்தில் இலங்கைக்கு ஏற்படும் என்ற வகையில் உங்களின் கருத்தை நான் மிகவும் ஏற்றுக் கொள்கிறேன்.

''நீங்கள் முன் மொழிந்ததிட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது.

''உங்களுடைய திட்டம் சம்பந்தமாக நான் இன்று காங்கிரஸ் தலைவர் மௌலானா அப்துல் கலாம் அஸாத் உடன் உரையாடினேன். தான் உங்களுடைய கருத்தை மிகவும் வரவேற்பதாக உங்களுக்கு அறிவிக்குமாறு என்னிடம் கூறினார்.

அத்துடன் தானும் தனது சகாக்களும் இது சம்பந்தமாக இலங்கைத் தேசிய காங்கிரஸின் தூதுக்குழுவை மிக மகிழ்ச்சியுடன் சந்தித்து உரையாட விரும்புவதாக தெரிவிக்குமாறும் கூறினார்.'' [30]

1942 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகையில் வெளிவந்திருந்த டி. எஸ் சேனநாயக்காவின் கருத்தினையும் நோக்குவோம்.

''பெரிய பலம் பொருந்திய இந்திய சமஷ்டி அமைப்பிற்குள் ஓர் அங்கமாக இலங்கை இணைவது இலங்கையின் நலனுக்கு நல்லது. அது இந்தியாவிடமிருந்து அரசியல், பொருளாதாரம், இராணுவம் சம்பந்தமான சகல நலன்களையும் பெறலாம். ஆனால் இலங்கையில் இந்தியக் குடியேற்றம் நிக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பூா்தென்றும் பொருளாதார ரீதியில் இந்திய ஊடுருவல் நிகழ முடியாததற்குமான பாதுகாப்பையும் பூரண சுயாட்சிக்கான உறுதியான அரசியற்திட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். [31]

இவ்வாறு இந்தியாவுடன் இலங்கையை இணைப்பதற்கான விருப்பம் இலங்கைத்தலைவர்களிடம் காணப்பட்டது.

மேலும் இந்தியாவின் பாதுகாப்புக்கருதி இந்தியாவின் ஓர் அங்கமாக இலங்கை இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை நேரு, வைத்தியா, கே. எம் பணிக்கர் உட்பட பல இந்தியத் தலைவர்களும், இந்திய புத்தி ஜீவிகளும், இந்திய ராஜ தந்திரிகளும் 1940 களில் கொண்டிருந்தனர்.

பிரித்தானியருக்கு எதிராகச் சிங்களவர் செயற்படாதிருப்பதற்குரிய சூழலை உருவாக்கியதாலும் சிங்களவரை தன் பக்கம் அணைத்துக் கொள்வதிலும் பிரித்தானியர் மிகக் கணிசமான அளவு வெற்றியை ஈட்டியிருந்தனர். ஆயினும் பிரித்தானியர் இந்த நாட்டைவிட்டு வெளியேறிய பின்பு அயலில் உள்ள பெரிய இந்தியாவுடன் கூட்டாட்சி அமைப்பதைத்தவிர தமக்கு வேறு வழியில்லை என சிங்களத் தலைவர்கள் கருதினர்.

இதற்குரிய யதார்த்தத்தை பிரித்தானியர் உரிய வகையில் விளங்கத் தவறவில்லை. இந்தியாவுடன் இலங்கை இணைந்து விடக்கூடாது என்பதில் ஆரம்பத்தில் இருந்தே அக்கறையாக இருந்த பிரித்தானியர் இந்து சமூத்திரத்தில் தமது எதிர்கால நலனின் பொருட்டு இந்தியாவுடன் இலங்கையை இணையவிடாது தடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. எனவே இக்காலச்சூழலுக்கு ஏற்ற புதிய முன் முயற்சிகளிற் பிரித்தானியர் ஈடுபட்டனர்.

சுதந்திர இந்தியா பலம் பொருந்திய அரசாக இருந்து விடக்கூடாது என்பதற்காக இந்தியாவில் இருந்து பாகிஸ்தானைப்பிரிப்பதற்கு செய்த பல்வேறு முயற்சிகளில் ஒன்று மௌண்பேட்டினையும் அவரது மனைவி எட்வினாவையும் பயன்படுத்தியமை ஆகும்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப்பிரிக்க மௌண்பேட்டினையும் எட்வினாவையும் பயன்படுத்தியது போல இந்தியாவுடன் இலங்கையை இணையவிடாது தடுப்பதற்கு செய்யப்பட்ட



பிரபுவையும் சேர் ஐவர் ஜெனிங்சையும் பிரித்தானியர் இலங்கையிற் பயன்படுத்தினர்.

இலங்கையில் பல்கலைக்கழக கல்லூரியின் அதிபராக இருந்த பிரித்தானியரான சேர் ஐவர் ஜெனிங்ஸ், டி. எஸ் சேனநாயக்காவின் நல்ல நண்பரானார் அரசியல் அரசியற்திட்ட அந்தரங்க ஆலோசகராய் இருந்தார். [32]

இந்தியா பற்றி ஐவர் ஜெனிங்ஸ் கொண்டிருந்த கருத்தை நோக்குவதன் மூலம் ஐவர் ஜெனிங்ஸ் எப்படிப்பட்ட பாத்திரத்தை வகுத்திருப்பார் என்பதை உணரலாம்.

''இந்தியாவும் இலங்கையும் இணைக்கப்பட்டால் அவ்விணைப்பானது சமத்துவ அடிப்படையில் அமையாது. இந்த இணைப்பில் இந்திய சமஸ்டி அமைப்பினுள் இலங்கை விழுங்கப்படுவதாகவே அமையும். இத்தகைய போக்கானது ஓர் இயல்பான தலைவிதி 'என்று இந்தியத்தலைவர்கள் பேசும் அளவிற்கு கூடச் சென்று விட்டது.'' [33]

இந்தியாவின் மீதான அச்சத்தை இலங்கைக்கு வளர்த்து இலங்கையின் எதிர்காலப் பாதுகாப்புக்கு தாம் வழிவகை செய்வதாக பிரித்தானியர் உறுதி அளித்து அதன் அடிப்படையில் பிரித்தானியர் இலங்கையிற் படைத்தளம் அமைக்கும் வசதிகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக சிங்களத் தலைவர்களை வென்றெடுத்ததன் மூலம் இந்தியாவுடன் இலங்கை இணைவதைத் தடுப்பதிலும், மேலும் தமக்குத் தளவசதி பெறுவதுமான இரட்டிப்பு வெற்றியைப் பிரித்தானியர் பெற்றனர்.

ஐவர் ஜெனிங்சின் பாத்திரத்தை மேலும் விளக்குதல் நன்று. 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - பிரித்தானிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பிரதம சூத்திரதாரி ஐவர் ஜெனிங்ஸ் ஆவார்.

இலங்கையில் அப்போது ஆள்பதியாக இருந்த சேர். ஹென்றி மொங்மாசன்மூர் (Sir Henry Monck - Mason Moore) ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டார். இலங்கையின் சார்பில் டி. எஸ். சேனநாயக்கா கைச்சாத்திட்டார்.

இந்த ஒப்பந்தத்திற்கான வைபவத்திற்கு ஐவர் ஜெனிங்ஸும் வரவழைக்கப்பட வேண்டுமென்றும் அந்த வைபவத்தை ஒட்டி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எடுக்கப்படும் புகைப்படப் பிடிப்பில் ஐவர் ஜெனிங்ஸும் இடம்பெறவேண்டுமென்று டி. எஸ். சேனநாயக்கா ஆள்பதிமூரிடம் கேட்டுக்கொண்டார். ஜெனிங்ஸ் உத்தியோகபூர்வமற்றவர் என்ற வகையில் அவர் அவ்வாறு இதிற் சேர்க்கப்படக்கூடாதென ஆள்பதிமூர் தட்டிக்கழித்தபோது டி. எஸ். சேனநாயக்காவின் வற்புறுத்தலின் பேரில் ஐவர் ஜெனிங்ஸ் வைபவத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டு படம் பிடித்ததிலும் இணைக்கப்பட்டார். இந்த விபரங்களை தன்னிடம் டி. எஸ். கூறியதாக ஜே. எல். பெனான்டோ தனது நூலில் எழுதியுள்ளார். [34]

அந்த வைபவத்திற் பிடிக்கப்பட்ட படத்தில் முன்னால், ஆசனத்தில் டி. எஸ் சேனநாயக்காவும், ஆள்பதிமூரும் அமர்ந்திருக்க, பின்னால், நின்றபடி ஆள்பதியின் செயலாளர் ஜே. ஓ முன்கோல், ஐவர் ஜெனிங்ஸ், சட்டக் காரியதரிசி சேர். அலன்றோஸ் (Sir Allanrose) மற்றும் ஒலிவர் குணதிலகா, ஏ. ஜி றணசிங்கா, என் டபிள்யூ, அலுவிகாரா ஆகியோர் நின்றனர்.

எனவே ஒப்பந்தம் சம்பந்தமான அந்த உத்தியோகபூர்வ வைபவத்தில் ஐவர் ஜெனிங்ஸ் கண்டிப்பாகப் பங்கு பற்ற வேண்டும் என்று டி. எஸ். வலியுறுத்திய அளவுக்கு அந்த ஒப்பந்தத்தில் ஐவர் ஜெனிங்ஸுக்குப் பெரும் பங்குண்டு என்பதே உண்மை. இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதம் தாங்கிய தீவிர பாதையை எடுத்துவிடாது தடுப்பதற்காக கியூம் என்ற வெள்ளைக்கார ஒற்றனை இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்துக்குள் பிரித்தானியர் இணைத்துவிட்டனர் என்ற ஓர் அபிப்பிராயம் உண்டு. அதேபோல இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களை உருவாக்கி சிங்களத் தலைவர்களைப் பிரித்தானியருக்குச் சார்பாக வென்றெடுக்க ஐவர் ஜெனிங்ஸ் எனும் பாத்திரத்தை பிரித்தானியர் உருவாக்கினர் என்று எண்ணத் தோன்றுகின்றது.

சோல்பரியும் இவ்வாறான ஒரு பாத்திரத்தையே மறுமுனையில் நின்று வகித்தார்.

சோல்பரிக்கும் டி. எஸ். சேனநாயக்காவிற்கும் இடையில் பல அந்தரங்க ஆலோசனைகள் இடம்பெற்றிருந்தன என்பது 1964 ஆம் ஆண்டு சி. சுந்தரலிங்கத்திற்கு சோல்பரி எழுதிய கடிதங்கள் வாயிலாக நேரடியாகத் தெரிகிறது. அதாவது இலங்கைத் தமிழர்கள் பிரிந்து இந்தியாவுடன் இணைந்து



விடுவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாகத்தான் டி. எஸ். சேனநாயக்காவிடம் 1940 களில் அவ்வப்போது கூறியதாக சோல்பரி எழுதியுள்ளார்: [35] மேலும் இன்னொரு உதாரணத்தையும் பார்ப்போம். டி. எஸ். இற்கும் சோல்பரிக்கும் இடையில் பல இரகசிய உடன்பாடுகள் இருந்துள்ளன என்பதை இதன் வாயிலாக நாம் உய்த்துணரலாம்.

இலங்கையின் முதலாவது மகாதேசாதிபதியாக சோல்பரியை டி. எஸ். ஏற்றுக்கொண்டார். டி. எஸ். தான் தற்செயலாக இறக்க நேர்ந்தால் தனது இடத்திற்கு தனது மகன் டட்லி சேனநாயக்காவை பிரதமராக்குமாறு சோல்பரியிடம் கூறியிருந்தார். [36] மேலும் 1952 ஆம் ஆண்டு டி. எஸ். எதிர்பாராத விதமாக இறந்தார். அப்போது சோல்பரி விடுமுறையில் இங்கிலாந்தில் நின்றார். அவ்வேளை மகாதேசாதிபதிக்குப் பதிலாக இலங்கையில் செயற்பட்டவர் சேர். அலன்றோஸ் ஆவார். பிரதமராக யாரையும் நியமிக்க வேண்டாமென அலனிடம் சோல்பரி அறிவித்து விட்டுத் தனது விடுமுறையை இரத்தாக்கி உடனடியாகச் சோல்பரி இலங்கை திரும்பி டட்லி சேனநாயக்காவைப் பிரதமராக்கினார்.

அப்போது ஐ. தே. க. வின் மூத்ததலைவர்களுள் ஒருவராக சேர். ஜோன் கொத்தலாவலை இருந்தார்: டி. எஸ் இறந்ததும் தானே பிரதமர் என்று எண்ணி பிரதமராக வந்ததும் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றுவதற்குரிய பேச்சை தயாரித்து எழுதிவைத்துக்கொண்டிருந்த கொத்தலாவலை ஏமாந்தார். பின்பு இதற்குப் பழிவாங்கும் முகமாகத்தான் ஜோன். கொத்தலாவலை 1953 ஆம் ஆண்டு பிரதமரான பின் சோல்பரியை மகாதேசாதிபதிப் பதவியில் இருந்து நீக்கி ஒலிவர் குணதிலகாவை மகாதேசாதிபதி ஆக்கினார்.

இவை சோல்பரிக்கும் டி. எஸ். க்கும் இடையில் இருந்த அந்தரங்க உறவுகளைக் காட்டுகின்றன. அதாவது இந்த உறவு ஒரு பச்சையான பேரம்பேசல் உறவுதான். அதாவது பிரித்தானியர்களாகிய உங்களது விருப்பத்திற்கு நான் விட்டுத் தருவேன்; ஆனால் எனது விருப்பங்களுக்கும் நீங்கள் விட்டுத் தரவேண்டும் என்பதுதான்.

எனவே டி. எஸ். குடும்பத்திற்கும் பிரித்தானியருக்கும் இடையில் இரகசிய உடன்பாடுகள் ஏற்பட்டிருந்ததென்பதை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யும், பிரித்தானியராற் சிங்களவர் வென்றெடுக்கப்பட்டனர் என்பதையும் நாம் நம்பலாம். இதனை ஐயம் திரிபுற விளக்கக்கூடிய இன்னொரு உதாரணத்தையும் எடுப்போம்.

பிரித்தானியருடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டமை சம்பந்தமாக டி. எஸ். இடம் தாழ்வு மனப்பான்மை இல்லை என்றும் 1915 கலவரத்தின் போது பிரித்தானியராற் பாதிக்கப்பட்ட நிலையில் டி. எஸ் பிரித்தானிய எதிர்ப்பாளனாக இருந்தார் என்றும், பின்பு காலஓட்ட நிலைமைகளின் பிரகாரம், இலங்கை சிறிய நாடு என்ற வகையில் அது வகிக்கும் கேந்திர முக்கியத்துவத்தின் பிரகாரம் 'பிரித்தானியாவுடன் கூட்டுச்சேர்வது சிறந்ததெனெ டி. எஸ். முடிவுக்கு வந்ததாகவும் [37] கூறப்பட்டுள்ளது.

எனவே ஆரம்பத்தில் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்களவரை பிரித்தானியர் பகைத்திருந்த போதிலும் பின்பு கொள்கை மாற்றம் செய்து அவர்களை வென்றெடுத்தனர்.

இந்த வகையிற் பிரித்தானியர் சிங்களத் தலைவர்களை வென்றெடுத்தனர். இதற்குப்பதிலாகத் தமிழரின் உரிமைகளைச் சிங்களவரிடம் தாரைவார்த்துக் கொடுக்கப் பிரித்தானியர் தயாராகினர். அதேவேளை சோல்பரியை நன்கு உபசரித்து தம்மீது பூரண நம்பிக்கையை ஏற்படுத்தி தமிழருக்கு சிறிதளவு உரிமையும் அரசியற் திட்டத்திற் கொடுக்காதவாறு மேலும் பார்த்துக்கொண்டனர்.

இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் இருப்பதான அடிப்படை உரிமையைத் தானும் இலங்கைத் தமிழருக்கு வழங்க தனது அரசியல் அமைப்புத் திட்டம் தவறிவிட்டதென்றும் டி. எஸ். சேனநாயக்கா உயிருடன் இருந்தால் தமிழருக்கு இந்நிலை ஏற்பட்டிருக்காது என்றும் சோல்பரி கூறியுள்ளார். மேலும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி தன்னிடம் அந்தக்காலத்தில் போதிய அறிவு இருந்திருக்கவில்லை என்றும் பி. எச். பாமர் எழுதிய நூலுக்கு 1963 ஆம் ஆண்டு எழுதிய முன்னுரையிற் குறிப்பிட்டுள்ளார். [38]

சோல்பரியின் கூற்றை நாம் நம்பலாமா? இல்லை. அவர் கூறியதிலுள்ள ஒரு விடயத்தை மட்டும் பரிசீலிப்போம். இலங்கையின் இன முரண்பாடு பற்றி தன்னிடம் போதிய



அறிவு அக்காலத்தில் இருந்திருக்கவில்லை என்பது பற்றி எடுத்துக்கொள்வோம். இவர் அரசியல் அமைப்புத்திட்டத்தை அமைக்க வந்த காலத்தில் இலங்கையில் 1936 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரிசபை இருந்துள்ளது என்பதை எவ்வாறு அவர் தெரியாது இருந்திருக்க முடியும். 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் அமைப்புத்திட்டம் சிங்களவருக்கு அதிக அதிகார வாய்ப்பை கொடுத்தும் 1936 ஆம் ஆண்டு அதைப் பயன்படுத்தி தமிழரை முழு அதிகாரமற்ற நிலைக்கு அவர்கள் நடாத்திக் காட்டியதை சோல்பரி எவ்வாறு தெரியாதிருக்க முடியும்?

தமிழர் சிங்களவர்களால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை 1963 ஆண்டு எழுதிய சோல்பரி, 1964ஆம் ஆண்டு சுந்தரலிங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் உள்ள ஒரு பகுதி இங்கு மேலும் நோக்கத்தக்கது.

அதாவது 1960 ஆம் ஆண்டு டட்லி அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி வீழ்த்தியது பிழை என்றும், இனிமேலாவது ஐ. தே. க. வுக்கு ஆதரவளிப்பதுதான் தமிழருக்குரிய சிறந்த வழியென்றும் கூறியுள்ளார். [39] அதாவது பிரித்தானியர் விரும்பியபடி நடக்கக்கூடிய ஐ. தே. க.யைப் பதவியில் அமர்த்திவிட்டால் சரி என்பதே சோல்பரியின் முடிவு. ★

டொனமூர் அரசியலமைப்புத் திட்டம் அமைக்கப்பட்ட காலகட்ட அரசியல் சூழலில் இருந்து சோல்பரி அரசியல் அமைப்புத் திட்டம் அமைக்கப்பட்ட காலச் சூழல் பெரிதும் வேறானது. சோல்பரி அரசியல் அமைப்பு அமைக்கப்பட்ட காலகட்டமானது 2வது உலக மகாயுத்தம் முடிவுற்ற காலம். பல நூற்றாண்டுகளாக நிலவிவந்த காலனித்துவ ஆட்சி முறைமையை கொள்கையையும் இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆதலினால் ஏகாதிபத்திய அரசுகள் தமது ஆதிக்க நலனுக்கு புதியதோர் கொள்கையைக் கண்டறிய வேண்டியேற்பட்டது. அப்புதிய கொள்கையே நவகாலனித்துவக் கொள்கையாகும். இக் கொள்கையின் படி ஓர் அரசை நேரடியாகத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிராது, அதேவேளை தமது அரசியற் பொருளாதார நலன்களைப் பேணக்கூடிய வகையிலான அரசியற் பொருளாதார இராணுவ உத்திகளைக் கையாளுதலாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற காலகட்டத்தில் காலனித்துவ அரசுகள் தோல்வியுற்றிருந்த போதிலும் அது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வரை கடைப்பிடிக்கப்பட்ட கடலாதிக்கக் கொள்கை முடிவடையவில்லை. கடலாதிக்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடிய அளவிற்குக் கூட விஞ்ஞான தொழில் நுட்பம் வளர்ந்திருக்கவில்லை. ஆதலால் தமது ஏகாதிபத்திய நலன்களை நிலைநிறுத்தக் கூடியவகையில் தொடர்ந்தும் இந்துசமுத்திரத்தில் தமது கடலாதிக்கத்தை நிலைநிறுத்த பிரித்தானியாவும் அதன் நேச நாடுகளும் விரும்பின. இந்துசமுத்திரத்தின் மையத்திலுள்ள இலங்கை கடல்வழி ஆகாய மார்க்க கேந்திர முக்கியத்துவம் கொண்டு காணப்பட்டமையால் இங்கு கடற்படை ஆகாயப் படைத் தளங்களை வைத்திருக்க பிரித்தானியா விரும்பியதும் கடற்படைக்கு இயற்கைத்துறைமுகமாக விளங்கிய திருக்கோணமலை பெரிதும் வாய்ப்பாக இருந்தது. இந்நோக்கினை நிறைவேற்றக் கூடிய வகையில் சிங்கள தலைவர்களின் அனுசரணையை பெறும்பொருட்டான ஒரு அரசியல் அமைப்புத்திட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியம் சோல்பரிக்கு இருந்தது. அதற்காகத் தமிழருக்கு எதிராக சிங்களவர்களுக்கு அதிக விட்டுக்கொடுப்புகளைச் செய்யும் ஓர் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கினார் எனலாம். இலங்கையில் பிரித்தானிய தளம் ஒன்றை அமைப்பதற்காக அவர்கள் காட்டிய காரணம் இலங்கைக்கு எதிராக இந்தியா நடந்து கொள்ளக்கூடும் என்பதாகும். இதன் பொருட்டு சிங்களவரை தம்மீது நம்பிக்கை, கொள்ள வைப்பதற்காக பிரித்தானியர் கையாண்ட வழிவகைகளுள் ஒன்று தமிழரின் உரிமைக்குப் பாதகமாக அரசியலமைப்புத் திட்டத்தை வரைந்தமையாகும். ஆகவே நவகாலனித்துவநலனை இந்துசமுத்திரப்பிராந்தியத்திற் பேணுவதற்கேற்ற வகையில் சிங்களவருடன் கூட்டுச்சேர வேண்டியிருந்ததன் பொருட்டு உருவாக்கப்பட்டதே சோல்பரி அரசியலமைப்புத் திட்டமாகும்

இந்தியாவின் சுதந்திர அலையுடன் இலங்கையை இணையவிடாது தடுக்க வேண்டிய அவசியத்தின் பெயரில் டொனமூர் அரசியலமைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு இலங்கையை இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் இணையாது தடுக்க சிங்களவரைத் திருப்திப்படுத்த வேண்டியிருந்தது. சோல்பரியின் காலகட்டமானது இந்தியாவின் ஒரு மாநிலமாக இலங்கையை இணையவிடாமற் பார்த்துக் கொள்வது மட்டுமேயன்றி இந்தியாவின் அச்சுறுத்தலின் இருந்து இலங்கையைப் பாதுகாக்கும் பாதுகாவலராகத் தம்மைக்காட்டி இலங்கையில் தளவசதிகளைப் பெறுதலாகும். எனவே இரு அரயசிலமைப்புத்திட்ட



காலகட்டங்களிலும் வெவ்வேறு நோக்கு நிலைகளிலிருந்து பிரித்தானியர் இந்தியாவைச்சம்பந்தப்படுத்தித் தமிழரைப்பாதிக்கும் விதத்தில் நடந்து கொண்டனர்.

எனவே இந்திய சுதந்திரப் போராட்டம் இலங்கையில் பரவாமலிருப்பதற்காகவும் பிரித்தானியா தமிழரிற்குத் தீங்கிழைத்தனர். இந்தியாவுடன் இலங்கை இணைந்து விடாமற் தடுப்பதற்கும் பிரித்தானியர் தமிழரிற்குத் தீங்கிழைத்தனர். இந்தியா என்ற அச்சத்தைச் சிங்களவர்களுக்குக் காட்டி இலங்கையில் தளமமைப்பதற்காகவும் தமிழரிற்குத் தீங்கிழைத்தனர். மொத்தத்தில் பிரித்தானியர் தமிழரிற்குத் தீங்கு செய்த ஒவ்வொரு கட்டத்திலும் இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தியே தமிழரிற்குத் தீங்குசெய்தனர் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

## முடிவுரை

இலங்கை மக்களிற்கு நன்மை செய்வதற்காக வந்தவர்களல்ல பிரித்தானியர். அவர்கள் இலங்கையில் தமக்குத்தேவையான நலன்களை அடைவதற்காக வந்தார்கள். எனவே தமது நன்மையின் பொருட்டு இலங்கையர்கள் பாதிக்கப்படுவது பற்றி அவர்களிற்குக் கவலையில்லை. இந்தவகையில் முதலில் பிரித்தாளும் கொள்கையொன்றை வகுத்துக் கொண்டனர். 1920ஆம் ஆண்டு வரை சிறுபான்மையினரை அணைக்கும் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்ட பிரித்தானியர் பின்பு, பெரும்பான்மையினரை அணைக்கும் பிரித்தாளும் தந்திரத்தை மேற்கொண்டனர். இதில் இருகட்டங்கள் உண்டு.

முதலாவது 1917 ஆம் ஆண்டைத் தொடர்ந்து சேர். பொன். அருணாசலம் தலைமையில் முழு இலங்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கையர் தழுவிய தேசியவிடுதலைப்போராட்டம் எழுந்து விடும் என்ற அச்சத்தினால் அவ்வாறான தேசியப் போக்கை உடைப்பதற்காக சிங்களவர்களாகிய பெரும்பான்மையினரை அணைக்கும் கொள்கையைப் பிரித்தானியர் கையாண்டனர். அடுத்தது 1920களின் மத்தியில் கன்ரிபேரின்பநாயகம் தலைமையில் காந்தியச் சாயலுடன் யாழ்ப்பாணத்தில் உருவான விடுதலை எண்ணத்தின் விளைவால் தமிழரும் சிங்களவரும் மகாத்மாகாந்தியின்முன் தங்கள் வேறுபாடுகளை மறந்து இந்தியாவுடன் இணையும் வகையில் போராட்டம் வளர்ந்துவிடும் என்ற அச்சம் பிரித்தானியரிடம் ஏற்பட்டது. ஆதலினால் இந்தியாவுடன் இலங்கையை இணைய விடாது தடுக்கும் பொருட்டு, விடுதலைப் போராட்டத்திற்கானதேவை உருவாக முடியாதவாறு சிங்களவரை அணைக்கும் கொள்கையைப் பிரித்தானியர் வகுத்தனர். சிங்களவரை அணைக்கும் பொருட்டுத் தமிழருக்குப் பாதகமாக நடப்பது பிரித்தானியரிற்கு அத்தியாவசியமாக இருந்தது.

இறுதியாக இலங்கையை இந்தியாவுடன் ஒரு மாநிலமாக இணைய விடாமற் தடுப்பதற்கு நவகாலனித்துவக் கொள்கையின் கீழ் கடலாதிக்கத்தைப்பேண பிரித்தானியர் இலங்கையிற் தளம் அமைப்பதற்கும் இந்தியாவைச் சார்புபடுத்திய காரணங்களைக் காட்டி பிரித்தானியர் தமிழரின் நலன்களிற்குப் பாதகமாய் நடந்து கொண்டனர். 1920 ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டுவரையிலான தமிழ்த் தலைவர்கள் அரசியல் விவேகமற்றவர்களாய் இருந்தமையால் அவர்களை ஏமாற்றுவது பிரித்தானியரிற்குச் சிரமமான காரியமாய் இருக்கவில்லை.

சேர். பொன். அருணாசலம் சில பிற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும் சில முற்போக்கான அம்சங்களையும் கொண்டிருந்தார். விளை



வைக் கொண்டு வரலாற்றைமதிப்பிடுகையில் இவரது அரைவேக்காட்டு முற்போக்கு தமிழரிற்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. இவர் ஒரு சிறந்த நிர்வாகி ஆனால் அரசியல் சாமர்த்தியம் அற்றவர்.

அடுத்த கட்டத் தலைவர்களில் முக்கியமானவராகிய கன்ரி பேரின்பநாயகம் ஒரு கற்பனாவாத முற்போக்காளர். அவர் பிள்ளையார் பிடிக்க முற்பட்டது குரங்கைப் பிடிப்பதில் முடிந்தது.

பேரின்பநாயகத்திற்குப் பின்பு வந்த ஜி. ஜி. பொன்னம்பலமும் அரசியல் சாதுரியமற்ற ஒரு சிறந்த வழக்கறிஞர் மட்டுமே. இப்படியான அரசியல் சாதுரியம் அற்றவர்களும், பகுதிநேர அரசியல்வாதிகளுமான தமிழ்த் தலைவர்களை ஏமாற்றுவது பிரித்தானியரிற்கு ஒரு கடினமான காரியமாக இருக்கவில்லை. அக் கால சிங்களத்தலைவர்களைப் பொறுத்தவரை தமக்குச் சாதகமாய் எது கிடைத்ததோ அதை அப்படியே பற்றிப்பிடித்துக் கொண்டனர்.

இதில் இறுதியாகச் சொல்லக் கூடியது என்னவெனில் இலங்கையுடனான இந்தியாவைப் பின்னணியாகக் கொண்ட சூழலின் காரணமாகத் தமது நலன்களைப் பேணும் பொருட்டு பிரித்தானியர் இலங்கைத் தமிழரைப் பலியிட்டனர் என்பதே.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மூன்றாம்

# அத்தியாயம்

## ஆதாரங்கள்


1. இந்தியாவில் பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கைக் குப் பார்க்க: ரஜனி பாமிதத் [ எம். வி. வெங்கட்ராம் (மொ—பெ)], இன்றைய இந்தியா, சென்னை, (1988).
2. இவர் பற்றிய சிறு விபரங்களிற்குப் பார்க்க: V. Muttucumaraswami, Founders of Modern Ceylon: **Eminent – Tamils**, Vol - I, Jaffna, (1973).
3. Isaac Tambiah And Others: **A Memorandum To The Secretary of State for Colonies**, (Unpublished), Jaffna, (1938), P. 8.
4. Ibid
5. Ibid
6. G. C. Mendis, **Ceylon Under The British**, Colombo, (1948) P.125
7. Despatch No. 346 of May 26, 1909 Cited in Isaac Tambiah And, Others, P. 4.
8. அருணாசலத்தின் உரைகளுக்குப் பார்க்க:
   (1) சேர். பொன் அருணாசலம் [இராமநாதன் அருளம்பலம் ( மொ — பெ ) ] எமது அரசியல் குறைகள், மட்டக்களப்பு (1919) பப. 1—62
   (2) Sir Pon. Arunachalam, **Constitutional Reforms Address At The Ceylon National Conference**, 13 th Dec, (1918) PP. 1 — 31.
9. Cited in A. J. Wilson, **The Break - up of SriLanka: The Sinhalese — Tamil Conflict**, London, (1988) P. 25.
10. தமிழ் ஈழ மக்கள் மன்றம், இலங்கையில் இனப் போராட்டம், யாழ்ப்பாணம், (1938) பக் — 3.
11. சுசில் சிறிவர்த்தனா, ''இலங்கையில் நிலவிய இன வுணர்வில் பிரித்தானிய அரசியல் யாப்புரிமை ஏற்படுத்திய தாக்கம்,'' சமூக விஞ்ஞானக் கழகம், (தொகுப்பு: மொ – பெ). **இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்**, யாழ்ப்பாணம். 1988, பக் — 280.





12. K. M. De Silva, " The Reform And Nationalist Movements in The Early Twentieth Century'', K. M. De Silva (Ed), **History of Ceylon**, Colombo (1973), P· 396.
13. Cited in Isaac Tambiah And Others, P. 10.
14. G. C. Mendis, P. 126.
15. Ibid.
16. Ibid.
17. Isaac Tambiah and Others, p. 8.
18. Santasilan Kadirkamar, ' The Jaffna Youth Congress ' **Handy Perinbanayagam; A Memorial Volume**, Jaffna, ( 1980 ), pp 17 — 26
19. Sir Pon. Ramanathan, **The Memorandum**, London, ( 1930 ), p. 4
20. Santasilan Kadirkamar, pp. 26 — 38
21· டொனமூரும் ஏனையோரும் [ இ. இரத்தினம் ( மொ - ப ] **யாப்பினை ஆய்ந்த சிறப்பாணைக் குழுவின் அறிக்கை**, கொழும்பு, ( 1961 ), பக். 125.
22. ரஜனி பாம் தக், பப 562 - 563
23. மேற்படி, பக் - 563
24. Isaac Tambiah and Others p. 21,
25. Jawaharlal Nehru, **Glimpses of World History**, London, ( 1939 ) pp 566.
26. Sir Pon. Ramanathan P. VI
27- L. Piyadasa, **Srilanka: The Holocaust and After**, London, ( 1984 ) pp 71 — 77.
28. Ceylon Observer, 02 - 05 - 1935, Cited in Isaac Tambiah and Others, p. 4.
29. Michael Roberts ( e d ), **Documents of the Ceylon National Congress in Ceylon**, Colombo, ( 1977 ) p 2708


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

30. Ibid pp. 2710 - 2711
31. Saturday Review ( Weekly Paper From Jaffna ) 09 - 08 - 1986
32. J. L. Fernando, **Three Prime Ministers of Ceylon An Inside Story**, Colombo, ( 1963 ).
33. Sir Ivor Jenings, **The Commonwealth in Asia**, London, ( 1951 ) p. 113. Cited in S. U. Kodikara, **Indo - Ceylon Relations Since Independence**, Colombo, ( 1965 ) pp. 36 - 7
34. J. L. Fernando, pp. 33 - 34
35. C. Suntharalingam, **Eylom: Beginnings of Freedom Struggle**, Colombo, pp 78 - 79.
36. J. L. Fernando p. 40
37. Ibid p. 36
38. B. H. Famer, **Ceylon A Divided Nation**, London. ( 1963 ) pp II — IV
39. C. Suntharalingam, pp 74 — 76



நான்காம்

# அத்தியாயம்

## சிங்கள பௌத்த எழுச்சி - முதலாம்கட்டம்

நவீன வரலாற்றில் இலங்கையில் சிங்கள பௌத்த எழுச்சியை இரு கட்டங்களாக நோக்கலாம். ஒன்று 1840 களில் ஏற்பட்ட எழுச்சி, இரண்டாவது 1950 களில் ஏற்பட்ட எழுச்சி. முதலாவது கட்டம் பிரித்தானியரின் நேரடி ஆதிக்கம் இலங்கையில் இருந்த காலத்தில் ஏற்பட்டது, இரண்டாவது கட்டம் பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறியகாலத்தை ஒட்டி ஏற்பட்டது. எனவே அடிப்படையில் இரண்டும் வேறுபட்ட அரசியற் பின்னணியில் இடம் பெற்றதை அவதானிக்கலாம். ஆயினும் இவ்வெழுச்சிக்கு ஒரு பொதுவான வரலாற்று வளர்ச்சிப்போக்கு உண்டு. ஒவ்வொரு வரலாற்றுச் சூழலிற்கும் ஏற்ப பௌத்தம் தன்னை உருமாற்றிச் சென்றுள்ளது. ஆயினும் பௌத்தத்தின் பெயரிலான மகாசங்கம் தனது நலன்களைப் பேணுவதில் ஒரு பொதுச்சாராம்சத்தைப் பேணியுள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் இலங்கையில் வாழ்ந்த பல் இன, மத மக்களும் பிரித்தானிய நலனின் பொருட்டு ஒரே அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டனர். நவீன கல்வி முறை, நவீன சிந்தனைகள் இத்தீவிற்கு பிரித்தானியரால் கொண்டு வரப்பட்டன. நவீன நிர்வாக அமைப்பு, நிறுவன அமைப்பு (Institution), நவீன ஸ்தாபன அமைப்பு (Organization) என்பன கொண்டுவரப்பட்டன. இலங்கைத் தீவு முழுவதும் பெருந்தெருக்களாலும் புகையிரத வீதிகளாலும் இணைக்கப்பட்டது. போக்குவரத்து தொலைத்தொடர்பு சேவைகள் உருவாகின. முழுத்தீவும் ஒரு சந்தை அலகாக மாறியது. இவற்றிற் கேற்ப பொதுச் சட்டங்கள் உருவாகின. யாழ்ப்பாணத் தேசவழமைச் சட்டம், கண்டியர்சட்டம், மட்டக்களப்பு முக்குவர்சட்டம், இஸ்லாமிய விவாகச்சட்டம் போன்றவை தவிர்ந்த ஏனைய விடயங்களிற்கெல்லாம் பொதுச்சட்டங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டின் குற்ற விசாரணைகள் பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதில் மதம், இனம், மொழி, பிரதேசம் போன்ற வேறுபாடுகள் களையப்பட்டிருந்தன. சாதி சம்பந்தமான சட்டம் படிப் படியாக நீங்கி வந்தது. ஆயினும் பொதுவாகத் தேசம் தழுவிய ஒரு சட்டநிர்வாகம் உருப்பெற்றது. இவ்வாறு பொது அம்சங்கள் பல இன, மக்கள் மத்தியில் உருவான போதிலும் இலங்கைத்தீவின் இன ஐக்கியம் என்பது ஏற்படவில்லை. மேற்சொன்னஎத்தகைய பொது அம்சங்களும் இலங்கை வாழ் மக்களை இலங்கையர் என்ற பொது உணர்விற்குட்படுத்தத் தவறின. மாறாக தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற சொற்பதங்களும் அவை சார்ந்த உணர்வுகளுமே மேலோங்கின. இலங்கையர் தேசியம் என்பது கருவிலேயே சிதைவுற்ற ஒன்றாக இருந்தது. இவ்வாறு இது மாறியதற்கான அரசியற் சூழலை, அதன் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வது அவசியமாகும்.



இத்தகைய ஐக்கியமின்மையை உருவாக்குவதில் சிங்கள பௌத்த வரலாற்றுணர்வும், அது சார்ந்த அரசியலும் பிரதான பங்கை வகித்துள்ளன எனலாம்.

ஐரோப்பியரது வருகையுடன் சிங்களபௌத்தத்தின் வரலாற்றுப்போக்கு இதற்கு முற்பட்ட காலத்து வரலாற்றுப் போக்கிலிருந்து ஓரளவு திருப்பமும் ஸ்தம்பிதமும் அடைந்தது. பௌத்தம் ஐரோப்பிய சவாலை நோக்கி ஒரு திருப்பத்திற்குள்ளானது. அதே சமயம் ஐரோப்பியரது மேலாண்மையானது பௌத்தத்தை ஸ்தம்பிக்க வைத்தது. சிங்கள கரையோர மாகாணங்கள் முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியரின் கைகளில் மாறிமாறி வீழ்ந்தன. இதனால் பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டிய இடமாகக் கண்டி இராஜ்ஜியம் மாறியது. இவ்வாறு ஐரோப்பியரது கால கட்டத்தில் கண்டி இராஜ்ஜியம் இரு பிரச்சினைகளிற்கு முகங் கொடுக்க வேண்டியதாயிற்று. ஒன்று கரையோரங்களில் ஆதிக்கம் பெற்றிருந்த ஐரோப்பிய சவால். இரண்டு கண்டி அரசை இந்துமதச் செல்வாக்கிலிருந்து தடுப்பது பற்றிய சவால். எனவே இங்கு ஒரு விடயத்தை நாம் ஆழமாக அவதானிக்க வேண்டும். அதாவது ஐரோப்பிய சவாலை எதிர் கொண்ட நேரத்திலுங் கூட இந்துப்பாரம்பரிய அரசர்கள் ஆதிக்கத்தில் இருப்பதை பௌத்த சங்கமும், பௌத்த பிரதானிகளும் விரும்பவில்லை என்பது, அதாவது இந்துப்பாரம்பரியத்தில் வந்த கண்டி அரசனைக் கவிழ்க்கும் சதிப்புரட்சியில 1760இல் மகா சங்கத்தினரும் கண்டிப் பிரதானிகளும் ஈடுபட்டனர். இதில் மகாசங்கத்தினரின் நலனும், உயர் குழாத்தினரின் நலனும் பௌத்தத்தின் பெயரால் ஒரு சதியாக வெளிப்பட்டதை அவதானிக்க முடிகிறது. எனவே பௌத்தம் அரசியலில் ஆதிக்கம் பெற்றிருக்கின்ற, ஓர் வரலாற்று அம்சமாகும்.

1815இல் கண்டி அரசனை வீழ்த்தி பிரித்தானியருடன் கண்டிப்பிரதானிகள் உடன்பாட்டிற்குப் போகையில் பௌத்தத்திற்கு அன்றிருந்த கண்டி அரசன் (சிறிவிக்கிரம ராஜசிங்கன்) உறுதுணையாக இருக்கவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாகும். 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையில் பிரதானிகள் பௌத்தமதம் பற்றிய விடயங்களிற்கு முக்கியத்துவம் கொடுத்தே பிரித்தானியருடன் ஒப்பந்தம் செய்தனர். ஒப்பந்தத்தின் ஐந்தாவது சரத்தின்படி:

" இம் மாநில மக்களும் தலையோரும் கடைப்பிடிக்கும் புத்தரின் சமயம் மாற்றப்படாது என்று அறிவித்தல்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

செய்யப்படுகின்றது. அதன் கிரியைகள், அதன் குருமார், வழிபாட்டிடங்கள் ஆகியவை பேணப்பட்டு போற்றப் படும் '' [ 1 ] எனக் கூறப்பட்டுள்ளது. இது சிங்கள பௌத் தத்தின் தொடர்ச்சியான வரலாற்றுணர்வை மேலும் தெளிவு படுத்துகிறது. பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் பௌத்தம் இதுவரை அநுபவித்து வந்த பல முக்கியத்துவங்களை இழந்தது. அதில் ஒன்று அது அரச நிர்வாக முக்கியத்துவத்தை இழந்தமை யாகும். இரண்டு கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும் அதனால் பௌத்தம் பாதிக்கப்பட்டமையும்.

இவ்வாறு பிரித்தானியரின் கீழ் பௌத்தம் பாதிக்கப்பட்டு வந்த காலத்தில் வலன் சிறீ சித்தார்த்த தேரோ என்பவர் பரம தம்ம நசேற்றிய எனும் பிரிவேனாவை 1839 இல் ஆரம் பித்தார். இப்பிரிவேனா பௌத்தம், சிங்களம் பாளி, சிங்கள பௌத்த இலக்கியங்கள், மற்றும் பண்பாட்டம்சங்களை யும் போதித்தது. இப்பிரிவேனாவிலிருந்து தான் பிற்காலத்தில் பௌத்த மறுமலர்ச்சி, அல்லது பௌத்த எழுச்சிக்கான கருத் துக்களும் அதனைப் பரப்புவோரும் தோன்றினர். [ 2 ]

இவ்வா றானவர்களின் வரிசையில் வணக்கத்திற்குரிய மெஜிட்டி வத்த குணாணந்ததேரோ, வணக்கத்திற்குரிய ஹிக்கடுவ சிறீ சுமங்கல நாயக தேரோ என்பவர்கள் தோன்றி னர். இவர்களே பௌத்த மறுமலர்ச்சியின் ஆணிவேர் எனலாம். 1863இல் படிகம என்ற இடத்தில் கத்தோலிக்கப் பாதிரிமாரு டன் பகிரங்க விவாதத்தில் வணக்கத்திற்குரிய மெஜிட்டி வத்த குணாணந்ததேரோ ஈடுபட்டார். இதில் 50 பிக்குகளும். 2000 பௌத்த விசுவாசிகளும் கலந்து கொண்டனர். இவ்விவாத மானது பௌத்த எழுச்சியின் வரவை முன்னுணர்த்தியது என லாம். இதன் பின் 1873இல் பாணந்துறையில் ஒரு பகிரங்க விவாதம் நடைபெற்றது. இதில் வணக்கத்திற்குரிய மெஜிட்டி வத்த குணாணந்த தேரோ பௌத்த நம்பிக்கைகளை நிலை நிறுத்துவதில் வெற்றி கண்டார். இவ்விவாதம் பௌத்தமத வரலாற்றில் ஒரு பெரும் திருப்பு முனையாக வர்ணிக்கப்படு கிறது. அதாவது கிறிஸ்தவத்திற்கு பௌத்தம் தாழ்ந்ததல்ல என்ற உணர்வையும் மேலைத்தேசத்தவர்களினுடையவை எல் லாம் உயர்ந்தவை என்ற தாழ்வு மனப்பான்மையை பௌத் தர்களிடம் இருந்து போக்க இது உதவியது. இவ்விவாதத்தி னால் கவரப்பட்ட கேர்ணல் ஒல்கொட் என்ற அமெரிக்கர் இலங்கை வருந்து சேர்ந்தார். பத்திரிகைகளில் இவ்விவாதம் பற்றி வாசித்தறிந்த அவர் இங்கு தன்னை ஒரு பௌத்தத் தொண்



டனாக மாற்றிக் கொண்டார். அவரது வரவைத் தொடர்ந்து 1880களில் பௌத்தம் ஒரு நவீன வடிவைப் பெறத் தொடங்கி யது. பௌத்தப் பிரம்ம ஞான சங்கம் இங்கு ஸ்தாபிக்கப்பட் டது. இது ஒரு நவீன ஸ்தாபன அமைப்பு முறையைக் கொண் டிருந்தது. அதாவது பௌத்தம் ஒரு நவீன ஸ்தாபன அமைப்பு முறையைப் பெறத்தொடங்கியதெனலாம். பௌத்தத்திற்கென தனியாக ஒரு கொடியும், சின்னமும் உருவாக்கப்பட்டன. இவ் வாறாக மத்திய கால பௌத்தம் ஒரு நவீன பௌத்தமாக உருமாறத்தொடங்கியது. கிறிஸ்தவநவீனமுறைமைகளிற்கு ஈடாக பௌத்தமும் தன்னை நவீன அமைப்பிற்குட்படுத்தியது. கிறிஸ் தவ கல்லூரிகளைப்போல, பௌத்தக் கல்லூரிகள் உருவாக்கப் பட்டன. இதன் ஒப்புவமையை மிக அழகாக கணநாத்பய சேகர பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார். '' சென்பீற்றர்ஸ், சென் யோசவ், சென்தோமஸ் போன்ற கல்லூரிகளிற்குப் பதிலாக ஆனந்தா, நாலந்தா போன்ற பௌத்த கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டன. '' [ 3 ]

இக்கால கட்டத்தில் அநகாரிக தர்மபால, இம்மறுமலர்ச்சி யைக் காவிச் செல்லும் குழந்தையாகத்தோன்றினார். வசதி வாய்ப்புள்ள குடும்பத்தில் 1864 இல் பிறந்த அநகாரிக தர்ம பாலா வெள்ளையர் ஆதிக்கத்தின் கீழ் உள்ள வாய்ப்புக்களின் பொருட்டு மேலைத்தேசப் பாணியில் டொன்டேவிட் ஹேவா விதாரண(Don David Hevavitharana) என பெற்றோரால் பெய ரிடப்பட்டார். ஆயினும் இவர் பௌத்தம் மேற்கொண்ட தீவிர பற்றால் பிற்காலத்திற் தன் பெயரைமாற்றிக்கொண்டார். வீடற்ற வன் என்ற அர்த்தத்தில் அநகாரிக எனப்பெயர்பெற்றார். எனவே 1850களிலிருந்தே பௌத்தத்திற்கான எழுச்சிப்போக்கினை அடையாளம் காணலாம். அது 1880களில் கணிசமான அளவு வளர்ச்சி பெற்று கத்தோலிக்கத்தை எதிர்க்கும் பலத்தைப் பெற்றது. இந்நிலையில் 1883இல் கொட்டாஞ்சேனையில் பௌத்த கத்தோலிக்கக் கலகம் ஒன்று வெடித்தது. இக்கலகத் தில் ஒரு பௌத்தனும், ஒரு கத்தோலிக்கனும் கொலையுண்ட னர். 30பேர் காயப்பட்டனர். அதில் 12பேர் பொலிசா ராகும். [ 4 ]

1880களில் எழுச்சி பெற்ற முதலாவது பௌத்த மறு மலர்ச்சிக்கு உண்மையில் தலைமை தாங்கியவர் அநகாரிக தர்ம பாலா என்றே கூறலாம். இதற்கான பின்னணி எவ்வாறு அமைந்திருந்தது என்பதை முதலில் நோக்குவோம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஐரோப்பிய ஆதிக்கம் இலங்கையில் பெரும் சிதைவுகளை ஏற்படுத்தியது; பல மாற்றங்களைக் கொண்டுவந்தது. பௌத்தம் இதுவரை பெற்றுவந்த மேனிலையை இழந்தது. கிறிஸ்தவம் பரவியது. பல அரசியற் பொருளாதார நிறுவன மாற்றங்கள் ஏற்பட்டன. நவீன மயமாக்கம் ஏற்பட்டது. இப்புதிய பாதிப்புக்கும் சூழலிற்கும் ஏற்ப சிங்கள பௌத்தம் தன்னை புதுப்பிக்கவும் ஈடுகொடுக்கவும் எடுத்த முயற்சியே முதலாம் பௌத்த மறுமலர்ச்சியாகும் (1880 கள்)

காலனித்துவ ஆதிக்கம் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தின், அமெரிக்க நாடுகளின் பூகோளப்படத்தையே மாற்றியமைத்தது. இப்பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த மக்களின் வாழ்வைப் பெரிதும் சிதைத்துப் புதிய எல்லைகளையும், புதிய அமைப்புக்களையும், புதிய வாழ்க்கை முறைகளையும் உருவாக்கியது. இச்சீரழிவுச் செயல்களைக் கண்டு கொதித்த அக்காலகட்டத் தலைவர்கள் அந்தந்த நாடுகளிற் காலனித்துவ எதிர்ப்பிற்கு முதன்மை கொடுத்து அவ்வாறு ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பல தரப்பட்ட இன. மத, மொழிகளைக் கொண்ட சுதேச மக்களை ஐக்கியப் படுத்தி அணிதிரட்டி காலனித்துவத்தைத் தோற்கடிப்பதன் மூலம் புதிய நவீன அரசைத்தோற்றுவிக்க முன் முயற்சியிலீடுபட்டனர். இந்த வகையில் இதற்கான எதிர்ப்பு முதலிற் கலாச்சாரதளத்தில் உதயமாகி பின்பு அரசியற் பொருளாதாரத்தளங்களிற்கு விரிந்து சென்றமையே ஒரு பொதுவான போக்காயுள்ளது. இதற்கொரு நல்ல உதாரணமாக இந்தியாவில் எழுந்த பிரம்மசமாஜ இயக்கத்தையும் ராம் மோகன் றோயையும் குறிப்பிடலாம்.

மோகன் றோய் (1772 1833) பல மத, இன மக்களையும் ஐக்கியப்படுத்தும் ஒரு பொது மதப்பொறையை உருவாக்கினார். குறிப்பாக இந்து, முஸ்லீம், சீக்கியர் இடையே ஐக்கியத்தை உருவாக்குவதற்கேற்ற கொள்கையை முன்வைத்து பிரம்மசமாஜ இயக்கத்தை ஸ்தாபித்தார். காலனித்துவத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீன கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பல்வகையிலும் இந்திய சமூகம் நவீன மயப்பட வேண்டும் என வற்புறுத்தினார். இந்தியமக்களை விழிப்படையத்தூண்டினார். இவருடைய முயற்சி இந்திய தேசிய வரலாற்றில் கருநிலைத் தேசியவாதம் (Proto Nationlism) என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் மோகன் றோய்க்குக் கிடைத்தது போலொரு வாய்ப்பும் சந்தர்ப்பமும், காலகட்டச்சூழலும் இலங்கையில் அநகாரிகதர்ம பாலாவிற்கும் கிடைத்தது. ஆனால்



மோகன் றோய் பரந்த பல இன, மத, பிராந்திய மக்களை ஐக்கியப்படுத்த முயன்றார். அதற்கேற்ப ஒரு பொது மதக் கோட்பாட்டை முன்வைத்தார். ஆனால் அநகாரிக தர்மபாலாவே, இலங்கையில் வாழ்ந்து வந்த ஏனைய இன, மத மக்களை நிராகரித்து சிங்கள பௌத்தத்தை, மட்டும் மீள உயிர்ப்பிக்க முயன்றார். இதுவே இறுதியில் சிங்கள பௌத்த இனவெறியாக உருப்பெற்றது. நவீன சூழலிற்கு ஏற்ற ஒரு நவீனமான பல்லின, பல மதங்கள் கொண்ட நவீன இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு அநகாரிக தர்மபாலாவின் கைகளில் வீழ்ந்தது, ஆனால் இப்பணியை அவர் சிங்கள பௌத்தத்திற்குள் மட்டும் சுருக்கிக்கொண்டார்.

இவரது கொள்கைகளையும், கோட்பாடுகளையும், செயல்களையும் சுருக்கமாக நோக்கி அதுபற்றிய ஒரு மதிப்பீட்டை மேற்கொள்வது நலம்.

சமரசவழியில் அந்நிய ஆதிக்கத்திடமிருந்து சிங்கள பௌத்தத்தை மீட்பதும் புதுப்பிப்பதுமே இவரது கொள்கையாகும். இவரைப் பொறுத்தவரை பொதுவாகச் சிங்களவரும் குறிப்பாகப் பௌத்தரும் தவிர்ந்த அனைவரும் இத்தீவிற்கு அந்நியராகும். இவர் பிரதானமாக கவனம் செலுத்திய அம்சங்கள் கிறிஸ்த்தவ எதிர்ப்பு, முஸ்லீம் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு குறிப்பாகத் தென்னிந்தியத் தமிழர் எதிர்ப்பு, மது எதிர்ப்பு, மாட்டிறச்சி உண்பதற்கு எதிர்ப்பு, மேலைத்தேச காலாச்சார எதிர்ப்பு என்பவற்றுடன் துட்டகாமினிக்கு உயிருட்ட, எடுத்த ஒவ்வொரு முயற்சியிலும் மறைமுகமாக இலங்கைத் தமிழர் எதிர்ப்பு புதைந்துகிடந்தது. ஆரிய இன மேன்மை, சிங்கள மொழி, பௌத்த மதம் ஆகிய அம்சங்களை வலியுறுத்தி இத்தகைய அம்சங்களைக் கொண்டவர்களையே ' மண்ணின் மைந்தர்கள் ' என்று விபரித்தார்.

'' ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நாங்கள் சிங்கத்தின் இனம் என்பதை மறந்திட வேண்டாம் '' [5] என சிங்களவரைத் தட்டியெழுப்பிய அநகாரிக தர்மபாலா ஐரோப்பியர் ஆதிக்கம் பற்றிக் குறிப்பிடுகையில்: '' போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற நாசகாரர்கள் எமது மூதாதையர்களால் நிர்மாணிக்கப்பட்ட மேன்மைக்குரிய அடித்தளங்களை கடந்த மூன்று நூற்றாண்டுகளில் முற்றாக அழித்துள்ளனர் '' [6]

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"ஆன்மிக ரீதியிலும் அரசியலிலும் சமூக வாழ்விலும் தனிமனித வாழ்விலும் நாம் தொன்மை மிக்க உன்னத நிலையிலிருந்தோம். இன்று அந்நிலையிலிருந்து வீழ்ச்சியுற்றதை எண்ணி அழுது புலம்பவேண்டியவர்களாய் உள்ளோம்" [7]

எமது மதத்திற்கும் எமது குழந்தைகளிற்கும் குழந்தைகளின் குழந்தைகளிற்கும் பெரும்பணி ஆற்ற வேண்டிய கடமை எமக்குண்டு. எமது புனித நாட்டை இந்த மதுப்பிரியர்களும், விஸ்கிவியாபாரிகளும் சீரழிப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. தமது சொந்த நலனிற்காக எமது நாட்டைச் சீரழிக்க வந்திருக்கும் வெள்ளையனை நாம் குருட்டுத் தனமாகப் பின்பற்றக் கூடாது. அவன் எங்களை விஸ்கி குடிக்குமாறு கேட்கிறான். அத்துடன் கள்ளையும் சாராயத்தையும் குடிக்குமாறு கேட்கிறான். [8]

வரலாற்றுப் பெருமை மிக்க இனமான ஆரிய இனத்தின் இனிமை மேன்மையான கௌரவம்மிக்க எங்கள் குழந்தைகள் இன்று மதுப்பிரியரும் மாட்டிறச்சி உண்பவரும், பௌத்த விரோதிகளுமான அந்நியரிற்கு இரையாவதா எவ்வளவு காலத்திற்கு இந்நாட்டில் இத்திமைகள் தொடரப் போகின்றன. [9]

அந்நியர் எமது நாட்டின் செல்வங்களைக் கவர்ந்து செல்கின்றார்கள். மண்ணின் மைந்தர்கள் போவதற்கு நாடேது? வெளிநாட்டிலிருந்து வந்த குடியேற்ற வாசிகள் போவதற்கு அவர்களிற்கென்று நாடுகள் உண்டு. ஆனால் சிங்களவரிற்கு போவதற்கு ஒரு நாடுமில்லை. அந்நியர்கள் இன்புற்றிருக்கையில் மண்ணின் மைந்தர்கள் துயரப்படுவதுதான் நியாயமா? [10]

மதம் பற்றிக் குறிப்பிடுகையில் கிறிஸ்தவமும், பல தெய்வ வணக்கமுமே உயிர்க்கொலை, களவு, விபச்சாரம், பொய், மதுப் பழக்கம் யாவற்றிற்கும் காலாயிருந்தன என்று விபரித்தார். [11]

மேலும் முஸ்லீம்களை எதிர்க்கையில்:

அந்நியரான முகமதியர் சைலோக்கிய வழிமுறைகளால் யூதர்கள் போன்று செலவந்தராய் மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகைகளில் இருந்து நாட்டைக்காப்பதற்காக இரத்தத்தை ஆறுபோற் பெருக்கிய முதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தர்களான சிங்களவர் பிரித்தானியரின் கண்களிற் நாடோடிகளாய்த் தெரிகின்றனர்.



தென்னிந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் எத்தகைய அநுபவமுமற்ற உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசிகளைக் காண்கிறான். இதன் விளைவு முகமதியன் முன்னேறுகிறான் மண்ணின் மைந்தன் பின்தள்ளப்படுகிறான் [12] என்று கூறியுள்ளார்.

"அநகாரிக தர்மபாலா இந்தியத் தொழிலாளர் பற்றிய இகழ்ச்சிக்குறிப்புக்களை அடிக்கடி கூறினார். உதாரணமாக 1902இல் அவர் 'ஆங்கிலேய நிர்வாகத்தில் தென்னிந்தியாவின் கீழ் சாதியினர் எமது நிலில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர்' என்று கூறினார்" என குமாரி ஜெயவர்த்தன மேற்கோள் காட்டியுள்ளார். [13]

துட்ட காமினியை சிங்கள பௌத்தத்தின் இலட்சிய புருஷனாக வர்ணிக்கும் அநகாரிக தர்மபாலா அவனைக்காட்டி தேச பக்தியைத் தூண்டமுற்படுகிறார்.

"நாட்டுப்பற்று பற்றி விஞ்ஞானரீதியான நூல்களை நாம் தேடித்துருவி ஆராய்ந்து தேசபக்தர்களாக நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு தான் எமது தேசியத்தையும், எமது இலக்கியத்தையும், எமது நாட்டையும் எமது மகிமை பொருந்திய சமயத்தையும் (பௌத்தம்) பேணிப்பாதுகாக்க வேண்டும். இத்தகைய ஊற்றின் கண் நின்றுதான்எமது முதாதையர்கள் பல தலைமுறைகளாகத் தேசிய உணர்வைப் பருகினார்கள். இப்படியாக வீரமும் நாட்டுப் பற்றும்மிக்க மன்னர் காலத்திலிருந்து எமது எதிரிக்கெதிராகப் போரிடும் உயிர்ப்புச் சக்தியை இவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்த வகையிற் பௌத்த ஒழுக்கசீலனாகிய துட்டகாமினி தனது தாயினதும், தேசபக்தியால் உந்தப்பட்ட ஆதரவாளர்களினதும், பௌத்த சங்கத்தினதும் பிக்குகளினதும் நல்லாசிகளுடன் எமது நாட்டிற்குப் புத்துயிர்ப்பும், புதுவலிமையும் அளித்தான்" [14]

இவ்வாறு இவர் துட்ட காமினிக்கு புத்துயிர் கொடுத்து வரலாற்றுக்கு விளக்கம் தர முற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழின எதிர்ப்பையும், மறைமுகமாகத் தூண்டினார். மொத்தத்தில் இவரது கருத்துக்களை ஆராயும் போது ஒரு ஊகிகத்திலிருந்து சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவ முயன்றார் என்றே கூற வேண்டும். இதன் பொருட்டு இவர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளை நோக்குகையில்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மகாபோதி அச்சகத்தையும் சிங்கள பௌத்த என்ற சஞ்சிகையையும் ஆரம்பித்தமையைக் கூறலாம். இ சஞ்சிகைதான் சிங்களப் பௌத்தத்தின் பிரச்சாரப் பீரங்கியாக இருந்தது 1915 இல் இடம் பெற்ற சிங்கள-முஸ்லீம் கலவரத்தின் போது அக்கலவரத்திற்குத் தூபமிட்ட குற்றச்சாட்டின் பெயரால் இப்பத்திரிகை தடைசெய்யப்பட்டது. 1915இலிருந்து 1922 வரை இப்பத்திரிகை மீதான தடை தொடர்ந்து நீடித்தது. 1915 இலிருந்து 1920 வரை சிங்கள - முஸ்லீம் கலகத்தைத் தூண்டுபவர் என்ற குற்றச்சாட்டின் பெயரில் தர்மபாலா ஆறு ஆண்டுகளாக கல்கத்தாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கு மூன்று பொலிசார் இவரைத்தொடர்ந்து கண்காணித்தனர்.

இவர் இலங்கையில் கிராமம் கிராமமாகச் சென்று பௌத்தரை அணிதிரட்டினார். பல சொற்பொழிவுகளை ஆற்றினார். பல்வேறு சங்கங்களை ஸ்தாபித்து அவற்றினூடாக நிதிசேகரித்தார். இதன் மூலம் பல சிங்கள பௌத்த கல்லூரிகளை நிறுவினார். பல்வேறு துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கட்டுரைகளை எழுதினார். இவர் இலங்கைக்குள் மட்டும் ஒதுங்கிக் கிடந்தவரல்ல. யப்பான் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற பல்வேறு நாடுகளிற்கும் அடிக்கடி போய்வந்தார். இவரது மனதைக் கவர்ந்த முன்னுதாரண நாடு யப்பான் ஆகும். யப்பானியரைப் போலவே சிங்கள பௌத்தரும் கைத்தொழில், தொழில் நுட்பம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என அடிக்கடி கூறிவந்தார். இவரது இறுதிக் குறிக்கோள் இலங்கை ஒரு பௌத்த நாடாக இருக்கவேண்டுமென்பதே.

> " தற்போதைய இவ்வரசாங்கம் முழுமையாக பௌத்த அரசாயிருக்கவேண்டும். பௌத்தனே ஆள்பதியாயிருக்க வேண்டும். குடியேற்ற நாட்டின் செயலாளரும் ஏனைய உயர் உத்தியோகஸ்தர்களும் பௌத்தர்களாகவே இருக்க வேண்டும். [15 ] எனக் கூறினார்.

இனி இவரைப்பற்றிய ஒரு பொதுவான மதிப்பீட்டிற்கு வருவோம். இவர்காலத்தில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சி பற்றி கணநாத் ஒபய சேகர தனது கருத்தைத் தெரிவிக்கையில் புரட்டஸ்தாந்து மதத்தின் நிறுவன அமைப்பின் செல்வாக்கிற்குட்பட்டு, இலங்கை பௌத்தமானது புரட்டஸ்தாந்து நிறுவன அமைப்பை ஒத்த நிறுவன அமைப்புகளை உருவாக்கியதென்றும் அப்போக்கினை அவர் புரட்டஸ்தாந்து பௌத்தம் ( Protestant Buddhism ) என்று வர்ணிக்கிறார். [ 16 ]



இக்காலகட்டத்தை குமாரி ஜெயவர்த்தன எடைபோடுகையில்: " அரசியல் சமூக பொருளாதார மட்டங்களில் கிறிஸ்தவர்கள் பெற்றுவந்த நன்மைகளைக் கண்டு ஆத்திரமடைந்த புதிதாக எழுச்சி பெற்று வந்த சிங்கள பௌத்த பூர்ஷ்வாக்கள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்கே நிதியுதவி வழங்கினர் " [ 17 ] என்றும் " கிறிஸ்தவரிற் பெரும்பாலானோர் ஏழைச் சிங்களவரும் தமிழருமே. யதார்த்தமான பிரச்சினைகளிலிருந்து, திசைதிருப்பப்பட்ட தேசிய உணர்வின் வெளிப்பாடாகவே கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் அமைந்தது " [ 18 ] என்றும் பிரித்தானிய காலனி ஆதிக்கத்திற்கு பதிலாக கிறிஸ்தவர் அதிகாரமே எதிர்ப்பிற்குள்ளாகியது. " [ 19 ] என்றும், அதேவேளை " கிறிஸ்தவத்தை எதிர்ப்பது காலனித்துவத்தை எதிர்ப்பதும ஆகும். அந்நியராட்சியையும் அந்நியக் கருத்தியல் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதாகவும் விளக்கம் கொள்ளலாம் " [ 20 ] என்றும் கூறியுள்ளார். குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் எழுச்சியையே பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தோடு குமாரி அடையாளம் காண்கிறார்.

அநகாரிகா பற்றிய சேர். பொன். இராமநாதனின் கருத்தை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமானதாகும். அநகாரிக தர்மபாலா கைதுசெய்யப்படக் கூடாதென ஆள்பதியிடம் வேண்டிக்கொள்கையில் அதற்கான பின்வரும் நியாயத்தை இராமநாதன் கூறியுள்ளார்.

> " அவரது இளமைக் காலத்தில் இருந்தே அவரை எனக்குத் தெரியும் அவர் ஒரு துறவி. ஆனால் எரிச்சலூட்டக் கூடியவரும் கூட. அவர் தனது நாட்டு மக்களையோ அல்லது பிக்குகளையோ தூண்டக் கூடியவர் அல்ல. அவர்கள் கடந்த 20 வருடங்களாக அவரது கருத்துக்குச் செவி கொடுக்காது அவரை நிராகரித்துள்ளனர். அவரால் இலங்கையில் உண்டான தாக்கம் என்று கணிப்பிடுவதற்கு எதுவுமில்லை" [ 21 ]

இக்கால கட்ட மறுமலர்ச்சியோடு சம்பந்தப்பட்ட வகையில் கல்லூரிகள் அமைக்கப்பட்டதைப் பற்றி ஜி. சி. மெண்டிஸ் கூறுகையில்:

மதம் பரப்பும் நோக்கத்துடன் புரட்டஸ்தாந்து மதத்தி இலங்கையில் கல்லூரிகளை ஸ்தாபித்தனர் என்றும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இதைப் பின்பற்றி கத்தோலிக்கரும், பௌத்தர்களும், இந்துக்களும் கல்லூரிகளை அமைத்தனர் என்றும் மதப் பொறையை வளர்ப்பதற்குப் பதிலாக இக்கல்லூரிகளே மதவாதத்தின் அடித்தளங்களாயின என்றும் அவர் விளக்கியுள்ளார். [ 22 ]

அநகாரிக தர்மபாலா இலங்கை வரலாற்றில் அடி ஆழத்தில் வேர்விட்டிருந்த சிங்கள பௌத்த வாதத்திற்கு நீருற்றிப் புத்துயிர் அளித்த ஒருவராவார். தொடர்ச்சியாக இலங்கையில் இருந்து வந்த இந்திய எதிர்ப்பிற்கு நவீன வரலாற்றில் இவர் ஒரு முன்னோடியாவார். இவர் 'தம்ம தீப' என்ற ஐதீகத்தைக் கையில் எடுத்து நவீன வரலாற்றிற்கு உரியவகையில் அதனைப் புதுப்பித்தார். ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட நவீன மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப பௌத்தத்தை நவீனமயப்படுத்தினார். பௌத்த ஐதீகத்தை உயிர்ப்பித்ததும் அதனை நவீன வரலாற்றிற்கும் ஏற்ப புதுப்பித்ததும் பௌத்த மறுமலர்ச்சியின் ஓர் அங்கமாகும். இக் குறித்த ஐதீகத்தின் படி சிங்கள பௌத்தம் தவிர்ந்த ஏனைய இன, மத, மொழிகள் இலங்கைக்கு அந்நியமானவை. 'தம்மதீப' ஐதீகம் கருக்கொண்ட காலத்தில் அதுமகாயான எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பு, தென்னிந்திய எதிர்ப்பு - தமிழின எதிர்ப்பு எனும் சூழலிற்குள்ளாலேயே கருக்கொண்டு வளர்ந்தது. ஆனால் அது பிற்காலத்தில் இஸ்லாமிய வரவு, கிறிஸ்தவ வரவு ஆகிய அம்சங்களை எதிர்நோக்கியது. இவை 'தம்மதீப' எதிர்நோக்கிய புதிய எதிரிகள்.

அநகாரிக தர்மபாலாவின் காலத்தில் அரசாங்கத்தின் போஷிப்புடன் கிறிஸ்தவம் பரவிவந்தது. இஸ்லாமும் வளர்ந்து வந்தது. எனவே ''தம்மதீப''த்தின் பாதுகாவலன் முதலில் தன் கண்முன் பரவிவந்த கிறிஸ்தவத்தை எதிர்ப்பவனானான். அத்துடன் கூடவே இஸ்லாத்தையும் எதிர்ப்பவனானான். உடனடியாக வந்திருந்த தன் இரு புதிய எதிரிகளையும் 'தம்மதீப' அநகாரிகாவின் தலைமையில் எதிர்கொண்டபோது அது தனது வரலாற்று எதிரியென்று கருதிய தென்னிந்திய - தமிழின எதிர்ப்பைக் கைவிடவில்லை.

எனவே 'தம்மதீப' புதிய கட்டத்தில் தன் புதிய எதிரிகளை எதிர்கொண்ட கால கட்டமே அநகாரிகாவின் காலமும் அதன் பௌத்த மறுமலர்ச்சியும் ஆகும். அநகாரிகா கிறிஸ்தவ, இஸ்லாமிய வளர்ச்சிகளை எதிர்கொண்டு அத்துடன் தென்னிந்



திய - தமிழின எதிர்ப்புக்கு அடியெடுத்தும் கொடுத்தார். பிற்காலத்தில் இவை இரண்டுமே முதன் நிலை எதிரிகள் என்ற நிலையை அடைந்தன.

பிரித்தானியர் காலத்தில் உயர் குழாத்தைச் சேர்ந்தோர் தம்மை ஆங்கிலேயருடன் இனங்காட்டிக் கொண்டனர். இப்படியானவர்கள் மத்தியிலிருந்தே சிங்கள அரசியற் தலைமையும் உருவாகிவந்தது. அநகாரிகாவின் காலத்தில் மார்க்கஸ் பெர்ணாண்டோ, ஜேம்ஸ் பீரிஸ் போன்றோர் சிங்கள அரசியற் தலைவர்களாக ஆங்கிலேயருடன் கூடிக்குலாவி இருந்தனர். இவர்கள் அரசியற் தளத்திற்குரியவர்களாய் அரசியற்பதவிகளில் அமர்பவர்களாயும் இருந்தனர். ஆனால் சிங்கள பௌத்தத்தின் உண்மையான தலைமை அநகாரிகாவின் தலைமையின் கீழ் உள்ளிருந்து இழையோடிக் கொண்டு வந்தது. மேல் மட்டத்தில் சிங்கள தமிழ் தலைவர்களிடையே பிரித்தானியர் அறிமுகப்படுத்திவிட்ட பிரதிநிதித்துவப் போட்டியையொட்டி அரசியல் மட்டத்தில் ஒரு முரண்பாடு இருந்து வந்தது.

அநகாரிகா உந்திவிட்ட பாதையில் சிங்கள பௌத்த சக்தி உள்ளோடியாக தொடர்ந்து வளர்ந்தே வந்தது. அது அநகாரிகாவின் பாதையில் அவர் தோற்றுவித்த தென்னிந்திய, இஸ்லாமிய எதிர்ப்பின் தொடர் விரிவாக்கமாக மலையாளி எதிர்ப்பு, தோட்டத்தொழிலாளி எதிர்ப்பு எனும் அம்சங்கள் இணைந்து புதுவேகம் பெற்றன. 1929இல் டொனமூர் குழுவினரின் சர்வஜன வாக்குரிமைக்கான சிபார்சைத் தொடர்ந்தும் 1931இல் அது நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்தும் மேல் மட்டத்தில் இருந்த அரசியற் தலைவர்கள் கீழ் மட்டத்தை நாடவேண்டியதாயிற்று. இதன் பிரகாரம் உள்ளூர வளர்ந்து வந்த சிங்கள பௌத்த சக்திக்கு சிங்கள அரசியற் தலைவர்கள் செவிசாய்க்க வேண்டியதாயிற்று.

கிறிஸ்தவராய் மதம் மாறியிருந்த சிங்கள அரசியற் தலைவர்கள் தற்போது சிங்களபௌத்தவெகுசனங்களின் வாக்குகளைப் பெறும் பொருட்டு பௌத்தத்திற்கு மதம் மாறலாயினர். இந்த வகையில் கிறிஸ்தவத்திலிருந்து பௌத்தத்திற்கு மதம் மாறியவருள் குறிப்பிடத்தக்க முக்கியநபர் சொலமன் வெஸ்ட் றிச்வே டயஸ் பண்டாரநாயக்க ஆவார். இந்த எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க 'டொனமூர் பௌத்தன்' ( Donoughmore Buddhist ) எனக் கிண்டலாக அரசியலில் அழைக்கப்பட்டனர்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1930களின் புதிய சூழலிற்கேற்ப அநகாரிகாவின் பாதை தொடரப்படுகின்றது. அது பொதுவாகத் தென்னிந்தியாவிலிருந்து வரும் தொழிலாளர், வர்த்தகர் உள்ளிட்ட எல்லாத் தரப்பினரையும் எதிர்க்கின்றது இதிற் குறிப்பாக மலையாளிகள் எதிர்ப்பு கூர்மையடைகிறது. இது தொழிற்சங்கமட்டம், அரசியல் மட்டம், வெகுஜன மட்டம் ஆகிய சகல மட்டங்களிற்கும் விரிவடைகிறது. அநகாரிகாவின் கருத்துக்களும் அவரது பாசறையில் வளர்ந்தவரான பியதாச சிறிசேன எழுதிய 'மகிழ்ச்சியான திருமணம்' ( Happy Marrige ) என்ற சிங்களமொழி நாவலும் (இந்நாவலை யூத இனவெறியை வெளிப்படுத்தும் எக்சோடஸ் ( Exsodus )நாவலுடன் ஒப்பிடலாம்.') வெகுஜனங்களின் மத்தியில் பிரபல்யமடையலாயின எனவே இத்தகைய சிங்கள, பௌத்த கருத்துருவ வளர்ச்சியினால் மலையாளி எதிர்ப்பு சகல மட்டங்களிலும் வேகம் பெறலாயிற்று.

'' வெள்ளையரோ கறுப்பரோ தொழிலாளர்கள் உன்னதமான ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் '' [ 24 ] என 20களில் கோஷித்த ஏ. ஈ. குணசிங்க மலையாளிகள் சிங்களவர்களிற்குரிய வேலைகளைப பறிப்பதால் அவர்கள் வேலைகளை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குவது பற்றி 1936 மார்ச்சில் கொழும்பு வடக்கில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டார். மலையாளிகளை ஆட்குறைப்புச் செய்யாதது நாடுகடத்தாதது பற்றியும் அவர் அரசை வன்மையாகக் கண்டித்தார். இலங்கையரின் நலன்களைக் காக்க முன்வருவோரைப் பொலிஸார் வகுப்பு வாதத்தை தூண்டுவோர் என குற்றம் சாட்டுகின்றனர் என முறையிட்டார். [ 25 ]

ஏ. ஈ குணசிங்காவின் தொழிற்சங்க இயக்க சிங்களமொழி ஏடான, 'வீரயா' (வீரன்) இவ்வெதிர்ப்பு இயக்கப்பிரச்சாரத்தில் முன்னணியில் நின்றது.

'' அநகாரிக தர்மபாலாவின் வழியில் அவரது குரலின் 1930 இல் 'வீரயா' ஏடு வெள்ளையர், கரையோர முஸ்லீம்கள், போராக்கள், மலையாளிகள் ஆகியோரது ஆக்கிரமிப்பால் தமது இனம் வீழ்ச்சியடைவதாகப் பிரச்சாரம் செய்தது. [ 26 ]

1939இல் ஏ கே. கோபாலன் என்ற கேரள முன்னணிக் கொமியூனிஸ்ட் இலங்கை வந்தபோது மலையாளிகளிற்கு எதிராக நிலவிய பகைமையை அவர் நேரடியாக உணர்ந்து கொள்ள முடிந்தது என்றும், வெள்ளவத்தையில் அவர் கலந்துகொண்ட



பொதுக் கூட்டம் காடையரால் குழப்பப்பட்டதென்றும், மலையாளிகளிற்கெதிராக மேடையேற்றப்பட்ட நாடகங்களை அவர் பார்த்தாரென்றும் தனது நூலிற் கூறும் குமாரி கோபாலன் எழுதிய சுய சரிதையிலிருந்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டுகிறார்.

' ஆபத்தான ஒரு கால கட்டத்தில் நான் இலங்கைக்குச் சென்றேன். அப்போது சிங்கள - மலையாளிகள் பகைமை அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது. [ 27 ]

இந்த மலையாளி எதிர்ப்பில் வர்க்க வேறுபாடின்றி சகல சிங்களவரும் ஒரே அணியில் குரலெழுப்பினார்கள். 20களில் இன ஐக்கியம் பேசிய தொழிலாளர் தலைவர் ஏ. ஈ. குணசிங்கன் 30களில் முழு இனவாதியானார். இவ்வினவாதம் பின்பு இந்தியத் தோட்டத்தொழிலாளரிற்கெதிராக முழுவடிவம் பெற்றது

தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை ஏமாற்றி இலங்கைக்கு அழைத்து வந்து அடிமைகளாய்ப் பயன்படுத்தி இந்த நாட்டின் பொருளாதார இரத்தோட்டத்தை உருவாக்கினர். பின் இவ்வப்பாவி மக்களை சிங்கள இனவாதம் எதிர்க்கலாயிற்று. இதன் வளர்ச்சிக் கட்டமாக சுதந்திர இலங்கை 40களின் இறுதியில் இவர்களது பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது.இவ்வாறு தோட்டத் தொழிலாளரிற்கு எதிரான உணர்வலைகளைப் பற்றிக் குமாரி கூறும்போது:

'' சிங்களவரால் சிங்களவர் நீண்டகாலமாக எதிர்த்து வந்த இந்திய ஆக்கிரமிப்பின் பிந்திய மற்றொரு வடிவத்தின் உருவாகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளர் கருதப்பட்டனர்.'' [28] என்று குறிப்பிட்டுள்ளார்.

இங்கு ஒரு உண்மையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. 'தம்மதிப' த்திற்கு புதிய எதிரிகளாய் வந்த கிறிஸ்தவரையும், முஸ்லீம்களையும் முதலில் எதிர்த்து ஓரளவு முன்னணிக்கு வந்து கொண்டு இலங்கையின் நவீன வரலாற்றில் மற்றொரு புதிய வரவான மலையாளிகளையும், தோட்டத்தொழிலாளர்களையும் அடுத்தகட்டத்திற்கான பிரதான எதிர்ப்பிலக்காகக் கொண்டு சிங்கள பௌத்த வாதம் செயற்பட்டுள்ளது. மலையாளி எதிர்ப்பு, தோட்டத்தொழிலாளி எதிர்ப்பு என்பது இலங்கையின் பண்டைய வரலாற்றில் ஊறிக்கிடந்த தென்னிந்திய எதிர்ப்பிற்கு ஒரு புதிய உயிரோட்டத்தைக் கொடுத்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இதன் அடுத்த கட்டத்தில் வரலாற்று ரீதியாக இந்திய ஆக்கிரமிப்பின் ஒருவடிவமாக சிங்களவர்களால் கருதப்பட்டு வந்த இலங்கைத் தமிழரிற்கு எதிரான இனவாதம் கூர்மையடையலாயிற்று. ஆயினும் பொதுவாக இலங்கைத் தமிழரிற்கெதிரான இனவுணர்வு 30 களைத் தொடர்ந்து வளர்ந்து கொண்டே வந்தது.

30 களில் சிங்கள அரசியற் தலைவர்களிற்கும் பிரித்தானிய ஆட்சியாளரிற்கும் இடையில் அந்நியோன்யமான உறவு இருந்தது. பிரித்தானியரின் இந்திய உபகண்டக் கொள்கைக்குச் சாதகமாகச் சிங்களவர்களைத் தயார்படுத்தும் முயற்சியில் சிங்களத் தலைவர்களிற்கு பிரித்தானியர் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யலாயினர். இச்சூழலிற் தமிழ் தலைவர்கள் அரசியற் புத்தி சாதுரியமற்று நடந்து கொண்டதுடன் பிரதிநிதித்துவப் போட்டிக்குள் பலியாகினர். இக்கால கட்டத்தில் சிங்களத் தலைவர்கள் புத்திசாதுரியத்துடன் நடந்து கொண்டு அரசியலில் தமிழரின் பங்கைக் குறைக்கலாயினர். 1936 இல் பரன ஜெயதிலக தலைமையில் தனிச்சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் தமிழரிற்கு முழுநேர அரசியற் தலைமை எதுவும் இருக்கவில்லை. தமிழ்த்தலைவர்களில் பொதுவாக அனைவருமே பகுதி நேர அரசியல்வாதிகளாயிருந்தனர். அதிலும் பலரிற்கு அரசியல் ஒரு பொழுதுபோக்கே தவிர அது ஒரு கடமையாக இருக்கவில்லை. அதனால் முழு ஆளுமையுடன் உரிய காலத்தில் உரிய தீர்மானம் எடுத்துச் செயற்பட இவர்களால் முடியவில்லை. தமிழர்கள் மத்தியில் இக்காலத்தில் தமது தமிழ்த்தேசிய நலன் சார்ந்த சிந்தனையும் இலக்கியங்களும் உருவாகவில்லை. அறிவியல் நூல்களை நாம் காண்பதேயரிது. பொன்னம்பலத்தின் ஐம்பதிற்கைம்பது பிரதிநிதித்துவ வாதத்தை எதிர்த்து தமிழ் மக்கள் பக்கத்திலிருந்து தேசியவாதமா? அல்லது வகுப்புவாதமா? ( Nationalism or Comunalism ) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு சிறு வெளியீடு வந்தது. இந்நூல் சிங்கள இனவாதத்தை அடையாளம் கண்டிருக்கவில்லை. இந்நூலில் கற்பனை பொதிந்திருந்தது. இதைத்தவிர இடதுசாரிக் கண்ணோட்டம் கொண்ட தமிழரிடமும் ஒரு வகைக் கற்பனாவாதமே காணப்பட்டது. அதனால் வளர்ந்து வந்த சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்திற்கு எதிர்நிற்கக் கூடிய தரமும் திறனும் இக்காலகட்டத்தில் தமிழர்தரப்பில் வெளிப்படுத்தப்படாமையினால் சிங்கள மேலாதிக்கம் தனது தளத்தை உறுதியாகப் போடமுடிந்தது.



அநகாரிக தர்மபாலாவையும் அங்கு எழுந்துவந்த சிங்கள பௌத்த வாதத்தையும் பற்றி சேர். பொன். இராமநாதனிடம் எப்படிப் பிழையான மதிப்பீடு இருந்ததோ அதே போல பிற்காலத்தில் வந்த தமிழ்த்தலைவர்களிடமும் பல வகைப் பிழையான அரசியற் கணிப்பீடுகளே காணப்பட்டன. அரசியல் வாதிகள் மட்டுமன்றி பொதுவாக தமிழர் தரப்பிலிருந்த அறிவியற்துறை சார்ந்த எவரும் சிங்கள பௌத்த இனவாதப் போக்கை கணிசமான அளவு கணிப்பீட்டுடனாவது சரிவரச் சுட்டிக்காட்டி தரமான நூல்களை எழுதியிருக்கவில்லை. சிங்கள இனவாதத்தின் போக்கும் வேகமும் சரிவர அடையாளம் காணப்படாதவிடத்து அதைத் தடுப்பதும் எதிர்ப்பதும் கடினமே. இதுவே 30 களிலும் 40 களிலும் நிகழ்ந்தது. எனவே இனவாதத்தின் வளர்ச்சிக்கு தமிழ்த்தலைவர்களின் தகுதியின்மையும், தமிழ் அறிஞர்களின் மந்தத் தனங்களும் துணைபோயுள்ளன எனலாம்.

---

## முடிவுரை

இக்காலகட்டத்தில் நிலவிய இனப்பிரச்சினையைப் பற்றி விளக்குகையில் பொதுவாக வர்க்கப்பிரச்சினைதான் இனப்பிரச்சினை என்று கூறப்படும் ஒரு கருத்தும், சிங்களவர் மத்தியில் உள்ள கொயிகம, கரவா சாதிப்பிரிவினரிடையே ஏற்பட்ட சாதிப்பிரச்சினையின் தாக்கமானது தமிழரிற்கெதிரான இனப்பிரச்சினையாக திசைதிரும்பியதாக இன்னொரு கருத்தும் உள்ளது. இவற்றைவிடவும் இனப்பிரச்சினை ஒரு பொருளாதாரப்பிரச்சினை எனவும் இனத்தூய்மை வாதத்தின் அடிப்படையில் எழுந்தது எனவும் பல விளக்கங்கள் உள்ளன.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மட்டும் எடுத்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை மட்டும் எடுத்தோ அல்லது ஒரு நிகழ்வை மட்டும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வைத்துக்கொண்டோ இலங்கை தேசிய இனப்பிரச்சினையின் உண்மைக்காரணத்தையும் அதன் பரிமாணங்களையும் கண்டறிய முடியாது. இப்படிப்பட்ட ஆய்வுகள் எல்லாம் ஆய்வு முறையில் முற்றும்பாராமை என்ற வகையைச் சார்ந்ததாகவே அமையும். சில ஆய்வாளர் தாம் கண்டறிந்த ஒரு பகுதி உண்மையை முழு உண்மையாக விளக்கிவிடுகிறார்கள்.

தேசிய இனங்களிடையிலான பிரச்சினையை வர்க்க ஆய்வுக்குள் மட்டும் வைத்து எடைபோட முடியாது. அதன் குறித்த சூழலில் சகல அம்சங்களையும் கருத்திலெடுத்து அதற்கேற்ப அதன் வளர்ச்சிப் போக்குகளை மதிப்பீடு செய்ய வேண்டும். தேசிய இனப்பிரச்சினை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைதான். தேசிய இனப்பிரச்சினை அடிப்படையில் வர்க்கப்பிரச்சினை அல்ல ஆனால் வர்க்கப்பிரச்சினை தேசிய இனப்பிரச்சினை மீது சில வேளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதே போல தேசிய இனப்பிரச்சினையும் வர்க்கப்பிரச்சினை மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஒரு தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சிப்போக்கில் வர்க்கப்பிரச்சினை மட்டும் அன்றி ஏனைய பிரச்சினையும் இணைந்து விடக்கூடும். அதற்காக அதனுடன் இணைந்து கொள்ளும் பிரச்சினைதான் தேசிய இனப்பிரச்சினை என்று விளக்கி விட முடியாது. ஓர் ஆறு ஓடும் போது அதனுடன் சேர்ந்து குப்பை கூளங்களும் ஓடக் கூடும். அதற்காக குப்பை கூளங்களையே ஆறு என்று சொல்லிவிட முடியாது.

முதலில் வர்க்கப் பிரச்சினை பற்றிய ஒரு விடயத்தை சற்று ஆராய்வோம். காசியப்பனை மகன் உயிரோடு வைத்துச் சமாதிகட்டினான். இதில் வர்க்கப்பிரச்சினை எதுவும் இல்லை. முடியுரிமைக்காக தகப்பனிற்கும் மகனிற்கும் இடையிலுண்டான அதிகாரப் போட்டிதான் இது. இதுபோலவே புவனேகபாகு, மாயாதுன்ன, ரயிகம பண்டார போன்ற மூன்று



சகோதரரிற்கும் இடையில் கோட்டை ராஜ்ஜியத்தில் பிரிவினைப் போராட்டம் நிகழ்ந்தது. இங்கும் வர்க்கப் பிரச்சினை எதுவும் இல்லை. இதுவும் சகோதரரிடையே முடியுரிமைக்காக ஏற்பட்ட அதிகாரப்போட்டிதான். இது ஒரே வர்க்கத்துள் ஏற்பட்ட வெறும் அதிகாரப்போட்டியே தவிர ஒரே வர்க்கத்திற்குள் உருவான வர்க்க முரண்பாட்டை பொருளாதார அர்த்தத்தில் பிரதிபலிக்கக் கூடிய வர்க்கப் போட்டியும் அல்ல. அதாவது வர்க்க அர்த்தத்தில் உற்பத்திப்பண்டம் சம்பந்தமான அல்லது உற்பத்தி சார்ந்த ஒரு போட்டியும் அல்ல. வர்க்கப் பிரச்சினை என்ற ஓர் அம்சம் வரலாற்றில் உண்டுதான். ஆனால் அதற்காக எல்லாப் பிரச்சினைகளையுமே வர்க்கப் பிரச்சினை என்று சொல்லிவிட முடியாது.

வேறுபட்ட மொழி, வேறுபட்ட புவியியற் சூழல், வேறுபட்ட பண்பாட்டு வளர்ச்சிப் போக்கு ஆகியவைதான் தேசிய இனங்களை ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்தி வைத்திருக்கும் தளங்கள் ஆகும். பொதுவான பொருளாதார வளர்ச்சி இணைப்பானது ஒரு பொது அடிப்படையைக் கொண்டிருக்கக் கூடிய மக்களை (உதாரணமாக மொழி என்ற பொது அடிப்படை) அவர்களின் பிராந்திய, குழு வேறுபாடுகளிலிருந்து விடுவித்து ஒரு பொதுவான தேசியப்பண்பை உருவாக்கி விடுகிறது. ஆனால் இப்பொதுவான பொருளாதார இணைப்பு விதி எங்கும் பரவும் போது அது பல இனங்களையும் ஒரு தனித்தேசிய இனமாக ஆக்கி விடுவதில்லை. எனவே பல்தேசிய இனங்களிற்கிடையில் ஒரு பொதுவான பொருளாதார இணைப்பு விதி இருந்தாலும் கூட அந்த இனங்கள் தனித்தனி இனங்களாகவே இருப்பதை நிர்ணயிப்பது அந்தந்த இனங்களின் தனித்தனிப் பண்புகள்தான். ஆகவே ஒரு தேசிய இனம் என்பதை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணி அது அடிப்படையில் ஒரு தேசியத்துக்குரிய தனி



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விசேட பண்பைக் கொண்டிருக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. இதற்குத்தக்க உதாரணமாக கண்டிச் சிங்களவர், கரையோரச்சிங்களவர் பற்றிய விடயத்தை எடுத்துக் கொள்வோம்.

கண்டிச்சிங்களவரும், கரையோரச்சிங்களவரும் தம்மை ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபடுத்தி இரு தேசிய இனங்களிற்குரிய பாதையில் சென்று கொண்டிருந்தனர். பல நூற்றாண்டுகளாக இரு பகுதியினரும் இரு வேறுபட்ட அரசுகளிற்குரியவர்களாயும் இரு வேறுபட்ட புவியியற் சூழலைக் கொண்டவராயும் வாழ்ந்ததால், இப்படியான போக்குக் கருக்கொண்டது. ஆனால் பிற்காலத்தில், பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் இவர்கள் ஒரே அரசமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கண்டிகரையோர வீதி, புகையிரத வீதி என்பன அமைக்கப்பட்டு இருபகுதியினரும் ஒன்றுடன்ஒன்று போக்குவரத்துத் தொடர்புகள் ரீதியாக இணைக்கப்பட்டனர். அத்துடன் பொருளாதார ரீதியாகவும் இரு பகுதியினரும் இணைக்கப்பட்டனர். இவ்வாறு உருவான பொருளாதார இணைப்பும் மற்றும் பொதுவான வளர்ச்சிப் போக்குக்களும் கண்டிச் சிங்களவரையும் கரையோரச் சிங்களவரையும் ஒரே தேசிய இனமாக உருவாக்கி விட்டன.

கண்டிச் சிங்களவரிற்கும் கரையோரச் சிங்களவரிற்கும் இடையில் ஒரு பொது மொழி, பொது மதம் என்பன நிலவியமையாற்தான் பொருளாதார இணைப்பால் அதனை ஒரே இனமாக இணைத்துவிட முடிந்தது. ஆனால் இவ்வாறான பொதுவான வீதி, புகையிரத வீதி, தொலைத் தொடர்பு, பொதுநிர்வாகம் மற்றும் பொதுவான பொருளாதார இணைப்புக்கள் போன்றவற்றால் தமிழ், சிங்களம் எனும் இரு தேசிய இனங்களையும் ஒரே இனமாக்கிவிட முடியவில்லை. அதனால் பொருளாதாரம பற்றிய இணைப்பு



விதியை அதற்குரிய அளவிற்தான் மதிப்பீடு செய்ய வேண்டும். எனவே அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டமானது அது தேசிய இனமாக இருப்பதற்கான முன் நிபந்தனை அதன் பண்பாட்டுக் கருவூலமேயாகும். அக்கருவூலத்தின் மீது செயற்படும் ஒரு காரணியாகவே பொருளாதாரத்தைக் கொள்ளலாம்.

ஓர் அரசியல் எல்லைக்குள் வாழும் பல்தேசிய இனங்களைக் கொண்ட அரசிற்குள் ஒரு தேசியஇனத்திலிருந்து இன்னொரு தேசியஇனம் வேறுபட்டதாக இருக்கின்றமைதான் அங்கு தேசியஇனப்பிரச்சினை தோன்றுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இதுவே தேசிய இனப்பிரச்சினை என்பது பற்றிய பிரதான அம்சமாகும்.

இலங்கையின் மகாசங்கமும் பௌத்த நிறுவனமும் நீண்ட பெரும் வரலாற்றைக் கொண்டவை. இவற்றிற்கென்றொரு வரலாற்றுப் பலமுண்டு. இலங்கையில் பௌத்தத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கு மகாசங்கங்கள் பெரும் முயற்சி செய்துவந்த வரலாறு உண்டு. அதற்கென நீண்ட கால நிறுவனப்பலம் உண்டு. இம் மகாசங்கமும், பௌத்த நிறுவனப்போக்கும் ஐரோப்பியர் காலத்தில் பின்தள்ளப்பட்டாலும் பின்பு அவை தம்மை சுதாகரித்துக் கொண்டு மீண்டும் எழலாயின. இந்தவகையில் வலன சிறீ சித்தார்த்த தேரோவால் 1839 இல் ஸ்தாபிக்கப்பட்ட பரமதம்ம செய்த்திய பிரிவெனாவை பிரித்தானியர் காலத்திற் பௌத்த எழுச்சிக்கு வித்திட்ட முதற் பயிற்சிக்களமாகக் கொள்ளலாம். இது பௌத்தத்தின் தொடர்ச்சியான வரலாற்றுப் போக்கை வெளிக்காட்டி நிற்கும் ஒரு கட்டமே. இப்போக்கானது 1880 களில் பௌத்த மறுமலர்ச்சியாக வெளிப்பட்டது. இது 'தம்மதீப' கோட்பாட்டை நவீன வரலாற்றிற்கேற்ப புதுப்பித்தது. இலங்கையில் ஐரோப்பியரால் உருவான நவீன மாற்றங்களிற்கேற்ப

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பௌத்த நிறுவனமானது தன்னை நவீன மயப்படுத்திக் கொண்டது. சிங்கள பௌத்தத்தைப் பாதுகாக்க இந்திய எதிர்ப்பைக் கருவாகக் கொண்டுருவான தம்மதீபக் கோட்பாடானது, தற்போதுருவான கிறிஸ்தவர்வருகை, இஸ்லாமியர் வருகை எனும் அம்சங்களையும் சேர்த்து உருத்திரளலாயிற்று. சிங்களபௌத்த மேலாதிக்கம் இலங்கை நவீன வரலாற்றிலும் அதன் கருப்பொருளாக்கப்பட்டது. இதற்குத் தலைமை தாங்கியவர் அநகாரிக தர்மபால ஆவார். இவரே நவீன வரலாற்றில் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்தின் தந்தையாவார்.

இந்த பௌத்த எழுச்சி ஆரம்பத்தில் கிறிஸ்தவத்தை எதிர்ப்பதில் உதயமாகி பின்பு முஸ்லீம்கள், மலையாளிகள். தோட்டத் தொழிலாளர் எனப் பல தரப்பினரையும் எதிர்க்கலாயிற்று. இதில் கிறிஸ்தவம் தவிர்ந்த மற்றைய மூன்று பிரிவினரும் இந்தியாவிலிருந்து வந்தவர்களாவர். ஆதலினால் "தம்மதீபத்தில்" உள்ள இந்திய எதிர்ப்பு இங்கும் தனிவிசேடம் பெறலாயிற்று. இத்தகைய எதிர்ப்பின் நீட்டமே தமிழின எதிர்ப்புமாகும். எனவே தொடர்ச்சியான இந்தியச் சூழலுடன் தமிழர் பற்றிய இனப்பிரச்சினை தொடர்ந்து பின்னப்படும் வரலாற்றுத் தொடரை இக் காலகட்டத்திலும் சரிவர அடையாளம் காணமுடிகின்றது. இனப்பிரச்சினையின் இத்தகைய அடிப்படையான அம்சத்துடன் பொருளாதாரப் பிரச்சினைகள், அரசியல் - வர்க்க நோக்குகள், மற்றும் அக்காலகட்ட நிலைமைகள் போன்ற அம்சங்களும் கூட்டுச் சேர்ந்து இனப்பிரச்சினையை பல்பரிமாணத்தில் வளர்க்க உதவின.

சிங்கள பௌத்தம் பல நவீன அம்சங்களை ஏற்றுதனதாக்கிக் கொண்டது. ஆனால் நவீன காலத்து, இயல்பான வரலாற்றுப் போக்கின் அடிப்படையில் பல்லினத் தன்மையையும், நவீனமான பல்லினச் சிந்தனையையும் அது ஏற்க மறுத்தது. இத்தகைய நவீன சிந்தனை மறுப்பு உருப்பெற்று வளர்ந்த காலமே இவ் வத்தியாயத்திற்கு உட்பட்ட காலகட்டப் பகுதியாகும். இது தனது "தம்மதீப" கோட்பாட்டிற்கும் அதன் அடிப்படையிலான இந்திய எதிர்ப்பு — தமிழின எதிர்ப்பு என்பவற்றிற்கு மீண்டும் உயிரூட்டிய காலகட்டமாகும்.



## நான்காம் அத்தியாயம்

### ஆதாரங்கள்

1. "1815ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் நாள் நடந்த கண்டியர் சமவாயம்" இ, ரத்தினம் (மொ. பெ), டொனமூர் அறிக்கை, கொழும்பு, (1961), பக். 244

2. Ananda Guruge (Ed), **Return to Righteousness: A Collection of Speeches, Essays and Letters of the Anagarika Dharmapala** Ceylon, (1965) P. XXX

3. Gananth Obeyesekere, "Religious Symbolism and Political Change in Ceylon", **Modern Ceylon Studies A Journal of the Social Sciences, Vol :** No. 1, Jan.1970, P. 46

4. "The Riot Commission Report", G. P. V. Somaratna, **Kotahena Riot 1883 Religious Riot in Sri Lanka,** Sri-Lanka (1991), P. 6

5, Ananda Guruge, P. LXVIII

6. IBID, P. 495

7. IBID, P. 502

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

8. IBID, P.509
9. IBID, P. 484
10. IBID. P. 528
11. மேற்கோள், குமாரி ஜயவர்த்தன, **இலங்கையில் இன வர்க்க முரண்பாடு**, சென்னை (1987), பக், 15
12. மேற்கோள், மேற்படி, பக். 20
13. மேற்கோள், மேற்படி, பக். 61
14. Ananda Guruge, P. 501
15. IBID, P. LXVIII
16. Gananath Obeyesekere, P. 46
17. Kumari Jayawardena, **Ethnic and Class Conflicts in Sri-Lanka**, Colombo (1990), P. 13
18. குமாரி ஜயவர்த்தன, பக். 9
19. மேற்படி, பக். 10
20. மேற்படி, பக். 12
21. Ananda Guruge, P. LXI
22. G. C. Mendis, 'The Evolution of a Ceylenese nation-The Attainment of Indepence in 1948 and the Conflicts That Arose From 1956', The Journal of Ceylon Branch of the Royal Asiastic Society, New Series Vol. XI, 1967, P. 15
23. குமாரி ஜயவர்த்தன, பக். 16
24. மேற்படி, பக். 36
25. மேற்படி, பக். பக், 44 - 45
26. மேற்படி, பக். 43
27. மேற்படி, பக். 54
28. மேற்படி, பக். 92



# ஐந்தாம் அத்தியாயம்

## சிங்கள, பௌத்த, எழுச்சி: இரண்டாம் கட்டம்

சிங்கள பௌத்த ஆதிக்கம் நவீன வரலாற்றில் முழு அரசநிறுவன வடிவம் பெற்ற காலகட்டம் இதுவாகும். இக்காலகட்டத்திற்தான் தனிச் சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்மக்களிற்கெதிரான முதலாவது பெரும் இனஅழிப்பு நடவடிக்கை (1958) கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டுமெனக் கூறிவந்த பல சிங்களத் தலைவர்கள்கூடத்தனிச் சிங்களம் என்ற திசையை நோக்கித்திரும்பிய காலகட்டமும் இதுவாகும். தமிழும் சிங்களமும் உள்ளூராட்சி சபைகளிலும் கிராம நீதிமன்றங்களிலும் உத்தியோக மொழியாக இருக்கவேண்டும் என்ற பிரேரணையை முதல் முறையாக 1937இல் அரசாங்க சபையில் கொண்டு வந்திருந்த மார்க்சிக முன்னோடியான பிலிப் குணவர்த்தனாவே தனிச்சிங்களச் சட்டத்தை வேண்டி 1956இல் பண்டாரநாயக்கவின் கூட்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டரசாங்கத்திற் சேர்ந்து கொண்ட காலகட்டமும் இது வாகும். இதன் தொடர்ச்சியாக கொமியூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக்கட்சியும் தோசை, மசாலா வடை எமக்கு வேண்டாம் என்று தமிழரைக் கிண்டல் செய்து மேதின ஊர்வலம் போன காலகட்டமும் இதுவாகும்.

ஆங்கிலப் பாணியிலான சிங்கள உயர் குழாத்தினது தளம் பல்நிலை மாறித் திட்டவட்டமான சிங்கள பௌத்த இனவாத வடிவத்தை அவர்கள் அடைந்த காலகட்டமும் இதுவாகும் இந்த ஆங்கிலம் கற்ற உயர்குழாத்தில் மூன்று வகையான கூட்டுக்கலவையான தளம்பல் காணப்பட்டது. ஒன்று அவர்களது மேலைத்தேச பாணி, இரண்டு சிங்கள பௌத்தம் பற்றிய நிலைப்பாடு, மூன்று தாராண்மைத்தன்மைகொண்ட அனைத்துமக்களையும்,அணைத்து போவதுபோன்ற பாணி. ஆனால் அடிமட்டத்திலிருந்த வளர்ந்த, வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கள பௌத்த சக்தி இவர்களின் தளம்பலிற்குமுடிவு கட்டும் தன்மையதால் மேலெழுந்து வர இவர்களே அதற்குத் தலைமை தாங்குவோராயும் தங்களிற்கிடையில் இருந்த பதவிப்போட்டி காரணமாய் அந்த இனவாதத்தை போட்டி போட்டு வளர்ப்பவர்களாயும் தம்மை மாற்றிக் கொண்டனர்.

நாட்டின் அரசியல், பொருளாதாரம், மொழி, மதம் சார்ந்த அனைத்து அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஒன்று திரண்டு சிறுபான்மையின எதிர்ப்பான தனிச்சிங்கள பௌத்த ஆதிக்கம் கோட்பாட்டுரீதியாகவும் நடைமுறையிலும் முழுவடிவத்தை இக்கால கட்டத்திற் பெற்றது. இனப்படுகொலை அரசியற்கொலை, அரசியற் சதி போன்ற இன்னோரன்ன அம்சங்கள் யாவும் இக்காலகட்ட அரசியலில் இடம்பெற்றன. பொதுவாகத்தேச நிர்மாண அரசியலில் இது ஒரு பெரும் கொந்தளிப்பு காலம் ஆகும். 1958 ஆம் ஆண்டு சிங்களவரால் தமிழினம் அழிக்கப்பட்டதைப்பார்த்து அவசர காலம் 1958 என்ற தனது நூலில் ஒரு முக்கியமான அடிப்படைக் கேள்வியை எழுப்பினார். நாங்கள் பிரிந்து செல்லும் நிலைக்கு வந்து விட்டோமா? என்பதே அந்தக் கேள்வி. இத்தகைய கேள்விக்குரிய அவசியத்தையும், அதற்கான நடைமுறைவரலாற்று போக்கையும், உருவாக்கிய காலகட்டம் இதுவே.

சொலமன் வெஸ்ட் றிச்வே டயஸ் பண்டாரநாயக்க, டொன். ஸ்டீபன் சேனநாயக, டட்லி சேனநாயக்க, சேர். ஜோன். கொத்தலாவல, யூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தன போன்ற



ஆங்கிலப்பாணியிலான பெயர்களைச் சூட்டிக்கொண்டு ஆங்கிலேய ஆட்சியின் கீழ் வசதிகளை அனுபவித்து வந்தவர்கள், பின்பு ஆங்கிலேயர் ஆட்சி நீங்கியதும் தங்களைத் தீவிர சிங்கள பௌத்த விசுவாசிகளாய் நிறம்மாற்றிக்கொண்ட, பரிகாசத்திற்குரியதும், துயரம் மிக்கதுமான சம்பவங்கள் நிறைந்த காலகட்டம் இதுவாகும்.

இலங்கை தேசிய காங்கிரஸ், சிங்கள மகாசபை, இலங்கை சோனகர் சங்கம், இலங்கை முஸ்லீம்லீக் ஆகிய அமைப்புக்கள் சேர்ந்து 1946 இல் உருவாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திர இலங்கையின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. டி. எஸ். சேனநாயக்க பிரதமரானார். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, சேர். ஜோன். கொத்தலாவல, டட்லி சேனநாயக்க, ஜே. ஆர். ஜெயவர்த்தன போன்றோர் கட்சியின் ஏனைய முன்னணித்தலைவர்களாவர். பண்டாரநாயக்கவிற்கும் டி. எஸ். சேனநாயக்கவிற்கும் இடையில் ஓரளவு கொள்கை வேறுபாடு இருந்த போதிலும் உண்மையில் பதவிப்போட்டிகாரணமாக, அதாவது டி. எஸ். சேனநாயக்கவிற்குப் பிறகு கட்சியின் தலைமைப்பதவி டட்லி சேனநாயக்கவிற்கே கிடைக்கும் என்பதை பண்டாரநாயக்க விளங்கிக் கொண்டதால் பண்டாரநாயக்கவும் அவரது தலைமையிலான சிங்கள மகாசபையினரும் ஐ. தே. க. வை விட்டு 1951இல் வெளியேறி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்தாபித்தனர். இவ்விரு கட்சிகளுமே பின்பு இலங்கையில் ஆட்சியதிகாரத்திற்குரிய கட்சிகளாயினர்.

டி. எஸ். சேனநாயக்கவும் ஐ. தே. க. வினரும் பிரித்தானியாவிற்கு விசுவாசமாக நாட்டைப் பரிபாலித்தனர். சேர் ஜோன். கொத்தலாவலைக்கும், மகா தேசாதிபதியாக இருந்த சோல்பரிக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடு இருந்த போதிலும் கொத்தலாவல பிரித்தானியரிற்கு விசுவாசமாக நடந்து கொண்டார். டி. எஸ். சேனநாயக்க பிரித்தானியாவுடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பெயரில் இலங்கையில் பிரித்தானியப் படைத்தளங்கள் இருந்தன. இலங்கையில் பிரித்தானியக் கொம்பனிகள் பெரும் ஆதிக்கம் பெற்றிருந்தன. இவற்றின் மூலம் இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கம் மிக்கவொரு சக்தியாகவே இருந்தது. கிறிஸ்தவம் தொடர்ந்தும் செல்வாக்குப்பெற்று விளங்கியது. இந்நிலையில் கீழிருந்து எழுச்சி பெற்று வந்த பௌத்த சக்தி ஐ. தே. கா வைப்பல தளங்களிலும் உதைக்கலாயிற்று.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இக்கால கட்டத்தில் டி. சி விஜயவர்த்தனவால் எழுதப்பட்ட விகாரையில் புரட்சி (The Revolt in the Temple) என்ற நூல் 1953இல் வெளிவந்தது. பௌத்தத்தின் 2500 ஆண்டு கால நினைவைக் குறிக்கும் புத்தஜயந்தியை ஒட்டி இந்நூல் எழுதப்பட்டது இந்நூல் சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கான அவசியத்தை வலியுறுத்தியது. நாடு சிங்கள பௌத்தர்களிற்கே உரியது என்று கூறியது. 700 பக்கங்களைக் கொண்ட இப்பெரிய நூல் ஒரு வகையில் ஹிட்லரின் மெயின் காம்ப் என்ற நூலை ஒத்தது.

''பௌத்த மதம் சிங்கள இனம், இலங்கை மண் ஆகிய மூன்றும் ஒன்று கலந்து 2500 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் வரலாறானது. நவீன காலத்தில் மிகப்பெரியதும் தனித்துவம் வாய்ந்ததுமான ஒரு நிகழ்வாகும். அத்தகைய நிகழ்வை நினைவு கூர்வதே இந்நூலின் நோக்கமாகும்.'' [ 1 ] என்ற வாக்கியத்துடன் இந்நூலின் முதல் பக்கம் ஆரம்பமாகின்றது.

இந்நூல் ஆரிய இனம், விஜயன் வருகை, 'தம்மதீப' கோட்பாடு, மண்ணின் மைந்தர்கள் போன்ற மகாவம்சக் கருத்துக்களைஏற்று அவற்றிற்கு மேலும் உயிரூட்டியதுடன் துட்டகாமினியை ஒரு முழு நிறைவான இலட்சிய வீரனாயும் சிங்கள இனத்தின் முன்னுதாரண புருசனாயும் சித்தரிக்கின்றது. [ 2 ]. மேலும் இந்நூலிற்கு முன்னுரை எழுதியுள்ள கண்டி மாவத்தை பீடாதிபதி வணக்கத்திற்குரிய பஹமுனி சிறி சுமங்கல 500 பிக்குகள் துட்டகாமினியுடன் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதாக விபரிக்கிறார். மேலும் இவர் குறிப்பிடுகையில் காலத்திற்குக்காலம் அல்லது நெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம் மகாசங்கம் அரசியலில் நேரடியாகத் தலையிட்டு அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த உதாரணங்களையும், மன்னர்கள் அதற்குக் கட்டுப்பட்ட உதாரணங்களையும் ஏறக்குறைய இரண்டு பக்கங்கள் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அரசியலில் மகாசங்கத்தினரிற்கு இருக்கக் கூடிய முக்கியத்துவத்தையும் பங்கையும் வெளிக் கொணர்ந்து நவீன அரசியலிலும் அதை இடம் பெறச் செய்வதற்காகவும், அதற்கான தமது பக்க நியாயங்களை நிரூபிப்பதற்காகவும் இவ்வாறு எழுதியுள்ளார். இவ்வாறு மகாசங்கம் நவீன வரலாற்றில் நேரடியாக அரசியலில் பிரவேசம் செய்யும் ஒரு போக்கை இது உணர்த்தி நிற்கின்றது எனலாம். இந்நூலுடன் சிங்களப் பௌத்தம் தனது மேலாதிக்கத்திற்குரிய முழு சித்தாந்த அடிப்படைகளையும், அதற்குரிய நியாயங்களையும் தெளிவாக



முன்வைத்து விட்டது என்றே கூறவேண்டும். இப்படியாக 1950 களின் முதல் பகுதியில் சிங்கள மேலாதிக்கத்திற்கான பகைப்புலம் வேகமாக வடிவம் பெறலாயிற்று. இத்தகைய பின்னணியில் வைத்துத்தான் இக்காலகட்ட இனவாதத்தின் வீச்சை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இக்கால கட்டத்தில் எழுந்த மறுமலர்ச்சியானது மொழிப் பிரச்சினை, மதப்பிரச்சினை, அந்நிய முதலீடுகளை எதிர்த்தல், பிரித்தானிய எதிர்ப்பு போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இவற்றுள் குறிப்பாக மொழி, மதம் சார்ந்த பிரச்சினைகளை முதலில் எடுத்துக் கொள்வோம்.

இந்தியாவில் பிரித்தானியர் ஆங்கிலத்தை உத்தியோக மொழியாக்கிய காலத்தில் அதற்கு எதிர்ப்புக் கிளம்பவே உள்ளூராட்சி மன்றங்களில் சுயமொழிப் பிரயோகத்தை அங்கீகரித்தனர். ஆனால் கோல்புறூக் குழுவினர் இலங்கையில் 1832இல் ஆங்கிலத்தை உத்தியோக மொழியாக்கிய போது அதற்கு எதிர்ப்புக் கிளம்பவில்லை. இலங்கையின் நவீன வரலாற்றில் சுயமொழி என்ற எண்ணக்கரு பின்வருமாறு வளர்ந்து வந்தது. 1910 களில் புது வருட தினக் கொண்டாட்டங்களை தேசிய நினைவு தினங்களாகக் கொண்டாடும் உணர்வு சிங்களவரிடம் உருவாகியது. அவ்வாறானவிழாக்களில் எல்லாவகையிலும் சிங்கள மொழியே பிரயோகிக்கப்பட்டது. கூட்டம் நடாத்தும்போது, நிகழ்ச்சி நிரல்கள், அழைப்பிதழ்கள் சகலதிலும் சிங்கள மொழியே பிரயோகிக்கப்பட்டது. அத்துடன் இவ்விழாக்களின் போதான விளையாட்டுக்களும் சுதேச விளையாட்டுக்களாகவே இருந்தன. [ 3 ] சுயமொழி பற்றி சிங்களவரிடம் ஏற்பட்ட முக்கியமான முதல் உணர்வாக இதைக் கருதலாம். சுதந்திரம் பெற்ற பின்னும் கூட பல கட்சிகளினதும் (தமிழ்க்கட்சிகள் உட்பட) செயற்குழு கூட்டங்களும், நிகழ்ச்சி நிரல்களும், நிகழ்ச்சிப்பதிவுகளும் ஆங்கிலத்திலேயே இருந்ததை அவதானித்தால் 1910இல் இதற்கெதிரான போக்குகள் சிங்களவர் மத்தியில் தோற்றம் பெற்றிருந்ததன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

அரசமொழியாக சுயமொழி இருக்கவேண்டும் என்றகருத்தை 1922இல் முனிதாச குமாரதுங்க என்பவர் வலியுறுத்தினார். [ 4 ] இவர் உண்மையில் சுயமொழி எனக்கருதியது தனிச்சிங்களத்தைத்தான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1935இல் ஸ்தாபிக்கப்பட்ட லங்கா சமசமாஜக்கட்சி அடிப் படை இலட்சியங்கள் என்ற ஒரு பிரசுரத்தை அப்போது வெளி யிட்டிருந்தது. அப்பிரசுரத்தின் 17ஆம் பிரிவில் சுயமொழி பற்றிய ஒரு கோரிக்கை உள்ளது. கிராமிய நீதிமன்றங்களில் சுயமொழி பிரயோகிக்கப்படவேண்டும் என்றும் பொலிஸ் நிலை யங்களில் வழக்குகளைப் பதிவதில் சுயமொழி பிரயோகிக்கப் படவேண்டும் என்றும், இது காலப்போக்கில் ஏனைய அரச திறுவனங்களிற்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் கூறப் பட்டிருந்தது [5]. 1937, ஜனவரி 29ஆம் திகதி சமசமாஜக் கட்சி யினர் அரசாங்க சபையில் கொண்டு வந்தவொரு தீர்மானத் தில் மாநகர சபைகளிலும் பொலிஸ் நீதிமன்றங்களிலும் சுய மொழிப்பிரயோகம் பற்றிய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந் தனர். [6] அவ்வாறு சுயமொழியைக் கொண்டு வருவது நல் லதுதான் ஆனால் தற்போது அதை நடைமுறைப்படுத்துவது சிரமம் என்று டி. எஸ். சேனநாயக்க அதைமறுத்தார். [7]

தமிழ், சிங்கள சமூகத்தவரிடையே புரிந்துணர்வை உரு வாக்குவதற்கு தமிழ் மாணவரிற்கு சிங்களமும், சிங்கள மாண வரிற்குத் தமிழும் போதிக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்று மட்டக்களப்புப் பிரதிநிதி எஸ். ஓ. கனகரத்தினம், 1937, யூன் மாதம் அரசாங்க சபையில் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். [8] தற்போதைய சூழ லில் இது சாத்தியமில்லை என்றும் ஆனால் சரியான சூழல் வாய்க்கும்போது இதை நடைமுறைப்படுத்தலாம் என்றும்கூறித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சியும், யாழ்ப்பாண வாலிபர் கொங் கிரசும் தமிழ், சிங்களம் ஆகிய சுய மொழிக் கொள்கையில் அதிகம் அக்கறை காட்டிச் செயற்பட்டன. "சிங்களமும் தமி ழும் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்ற கருத்து இலங்கை சுதந்திரமடைய முன்பே தோன்றியிருந்தது என் பதை நாம் மறந்துவிடக்கூடாது. யாழ்ப்பாண வாலிப மகா நாட்டின் ஆண்டு விழாக்களில் கலந்துகொண்ட இடதுசாரித் தலைவர்களும் வாலிப மகாநாட்டினரும் மீண்டும் மீண்டும் இதை வற்புறுத்தினர். இதைப்பற்றிப் பிரச்சாரமும் நாட்டில் நடந்தது" என்று கூறப்படுகிறது. [9]

இக்காலகட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரிப் பத்திரிகை இம்மொழிப்பிரச்சினை சம்பந்தமாக பல்வேறு விபரங்களையும், பலதலைவர்களினது பேச்சுக்களையும், கருத் துக்களையும் தெளிவாகப் பதிவு செய்துள்ளது.



இதில் ஒரு பொதுவான போக்கை நாம் அவதானிக்க லாம். நேரடி அரசியலோடு சம்பந்தப்பட்டவர்கள், மற்றும் அவ்வாறான அரசியல் ஸ்தாபனங்களும் பொதுவாக இரு மொழிக்கொள்கையை ஏற்றுக் கொண்டுவரும் போக்குத் தெரி கின்றது. ஆனால் இவற்றில் அரசியல்மட்டத்தில் ஒரு முக்கிய கூறுக்கிடாக 1943 யூன் இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களப் பிரேரணை அமைகிறது. 1944 மே மாதம் இப்பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழும் உத்தியோக மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்து இதில் கைவிடப்பட்டிருந்தது. சிங் களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்க வேண்டுமென்பதற்கு அவர் பின்வருமாறு நியாயம் கூறினார்

"இந்நாட்டில் சிங்களத்துடன் தமிழிற்கும் சம அந் தஸ்து கொடுக்கப்படுமேயானால் முழு உலகிலும் 30 இலட்சம் மக்களால் மட்டுமே பேசப்பட்டுவரும் சிங்களம் பெரும் இன்னலிற்குள்ளாகி காலகதியில் அது முற்றாகவே அழிந்து போய்விடக் கூடும் என்ற பெரும் அச்சம் என் னிடமுள்ளது. நான்கு கோடி தமிழர்களால் இந்தியா வில் பயன்படுத்தப்பட்டு வரும் தமிழ்நூல்களின் செல்வாக் காலும், தமிழ்த்திரைப்படங்களும், தமிழ்க்கலாச்சாரமும் இந்நாட்டில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களினாலும் சிங் கள மொழியின் எதிர்காலம் முடிவு கட்டப்படுவதாய் அமைந்துவிடும் என நான் எண்ணுகிறேன். தமிழிற்கும் சம அந்தஸ்து வேண்டும் என்று தமிழர்கள் விரும்புவார்க ளேயானால் அவ்வாறே கண்டிப்பாகத் தமிழிற்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும். இந்நிலையைத் தமிழ் அடைவதற்கு நாங்கள் யாவரும் தடையாக இருப்போ மென்று நான் நினைக்கவில்லை" [10].

மட்டக்களப்புப் பிரதிநிதி வி. நல்லையா தனிச்சிங்களத்தை எதிர்த்துத் தமிழும் உத்தியோக மொழியாக வேண்டும் என்று கோரியதற்கிணங்க, ஜே. ஆரின் தனிச் சிங்களப் பிரேரணை திருத்தப்பட்டு இரு மொழிகளும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 1945 இல் சுதேசமொழிகளிற்கு மாறுவது சம்பந் தமான ஒரு விசாரணைக்குழு ஜே. ஆர். தலைமையில் அமைக்கப்பட்டது.

1957 வரையில் ஆட்சித்துறை அலுவலர் யாவரும் சிங்களத்திலும் தமிழிலும் கடமையாற்றத் தகுதியடைந்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திருக்க வேண்டும் என்றும் இவ்விரு மொழிகளிலும் ஆட்சி நடப்பதைத் துரிதப்படுத்துவதற்கு எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலும் தமிழும் சிங்களமும் கற்பிக்கப்படவேண்டும் எனக் குழு சிபாரிசு செய்தது [11].

இத்தகைய போக்கு சம்பந்தமாக ஒரு சிறு அதிருப்தி தமிழ்த் தலைவர்களிடம் உருவாகத் தொடங்கியதை அவதானிக்கலாம். 1949 இல் சமஷ்டிக் கட்சியின் அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய எஸ். ஜே. வி. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்:

நிதிமந்திரி அவர்கள் [ஜே. ஆர். ஜெயவர்த்தன] விளக்கியபடி அரசியல் மொழி விசயத்திலே தமிழ்பேசும் மக்களை பரிபாலன முறையில் பிரித்து விடுவதும் மற்றைய ஏழு மாகாணங்களிலும் சிங்களத்தை அரசாங்க மொழியாக வைத்திருப்பதும் தான் அவரது கொள்கையாகும். இவ்வேழு மாகாணங்களில் குறைந்தது இரண்டு மாகாணங்களிலாவது [மத்தியமாகாணம், மேல்மாகாணம்] தமிழர் செறிந்து பெரும்பான்மையோராக வாழும் பிரதேசங்கள் இருக்கின்றன. இவர்களிடம் அரசாங்கம் நீதியாக நடந்து கொள்ள விரும்பினால் அவர்களுடைய பிரதேசத்தின் பரிபாலன விடயங்களில் அவர்களுடைய மொழியையே உபயோகிக்க வேண்டும். ஆனால் இது நடைபெறப்போவதில்லை.'' [12]

இதில் எமக்கு இரு விடயங்கள் தெளிவாகின்றன. ஒன்று, தமிழ் நாடு தழுவியரீதியில் உத்தியோக மொழிகளில் ஒன்றாக இருக்கமுடியாது என்ற எண்ணம் தமிழ்த்தலைவர்களிடம் ஏற்பட்டது. இரண்டு, அதேவேளை வடக்குக்கிழக்கில் உத்தியோகமொழியாகத் தமிழே இருக்குமென்று நம்பியமை.

இதன் பின்பு 1951இல் டி. எஸ். சேனநாயக்க பாராளுமன்றத்தில் பேசுகையில்; ''நாட்டை ஒரு மொழியாலன்றி இருமொழிகளாலும் கட்டி நிர்மாணிக்க வேண்டிய பெரும்பணி எமக்குண்டு'' [13] என்று தெரிவித்தார். மேலும் சிங்களமும் தமிழும் நாட்டின் தேசிய மொழிகள் எனத்தீர்மானித்துவிட்டோம் [14] எனவும் டி. எஸ். சேனநாயக்க தெரிவித்தார்.

1951 இல் சிங்கள மகாசபை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில்



''உடனடியாக சிங்களத்தை உத்தியோக மொழியாக்க வேண்டும். ஏதாவது குறிப்பிட்ட விடயங்களிற் சிக்கல் ஏற்படுமாயின் அதற்குச் சில கால அவகாசம் கொடுக்கலாம், தமிழர்களும் தமிழை உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று பெரிதும் கூறுவார்களேயானால் அதற்கு மகாசபா எதிர்ப்பாக இருக்காது'' [15].

1951 இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்தாபிக்கையின் அது இருமொழிக்கொள்கையை தனது பிரதான கொள்கையாக அறிவித்தது. இவ்வாறு இருமொழிக் கொள்கை தளம்பலுடனாவது இருந்து வந்த காலத்தில் தமிழ், சிங்களம் ஆகிய தேசிய மொழிகளை உத்தியோக மொழிகளாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு ஆதர். விஜயவர்த்தனா தலைமையில் 1953 இல் அரசாங்க மொழிக் கொமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கொமிஷன் தலைவர் தனது இறுதி அறிக்கையில் விசாரணைக்கப்பால் தனது சொந்த அபிப்பிராயமாக ஒரு விசேட குறிப்பை எழுதியிருந்தார்.

''1943 ஆம் ஆண்டு யூன் 22 ஆம் திகதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் அரசாங்க சபையில் கொண்டு வந்த பிரேரணையின் பிரகாரம் இரு தேசிய மொழிகளிற்குப் பதிலாக ஒரு தேசிய மொழியை ஏற்றிருந்தால் ஆங்கிலத்திற்குப் பதிலாக தேசிய மொழியை அரசாங்க மொழியாக்கும் கருமம் இப்போதிலும் பார்க்க மிகச்சுலபமானதாக இருந்திருக்கும் என்பது எனது அபிப்பிராயம் [16].

இவர் தலைமையில் தேசிய மொழிகள் மூலம் உயர்கல்விக்கான இன்னொரு கொமிஷன் நியமிக்கப்பட்டது. அதிலும் தனது விசேஷ குறிப்பாக ஆதர் விஜயவர்த்தன பின்வருமாறு எழுதியிருந்தார்.

''அநேக தமிழ் நூல்கள் தென்னிந்தியாவில் உபயோகிக்கப்படுகின்ற படியாலும் இப்பாடங்களை தமிழ் மூலம் படிப்பிக்கும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தென்னிந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதாலும் தமிழ் பேசும் மாணாக்கர் சிங்களம் பேசும் மாணாக்கரைக் காட்டிலும் கூடிய பயனடையக் கூடிய நிலையில் இருக்கின்றனர். எனவே போதிய சிங்கள நூல்கள் இருக்கின்றன



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்றும் சிங்களத்தில் இப்பாடத்தைப் படிப்பிக்க தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் போதிய தொகையில் இருக்கின்றார்கள் என்றும் நிச்சயித்த பின்னரே சிரேஷ்ட பாடசாலைகளில் தேசிய மொழி மூலம் கல்வியூட்ட ஆரம்பிக்க வேண்டும். இவ்வண்ணம் ஆரம்பிக்கப்படாவிட்டால் சிங்களம் பேசும் மாணாக்கர் வசதிகுறைந்த நிலையில் இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவதோடு இப்பாடங்களில் தமிழ் பேசும் மாணவர் அடையும் தேர்ச்சித்தரத்தை சிங்களம் பேசும் மாணவர் அடைய முடியாத நிலையும் ஏற்படும். ஒரு அரசாங்க மொழி மாத்திரமே இருக்குமாயின் இக்கஷ்ரம் எழ மாட்டாது. [17]''

இவ்வறிக்கை வெளியானதும் தென்னிலங்கை அரசியலில் பெரும் பதட்டமும், பரபரப்பும் உருவாகியது. ஆதர் விஜயவர்த்தனவின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன, பௌத்த நிறுவனங்கள் இக் கருத்துக்கு முதன்மை கொடுத்தன. இப்பின்னணியில் பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக்கட்சி மொழிக்கொள்கை சம்பந்தமாக ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. அவ்விசாரணைக்குழுவானது தனிச்சிங்களக் கொள்கையை முன்வைத்தது. 1955 இல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தனிச்சிங்களக் கொள்கையைத் தனது கட்சியின் கொள்கையாகப் பிரகடனப் படுத்தியது.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியும் தனிச் சிங்களக் கோரிக்கையை நோக்கித் திசைதிரும்பலாயிற்று. மொழிக்கொள்கை விடயத்தில் கட்சியின் உறுப்பினர்கள் சுய விருப்பின்படி நடந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. சிங்களம் அரச கரும மொழியாகவேண்டும் என்ற கோரிக்கையை பேராசிரியர் மலலசேகர, எவ். ஆர். ஜெயசூர்ய, எல். எச். மெத்தானந்த போன்றோர் பெரிதும் வலியுறுத்தினர். உதாரணமாக 1948 இலேயே முனிதாச குமாரதுங்கவின் விழாவிற் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய ஜி. பி. மலலசேகர பின்வருமாறு கூறியிருந்தார்:

''இலங்கை போன்ற ஒரு நாடு பல பாஷைகளை அரசாங்க மொழியாக வைத்துக்கொள்ள முடியாது. சிங்களம்தான் இலங்கையின் அரசாங்க பாஷையாக இருக்க வேண்டும். சிங்களவர் தமக்குச் சொந்தமான பாஷை, பண்பாடு ஆகியவற்றையேமேற் கொள்ள வேண்டும்.'' [18]



இதேபோல தமிழறிஞர் பலரும் தமிழையும் உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று கோரிவந்தனர். வணக்கத்திற்குரிய பிதா தனிநாயகம், பேராசிரியர் கா. கணபதிப்பிள்ளை, கே. நேசையா (பின்பு பேராசிரியர்), சு. வித்தியானந்தன் (பின்பு பேராசிரியர்) போன்றோர் இது சம்பந்தமாக முன்னின்று உழைத்தனர். உதாரணமாக பேராசிரியர் கணபதிப் பிள்ளை 1953 இல் கூறியதை எடுத்துக்கொள்வோம்,

''மொழியைப் பற்றிய அளவில் தமிழன் சிங்களவனிற்குப் பயப்படுகிறான். சிங்களவன் தமிழனிற்குப் பயப்படுகிறான். ஒருவன் மற்றவனை விழுங்கிவிடுவானோ என்ற பயம் நாட்டிலே இன்று எங்கும் நிலவுகிறது. ஆனால் இருமொழிகளும் நாட்டிலே தாராளமாக நின்று நிலவ முடியும் சுவிற்சலாந்தில் மும்மொழிகள் அரசமொழிகளாக வழங்குகின்றன, ஏன் இலங்கையில் இருமொழிகள் இருக்க முடியாது? [19]''

இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருந்த 'ஈழகேசரி' பத்திரிகை மொழிப் பிரச்சினையில் நியாய பூர்வமான ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. இதன் ஆசிரியத்தலையங்கங்களிலும் கட்டுரைகளிலும் இருமொழிக் கொள்கையை வற்புறுத்தியது. உதாரணமாகக் கொழும்பு நிருபரின் அபிப்பிராயக் கட்டுரையில் ஆதர் விஜயவர்த்தனவின் தனிச்சிங்களக் கொள்கை பெரிதும் கண்டிக்கப்பட்டிருந்தது [20]. இது சம்பந்தமான செய்திகளிற்கும், கட்டுரைகளிற்குமே இப்பத்திரிகை இக்காலத்தில் முக்கியத்துவம் கொடுத்துவந்தது.

பொதுவாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தனிச்சிங்களம் கோரிப்பல இயக்கங்கள் ஆரம்பமாகி இருந்தன. இவ்வாறு உருவான இயக்கங்களாவன:

(1) சிறீலங்கா ஜாதிக பெரமுன. (தலைவர் - சோம வீரசந்திரசிறி)
(2) உடறட்ட பெரமுன (ஐ. எம். ஏ. ஈரியகொல)
(3) சிங்கள ஜாதிக சங்கமேய (எஸ். டி. பண்டாரநாயக்க)
(4) சமஜவாதி மகாஜன பெரமுன (கே. ஆர். வெலிகமன)
(5) தர்ம சமாஜ பார்ட்டி (எல். எச் மெத்தானந்த)
(6) ஜாதிக விமுக்தி பெரமுன (கே. எம். பி. ராஜரட்ன)
(7) பாஷா பெரமுன (டொக்டர். தஹநாயக்க)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போன்றனவாகும், இவ்வாறான இயக்கங்கள் எல்லாம் சிங்களபௌத்த பேரினவாதத்தைத் தூண்டியதுடன் தனிச்சிங்களச் சட்டத்தையும் கோரி நின்றன.

திரி சிங்கள பெரமுன என்ற அமைப்பு அதிக வெறித்தனமாக நடந்து கொள்ளலாயிற்று. இம்முன்னணியின் ஆதரவில் களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய தேவ மொத்திவ அமர வாஞ்சதேரோ பின்வருமாறு கூறினார்.

> " உங்கள் நாடு, சமயம், பண்பாடு என்பவற்றின் உங்களிற்கு அன்பிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது தமிழரை இலங்கையிலிருந்தும் துரத்தியடியுங்கள். எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பின் தமிழரைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. தமிழர் எங்களது முதன்மையான எதிரிகளாவர். " [ 21 ]

ஏழு கோரளை இலக்கிய அபிமானிகள் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவர் சந்திராச்சாரிய பண்டித பேசுகையில்:-

> தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துகொடுப்பது கடந்த 2500 வருடகாலமாக வாழ்ந்து வரும் சிங்கள சாதியத்தாரிற்கு சாவுமணியடிப்பதேயாகும். ஒரு சிறுபான்மை சமூகத்தின் மொழியோடு நமது மொழிக்கும் சம அந்தஸ்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சிறுபான்மைச் சமூகம் புராதன காலம் தொட்டே தம்மை நாசமாக்க சங்கல்ப்பம் செய்து கொண்டிருந்த சமூகமாகும். இதற்கு நமது பழைய சரித்திரம் சான்று பகரும். இந்தியர்கள் செய்து வந்தது போல், இப்போதும் செய்து வருவதுபோல் நாம் கள்ளத்தனமாகக் குடியேற வேறு நாடுகள் இல்லை. ஆகவே சிங்களவர் இந்து சமுத்திரத்தில்தான் குதிக்க வேண்டி வரும். இலங்கை தென்னிந்தியாவின் ஒரு பாகமாகி விடும். சிங்கள மொழிக் கெதிரான நடவடிக்கைகளை எதிர்த்து நிற்க நீங்கள் முன்வரவேண்டும். பெரும்பான்மை சமூகத்தின் மொழியோடு ஏனைய மொழிகளிற்கும் சமத்துவம் கொடுக்கப்படுவதைக் கொண்டுதான் நாட்டில் வகுப்புத் துவேசங்கள் வளருமே தவிர சமத்துவம் கொடுக்காதிருப்பதால் வகுப்புத்துவேசம் தலைகாட்டாது," [ 22 ]

இந்நிலையில் பண்டாரநாயக்க ஒரு முழு இனவாதியாக மாறினார் " தமிழிற்கு சம அந்தஸ்து கொடுத்தால் சிங்கள சமூகம்



அழிந்துபடும். சிறு எண்ணிக்கையினரான தமிழர்கள் மொழிக்கு சம அந்தஸ்து கோரி ஏன் தான் கிளர்ச்சி செய்ய வேண்டும்? ஏனைய நாடுகளில் பெரும்பான்மையினரின் மொழிதானே அரசகர்ம மொழியாக இருக்கிறது.

" ஐ. தே. கட்சியினரின் பலம் என்பது இன்று பிரதானமாக சிறுபான்மையினரிலும் கத்தோலிக்கரிலுமே தங்கியுள்ளது. சிங்கள பௌத்தர்களிற்கு நீதியான உரிமையை வழங்குவது என்பது சிறுபான்மை இனங்களை கிலேசப்படுத்துவதாகாது " [ 23 ] என்று பண்டாரநாயக்க கூறலானார்.

பொதுவாக இக்கால கட்டத்தில் பௌத்த மதமும் அது சார்ந்த திருவனங்களும் பெரிதும் எழுச்சியுற்றுக் கொண்டு வந்தன. அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ் பௌத்தத்தை அரச மதமாக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. பண்டாரநாயக்க ஐ. தே. கட்சிக்குள் இருந்த காலத்திலேயே 1950இல் -இலங்கையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினருடையதான பௌத்தம் அரச மதமாக்கப்பட வேண்டும். அது தவிர்க்கப்படமுடியாதது என்று கூறினார். [ 24 ]

1951இல் பிரதமராக இருந்த டி. எஸ். சேனநாயக்கவை அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ் சந்தித்து பௌத்தத்தை அரசமதமாக்குமாறு வற்புறுத்தியது. டி. எஸ். சேனநாயக்க பிரித்தானிய சார்பாளராக இருந்தாலும், கிறிஸ்தவத்தை எதிர்க்காதவராகத் தன்னைக் காட்டிக்' கொள்ளவேண்டியிருந்தாலும், (இவரது மனைவியும், இவரது குடும்பமும் கிறிஸ்தவப் பின்னணியைக் கொண்டிருந்தன). டி. எஸ். கொங்கிரஸின் வேண்டுகோளிற்கு இணங்க முடியாதவரானார். அப்பொழுது தன்னைச் சந்தித்த தூதுக் குழுவிடம் பின்வருமாறு வினவினார்.

> " புத்தம், தம்மம், சங்கம் எனும் மும்மணிகளோடு, பௌத்தத்திற்கு நான்காவது மணியாக அரசாங்கம் என்பதையும் சேர்க்கப்போகிறீர்களா ? " ( 25 )

மார்க்சிஸ்டுக்களைத் தோற்கடிப்பதற்கு ஐ. தே. கா. வினர் மதத்தை ஒரு முக்கிய உபாயமாக எடுத்துக்கொண்டனர். அக்காலத்தில் இவர்கள் ஒட்டிய சுவரொட்டிகளில் மார்க்சிஸ்ட்டுகளிற்கு வாக்களிப்பது என்பது விகாரைகளையும், ஏனைய மதத்தலங்களையும், எரிப்பது போன்றது எனச் சித்தரிக்கப்பட்டது. மார்க்சிஸ்டுகளிற்கு வாக்களிப்பீர்களேயானால் அது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உங்கள் மதத்தை முற்றாக அழிப்பதற்குச் சமமாகும்'' [26] என்று ஐ. தே. கா. வின் அதிகார பூர்வ மாதாந்த ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்க்சிஸ்டுகளை எதிர்ப்பதற்கு மதவாதிகளிடம் குறிப்பாக பௌத்த பிக்குகளிடம் சரணடையும் நிலைப்பாட்டை எடுக்கலாயினர். 1951இல் டி. எஸ் சேனநாயக்கவைச் சந்தித்த பௌத்த கொங்கிரஸ் குழுவினர் பௌத்த சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் தாம் அதிருப்தியுற்றிருப்பதாகவும் பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டிய சட்டபூர்வமான பொறுப்பு அரசிற்குண்டென்றும் இவ்விடயத்தில் அரசு பெரும் தயக்கம் காட்டுவதாகவும் கூறினார். [ 27 ] இப் பௌத்த கொங்கிரஸ் குழுவினர் 1951, ஏப்பிரல், யூன் யூலை, டிசம்பர் மாதங்களில் அடிக்கடி பிரதமரைச் சந்தித்து தமது நிலைப்பாட்டை வற்புறுத்தலானார்கள். இவ்வாறான தொடர்ச்சியான நெருக்குதல்களால் டி. எஸ், சேனநாயக்க, பௌத்த கொங்கிரஸின் வேண்டுகோளின்படி ஒரு விசாரணைக் குழுவை அமைக்க உடன்பட்டார். கண்டியில் நடைபெற்ற ஐ. தே. க. வின் நாலாவது ஆண்டு மகாநாட்டில் இதற்குரிய அறிவிப்பை டி. எஸ். சேனநாயக்க பகிரங்கமாக அறிவித்தார். ஆனால் டி. எஸ். இனுடைய மரணத்தின் பின் இம் முயற்சி தடைப்பட்டது. சேர். ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்த போது இத்தகைய போக்கிற்கு உடன்படாதவராகக் காணப்பட்டார் இந்நிலையில் பௌத்த கொங்கிரஸ் தலைவரான மலல சேகர ஏதேச்சையான ஒரு விசாரணைக்குழுவை 1953இல் நியமித்தார். 1956இல் புத்த ஜெயந்தியை முன்னிட்டு பௌத்த நிறுவனங்கள் பெரிதும் உசாரடைந்தன. பொதுவாக சேர். ஜோன் கொத்தலாவல இற்கு எதிரான பல்வேறு கருத்துக்களும் தீவிர பௌத்தர்கள் தரப்பில் உருவாகலாயிற்று. சேர். ஜோன். கொத்தலாவலவை ஒரு அந்நியச் சாயல் கொண்டவராக இவர்கள் கருதினார்கள் சேர். ஐவர். ஜெனிங்ஸ் இனுடைய சொற்படி இவர் இயங்குகிறார் என்று வெளிப்படையாகவே மெத்தானந்தா இவரைக் கண்டித்தார். [ 28 ] இத்தகைய பின்னணியில் சேர். ஜோன். கொத்தலாவல பௌத்த ஜயந்தி சம்பந்தமாக ஒரு ஏற்பாட்டுக் குழுவை நியமிக்க உடன்பட்டார். '' லங்கா பௌத்த மண்டலய '' எனும் இக்குழு அமைப்பிற்கான கூட்டம் 1954 ஒக்டோபரில் கொழும்பில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 2500 பிக்குகள் கலந்து கொண்டனர். இவ்வாறு ஒரு ஏற்பாட்டுக் குழுவை அமைக்கப் பிரதமர் உடன்பட்டமைக்காக கலாநிதி என். எம். பெரேரா அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தார். சொந்த அரசியல்



உள்நோக்கம் கொண்டது. இது எனச் சாடினார் [ 29 ]. மேற்படி கூட்டத்தில் மகாதேசாதிபதியாக இருந்த ஒலிவர் குணதிலகவின் செய்தி வாசிக்கப்பட்டது அப்போது பிக்குகள் கூச்சலிட்டு

' எங்களிற்குக் கிறிஸ்தவ தேசாதிபதியிடம் இருந்து நற்செய்தி வேண்டாம் '' என கோஷமெழுப்பினர்' அச்செய்தி ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டதையும் அவர்கள் எதிர்த்தனர் [30] அக்கூட்டத்திற்கு பிரதமர் தலைமை தாங்குவதைப் பற்றியும் பிக்குகள் கேள்வி எழுப்பினர். காட்டு மிராண்டிச் சடங்குகளில் பங்குபற்றுபவரும் கோழிக்கால்களைத் தின்பவரும் ஆகிய பிரதமர் எப்படி எமக்குத் தலைமை தாங்கமுடியும்? என்று குரலெழுப்பினார் [31].

இப்படியாக பிரதமரையும் மகாதேசாதிபதியையும் எதிர்க்கும் வல்லமையை பௌத்த நிறுவனம் பெற்று வந்தது. ஏதேச்சையாக அமைக்கப்பட்ட பௌத்த விசாரணைக்குழு தனது அறிக்கையை வெளியிட்டது. பௌத்தத்திற்கு இழைக்கப்பட்ட துரோகம் என்ற தலைப்பில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது, இவ்வறிக்கையில், தமிழ்ப்படையெடுப்புக்களால் பௌத்தம் ஒரு காலத்தில் சீரழிக்கப்பட்டதையும் பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக தேவநம்பியதீசன், துட்ட கைமுனு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் பெரும்பாடுபட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. [ 32 ] 1505 உடன் தமிழருடனான யுத்தம் முடிவடைந்து பின்பு ஐரோப்பியருடைய ஆக்கிரமிப்பு ஏற்பட்டதாகவும் அது கூறுகிறது. இன்று சுதந்திர இலங்கையில் கிறிஸ்தவ நிறுவனங்களின ஆதிக்கத்திறகு இலங்கை அரசு உட்பட்டுள்ளதாகவும், '' அரசாங்கம் படிப்படியாக கிறிஸ்தவ அமைப்புக்களின் கைப்பொம்மையாக முற்றிலும் மாறி வருகிறது '' [33] எனவும் அரசியல் தீர்மானங்களை எடுப்பதிலும் இவ்வமைப்புக்கள் பெரும் பங்கு வகிப்பதாகவும் உதாரணமாக வருமானவரி சம்பந்தமான ஆணைகளை உருவாக்குவதில் இவ்வமைப்புக்கள் பெரும் பங்கெடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

'' இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரித்தானிய மன்னரிற்கு இலங்கையில் இருக்கும் அதிகாரங்களை குறைக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் இங்குள்ள கிறிஸ்தவ அமைப்புக்களின் அதிகாரங்களை அது குறைக்க முடியாதுள்ளது '' [34] என்றும் பௌத்த அடிப்படையிலான ஒரு புரட்சி அவசியம் என்றும் புத்ததர்ம அடிப்படையில் ஒரு நேர்மையான, உண்மையான சமூகத்தை அமைக்க வேண்டும் என் இவ்வறிக்கை வற்புறுத்தியுள்ளது. [35].



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவ்வறிக்கையை ஆட்சேபித்து சிங்கள கத்தோலிக்கர் மத்தியிலிருந்து ஒரு நூல்வெளியானது. [36] ஆனால் தமிழர் தரப்பிலிருந்து இது சம்பந்தமாக, இவ்வாறான நூல் எதுவும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு போக்கு வளர்ச்சியடைந்து வந்த கால கட்டத்தில் பிரதமராயிருந்த சேர். ஜோன். கொத்தலாவல யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின் போது தமிழிற்கும் சம அந்தஸ்து கொடுப்பேன் என இவர் தமிழர்களிடம் உறுதியளித்தார்.

"நான் உயிரோடிருக்கும் வரையில் தமிழ் மக்கள் மீது எவரையும் ஆதிக்கம் செலுத்த விடமாட்டேன். மற்றெல்லோரிற்கும் சொந்தமாகவிருப்பது போலவே இந்நாடு தமிழரிற்கும் சொந்தமானதாகும் பருத்தித்துறையில் இருந்து காலிவரை இன மத பேதமற்ற ஒரு நாடாகக் கருதுவதே எனது இலட்சியமாகும். தமிழும் சிங்களமும் சரி நிகர் சமானமுடையவை. அவை இரண்டையும் இந்நாட்டு ஆட்சி மொழிகளாக்குவதற்கு விரைவிற் சட்டத்தை நான் திருத்தம் செய்வேன்" [37] இவ்வறிவித்தலானது தென்னிலங்கை அரசியலிற் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியது. அதைத் தொடர்ந்து ஜோன். கொத்தலாவலவிடமும் தளம்பல் காணப்பட்டது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி தனிச்சிங்களக் கொள்கையைத்தனது கட்சித்தீர்மானமாக நிறைவேற்றியது. ஐ. தே. கா.வும் அவ்வாறானதொரு போக்கிற்குத் தயாராகியது. இதைத்தொடர்ந்து ஐ. தே. காவிலிருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி உறுப்பினர்களும் அதிருப்தியடையலாயினர். தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கெதிராகத் தனியாகக் கூடினர். இக்கூட்டத்தில் தொழில் மந்திரி டொக்டர். எம். எம். கலீல், தபால் வானொலி அமைச்சர் எஸ். நடேசன் மற்றும் மூன்று உதவி அமைச்சர்களான வீ. நல்லையா, எஸ்.எம். இப்ராகிம், வி. குமாரசுவாமி ஆகியோர் இக்கூட்டத்திற் கலந்து கொண்ட முக்கிய உறுப்பினர்களாவர். ஆனால் பிரதமர் இவ்வாறு கூட்டம் கூடியது தவறென்றும், அதற்கு விளக்கம் கோரியும் கடிதம் அனுப்பினார். இதற்கு டொக்டர் கலீல் தனிப்பட்டமுறையில் பதிலளிக்கையில்

"மரியாதையை முன்னிட்டு தாம் இக்கூட்டத்திற்குச் சென்றதாயும் அதனால் தாம் ஒரு பொறியில் அகப்பட்டுக் கொண்டதாகத் தமக்குத் தோன்றுகின்றது என்றும் வகுப்புவாதப்பேய் இவ்வித ரூபத்தில் தலைதூக்கும் எனத் தான் எதிர்பார்க்கவில்லை" என்றும்கலீல் தெரிவித்தார் [38].



19 - 01 - 1956இல் நடைபெற்ற ஐ. தே. க. வின் செயற்குழுக் கூட்டத்தில் நடேசன், குமாரசுவாமி ஆகியோர் கொண்டு வந்த தமிழும் உத்தியோக மொழியாக வேண்டும் என்ற பிரேரணை நிராகரிக்கப்பட்டது. களனியில் நடைபெறவிருந்த ஐ. தே. க மகாநாட்டில் சிங்களம் மட்டும் அரசமொழியாயிருக்க வேண்டும் என்ற முடிவை கட்சி எடுக்க வேண்டும் என்று டி. சி. டபிள்யூ கன்னங்கர கொண்டு வந்த தீர்மானத்தை ஐ. தே. க. செயற்குழு அங்கீகரித்தது இதைத் தொடர்ந்து செனட்டர் எஸ் ஆர். கனகநாயகம் ஐ. தே. க. விலிருந்து விலகுவதான தனது ராஜினாமாக் கடிதத்தை எழுதுகையில்:

"ஆழ்ந்த மனவருத்தத்துடன் நான் ஐ. தே. க. வில் இருந்து ராஜினாமாச் செய்கிறேன். கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து அநேக வருடங்களாக நான் அங்கத்தவனாயிருந்த காரியக் கமிட்டி செய்துள்ள மோசமான தீர்மானமே இம்முடிவுக்குக் காரணமாகும். நான் தலைமைப் பதவி வகித்த தேசியத் தமிழர் சங்கத்தை 1946 இல் எல்லா சமூகங்களிற்கும் நீதியும் சுதந்திரமும் வழங்குவதற்கான ஒரு கட்சியைத் தோற்றுவிக்க ஒன்று சேரும்படி காலஞ்சென்ற டி எஸ். சேனநாயக்க அழைத்தார். எல்லா சமூகங்களிற்கும் நீதியும் சமத்துவமும் வழங்குவதற்கான அமைப்பென்று தொடங்கப்பட்ட யூ. என். பி, அதற்காகப் போராடாமல் சிங்களப் பெரும் தேசிய வாதத்திற்கு உட்பட்டது" [39] மேற்படி செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற் அதிருப்தியுற்ற சகல தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேறப்போவதாக கூட்டத்தில் அறிவித்தனர். அக் கூட்டத்தில் ஜே. ஆர். பின்வருமாறு கூறினார்.

"சிங்களம் மாத்திரம் பிரேரணையை இப்பொழுது கமிட்டி ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுமென்றால் தேர்தலிற்குப் பின்னர் பாஷைப்பிரச்சினை பற்றி ஆலோசிக்கலாம் என்றும்" கூறினார். [40] ஆயினும் இவரது சாக்குப்போக்கை தமிழ் உறுப்பினர்கள் ஏற்கத்தயாராய் இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து 20ஆம் திகதி மந்திரி நடேசன் உட்பட ஏழு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்தனர். "சுயமரியாதையுள்ள தமிழன் வகுப்பு வாதக் கட்சியாகிவிட்ட ஐ. தே. கட்சியில் தொடர்ந்து இருக்க இடமே இல்லை" [41] என்று நடேசன் குறிப்பிட்டார். இதில் ராஜினாமாச் செய்த



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏனையோர்: எஸ். எம். ராஜமாணிக்கம், எம். ஈ. எச். முகமது அலி, வி குமாரசுவாமி, ஏ. எம். மெர்சா, ஏ. எல். தம்பிஐயா, ஆர். பி. கதிர்காமர், வி. நல்லையா போன்றோர் ஆவர்.

மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் முகமது அலி இது பற்றிக் குறிப்பிடுகையில்:

" சிறுபான்மையினரிற்கு ஐ. தே. க. நியாயம் வழங்கும் என்றும் அதன் மூலம் உண்மையான இலங்கையர் சமூகம் உருவாகும் என்றும் எதிர் பார்த்து நான் ஐ. தே. க. வில் சேர்ந்தேன். ஆனால் ஐ. தே. க. கொள்கைக்கு விரோதமாக பெரும்பான்மை சமூகத்தின் நலன்களிற்கு மட்டும் உகந்த முறையில் நடப்பதன் மூலம் ஒரு வகுப்பு வாத ஸ்தாபன மாகிவிட்டது. " என்று கூறினார். [ 42 ]

ஐ. தே. க. வை 1946இல் உருவாக்குவதற்கான தீர்மானத்தை பிரேரித்தவர் எஸ். நடேசன் ஆவார். இவர் ராஜினாமாச் செய்து 20 - 01 - 56இல் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில்;

" ஜனநாயகம் என்பதன் பொருள் பெரும்பான்மையினத்தின் கொடுங்கோன்மை அல்ல; சிறுபான்மையினரிற்கு நீதியும் சமத்துவமும் வழங்குவதுதான் ஜனநாயகம். ஐ. தே. க. வில் முன்பு நிலவிய இக்கோட்பாடு இன்று அழிந்து விட்டது. எனவே தான் இக்கட்சியிலிருந்து நாம் வெளியேறுகிறோம், " [ 43 ] என்று கூறினார்.

குமாரசுவாமியின் ராஜினாமாக் கடிதத்தை வாசித்த பிரதமர்; ஜோன். கொத்தலாவல:

" நான் மனம் வருந்துகிறேன் ஆனால் என்ன செய்யக்கிடக்கிறது ? " என்று குமாரசுவாமியைப் பார்த்துக் கூறிவிட்டு " அவருடைய ஸ்தானம் ஈடுசெய்ய முடியாது ' என்று வாய்விட்டு உரைத்தார். [ 44 ]

ஆனால் இதற்கிடையில் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக வேண்டும் என்ற கொள்கையை அகில இலங்கை முஸ்லிம் லீக்கும், அகில இலங்கை சோனகர் சங்கமும் அறிவித்தது. மேற்படி இரு ஸ்தாபனங்களின் பொதுச் சபைகளில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக மாஜி மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் பேசுகையில்:-



" கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லிம்கள் அனைவரும் சிங்களத்திற்கும் தமிழிற்கும் சம அந்தஸ்து வேண்டும் என விரும்புவதாகக் கூறப்படுவது சரியல்ல என்றும் பெரும்பான்மை முஸ்லீம்கள் சிங்களத்தையே அரச கரும மொழியாக்க வேண்டுமென விரும்புவதாயும் " கூறினார். [ 45 ]

சோனகர் சங்கத் தலைவர் இதுபற்றிப் பேசுகையில்:-

" பாஷைப் பிரச்சினைபற்றி நாம் விஸ்தாரமான முறையில் ஆராய்ந்து முஸ்லீம்லீக்கின் ஒரு கூட்டு முடிவுக்கு வந்துள்ளோம். மொத்தமுள்ள 5 லட்சம் சோனகர்களில் தமிழ்ப்பகுதிகளில் $1\frac{1}{2}$ லட்சம் பேரே இருக்கின்றனர். மீதிச் சோனகர்கள் சிங்களப்பகுதிகளில் ஆங்காங்கே பின்னிப் பிணைந்து கிடக்கின்றனர். சிங்களத்தை அரச கரும மொழியாகச் செய்வதுடன் தமிழிற்கும் ஆங்கிலத்திற்கும் உரிய அந்தஸ்தை அளிக்க வேண்டும் என அப்பெரும்பான்மைச் சோனகர் முடிவு செய்துள்ளமை இதனால் சோனகரின் மதமும் கலாச்சாரமும் பாதிக்கப்படமாட்டாது " [ 46 ]

இவ்வாறான போக்குகள் ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற மசோதாவை லங்கா சமசமாஜக்கட்சி 1955, ஒக்டோபரில் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தது. அம்மசோதாவைச் சமர்ப்பித்து என். எம். பெரேரா பேசுகையில்:

" எங்களிற்கு ஒரு ஐக்கியம்பட்ட உறுதியான இணைப்பைக் கொண்ட இலங்கை தேவையா இல்லையா ? " [ 47 ]

" தனிச் சிங்களச் சட்டம் என்பது இலங்கையர் தேசத்தை உருவாக்காது மாறாக சிங்களவர் தேசத்தையே உருவாக்கும் " [ 48 ]

" நாங்கள் தமிழரை நிர்ப்பந்திக்காவிட்டால் தனிநாடு கோர வேண்டிய தேவை அவர்களிற்கு எழாது தனிச்சிங்களச் சட்டத்தைக் கோருவோர் இதனை உணர்வதாக இல்லை. [ 49 ] என்று கூறியதுடன் மேலும் ஒருபடி சென்று தமிழர் இந்தியாவை நாடவேண்டி வரும் என்றும் அல்லது ஏகாதிபத்தியம் இப்பிரச்சினையை தனது நலனிற்காகப் பயன்படுத்தக் கூடும். என்றும் எச்சரித்தார் என். எம். பெரேராவின் இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய பண்டாரநாயக்க தமிழர்கள் இத்தீவில் வாழும் சிறு தொகை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யினர் மட்டுமல்ல என்றும், அருகே தென்னிந்தியாவில் நான்கு அல்லது ஐந்து கோடித் தமிழர்கள் வாழ்வதாகவும் அவர்களு டைய தமிழ் ஆசிரியர்கள், இலக்கியங்கள், திரைப்படங்கள் பத்திரிகைகள் பருவ இதழ்கள் போன்றவற்றால் இங்கு தாக்கம் ஏற்படுவதாகவும் கூறியதுடன் மேலும் இலங்கையிலுள்ள இந் தியத் தோட்டத் தொழிலாளர் சம்பந்தமான அச்சத்தையும் எழுப்பியதுடன் இவற்றால் சிங்கள மொழி சுவிரக்கமின்றி பின் தள்ளப்பட்டுவிடும் என்றும் கூறினார் [ 50 ]. 1944 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க கூறிய கருத்துக்களை நோக்கினால் இங்குள்ள முரண்பாட்டைப் புரிந்து கொள்ளலாம்.

"சில நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உத்தி யோக மொழிகளாக உள்ள உண்மையை நாங்கள் கண்டு கொள்ளலாம்."

"தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தைக் கொடுக்க மறுப்பது சிங்களவரைப் பொறுத்தவரை ஒரு நாகரீகமான செயல் என்று நான் கருதவில்லை."

"வேறு சில நாடுகளில் இரண்டுக்கும் மேற்பட்ட மொழி களே உத்தியோக மொழிகளாக இருந்து அவை அங்கு திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."

"தமிழ் மொழியையும் உத்தியோக மொழியாக்குவதால் எந்த வகையிலும் எத்தகைய தீங்கும் நேர்ந்து விடப் போவதில்லை என்று நான் நினைக்கிறேன்..... இவ்விரு மொழிகளையும் உத்தியோக மொழிகளாக்குவது பற்றி யோசிப்பதில் தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த எதிர்ப் பும் இல்லை. அத்துடன் இவ்வாறு செய்வதால் குறிப்பாக எத்தகைய தீங்கோ ஆபத்தோ மெய்யான கஸ்டங்களோ ஏற்படும் என்றும் நான் நினைக்கவில்லை" [ 51 ]

இவ்வாறு 1944இல் கூறிய பண்டாரநாயக்க 1955இல் நேரெதிர் மாறாக தன் கருத்தைத் தானே மறுத்துக் கூறியுள்ளார் இதனை வெறுமனே ஒரு தனி மனிதனின் பிறழ்வாக மட்டும் கொள் ளாமல் வரலாற்று மாற்றப் போக்கின் விளைவாகவும், இவரிட மிருந்த சந்தர்ப்பவாத பதவி மோகத்தின் வெளிப்பாடாகவும் இதனைக் கொள்ளல் பொருத்தமானதாகும். களனி மகா நாட் டில் ஐ தே. கா, வும் தனிச்சிங்களச் சட்டத்தைக் கட்சிக்கொள்



கையாகப் பிரகடனப்படுத்தியபின் பண்டாரநாயக்காவைப் போலவே சேர். ஜோன். கொத்தலாவலயும் குத்துக்கரணமடித் தார். "நான் உயிரோடிருக்கும் வரையில் தமிழ் மக்கள் மீது எவரையும் ஆதிக்கம் செலுத்த விடமாட்டேன்" என்றும் தமிழையும் ஆட்சி மொழியாக்குவதற்கான சட்டதிருத்தத்தைக் கொண்டு வருவேன் என்றும் யாழ்ப்பாணத்தில் வாக்குறுதி யளித்த இவர் 1956 பெப்ரவரியில் கருத்து வெளியிடும் போது

"இரு மொழிகளிற்கு சம அந்தஸ்து கொடுப்பதென்பது சிங்கள மொழியினதும், இனத்தினதும் அழிவாகவே முடி யும்" என்றும், இரு மொழிகளிற்கும் சம அந்தஸ்த்துக் கொடுப்பது என்பது சிங்கள மாணவர் தமிழ் படிப்பதில் தான் முடியும் என்றும் அவர் வாதிட்டார். மேலும் சிங் களத்தில் போதியளவு உயர் கல்விக்கான நூல்கள் இல் லாத நிலையில், சிங்கள மாணவர்கள் தமிழிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்றிருப்பதானது சிங்களவர்களை அழி விற்கிட்டுச்செல்லும் என்றும் அவர் கூறினார் [ 52 ]

மேலும் இவ்வாறு சம அந்தஸ்த்து வழங்கப்படுமானால் இலங்கை தென்னிந்தியாவின் ஒரு பகுதியாக மாறி விடும் என்று ஐ. தே. க. கருத்து வெளியிட்டிருந்தது [ 53 ]

இவ்வாறு தனிச் சிங்களச் சட்டத்திற்கான போக்கு வலு வடைவதைக் கண்டு தமிழ்த் தலைவர்கள் சீற்றமடைந்தனர். இதற்கு மாற்றீடாக தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த னர். குறிப்பாக உதவியமைச்சரும், சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமான வி: குமாரசுவாமி 19 - 01 - 1956இல் நடந்த ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார். எஸ். நடேசன், வி. சுந்தரலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம் என்போர் கூட்டாக விட்ட அறிக்கையில் "தமிழிற்குச் சம அந்தஸ்த்து கிடைக்காவிட்டால் தமிழ் நாட் டுப் பிரிவினைப் போர் அதன்பின் ஆரம்பமாகும்" [ 54 ] என்றும் அறிக்கைவிட்டனர். இவர்கள் கூட்டாக இணைந்து அகில இலங்கைத் தமிழர் மகாசபை என்ற ஓர் அமைப்பை உரு வாக்கினர். இச்சபையின் அமைப்பாளராக ஆ. தியாகராசா பொறுப்பேற்றார்"

புதிய பாராளுமன்றம் கூடி ஆறுமாத காலத்திற்குள் தமி ழிற்கு சம அந்தஸ்தும் இந்தியரிற்குப் பிரஜா உரிமையும் கிடைக் காவிடில் தாம் அனைவரும் பாராளுமன்றத்திலிருந்து ராஜினா மாச் செய்து விட்டு தமிழ் நாட்டு பிரிவினைப் போராட்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டம் ஆரம்பிக்கப் போவதாக தமிழ்த்தொகுதிகளில் போட்டியிடும் ஒன்பது அபேட்சகர்கள் அகில இலங்கைத் தமிழர் மகாசபைக்கு உறுதி கூறியுள்ளனர். அவர்களின் பெயரும் தொகுதிகளும் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஜி. ஜி. | பொன்னம்பலம் | ( யாழ்ப்பாணம் ) |
| வி. | சுந்தரலிங்கம் | ( வவுனியா ) |
| எஸ். | நடேசன் | ( காங்கேசன்துறை ) |
| எம். | சிவசிதம்பரம் | ( பருத்தித்துறை ) |
| ஏ. எஸ். | ராஜசிங்கம் | ( திருமலை ) |
| வி. | அருளம்பலம் | ( கோப்பாய் ) |
| ஏ. எல். | தம்பிஐயா | ( ஊர்காவற்றுறை ) |
| வி. | குமாரசுவாமி | ( சாவகச்சேரி ) |
| வி. | சிற்றம்பலம் | ( மன்னார் ) |

மேற்படி ஒன்பது அபேட்சகர்களிற்கும் மனப்பூர்வமான ஆதரவை அளிக்கும்படி தமிழ் மக்கள் அனைவரையும் அகில இலங்கைத் தமிழர் மகாசபை வேண்டியுள்ளது. இவ்வமைப்பின் கூட்டுத்தலைவர்களாக வி. சுந்தரலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். நடேசன் என்போர் அறிவிக்கப்பட்டனர். இதன் அமைப்பாளரான ஆ. தியாகராஜா, தமிழரின் வருங்காலம் - தமிழ்ராஜ்ஜியம் ஒன்றே வழி என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

அவ்வறிக்கையில் 24 லட்சம் தமிழ் மக்களிற்கு ஒரு அகண்ட தமிழ் ராஜ்ஜியமே சிறந்தது. வரும் தேர்தல் பயனற்றதாகவே முடியும். சம அந்தஸ்தும் மற்றும் உரிமைகளும் சிங்கள அரசாங்கம் தரமறுத்தால் தமிழ் ராஜ்ஜியம் அமைக்கப்போராடுவோம் என்ற குறிக்கோள் வேண்டும்" [ 55 ].

24 லட்சம் தமிழ்பேசும் மக்களிற்கு ஒரு தனி ராஜ்ஜியம் வேண்டும் என்ற தலைப்பின் மேற்படி அறிக்கையை ஆ. தியாகராசா ஒரு சிறு நூலாக வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது, இந்நூலில் மலையகமும் இத்தமிழ் ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டிருந்தது.

சேர். ஜோன். கொத்தலாவல உரிய காலத்திற்கு முன்பே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடாத்தினார். இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, புரட்சிகர



லங்கா சமசமாஜக் கட்சி, பாஷா பெரமுனை சுயேட்சை உறுப்பினர் பலர் ஒன்று சேர்ந்து பண்டாரநாயக்க தலைமையில் ' மகாஜன எக்சத் பெரமுன ' (எம் ஈ. பி.) என்ற அ. முன்னணியை உருவாக்கினர். மகாசங்கத்தின் ஆதரவு இம்முன்னணிக்குக் கிடைத்தது. இவ்விடயத்தில் புத்தர கித்தர தேரோ பண்டாரநாயக்கவின் வலக்கரமாகச் செயற்பட்டார். சிங்கள மொழி மூலமான ஆசிரியர்கள், சுதேச வைத்தியர்கள், பிக்குகள், விவசாயிகள் போன்றோரை எம். ஈ. பி. பெருமளவு தன்னுடன் அணிதிரட்டியது. இத்தேர்தலில் மொழிப்பிரச்சினையும், கிறிஸ்த்தவ எதிர்ப்பும் முன்னணியில் நின்றன. ஆயினும் மொழியே பிரதான இடத்தை வகித்தது. இவற்றைவிடப் பொருளாதாரத் திட்டங்களையும் பண்டாரநாயக்க முன்வைத்தார். அதில் ஒன்று அந்நியக் கொம்பனிகள், அந்நிய வங்கிகள், பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் திட்டமாகும். 56 தேர்தலில் ஆதிக்கம் செலுத்திய கொள்கை மொழிக் கோரிக்கையாகும் என்று ஐ. டி. எஸ். வீர வர்த்தன குறிப்பிடுகின்றார், [56]. பண்டாரநாயக்கவிற்கு முக்கிய பலமாக இத்தேர்தலில் பிக்குகள் செயற்பட்டதைப்பற்றி காசி வித்தாச்சி குறிப்பிடுகிறார் 12,0000க்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் விகாரைகளை விட்டு வெளிவந்து பண்டாரநாயக்கவிற்கு ஆதரவாகச் செயற்பட்டனர் என்றும், கொத்தலாவல இற்கு எதிராகபெரும் பிரச்சாரங்களைச் செய்தனரென்றும், கொத்தலாவல கத்தோலிக்கச் செல்வாக்கிற்குட்பட்டவர் என்று பிக்குகள் பிரச்சாரம் செய்ததாகவும் இப்பல்லாயிரக்கணக்கான பிக்குகளின் வார்த்தைகள் 50 லட்சதித்ற்கு மேற்பட்ட சிங்களவரிற்குப் புனித வாக்குகளாகவே இருந்தனவென்றும் இது அரசாங்கத்தை வீழ்த்தியதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் [ 57 ]

இத் தேர்தலில் எம். ஈ. பி. வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது. இத்தேர்தல் வெற்றிக்குப் பல காரணங்கள் இருந்தன. மொழி, மதம், பொருளாகாரணம் என இக்காரணிகளை விரிக்கலாகம். இத்தேர்தல் பிழையான சூழலில் ஜோன். கொத்தலாவலயால் நடாத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது புத்த ஜெயந்தி நடைபெற இருந்த சூழலில் அதற்கு முன்பு பாராளுமன்றத்தைக் கலைத்து இத்தேர்தல் நடாத்தப்பட்டது. உண்மையில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 57-ம் ஆண்டு வரை இருந்தது. புத்த ஜயந்திக்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைத்து, மதவாதத்தைக் கிளற பண்டாரநாயக்கவிற்கு வாய்ப்பைக் கொடுத்தது. மேலும் சுதந்திரஇலங்கை பொருளாதார ரீதியாக எத்தகைய மாற்றத்தையும் கொண்டதாக



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருக்கவில்லை. பிரித்தானியர் ஆதிக்கத்தில் இருந்தது போன்ற அதே பொருளாதாரக் கொள்கைகளே ஐ. தே. கா வின் காலத்திலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தன. நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருந்தது. இதன்பொருட்டு ஒரு தேசியப் பொருளாதாரம் வேண்டும் என்றொரு கொள்கையை பண்டாரநாயக்க முன்வைப்பது சாத்தியப்பட்டது. மொழி, மதம், பொருளாதாரம் ஆகிய அனைத்திலும் தேசியத் தன்மை என்றவொரு பொதுக்கருத்து முன்வைக்கப்பட்டது. பொருளாதார ரீதியாக பண்டாரநாயக்கவை ஒரு முற்போக்காளனாகவே லங்கா சமசமஜிஸ்டுக்களும், கொமியூனிஸ்டுக்களும் பார்த்தனர். ஒரு புறம் பண்டாரநாயக்கவை ஒரு வகுப்புவாதியாக இவர்கள் கருதிய போதிலும் மறுவழமாக பொருளாதாரரீதியில் அவரை முற்போக்காளனாகக் கருதினர். ஆனபடியால் பண்டாரநாயக்கவுடன் சில தொகுதிகளில் போட்டி தவிர்ப்பு உடன்படிக்கைகளையும் செய்து கொண்டனர். எப்படியோ இந்த இடதுசாரிகளின் ஒருபகுதி ஆதரவு பண்டாரநாயக்கவிற்கு கிடைக்கவே செய்தது. மொழி விடயத்தில் இவர்கள் முற்போக்கான பாத்திரத்தை வகித்து சிங்களக் காடையரால் தாக்கப்பட்ட போதிலும் பொருளாதாரரீதியில் அவரை ஒரு முற்போக்காளனாகக் கருதிய ஒரு பிழையான மதிப்பீடு பண்டாரநாயக்கவிற்கு ஒரு தேசியத்தலைவர் என்ற மாயத்தோற்றத்தைக் கொடுத்தது.

பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கே இடதுசாரிகள் அதிக முக்கியத்துவம் கொடுத்தமையால் பண்டாரநாயக்க பொருளாதாரரீதியிற் முற்போக்காளன் என்ற கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு ஒரு மொத்தக் கணிப்பீட்டைச் செய்யத்தவறி விட்டார்கள். பண்டாரநாயக்க பொருளாதார தளத்திற்காட்டிய முற்போக்கைவிட அவர் மொழிவாதம், மதவாதம், இனவாதம் என்பவற்றிற்காட்டிய பிற்போக்கு மிக ஆபத்தானது. அதன்படி பார்க்கையில் அவர் தேசத்தின் மிகப்பிற்போக்கான தலைவர் தான் மொத்தத்தில் பிற்கால நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கூட பண்டாரநாயக்காவின் ஆட்சி இத்தீவிற்கு நல்ல விளைவுகளைத்தந்தது என்றில்லை. ஆனால் ஆங்கில ஆதிக்கத்தின் மீது சீற்றத்தோடும் பொருளாதாரக் கஸ்டங்களிற்கு உள்ளாக்கியும் இருந்த சிங்கள மக்களிற்கு பண்டாரநாயக்கவின் கொள்கை இரட்சிப்புத்தன்மை கொண்டதாகத் தோன்றியது. மேலும் மதம், மொழி வாதங்கள் தலை தூக்கி வந்த சூழலில் பண்டாரநாயக்க அதற்குத்தலைமை தாங்குவோராக மாறினார், தான் முன்பு சொல்லிவந்த இலட்சியங்களிற்கு



மாறாகப் பதவியைக் கைப்பற்றுவதற்கு ஒரு இலகுவான மார்க்கமென்று கருதி அவர் இனவாத சக்திகளிற்கு அடிபணிந்து இனவாதத்தை முன்னெடுக்கலானார். ஒரு பொறுப்புள்ள தலைவனாக நின்று தேசத்தை வழிநடத்துவதற்குப் பதிலாக, நல்ல பாதையைக் காட்டுவதற்குப் பதிலாக மதவாதிகளால் வழிநடத்தப்பட்டார். இத்தகைய பின்னணியில் பொருளாதாரப் பிரச்சினையைப் பயன்படுத்தியும், மக்களிடமிருந்த இன, மொழி, மத உணர்வுகளிற்கு மேலும் தூபமிட்டும் தேர்தலில் வெற்றி பெற்றார். இவ்வாறு வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைத்ததும் 56 யூன் மாதம் தனிச்சிங்கள மசோதாவைக் கொண்டு வந்தார். இதை எதிர்த்துப்பேசிய கொல்வின் ஆர். டி. சில்வா

"ஒரு நாட்டினையா அல்லது இரு நாடுகளையா நாம், இந்த சபை, எமது மக்கள் விரும்புகின்றனர்? ஒரு தனி அரசையா அல்லது இரு அரசுகளையா நாம் விரும்புகிறோம்? ஓர் இலங்கையையா அல்லது இரண்டு இலங்கைகளையா நாம் விரும்புகின்றோம்? எல்லாவற்றிற்கும் மேலாக சுதந்திரமான இலங்கையை நாம் விரும்புகின்றோமா? அப்படியாயின், அது ஐக்கியப்பட்ட ஓர் இலங்கையாகத்தான் இருக்கவேண்டும். அல்லது இரத்தம் சொட்டும் இரு கூறான இலங்கைகளையா நாம் விரும்புகின்றோம்? எமது விருப்பம் இரு இலங்கைகளை உருவாக்குவதாய் இருப்பின் இந்து சமுத்திரத்தில் உலாவும் ஏகாதிபத்தியப் பிசாசுகள் இந்த இரு கூறுகளையும் விழுங்கி ஏப்பம் விடும். மொழிப்பிரச்சினை என்ற வடிவத்தில் நாம் அலசி ஆராயவேண்டிய விடயம் இதுதான்" பண்டாரநாயக்கவைச் சுட்டிக் கொல்வின் தொடர்ந்து பேசுகையில்:

"தமிழர்களை நீ துன்புறுத்துவாயானால், அவர்களை செம்மையாக நடத்தத் தவறினால் அவர்களை அடக்கி ஒடுக்கித் தொல்லை மேல் தொல்லை கொடுத்தால், தனித்துவமான சொந்த மொழியையும், பாரம்பரியத்தையும் கொண்ட அந்த மக்களிலிருந்து ஒரு புதிய தேசம் எழுவதற்கு நீ காரணகர்த்தாவாயிருப்பாய். இப்பொழுது அவர்கள் கோருவதைவிட மேலும் அதிக கோரிக்கைகளிற்கு விட்டுக்கொடுக்க வேண்டி வரும், மிகவும் பிந்தி. அற்பத்தனமாக நடந்து கொள்வதை விட ஒரு விவேகமான அரசியற் தலைவன் முன் கூட்டியே தாராளத் தன்மையோடு நடந்துகொள்வான்" [58]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இத்தனிச் சிங்களச் சட்டம் பற்றி வரலாற்றாய்வாளர் மென்டிஸ் கருத்துத் தெரிவிக்கையில்: இது புத்திசாலித்தனமற்றது. பிழையான கணிப்பீட்டைக் கொண்டது, தமிழ் மக்களை ஆத்திரமடையச் செய்வது, மொத்தத்தில் தீய விளைவுகளை ஏற்படுத்தியது என்று கூறியுள்ளார் [ 59 ]

எவ்வாறாயினும் தனிச் சிங்கள சட்டம் நிறைவேறியது. இம் மசோதா மீதான வாக்கெடுப்பில் 66 பேர் சார்பாகவும் 29பேர் எதிராகவும் வாக்களித்தனர். இம் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதையொட்டி இரு நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழிற்கு நியாயமான உபயோக உரிமையைக் கூடக் கொடுக்கக் கூடாது என்று கோரி பொருளியற்துறை பேராசிரியர் எஸ். ஆர். ஜெயசூரிய பாராளுமன்ற வளாகத்துள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இவர் பத்திரிகைகளிற்களித்த பேட்டியில்:

" பிரதமர் இலங்கையை தென்னிந்தியாவின் ஒரு பகுதியாக்கப் போகிறார் " [ 60 ] என்று குற்றஞ்சாட்டினார்.

இது உண்மையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியாலும் ஏனைய இனவாதிகளாலும் ( பண்டாரநாயக்க உட்பட ) தனிச் சிங்களச் சட்டத்தை முழுமையாக நியாயப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தந்திர பூர்வமான அமுக்க நடவடிக்கையே எனக் கருதப்படுகின்றது. பிரதமர் பண்டாரநாயக்க இவரைச் சந்தித்து உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார். இவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் மறுவழமாக தமிழரசுக்கட்சியினர் ( சமஷ்டிக்கட்சி ) காலிமுகத் திடலில் அரசிற்கு முன்கூட்டியே அறிவித்து விட்டு சத்தியாக்கிரகம் இருந்த போதும், பொலிஸார் சாட்சியாக இனவாதிகளால் தாக்கப்பட்டு குழப்பப்பட்டது. இதில் சத்தியாக்கிரகிகள் காயப்பட்டனர். கொழும்பு முழுவதும் பதட்டம் நிலவியது. இப்பதட்டத்திற்குக் காரணம் பண்டாரநாயக்கவின் செயலே என பீற்றர் கெனமன் குற்றம் சாட்டினார். அதாவது தமிழரசுக் கட்சியினர் தாம் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாகப் பிரதமரிற்கு அறிவித்ததைத் தொடர்ந்து அது தொடர்பாகப் பிரதமர் வானொலியில் உரையாற்றினார். இவ்வுரை ஒவ்வொரு அரைமணித்தியால இடைவெளியில் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டது. இவ்வுரையின் பிரகாரம் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஒரு பெரிய படை பாராளுமன்றத்தைக் கைப்பற்ற வருவதாகச் சிங்களமக்கள் கருதினர், இதனால்



ஆங்காங்கே தமிழர்கள் தாக்கப்பட்டனர். பாராளுமன்றத்தை நோக்கிப் பெருந்திரளாக சிங்கள வெகுஜனங்கள் குவிந்தனர். இவ்வாறான தனிச் சிங்களச்சட்டம் சம்பந்தமான ஒரு பொதுவான பதட்டநிலை உருவாக அதை அரசு தனக்குச்சாதகமாகக் கையாண்டு இறுதியில் சிங்கள இனவாதம் வெற்றியீட்டியது.

இதற்கெதிராகத் தமிழரசுக் கட்சி திருமலையாத்திரை சென்றதுடன் இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு வருடகால அவகாசத்தை அரசுக்குக் கொடுத்தது. அது தவறின் தாம் நேரடியுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்தது. இவ்வொருவருடகால அவகாசம் முடிவுறும் காலகட்டத்தில் பண்டாரநாயக்க எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார். இவ் ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே ஆர். தலைமையில் கண்டி யாத்திரை இடம்பெற்றது. இவ்வொப்பந்தத்திற்கு எதிராக ஐ. தே. க. முதல் அடி ( First Step ) என்ற நூலை வெளியிட்டது. அதாவது தமிழன் தனிநாடு அமைப்பதற்கான முதல்அடி இந்த ஒப்பந்தம் எனவர்ணித்தது. இறுதியாக பிக்குகளின் வற்புறுத்தல்களால் பண்டாரநாயக்க 58ஆம் ஆண்டு ஏப்பிரல் 9இல் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்தை ரத்து செய்தார்.

பண்டாரநாயக்க பதவி ஏற்று ஏறக்குறைய இரு வருடங்கள் கழிந்தன. ஆயினும் தென்னிலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள் எவையும் தீர்ந்தபாடாயில்லை. ஒப்பந்தத்தைக் கிழித்ததும் இனவாதத்தின் முக்கிய அலை தணிந்து பொருளாதாரப் பிரச்சினை மேலெழும்பலாயிற்று. தொடர்ந்து பல வேலைநிறுத்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெறத் தொடங்கின. கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான பொதுச் சேவை தொழிலாளர். தொழிற்சங்க சம்மேளனம் (Public Service Worker's Trade Union Federation ) வேலைநிறுத்தத்தில் குதித்தது. ( ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட அதே மாதம் இவ்வேலை நிறுத்தம் ஆரம்பமானது ) குண்டர்களைப் பயன்படுத்தி இவ்வேலை நிறுத்தத்தை பண்டாரநாயக்க குழப்பினார். இதைத் தொடர்ந்து இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வேலைநிறுத்தத்தில் குதித்தது. இதுவும் கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தொழிற்சங்கமாகும் சமசமாஜக்கட்சி தலைமையிலான தொழிற்சங்கங்களும் இவ்வேலை நிறுத்தங்களிற்கு ஆதரவளிக்கலாயின. இவ் வேலை நிறுத்தங்கள் அரசிற்கு புதிய நெருக்கடியைக் கொடுத்தன. அரசாங்கம் இதற்கெதிராக தந்திரமான நடவடிக்கைகளின் மூலம் வேலைநிறுத்தத்தை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கலவரத்துக்குரியதாக்கி பின்பு ராணுவத்தை அனுப்பி அதை அடக்கியது. இவ்வேலை நிறுத்தங்கள் பற்றி உணவு அமைச்சராயிருந்த ஃபிலிப் குணவர்த்தன வெளியிட்ட கருத்து மிகவும் கவனிக்கத் தக்கது. ''சிங்கள அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான தமிழரின் சதி'' என இதனை வர்ணித்தார். இது போலவே 1947இல் வேலை நிறுத்தம் ஒன்று நடந்த போது நிதியமைச்சராயிருந்த ஜே. ஆர். வேலைநிறுத்தத்தை தமிழரின் சதி என்று வர்ணித்தார். 1958 ஏப்பிரலில் நடந்த வேலை நிறுத்தத்தை சி. பி. லங்கரட்ண (தொழிலமைச்சர்) அடக்குவதற்கு சிங்கள இனவாதத்தை தூண்டினார். இவ்வாறாக சாதாரண வேலை நிறுத்தங்களைக் கூட இனவாதத்தின் பக்கம் திசைதிருப்பி அவற்றைக் கையாள்வது தான் ஒரு தொடர்ச்சியான தந்திரமாக இருந்து வந்துள்ளது என்பதை தாசி விற்றாச்சியின் மேற்படி விபரங்கள் நிருபிக்கின்றன [61].

எனவே பண்டாரநாயக்க அரசாங்கத்திற்கு தென்னிலங்கையின் அரசியற் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத சூழலில் அவற்றைத் திசை திருப்பவும் சமாளிக்கவும் இனவாதம் அவசியப்பட்டது. அவர்களது அரசியல் நோய்களிற்கு மருந்தாகத் தமிழர்களையே அவர்கள் எப்பொழுதும் பாவிப்பதுண்டு. இத்தகைய பின்னணியிற்தான் வெறும் வதந்திகளை மையமாகவைத்துக்கொண்டு தமிழரிற்கெதிரான ஒரு பெரும் இன வன் செயலை பண்டாரநாயக்க அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டது. பொதுவாகக் கடந்த நான்கைந்து ஆண்டுகளாகப் பெரிதும் தூண்டப்பட்டு வளர்ந்துவந்த இனவாதம் எந்தக் கட்டத்திலும் இரத்தக் களரியாக வெடிக்கக் கூடிய வாய்ப்பிருந்தது. பண்டாரநாயக்க பதவிக்கு வந்து இரண்டு மாதங்களில் கல்லோயாக் குடியேற்றப் பகுதியில் வெடித்த கலவரம் 150 பேரின் உயிரைக்காவு கொண்டது. இது சம்பந்தமாக பண்டாரநாயக்க அரசாங்கம் எத்தகைய சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை இதே போல காலிமுகத்திடலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகத்தை வன்முறையால் குழப்பிய சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் குண்டர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை

வெறும் வதந்திகளை மையமாகக் கொண்டு 58 கலவரம் ஆரம்பமானது. வவுனியாவிலிருந்து அநுராதபுரத்தை கைப்பற்ற ஒரு தமிழர்படை வருவதாகவும் இதுபோல திருமலையிலிருந்தும் மட்டக்களப்பிலிருந்தும் தமிழர் படைகள் புறப்பட்டுவிட்டதாகவும் ஒருவகை வதந்தியும் பாணந்துறையைச்சேர்ந்த ஒரு சிங்கள ஆசிரியை மட்டக்களப்பில் வைத்துத் தமிழர்களால் மார்



புகள் அறுக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டதாகவும், தனிப்பட்ட விரோதங்களால் மட்டக்களப்பில் கொலைசெய்யப்பட்ட முன்னாள் நுவரேலியா மேயர் செனிவரட்ன தமிழர்களால் இனக்கொலை செய்யப்பட்டதாகவும் வதந்திகள் பரவின. ஆனால் இவ்வதந்திகளை மறுக்கும் வகையில் அல்லாது வதந்திகளுக்கு உயிரூட்டும் வகையில் பண்டாரநாயக்கவின் வானொலிப் பேச்சு அமைந்திருந்தது. குறிப்பாக செனிவரட்னவின் கொலை பற்றிய அவரது கருத்தைக் கூறலாம்.

தமிழரிற்கெதிரான இன வன்செயல்கள் வெடித்து ஆறு நாட்கள் வரை அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படவில்லை 58 ஆம் ஆண்டு மே 22 அன்று 500 இற்கும் மேற்பட்ட காடையர் பொலநறுவவில் தமிழ்ப் பிரயாணிகள் பயணம் செய்த புகையிரதத்துட் புகுந்து தாக்கினர். இதைத் தொடர்ந்து பரவலாகக் கொலை, கொள்ளை, சூறையாடல்கள், கற்பழிப்புக்கள் நிகழ்ந்தன. இந்நிலையில் ஒரு குழுவினர் பண்டாரநாயக்கவைச் சந்தித்து அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யுமாறு கோரினர். அதற்கு பண்டாரநாயக்க கூறிய பதில் விசித்திரமானது. ஒரு சிறிய விடயத்தை பெரிதுபடுத்துகிறீர்கள் என்று தூதுக்குழுவினரிடம் அவர் கூறினார். [62] 1953 இல் ஒரு நாள் ஹர்த்தாலிற்காக அவசரகால நிலையைப் பிரகடனம் செய்த சிங்கள அரசாங்கம், 1958 இல் தமிழர் கொல்லப்பட்டும், கற்பழிக்கப்பட்டும், அகதிகளாக்கப்பட்டும் பொலிஸ் நிலையங்களிலும், அகதிமுகாம்களிலும், பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்த போது நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் தேவையான அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ய மறுத்தது. இறுதியாக வன்முறைகள் வெடித்து ஆறாம் நாளில்தான் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டது. 58 இல் தமிழர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காக சிங்கள அரசு அவசரகால நிலையை பிரகடனம் செய்ய மறுத்தது. ஆனால் 78 இலிருந்து இன்றுவரை தமிழரை அழிப்பதற்காக அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி வருகிறது.

* சுதந்திரத்தின் பின் எழுந்த இரண்டாவது சிங்கள பௌத்த அலை 58 இல் தமிழரின் ரத்தத்தைக் குடிக்கும் வரை ஓயவில்லை.

இவ்வாறு தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட சூழலில் தமிழ்த்தலைமைகள் தனிநாட்டுக் கோரிக்கையைப் பற்றி அல்லது தீவிரமான போராட்ட முறைகள் பற்றிக் கதைத்தாலும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாரும் அதற்குத் தலைமை தாங்கத் தயாராய் இருக்கவில்லை. குறிப்பாக 56இன் பின்பு தமிழர்களின் தலைமைஸ்தானத்தில் இருந்த செல்வநாயகம் கூர்மையடைந்து வந்து அரசியல் நிலைமைக்கேற்ப தலைமை கொடுக்கத் தவறிவிட்டார் அவர் மட்டுமல்ல, 50களில் தனிநாட்டைப்பற்றிக் கதைத்த எந்த ஒரு தமிழ்த்தலைவரும் தனிநாட்டிற்கான போராட்டத்திற்குத் தலைமைதாங்க முன்வரவில்லை.

---

## முடிவுரை

1950 களின் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியை சிங்கள பௌத்த மறுமலர்ச்சி என்றும் முற்போக்கான தேசிய எழுச்சி எனவும் வர்ணிப்பதுண்டு. தேசியம் என்பது முற்போக்கானதே. தேசியத்தின் பிரதான பண்புகள் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு எழுச்சியையும் அந்நிய அல்லது ஆக்கிரமிப்பு எதிர்ப்பையும் கொண்ட ஓர் உயர் அம்சமாக இருக்கும்போது அது சரியானதே. தென்னிலங்கை அரசியலில் 50 களில் ஏற்பட்ட மாற்றமானது அரசியல், பொருளாதாரம், மொழி, மதம் போன்ற அம்சங்களையும் குறிப்பிடக் கூடிய அளவு மேலைத்தேச எதிர்ப்பு அம்சங்களையும் கொண்டிருந்தது. ஆனாலும் அது இலங்கையிலுள்ள ஏனைய இனங்களைத் தனது எதிரிகளாகக்கருதி, அவற்றின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில், ஜீவாதார உரிமைகளை நசுக்க முற்பட்டபோது பிற்போக்கான பேரினவாதமாகவே அமைந்தது. இலங்கையில் சிங்கள, பௌத்த பேரினவாதமானது இனம், மதம், பொருளாதாரம் எனும் அம்சங்களை இணைத்துக்கொண்ட ஒன்றாகும். இந்த இனமத வாதத்தால் தேசியத் தன்மை என்றொன்று இல்லாமல் தன் இனத்தன்



மையை மட்டும் வற்புறுத்தி ஏனைய இனங்களை ஒடுக்கும், அழிக்கும் போக்கு ஒருபோதும் வரலாற்றில் முற்போக்கானதும் அல்ல, ஜனநாயகமானதும் அல்ல.

இனம், மதம், மொழி, பொருளாதாரம் எனும் அம்சங்கள் அனைத்தும் இணைந்து ஒரு முழுவடிவ எழுச்சி பெறுவதற்கான வரலாற்றுப் பின்னணி 50 களில் இருந்தது. ஒன்று பிரித்தானியர் ஆட்சியதிகாரத்தைச் சிங்களவரின் கையில் விட்டுச்சென்றனர். இரண்டு புத்த ஜயந்தி கொண்டாடப்பட்ட காலமும் இவ் 50 களின் மத்தியிலேயே ஆங்கிலேயர் விட்டுச் சென்ற எச்சங்களை மாற்றும் எண்ணமும் அதற்கான பலமும் இக்காலத்தில் உருத்திரண்டன. இவற்றின் விளைவாக மேலைத்தேச எதிர்ப்பு கிறிஸ்தவ எதிர்ப்பு என்பவற்றுடன் மொழிக்கொள்கையின் பெயரால் தமிழின எதிர்ப்பு எனும் அம்சங்களும் சேர்ந்து கொண்டன. தமிழரைத் தென்னிந்தியாவின் ஒரு அலகாகவே சிங்கள இனவாதிகள் பார்த்தனர்.

43 இல் ஜே. ஆர். தனிச்சிங்கள மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது தென்னிந்தியாவுடன் சம்பந்தப்படுத்தியே பேசினார் என்பதை மேலே விரிவாகப் பார்த்திருந்தோம். அதேபோலவே பாஷைக் கொமிஷன் தலைவர் ஆதர் விஜயவர்த்தனாவும் தென்னிந்தியாவுடன் சம்பந்தப்படுத்தித்தான் தமிழை உத்தியோகமொழியாக்கக் கூடாது என்று கூறினார். பின்பு பண்டாரநாயக்கவும் தனிச்சிங்களச் சட்டத்தை வேண்டிப் பேசும் போது தென்னிந்தியாவுடன் தமிழரைச் சம்பந்தப்படுத்தியே அதை நியாயப்படுத்தினார். தமிழ்மொழி விசேட விதிக்கெதிரான உண்ணா விரதத்தில் ஈடுபட்ட பல்கலைக் கழகப் புத்திஜீவி எல். ஆர். ஜயசூரிய தென்னிந்தியாவுடன் சம்பந்தப்படுத்தியே அதற்கான நியாயத்தைக்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூறினார். இவ்வாறு வேறுபல இடங்களிலும் தமிழின எதிர்ப்பை இந்தியா எனும் அச்சத்தைக்காட்டியே நியாயப்படுத்தி, நிறைவேற்றியும் உள்ளார்கள்.

முன்னைய அத்தியாயங்களில் மட்டுமன்றி இவ்வத்தியாயத்திலும் கூட இந்திய அச்சத்தைக் காட்டித்தான் தமிழரின் உரிமையைச் சிங்கள இனவாதிகள் மறுத்திருக்கிறார்கள். எனவே இந்திய எதிர்ப்பே இங்கு தமிழின எதிர்ப்பாக உருப்பெற்றுள்ளமை தெள்ளத் தெளிவாகின்றது.

இச் சிங்கள பேரினவாத எழுச்சியானது, மேல்தளத்தில் இருந்த அரசியல் வாதிகளால் அப்படியே உருவாக்கப்பட்டது என்று கூறுவதற்குப் பதிலாக அடிமட்டத்திலிருந்து எழுந்து வந்த சிங்களபௌத்த சக்திகளின் பலத்தைப் புரிந்துகொண்டு தமது பதவி வேட்டைக்காக அதை அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதேசரி. அதை அவர்கள் பயன்படுத்த முற்பட்டவேளை போட்டி போட்டு வளர்த்தும் விட்டார்கள். இது அதன் அடுத்தகட்ட கர்க்கபூர்வ வளர்ச்சியாகும். இறுதியில் இவர்கள் இனவாதசக்திகளின் முழுக் கைப்பொம்மைகளாகவே மாறினார்கள். அவர்கள் ஆட்டிவைத்தால் இவர்கள் ஆடும் அரசியல் வாதிகள் ஆனார்கள். பண்டாரநாயக்கவின் அரசியல் வரலாறு இதைத் தெளிவாக்கி நிற்கிறது எனலாம். ஒரு கட்டத்தில் தமிழிற்காகப் பரிந்து பேசிய பண்டாரநாயக்கவே பின்பு தமிழிற்கு எதிரியானார். தன் உயிருள்ளவரை தமிழரின் உரிமைக்கு உத்தரவாதம் உண்டு என்று கூறிய கொத்தலாவல தமிழரிற்கு எதிராகச் செயற்பட்டார். இலங்கை இடதுசாரிகளால் 'மார்க்சியத்தின் தந்தை' என்று வர்ணிக்கப்பட்ட ஃபிலிப் குணவர்த்தன தமிழிற்கு சம அந்தஸ்த்து வேண்டும் என்று 30 களிற் குரலெழுப்பிய போதிலும் பின்பு தனிச்சிங்களவாதியானார்.



இதில் இரு உண்மைகள் எமக்குத்தெரிகின்றன. ஒன்று ஒரு காலத்தில் எல்லா சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழரிற்கு சம அந்தஸ்த்து கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டார்கள். இரண்டு, பின்பு தமது பதவி வேட்டை காரணமாக இனவாதப்புயலில் அள்ளுண்டு தாம் சொன்னவற்றிற்கு நேர்மாறாக நடந்து கொண்டார்கள்.

இவ்வத்தியாயத்தை நோக்கும்போது தமிழர்கள் எப்பொழுதும் ஏமாற்றப்பட்டுள்ளமையும் நியாயமற்ற காரணங்களைக்காட்டி அவர்கள் ஒடுக்கப்பட்டு வந்தமையும் தெளிவாகத் தெரிகிறது. சிங்கள ஆட்சியாளரிடையிலான பதவிப் போட்டிக்காக, குறைந்த பட்சம் சிறிய வேலை நிறுத்தங்களை ஒடுக்குவதற்காகக் கூட, அதை இனவாதமாகச் சித்தரித்துத் தமிழரை பலியிடும் அளவிற்கே சிங்கள அரசியலின் குரூரம் அமைந்துள்ளது.

---

ஐந்தாம்

# அத்தியாயம்

## ஆதாரங்கள்


1. D. C. Wijayawarden, The Revolt in the Temple, Colombo ( 1953 ), P. 1
2. IBID , PP. 57—59
3. Michael Roberts ( ED ), ( 1979 ), P. 56
4. K. N. O, Dharmadasa, "Language and Sinhalese Nationalism: The Career of Munidasakumaratunga", Modern Ceylon Studies, Vol. 3, No. 2, July 1972. P - 141

5. V. Karalasingam, The war out for the Tamil Speaking People, Colombo ( 1977 ) P. 32
6. Cited in Hansard 19. Oct, 1955, C. 590
7. IBID, C. 592
8. IBID, C. 593
9. கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம் ( 1970 ), பக் 44
10. Hansard, May. 24, 1944, P. 748
11. கூட்டுறவுக் கல்லூரி, பக் 42
12. இலங்கைத் தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர், யாழ்ப்பாணம் ( 1974 ), பக் 9
13. Cited in Hansard, 19. Oct. 1955, C. 583
14. The Honourable Prime Minister on Citizen Ship Colombo ( 1954 ) P. 32
15. Ceylon Obsever, 10. 6. 1951
16. அரசாங்க பாஷைக் கொமிஷன் இறுதி அறிக்கை, ( 1953 ), பக் 32
17. தேசிய மொழிகள் மூலம் உயர்கல்வியூட்டல் பற்றிய அரசாங்கக் கொமிஷனின் இடையறிக்கை ( 1954 ) பக் 7
18. தினகரன், 08 . 03 . 1948
19. ஈழகேசரி, 22 . 02 . 1953
20. மேற்படி, 12 . 09 . 1954
21. மேற்படி 30 . 05 . 1954
22. தினகரன் 28 . 09 . 1955
23. Daily News, 02 . 11 . 1955
24. Donald E. Smith, ( ED ) " The Sinhalese Buddhist Revolution ", South Asian Politics and Religion, Princeton ( 1966 ), P. 456
25. IBID, P. 457
26. U. N. P. Journal, Vol. 1, No. 29, Sep. 1947, P. 2, Cited in Urmila Phadnis, Religion and Politics in Sri Lanka, New Delhi ( 1977 ), P. 119
27. IBID, PP. 120 — 121
28. தினகரன், 11 . 06 . 1953



29. Urmila Phadnis, P. 127
30 IBID
31. IBID
32, Buddhist Committee of Inquiry The Betrayal of Buddhism. Balangoda ( 1956 ) PP. IV - VII
33. IBID, P. 30
34. IBID, P. 31
35. IBID, p. 101
36. Sinhalese Catholic, The Buddhist Commission's Report- A Question of Elementary Justice, Colombo, ( Undated )
37. ஈழகேசரி, 07 . 11 . 1954
38. தினகரன், 28 . 11 . 1955
39. மேற்படி, 21 . 01 . 1956
40. வீரகேசரி, 20 . 01 . 1956
41. தினகரன், 21 . 01 . 1956
42. மேற்படி
43. Hansard - Jan 1956, CC. 1859 — 1860
44. தினகரன், 21 . 01 . 1956
45. மேற்படி, 10 . 01 . 1956
46. மேற்படி,
47. Hansard - Oct- 1955, C. 574
48. IBID, C. 575
49. IBID, C. 622
50. IBID, C. 684
51. Hansard, May, 24. 1944, PP. 810 - 811
52. Cited in I. D. S. Weerawardene, Jeneral Election 1956, Colombo ( 1960 ), P 100
53. IBID
54. தினகரன், 22 . 03 . 1956
55. மேற்படி
56. I. D. S. Weerawardene, P. 98
57. Tarzie Vittachi, Emergency 58 The Story of the Ceylon Race Riots, London ( 1958 ) P. 19
58. Hansard. 5th - 14th Jun. 1956, CC. 1912-1913
59. G. C. Mendis, PP. 20 - 21
60. Hansard 5th - 14th Jun. 1956, CC. 761
61 Tarzie Vittachi, P. 30

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆறாம்

## அத்தியாயம்

## மூன்று தசாப்தங்களில் (1958 - 1990) இனப்பிரச்சினையின் போக்கு

### — சில குறிப்புக்கள்

சிங்களப் பேரினவாதத்தின் தீவிர ஒடுக்குமுறை, அதன் மத்தியில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தோற்றமும், வளர்ச்சியும் இலங்கை விவகாரத்திலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் இந்தியாவின் தலையீடு எனும் அம்சங்களை உள்ளடக்கிய இரு அத்தியாயங்களாக இதனை வகுத்து எழுதத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்டமுறையில் போதிய வசதியீனங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஆயினும் இந்நூலில் எடுத்துக் கொள்ளப் பட்ட பொருளின் முழுமை கருதி இக்காலப்பகுதி சில அடிப்படையான குறிப்புக்களால் நிரவப்படுகிறது.



58 இன ஒழிப்பு வன்செயலில் இருந்து 83 இன ஒழிப்பு வன்செயல் வரையிலான காலப்பகுதி ஏறக்குறைய ஒரே தன்மையான போக்கைக் கொண்டுள்ளது. 83 இலிருந்து 87 வரையான காலப்பகுதி வேறொருவகையான பொதுப் போக்கினைக் கொண்டுள்ளது. 87இருந்து 90 வரையிலான காலப் பகுதி இன்னொரு வகையான போக்கினைக் கொண்டுள்ளது. இவ்வாறான மூன்று தனித்தனி இயல்புகளைக் கொண்ட ஒரு காலப்பகுதியை இவ்வோர் அத்தியாயத்தில் தரமுயல்வதில் ஒரு அழகின்மை இருப்பினும் கருத்துரீதியாக இனப்பிரச்சினையின் பொதுப்போக்கை விளக்க இது தடையாக இருக்காது என எண்ண இடமுண்டு.

58 இல் இன ஒழிப்புக் கலவரம் நிகழ்ந்து முடிந்தது. இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் கைது செய்யப் படுவதற்குப் பதிலாக ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு இவர்கள் கைது செய்யப் பட்ட காலத்திலேயே தமிழ்மொழி விசேட மசோதா நிறை வேற்றப்பட்டது.

1961 இல் சிறிமாவோ தலைமையிலான அரசாங்கம் நீதி மன்றங்களில் சிங்கள மொழிப்பிரயோகம் பற்றிய சட்டத்தை நிறைவேற்றியது. இது தொடர்பாக சமஷ்டிக் கட்சி சத்தியாக் கிரகப் போராட்டத்தை மேற்கொண்டது. சமஷ்டிக்கட்சி மக்களை நேரடியாகப் பங்கு கொள்ளச் செய்த முதலாவது பெரிய போராட்டம் இதுவாகும். இதற்கு முன்போ அல்லது பின்போ இதுபோன்றதொரு போராட்டத்தை சமஷ்டிக்கட்சி நடத்தியதில்லை. ஆயினும் இப்போராட்டம் முற்றிலும் தோல்வியில் முடிந்தது. இப்போராட்டம் தோல்வியுற்றமைக்கு முக்கியமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவது வடக்குக்கிழக்கில் நடத்தப்படுகின்ற கர்த்தால், பகிஷ்கரிப்பு போன்ற எத்தகைய போராட்டங்களும் தென்னிலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்க முடியாதவையாகும். உதாரணமாக மலையக மக்கள் ஒரு கிழமை பகிஷ்கரிப்பில் ஈடுபடுவார்களேயானால் இலங்கையரசின் தேசியவருமானம் பெரிதும் பாதிக்கப்படும். அதற்கு இலங்கை அரசு அஞ்சும். ஆனால் வடக்குக்கிழக்கில் பெரும் கைத்தொழிற்சாலைகளோ அல்லது தென்னிலங்கையின் பொருளாதார ஓட்டத்திற்கு விநியோகம் செய்யக்கூடிய ஏதாவது பொருளாதார அம்சமோ இல்லாத காரணத்தால் மேற்குறிப்பிட்ட வகைப் போராட்டங்கள் எதுவும் பொருளாதார அர்த்தத்தில் இலங்கை அரசைப் பாதிக்க



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வில்லை. இரண்டாவதாக அரசியல் அர்த்தத்தில் இப்போராட்டங்களின் பாதிப்பை எடுப்போமானால் தமிழ்த்தலைவர்கள் மேற்கொண்ட மேற்படி போராட்டங்கள் அவற்றிற்குரிய உச்சக்கட்டத்தை எட்டவில்லை. எந்தத் தமிழ் தலைவரும் அகிம்சை வழியில் பெரும் தியாகங்களிற்குத் தயாராய் இருக்கவில்லை. இக்காலத்தமிழ்த் தலைவர்கள் போராட்டத்தை அதற்குரிய முழு வடிவத்தில் முன்னெடுக்கவில்லை. அரைகுறையாகச் செய்து அதை அப்படியே கைவிட்டனர். போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன என்பதை பற்றிய முடிவோ அல்லது தொடர் போராட்டத்தைப் பற்றிய திட்டங்களோ இருக்கவில்லை. உண்ணாவிரதத்தில் மரணத்தைச் சந்திக்க இத்தலைவர்கள் தயாராய் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் இவர்கள் அவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொள்ளவில்லை.

அக்காலத்தலைவர்களின் பொருளாதார நலன்கள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே கொழும்பில் மையம் கொண்டிருந்தன. இவர்களது முதலீடுகளும் வீடுவாசல்களும் பிரதானமான தொழில் வாய்ப்புக்களும் (வக்கீல்தொழில்) கொழும்பை நோக்கியே அநேகமாக இருந்தன. எனவே இவர்கள் கொழும்பு நலன்களை இழந்து தீவிரமாகப் போராடத் தயாராய் இருக்கவில்லை.

1965 இல் சமஷ்டிக்கட்சி ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தது. அப்போது டட்லி சேனநாயக்கவிற்கும், செல்வநாயகத்திற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி மாவட்ட சபைகளை அமைப்பதென்று முடிவெடுக்கப்பட்டது. சமஷ்டிக் கட்சியுடனான மேற்படி தேசிய அரசாங்கத்திற்கு சிறீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கொமியூனிஸ்ட்கட்சி போன்ற கட்சிகள் எதிர்ப்புக்காட்டின. இக்காலத்தில் சு. க. எடுத்த இனவாத நிலைப்பாடு குறித்து நாம் அதிசயப்படத்தேவையில்லை. ஆனால் லங்கா சமசமாஜக்கட்சியும் கொமியூனிஸ்ட் கட்சியும், எடுத்த இனவாத நிலைப்பாட்டை இங்கு சிறப்பாக நோக்க வேண்டியுள்ளது. கொமியூனிஸ்ட் கட்சியின் " அத்த பத்திரிகை" 1965 ஏப்ரல் 9ம் திகதி ஏட்டில் " பௌத்தரிற்கு இடமில்லை " என்று ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது [1]. சிறுபான்மையினரிடம் ஐ. தே. க. நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டது என்ற தோரணையில் அத்த பத்திரிகை செய்திகளை வெளியிட்டது. சிறிமாவின் தேர்தல் தொகுதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் " மீனாட்சியைவெளியேற்ற முன் சிறிமாவோ துரத்தப்பட்டார் "என்று 1965, மார்ச், 30 ஆம் திகதி இதழ் எழுதியிருந்தது [2]. சமசமாஜக்கட்சி பத்திரிகையான 'ஜனதின' பெரும் இனவாதத்தைக் கக்கியது " இரத்மலானையை தமிழ் நகராக்க இரகசிய முயற்சி" என்று 1965 யூலை 6 ஆம் திகதியும் 'சிங்கள பௌத்தர்களே எழுக'' என்று 1965 யூலை 9ம் திகதியும், " வடக்கிலுள்ள சிங்களவரிற்கு ஆபத்து " என்று ஓகஸ்ட் 25 ஆம் திகதியும மேற்படி பத்திரிகை செய்திகளைப் பிரசுரித்தது [3]. டட்லி — செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு "ஜனதின " பின்வருமாறு எழுதியது என குமாரி ஜெயவர்த்தன மேற்கோள் காட்டுகிறார்:

" சிங்களவரின் பிறப்புரிமைக்குத் துரோகம் இழைக்கும் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிராகப் பொதுசன எதிர்ப்பைத் திரட்டும் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாட்டை நாட்டுப்பற்றுள்ள அமைப்புக்கள் விரைவாகச் செய்து வருகின்றன. " [4]

லங்கா சமசமஜிஸ்டுகளும், கொமியூனிஸ்ட்டுகளும் இப்படி நேரடியான இனவாதப்பாதையை திட்டவட்டமாகக் கைக்கொண்டனர். 1965 இல் மேதின ஊர்வலத்தில் இந்த இடதுசாரிகள் ''தோசை, மசாலா வடை '' எனத் தமிழரைக் கேலி செய்யும் கோஷங்களை எழுப்பினர். எவனொருவனும் தன்னை இடதுசாரி என்று சொல்ல வெட்கப்படும் அளவிற்கு இவ்விடதுசாரிகளின் நிலை அமைந்திருந்தது. இவர்கள் சமஷ்டிக் கட்சியை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ்மக்களை இழிவுபடுத்தினர். யூதர்களைப் பார்த்து ஹிட்லர் முன்வைத்த கலாச்சார அழிப்பாளர் ( Culture destroyers ) என்ற கோஷத்திற்கு நிகராக இலங்கை இடதுசாரிகளின் தமிழர் எதிர்ப்புக் கோஷம் அமைந்திருந்தது.

1944 இல் கொமியூனிஸ்ட் கட்சி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் வரலாறு, பாரம்பரியம், தொடர்ச்சியான வாழ்நிலம், தனித்துவமான மொழி என்பவற்றைக் கொண்ட ஒரு தனித்துவமான தேசிய இனம் என்றும் அவர்கள் விரும்பினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனி அரசு அமைக்கும் உரிமை அவர்களிற்கு உண்டென்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [5] இவர்களது இத்தீர்மானத்தை முழுமையாக வரிக்குவரி மைக்கல் றொபேட்ஸ் ஆவணப்படுத்தியுள்ளார். இதேபோல தமிழ்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மொழிக்குச் சம அந்தஸ்த்து உண்டென்றும் பெரிதும் குரல் எழுப்பி வந்த லங்கா சமசமாஜக் கட்சியும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

ஒரு காலத்தில் இவ்விரு கட்சிகளும் தாம் கூறிவந்த, ஏற்றுக் கொண்டிருந்த உண்மைகளிற்கு மாறாக வெறும் சந்தர்ப்பவாத அரசியல் சகதிக்குள் தம்மைப் புதைத்துக் கொண்டனர் இடது சாரிக் கட்சிகளே இவ்வாறு முழு இனவாத நிலைப்பாட்டைக் கொள்ளும் போது சிங்கள மக்கள் பக்கமிருந்து எந்தவொரு நீதியையும் ஒடுக்கப்படும் தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது போயிற்று

டட்லி – செல்வா ஒப்பந்தமும் கைவிடப்பட்டது இவ்வொப்பந்தம் கைகூடமுடியாது என்பது பற்றி முன்கூட்டியே பல தமிழ்த்தலைவர்கள் செல்வநாயகத்திற்கு அறிவுறுத்தினர். குறிப்பாக இக்காலகட்டத்தில் சமஷ்டிக் கட்சியிலிருந்து வெளியேறிய காவலூர் நவரத்தினம் செல்வநாயகத்தின் நிலைப்பாட்டை எதிர்த்துக் குரல் எழுப்பலானார். 1968 அளவில் இவர் தனிநாட்டுக் கோரிக்கையை இறுதித்தீர்வாக முன்வைத்து ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். இதன்பொருட்டு 'விடுதலை' என்றொரு பத்திரிகையையும் நடாத்தினார். 12.11.68 இல் ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் காவலூர் நவரத்தினம் புதிய இயக்கம் தேவை என்ற தீர்மானத்தை முன்வைத்து நிறைவேற்றினார். [6]

குறிப்பாக 60களின் பிற்பகுதியில் இளைஞர்கள் அரசியலில் அதிகம் முனைப்புப்பெறத் தொடங்கினர். சிங்கள மக்கள் மத்தியில் படித்த இளைஞர் தொகை அதிகரித்தது. உயர்கல்வி வாய்ப்புக்கள், வேலைவாய்ப்புக்கள் என்பன குறைவாயிருந்தன. 1945ஆம் ஆண்டு 21,336பேர் மட்டுமே வேலையற்றோராய் இருந்தனர். 1955ஆம் ஆண்டு 71 010 பேர் மட்டுமே வேலையற்றோராயிருந்தனர் ஆனால் 1971 ஆம் ஆண்டு இத்தொகை 7,00 000 பேராக அதிகரித்தது. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச்சட்டம் உருவாகியதைத்தொடர்ந்து, சுயமொழிக் கல்வி மூலம் கிராமிய இளைஞர்கள் பெருந்தொகையிற் படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அரசு இவர்களுக்கான பொருளாதாரத் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்காததனால் கல்லூரிகளிற்படித்து வெளியேறும் இளைஞர்களிற்கு பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்போ, அன்றி வேலைவாய்ப்போ



அற்றவர்களானார்கள். பல்கலைக்கழக உயர்கல்வி பெற்ற இளைஞர்களுக்கும் வேலையில்லாத நிலையே இருந்தது. இந்த இளைஞர்கள் அதிருப்தியடைந்து அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களாகத் திரளத்தொடங்கினர் ஆனால் இதிலுள்ள பெரும் துயரமென்னவெனில் அரசின் கையாலாகாத்தனத்தின் விளைவாக சரியான பொருளாதாரத் திட்டமிடலின்மையின் விளைவாக இளைஞர் பிரச்சினைகள் உருவாகியபோது அதனை இனவாதப் பக்கம் திருப்பிவிட்டமையேயாகும் சிங்கள இளைஞர்களின் உயர்கல்வி வாய்ப்பின்மைக்கு (பல்கலைக்கழக அனுமதி) காரணம் என்றுகூறி தமிழ் இளைஞர்களுக்கு எதிராகத் தரப்படுத்தலை அரசு கொண்டுவந்தது. இவ்வாறாக வேலை வாய்ப்பிலும் தமிழ் இளைஞர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது உண்மையில் முழுத்தமிழ் இளைஞர்களையும் பல்கலைக்கழக அனுமதியிலிருந்து தவிர்த்தாலும் கூட, முழுத்தமிழர்களையும் உத்தியோகங்களிலிருந்து விலக்கினாலும் கூட சிங்கள இளைஞர்களின் உயர் கல்வியில் பிரச்சினையையும், வேலை வாய்ப்புப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. அந்த அளவுக்கு சிங்கள இளைஞர்களின் தொகை இவ்விடயங்களில் மிக அதிகம். அரசு இனவாதப்பக்கம் இதனைத் திசைதிருப்பி தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை தணிக்க முற்பட்டது. வழமையாகவே சிங்கள இனவாதச் சூழலில் வளர்ந்து, பாடபோதனைகள் மூலமும் தமிழின எதிர்ப்பைக் கற்று வந்த சிங்கள இளைஞர்கள் இதற்கு இலகுவில் எடுபடுவது சாத்தியமாயிற்று. ஜனதா விமுக்திபெரமுன (ஜே.வி.பி.) யின் தோற்றமும் வளர்ச்சிக்கான காரணத்தை விளக்குகையில் றொகான் குணறட்ண பின்வருமாறு கூறுகிறார். காலனித்துவ ஆட்சிமுறையிலிருந்து வேறுபட்டதாகச் சுதந்திர இலங்கையின் ஆட்சி முறை அமையவில்லை சுதந்திர இலங்கையின் ஆட்சி காலனித்துவத் தேவைக்குச் சேவை செய்வதாகவே அமைந்தது. அரசியல், சமூக, பொருளாதார அமைப்புக்களில் எவ்வித அடிப்படை மாற்றமும் நிகழவில்லை. ஆனால் ஒரு புதிய ஆளும் சிங்கள வர்க்கம் ஒன்று தோன்றியது. இந்த ஆளும் வர்க்கத்திடம் சுதேசமக்களின் நலனுக்கேற்ற பொருளாதாரத் திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. இந்த அரசாங்கங்களின் திட்டங்களால் மக்கள் திருப்தி அடையாமையினாற்தான் தொடர்ந்து ஆறு தடவைகள் அரசாங்கத்தை மாற்றி வந்தனர். புதிதாகத் தோன்றிய இந்த ஆளும் சிங்கள வர்க்கத்தினர் விவசாயிகள், கிராமியமக்கள், தொழிலாளர்கள், மற்றும் சாதாரணமக்கள் எல்லோரின் நலன்களைப் பற்றிச் சிந்திக்காதவர்களாய் அவர்களை உதாசீனம் செய்து தமது அதிகாரம், பதவி போன்ற சொந்த நலன்களையே



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பேணிவந்தனர். இதனால் நடைமுறை ரீதியாக அவர்கள் விரக்தியடைந்து அரசுக்கெதிரான ஆயுதம் தாங்கிய போராட்டத்தின்பால் உந்தப்பட்டனர் என்று அவர் தொடர்ந்து கூறிச் செல்கிறார். [7]

இங்கு ஓர் உண்மை மிகத் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது சிங்களவர் பக்கம் ஏற்படும் எப்பிரச்சினையும் தமிழர் தலைமீது திசைதிருப்பப்படுகின்றது என்பதுதான். விவசாயிகள் பிரச்சினை, நிலமற்றோர் பிரச்சினை என்பன சிங்களவர் பக்கம் எழும்போது அதனைத் தமிழர் பக்கம் திசைதிருப்பி தமிழ் மண்ணிற் சிங்களக் குடியேற்றமாக உருமாற்றினார்கள். இதற்கு நீண்டகால இனவாதக் கண்ணோட்டத்துடன் கூடவே வேறு பல அரசியற் கண்ணோட்டமும் உண்டு அதாவது விவசாயிகள் பிரச்சினை தென்னிலங்கையில் எழும்போது அவர்கள் இடதுசாரிக் கட்சிகள் பக்கம் சார்ந்து விடுவார்கள் என்றும் அவர்களை (சிங்கள) தமிழ் மண்ணிற் குடியேற்றி நிலம் கொடுத்து உதவுவதன் மூலம் அவர்கள் ஒருபுறம் ஐ.தே.க வின் நிரந்தர ஆதாவாளர்களாக இருந்துவிடுவார்கள் என்றும், மறுபுறம் தமிழர் நிலத்தினை அபகரிப்பதான இன்னொரு வெற்றியும் அவர்களுக்கு ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. இதன் மூலம் இன்னொரு உண்மையும் புலனாகின்றது. சிங்கள இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையிலான அரசியற் போட்டியும் தமிழர் பக்கம் திருப்பப்பட்டே வெற்றியீட்டுவதாய் முடிகின்றது. இத்தகைய அர்த்தத்திற்தான் டி. எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்றுவரை வளர்ந்து செல்லும் சிங்களக் குடியேற்றத் திட்டங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். இது மட்டுமன்றி சிங்கள இளைஞர்களுக்கு ஏற்பட்ட கல்விப் பிரச்சினை, வேலையின்மைப் பிரச்சினை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் பலவும் இவ்வாறாகத் தமிழர் பக்கமே திருப்பப்பட்டு இலங்கையில் ஏற்படும் சகல அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்கெல்லாம் தமிழர், பலிக்கடாவாய்ப்பயன் படுத்தப்படுகின்றனர்.

உண்மையில் மேற்கூறப்பட்ட பொருளாதாரப் பரிமாணத்திற்தான் சிங்கள இளைஞர்களின் பிரச்சினைகள் உருவாகின. அதனை ஆட்சியாளர் இனவாதப் பக்கம் திசை திருப்பிய போது சிங்கள இளைஞர்களும் இனவாதத்துள் பலியாகினர். இத்தகைய அடிப்படை நிலைமையின் கீழ் ஒரே காலகட்டத்தில் (1968) வடக்கிலும், தெற்கிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு நிகழ்வுகள் இடம் பெற்றன. ஒன்று தெற்கில் அரசாங்கத்தை மாற்றி அமைப்பதற்கு ஆயுதப் போராட்டத்தை வழிமுறையாகக் கொண்ட ஜனதா விமுக்திபெரமுன (ஜே. வி. பி) உதயமானது. இரண்டு, பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கான அமைப்பு (தமிழர் சுயாட்சிக் கழகம்) வடக்கில் உதயமானது. இவை ஒரு சந்தர்ப்ப விபத்தல்ல. ஒன்று, சிங்களவர் பக்கம் உருவாகிவந்த அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளின் நிர்ப்பந்தத்தால் சிங்கள இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் அரசாங்கத்தை மாற்றியமைக்க முற்பட இரண்டாவதாக தமிழர் பக்கமும் சிங்களவரைவிடவும் மோசமான அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுடன் கூடவே சிங்கள இன ஒடுக்குமுறையும் பெரும் சுமையாக அமைய இவைக்கெல்லாம் தீர்வாக தனிநாட்டை அமைப்பதற்கான அமைப்பு தவிர்க்க முடியாதவாறு தோன்றியது.

இத்தகைய சூழலில், இவ்வாறாகச் சிங்களவர் மத்தியிற் தோன்றிய ஆயுதம் தாங்கிய "இடதுசாரி" இயக்கமாகிய ஜே. வி. பி வழமையான இனவாதிகளின் பாதையிலும், இனவாத "இடதுசாரிகளின்" பாதையிலும் தன்னைச் சேர்த்துக் கொண்டது. பொதுவாக தமிழரை இந்தியக் கைக்கூலிகள் என்று இவ்வியக்கம் கருதியது. குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர் மீதே இத்தாக்குதல் அமைந்திருந்தது. இவ்வியக்கம் நடாத்திய ஐந்து பிரச்சாரத் தலைப்புக்களில் ஒன்றாக "இந்திய விஸ்தரிப்பு வாதம்" என்றொரு தலைப்பு அமைந்திருந்தது [8]. தமிழர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஓர் அம்சமாகவே ஜே. வி. பி. புரிந்திருந்தது அல்லது வெளிப்படுத்தியது.

இறுதியாக ஜே. வி. பி. யின் 1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சி இந்தியாவின் உதவியுடனேயே நசுக்கப்பட்டது. இங்கு இரண்டு விடயங்களை அவதானிக்கலாம். ஒன்று, இயல்பான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான காரணங்களை இனவாதத்திற்கு ஊடாகவே ஜே. வி. பி. புரிந்து கொண்டமையும் அதனைத் தமிழருக்கு எதிராகத் திசை திருப்பியமையும், இரண்டு, அவர்களிடமிருந்த இந்தியா பற்றிய அச்சமும், தமிழரை இந்தியாவோடு சேர்த்து அடையாளம் கண்டுகொண்டமையுமாகும்.

1970 இல் சிறிமாவோ தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் நாட்டின் கல்வி,




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வேலை வாய்ப்புப் பிரச்சினைகளிற்கு அதுவும் இனவாதத்தையே விளக்கமாக்கிக் கொண்டது. இது உண்மையில் பொருளாதாரப் பிரச்சினையை இனவாதமாகத் திசை திருப்பியமையே ஆகும், இதற்குத் தமிழர்களே மீண்டும் பலியாக்கப்பட்டனர். அரசு தரப்படுத்தல் எனும் முறையை அறிமுகம் செய்தது. இது தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய ஒரு முக்கிய காரணியாக அமைந்தது.

1970 நொவெம்பர் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு பாரிய மாணவ ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது. பொதுவாக இது இளைஞரை அதிகம் சிந்திக்கத் தூண்டியது. காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்த தமிழர்கள் மத்தியில் இளைஞர்கள் கொதித்தெழுவதற்கான வாய்ப்பை இது கொடுத்தது. 1972 இல் முதலாவது குடியரசு அரசியலமைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதில் தமிழ் மக்களின் எல்லா அபிலாசைகளும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. இவ்வரசியல் அமைப்புத் திட்டத்தின் மூலம் பௌத்தம் நடைமுறை அர்த்தத்தில் அரசமதம் என்ற அந்தஸ்த்தைப் பெற்றது, உத்தியோக மொழியாகத் தனிச்சிங்களம் சாதாரண சட்ட நிலையிலிருந்து அரசியலமைப்புத் திட்ட அந்தஸ்த்தை அடைந்தது. தனிச்சிங்களச் சட்டம் 1956 இல் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் அதை எதிர்த்து மொழி ஒன்றென்றால் நாடு இரண்டு, மொழி இரண்டென்றால் நாடு ஒன்று என்ற அர்த்தத்தில் உரை நிகழ்த்திய கொல்வின் ஆர். டி. சில்வாவே இவ்வரசியல் அமைப்புத்திட்டத்தின் பிதா என்பதைப் பார்க்கும் போது அவரது சந்தர்ப்பவாத அரசியலும் இலங்கை அரசியலில் இனவாதத்தின் பலமும் தெள்ளெனத் தெளிவாகிறது. தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகும் என்றும் நாடு இரண்டாகும் என்றும் இதற்கு முக்கிய காரணகர்த்தாவாக, தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்கவே கருதப்படுவார் என்று 50 களில் தான் கூறிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிவைப்பதற்கோ, என்னவோ கொல்வினும் கடும் இனவாதியாகினார்.

தொடர்ந்து தமிழ் மக்கள் பக்கத்தில் அரசியல் தீவிரமடையலாயிற்று. இளைஞர்கள் ஆத்திரமடையத் தொடங்கினர் தனிநாட்டுக் கோரிக்கை அதன் உண்மையான அர்த்தத்தில் பிரசவமாகியது.

1970 தேர்தலில் அமிர்தலிங்கம், மு சிவசிதம்பரம் ஆகியோர் தோல்வியுற்றிருந்தனர். இவர்கள் பாராளுமன்றத்திற்கு



வெளியே தீவிர அரசியல் பேசலாயினர், இளைஞரிடம் இருந்து எழுந்த தனிநாட்டுக் கோரிக்கையின் பக்கம் அமிர்தலிங்கம் சாயலானார். 70 இல் பொதுத் தேர்தல் காலத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்த்து காவலூர் நவரத்தினத்துடன் பொதுமேடையில் விவாதம் புரிந்த அமிர்தலிங்கம் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, தனிநாட்டுக் கோரிக்கையின் தீவிர பிரச்சாரகர் ஆனார். தமிழ்க் கொங்கிரஸ், சமஷ்டிக்கட்சி என்பன இணைந்த தமிழர் கூட்டணி (ரி. யூ. எவ்.) பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி (ரி. யூ. எல். எவ்.) என்ற பெயரில் தனிநாட்டுக் கோரிக்கைக்காகப் போராடும் அமைப்பானது. 1975 வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் தமிழீழக் கோரிக்கையின் பொருட்டு ஆயுதம் ஏந்திய நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடலாயினர். 1977 பொதுத் தேர்தலை தமிழீழத்திற்கான பொதுசனவாக்கெடுப்பாக த. வி. கூ. முன்வைத்தது. மக்களும் தமிழீழத்திற்கான தமது ஒப்புதலை அளித்தனர். 77 இனக்கலவரம் தமிழரிற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டது. இக்கலவரமும் தமிழீழத்தைத் தவிர வேறு மாற்றுவழி இல்லை என்ற உணர்வை தமிழர்களிடம் ஏற்படுத்தியது. இப்பின்னணியில் ஆயுதம் ஏந்திய பல இயக்கங்கள் உருவாகின. தொடர்ந்து தமிழரிற்கெதிரான பலராணுவச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் வளர்ந்து வந்த பல்வேறு இயக்கங்களுள் வே. பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு கொரில்லாப் போராட்டத்தை தனது முக்கிய போராட்ட வழிமுறையாக முன்வைத்து வளரலாயிற்று. 1983 யூலை 23 ஆம் திகதி இவ்வியக்கம் இராணுவத் தொடர் வண்டிகள் மீது நடாத்திய தொடர் தாக்குதலில் இராணுவத்தினரில் 13 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பத்தைக் குறித்து நின்றது. இது உள்நாட்டு அரசியலிலும் பிராந்திய அரசியலிலும் மாற்றங்கள் ஏற்படக் காரணமாய் அமைந்தது.

காலத்திற்குக் காலம் (58,77) இன அழிப்பு வன் செயல்களை சிங்கள அரசு முடுக்கி விடுவது போலவே இம்முறையும் ஜே ஆர் தலைமையிலான சிங்கள அரசு ஒரு பெரும் இன அழிப்பை தமிழ் மக்களிற்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்டது. இவ்வின அழிப்பிற்குப் பின்னால் அரசு நின்றதை விளக்க ஒரு உதாரணமே போதுமானது. அத்துடன் இவ்வின அழிப்பின் [illegible]த்தை விளக்கவும் இவ்வுதாரணமே போதுமானது. இன



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அழிப்பில் அமைச்சர் காமினிதிசநாயக்க எவ்வாறு ஈடுபட்டார் என்பதை விளக்க எஸ். பியதாச என்பவர் தனது நூலில் எடுத்துக்காட்டும் ஒரு பகுதியை இங்கு நோக்குவோம்.

"29 . 07 . 1983 அன்று நுவரெலியாவில்: நகரம் இராணுவத்தினரால் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. எல்லா வாகனங்களும் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டன. பஸ்களில் தமிழரை ஏற்றிச் செல்ல வேண்டாம் என பஸ் நடாத்துனர்களிற்கு கட்டளை இடப் பட்டிருந்தது. அமைச்சர் காமினி திசநாயக்க தமது கட்சிக் காரருடன் ஒரு கூட்டம் நடத்துவதற்காகக் கொழும்பிலிருந்து நுவரெலியாவிற்கு வந்தார் இதற்கு முதல் நாள் பல பிரபலமான காடையர்களை பாராளுமன்ற உறுப்பினர் ஹேரத்ராணசிங்க முன் எச்சரிக்கையாகக் கைது செய்வித்தார். காமினி திசநாயக்கவின் கூட்டம் முடிவடைந்த உடனேயே கைது செய்யப்பட்டிருந்த காடையர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் பெற்றோல், இரும்புக் கம்பிகள், வேறும் ஆயுதங்கள் சகிதம் புறப்பட்டார்கள். இவர்கள் இரு இந்துக் குருமாரைத்தாக்க முயற்சித்தனர். அவர்கள் இருவரும் ஒருவாறாகத் தப்பிச்சென்று விட்டார்கள். காடையர் தமது முயற்சியில் வெற்றி பெறாதவராய் இன்னொரு காடையர் கூட்டத்தோடு இணைந்து கொண்டனர். இவர்கள் ஒரு தமிழ்க்கடையைச் சுற்றிப்பெற்றோலை ஊற்றி அதற்குத் தீ வைத்தனர். இவ்விடயத்தில் இராணுவத்தினர் இவர்களிற்கு கலன் கணக்கில் பெற்றோல் கொடுத்து ஆதரவளித்தனர். அன்று ஏறக்குறைய சகல தமிழ்க்கடைகளும் தீயிடப்பட்டன, வீதிகளாற் சென்று கொண்டிருந்த தமிழர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டனர். காடையரால் தீயிடப்படாது எஞ்சியிருந்த தமிழ்க் கடைகளை இராணுவத்ினர் தீயிட்டனர். கிட்டத்தட்ட நடுப்பகலளவில் நுவரெலியா நகரமே அக்கினிக்கடலாகக் காட்சியளித்தது. ஒரு சிறுமி உட்பட பதின்மூன்று பேரை இக்காடையர் உயிருடன் நெருப்பிலிட்டுக் கொன்றனர்.

இக் கூட்டத்தின் தலைவன் ஐ. தே. க. வின் உள்ளூர் அமைப்பாளன். காமினி திஸநாயக்க கட்டளையிட்ட பின்பு காடையரும் இராணுவத்தினரும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்" [ 9 ].



தமிழ் மக்களைப் பற்றி ஜே. ஆர். இக்கால கட்டத்தில் வெளியிட்டிருந்த ஒரு கருத்தினையும் நோக்குவோம்:

"இப்போது யாழ்ப்பாணத்தவர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்கமுடியாது. அவர்களின் உயிர்களைப்பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை; அவர்கள் எங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றியும் கவலையில்லை" [ 10 ].

அரசின் இன அழிப்பைத் தொடர்ந்து தனது நலனை மையமாகக் கொண்ட நோக்கு நிலையில் இருந்து இந்திய அரசு தமிழீழ விடுதலைப்போராட்ட இயக்கங்கள் பலவற்றிற்கு இராணுவப் பயிற்சியும், பின்தள வசதியும், ஆயுதங்களும் வழங்கலாயிற்று அமெரிக்க அரசும் தனது நலன்களுக்காக இலங்கைப்பிரச்சினையைப் பயன்படுத்தலாயிற்று அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் ( சி. ஐ ஏ. ) முன்னாள் உதவி இயக்குநரும் அமெரிக்க ஜனாதிபதி றீகனின் ஆலோசகரும் விஷேச தூதருமான வெர்னன் வொல்ரெஸ் ( Vernon Walters ) என்பவர் "இலங்கைப் பிரச்சினையைக் கையாள இஸ்ரேலியரை விடுவோம்' எனக் கூறியதாகவும் இலங்கையில் அமெரிக்கா நேரடியாகத் தலையிடுவதன் மூலம் இலங்கையை விடவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தியாவைப் பகைக்க வேண்டி ஏற்படும் என்பதால் இஸ்ரேலியர்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது [ 11 ] இந்த வரிசையிற்தான் எஸ். ஏ. எஸ். இனிமினிபோன்ற கூலிப்படைகளையும் நோக்கவேண்டும். இவ்வாறாக ஒருபுறம் இயக்கங்களை இந்தியா பயன்படுத்த, மறுபுறம் இஸ்ரேலியருக்கூடாக இலங்கை அரசை அமெரிக்கா பயன்படுத்தலாயிற்று.

பிராந்திய அரசினதும் வல்லரசினதும் போட்டிக்கு இவ்வாறு இனப்பிரச்சினை களமாகியது. ஈற்றில் இலங்கைக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இந்திராகாந்தி அரசாங்கத்திடம் ஏற்படலாயிற்று. நியூயோர்க்கில் வைத்து 1983 டிசம்பரளவில் அ. அமிர்தலிங்கம் தன்னிடம் கூறியதாக ஏ. ஜே. வில்சன் எழுதுகையில் இலங்கை அரசு ஒரு தீர்வுக்கு வராத பட்சத்தில் இராணுவ நடவடிக்கை மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கத் தான் தயாராக இருப்பதாக இந்திரா காந்தி தன்னிடம் பல முறை கூறியதாகவும் தன்னை ஓர் அண்டை நாட்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டின் தலைவனிற்குரிய ஸ்தானத்தில் வைத்து மதித்து உரிய உபசாரங்கள் செய்யப்படுவதாகவும் அமிர்தலிங்கம் தன்னிடம் கூறியதாக எ. ஜே. வில்சன் எழுதியுள்ளார். [ 12 ]

மேலும் இது தொடர்பாக ஸ்டான்லி ஜெயவீர எனப்படும் முன்னாள் ராஜதந்திரி (இந்திய விவகாரம் சம்பந்தமான இலங்கை அரசின் ஆலோசகர் ) அண்மையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் 84ஆம் ஆண்டு இந்திரா காந்தி இலங்கைக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிட்டிருந்தது பற்றிய விபரங்களை விரிவாக எழுதியுள்ளார். அதன் பிரகாரம் திருவனந்தபுரத்தில் விசேஷ இராணுவப் படைப்பிரிவொன்று ( 50T. K Independent Para - Brigade ) தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும், மத்திய அரசாங்கத்தின் கட்டளைக்காக அது காத்துக்கொண்டிருந்ததாகவும் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பின், அக்கட்டளை என்றுமே வரவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார் [ 13 ]. இலங்கைக்கு எதிராக இந்திரா இராணுவ நடவடிக்கைக்கு ஆணை பிறப்பிக்க இருந்த தருணத்தில் அவர் கொல்லப்பட்டார்.

இந்திரா காந்தியின் மரணம் சம்பந்தமாக அமெரிக்கா பக்கம் பலத்த சந்தேகம் எழுந்தது. இது தொடர்பான தர்க்கார் கொமிஷனின் விசாரணை அறிக்கையில் ஓர் அந்நிய சக்தி இக்கொலையிற் சம்பந்தப்பட்டுள்ளதாக நாட்டின் பெயர் குறிப்பிடப்படாமல் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இங்கு '' அந்நிய சக்தி '' என்ற பதம் அமெரிக்காவையே சுட்டுவதாகக் கருதப்படுகின்றது. எப்படியோ இந்திராகாந்தியின் கொலையின் மூலம் இலங்கைக்கு எதிரான இந்திராவின் இராணுவ நடவடிக்கைத் திட்டம் முறிந்தது அல்லது முறிக்கப்பட்டது.

இந்திரா காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ரஜீவ் அரசாங்கம் இலங்கை அரசுடன் பல சமரச முயற்சிகளில் ஈடுபடலாயிற்று. இவ்வகையில் இடம் பெற்ற முக்கிய முயற்சியாகத் திம்புப் பேச்சு வார்த்தையைக் குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில் ஈழப் புரட்சி அமைப்பு ( ஈரோஸ் ), தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ( ஈ. பி. ஆர். எல். எவ். ) தமிழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ ) ஆகிய அனைத்து இயக்கங்களும் ஒன்று சேர்ந்து ஈழதேசவிடுதலை முன்னணி ( ஈ. என். எல். எவ். ) என்ற ஓர் ஐக்கிய முன்னணியினை உருவாக்கின. திம்புப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது, பிற்காலத்தில் ஐக்கிய முன்னணியும் குலைந்து போயிற்று.



இறுதியாக 1987இல் ரஜீவ் - ஜே. ஆர் அரசாங்கங்களிற்கிடையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. இவ்வுடன்பாடு, தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளைத் தருவதாக இருக்கவில்லை. இந்நிலையில் விடுதலைப்புலிகள் அமைப்பு இதற்கு உடன்படுவது இலகுவானதாக இருக்கவில்லை. உயிர்த்தியாகம் செய்த போராளிகளின் பெயராலும், மக்களின் துன்பங்களிற்கு இது ஒரு தீர்வாக அமையவில்லை என்பதாலும் இவ்வொப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வது கடினமாயிற்று. ஏனைய பல இயக்கங்கள் ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டன. ஈரோஸ் கொள்கையளவில் எதிர்த்தது இந்நிலையில் நிர்ப்பந்தங்களின் மத்தியில் இந்தியாவிற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்ப்பது என்ற அடிபபடையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் இதற்கிசைந்து பின்வருமாறு சுதுமலை மகாநாட்டில் கூறினார். இவ்வொப்பந்தம் பிரதானமாக இலங்கை இந்திய அரசுகளுக்கிடையேயான உறவை அடிப்படையாகக் கொண்டதாயும், இந்திய வல்லாதிக்க வியூகத்தை கொண்டதாயும் அமைந்துள்ளதென்றும், எமது சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒரு பெரிய அரசு தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்கக் கங்கணமகட்டி நிற்கும் நிலையில் நாம் என்ன செய்ய முடியும் என்றும், சிங்கள இனவாதப் பூதம் இவ்வொப்பந்தத்தை விழுங்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றும், எப்படியோ இந்திய அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்க்கலாம் எனும் பொருள் படக் கூறினரர், [ 14 ]

இக் கூற்று இருவிடயங்களை விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு சம்பந்தமாக உணர்த்தி நின்றது. ஒன்று இந்தியாவின் நெருக்குதல் இருப்பதாகவும் அதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்க்கப் போவதாகவும் இரண்டு சிங்கள இனவாதம் இவ்வொப்பந்தத்தை இறுதியாக அழித்துவிடும் என்பதுமாகும். எப்படியோ புலிகள் மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில்தான் இந்தியாவிற்கு இப்படியொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தனர். ஆனால் இச்சந்தர்ப்பத்தை ரஜீவ் அரசாங்கம் சரிவரப் பயன்படுத்தத் தவறிவிட்டது. ஜே. ஆர் அரசாங்கத்தின் திட்டங்களிற்கு ரஜீவ் அரசு பலிபோகலாயிற்று, ஜே. ஆர் ஒப்பந்தத்தின் பின்னும் திருமலையில் குடியேற்றங்களை செய்தார். ஒப்பந்தத்தின் பிரகாரமான பொதுமன்னிப்பின்படி அரசியற் கைதிகள் பெருமளவில் விடுதலைசெய்யப்படவில்லை. இவை சம்பந்தமாகப் புலிகள் தொடர்ந்து ஆட்சேபித்து வந்த இவற்றிற்கு இந்தியா செவிசாய்க்காத நிலையில் திலீபன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உண்ணாவிரதப் போராட்டம் மூலம் இந்தியாவிடம் 5 கோரிக்கைகளை விடுத்தார். இந்திய அரசு ஒப்பந்தத்திற்குட்பட்ட இக் கோரிக்கைகளைப் புறக்கணித்து திலீபனைப் பலி கொண்டது. இதன் பின்பும் இந்தியாவிற்குச் சந்தர்ப்பம்தரும் வகையில் புலிகள் இந்தியாவுடன் மீண்டும் ஒரு சமரசத்திற்கு வந்தனர்.

இலங்கை அரசு தொடர்ந்து ஒப்பந்தத்தை மீறியது. தென்னிலங்கையில் ஜே. வி. பி. இனதும் சு. க. இனதும் மகாசங்கத்தினதும் எதிர்ப்பைச் சாட்டாகக் காட்டி ஜே. ஆர் ஒப்பந்த மீறல்களை நியாயப்படுத்தலானார். இந்திய எதிர்ப்பு வாதத்தையும் ஒப்பந்த எதிர்ப்பையும் முன்வைத்து ஜே. வி. பி வளரலாயிற்று. ரஜீவ் அரசாங்கம் ஜே. ஆர். இற்கு விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தது ஆனால் இவற்றிற்குப் பின்னால் பல அரசியல் ராஜதந்திர உள்நோக்கங்கள் இரு அரசுகளிடத்திலும் புதைந்து கிடந்தன. இத்தகைய சூழலில் புலிகளின் இரு தளபதிகள் உட்பட மொத்தம் 17பேர் கடலில் இலங்கைக் கடற்படையாற் கைது செய்யப்பட்டனர். இது ஒப்பந்தத்தின் 2 ( ii )விதியை மீறிய ஒரு கைதாகும். இவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசைப் புலிகள் வற்புறுத்திய போதிலும் இந்திய அரசு வாளாவிருந்த நிலையில் இலங்கை அரசு இவர்களைக் கொழும்புக்கு எடுத்துச்செல்ல முயன்றது. இக் கட்டத்தில் இவர்கள் சயனைட் வில்லைகளை அருந்தினர். இந்திய அரசின் பொறுப்பற்ற செயலில் இரு தளபதிகள் உட்பட 13 பேர்களின் உயிர்களைக் காவுகொண்டது. இதனால் தமிழ்ப்பிரதேசம் எங்கும் சீற்றம் நிலவியது. யுத்தம் வெடித்தது. விடுதலைப்புலிகளால் களத்திலிருந்து அகற்றப்பட்ட ஏனைய இயக்கங்கள் இந்தியாவுடன் இணைந்து களத்திற்கு வந்தன.

கெரில்லாப் போர்முறையை ஒரு முக்கிய போர் வடிவமாக விடுதலைப்புலிகள் தேர்ந்தெடுத்தமையால் போதிய இராணுவ அனுபவங்களைப் பெற்று படிப்படியாக ஒரு வலிமையான அமைப்பாக வளர்வது சாத்தியமாயிற்று. ஆனால் ஏனைய இயக்கங்கள் இக்கெரில்லாப் போர் முறையை நிராகரித்தபடியால் போதிய ராணுவ அனுபவங்களைப்பெறாதவர்களாகவும் பின்தங்கியவர்களாயும் காணப்பட்டனர். இதனால் சொந்தக்காலில் நிற்க முடியாத ஈ. பி. ஆர். எல். எவ் ரெலோ, புளொட் இயக்கத்தின் ஒரு பகுதியினர் ஆகியோர் இந்தியாவிடம் பூரண சரணாகதி அடைந்தனர். 6000இற்கு மேற்பட்ட மக்களைப் பலியெடுத்த



இந்தியப்படையுடன் கூட்டுச் சேர்ந்ததால் இறுதியில் இவர்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போயினர் இவர்களோடு சேர்ந்து வந்த முன்னாள் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் 1989 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளையே பெற்று நிராகரிக்கப்பட்டார் என்பதிலிருந்து இவர்கள் எவ்வளவு தூரம் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப்போயினர் என்பது தெளிவாகிறது.

இறுதியாக இந்தியா தன் முயற்சிகளில் அரசியல். இராணுவ, ராஜதந்திர ரீதியாகத் தோல்வியடைந்தது. இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தப்பட்டே தமிழர்கள் சிங்களவர்களால் ஒடுக்கப்பட்டு வந்தனர். ஆனால் இந்தியாவோ தன்பெயராற் பாதிக்கப்பட்டு வந்த மக்களிற்கு உரிய வகையில் உதவாமல் முழுக்க முழுக்கத் தனது நலன்களிற்காக, இலங்கை அரசை அணைத்துக்கொள்வதற்காக தமிழ் மக்களைப் பலியிட்டது.

---

## ஆறாம்
# அத்தியாயம்

## ஆதாரங்கள்


1. மேற்கோள், குமாரி ஜெயவர்த்தனா, பக். 127
2. மேற்கோள், மேற்படி, பக். 128
3. மேற்கோள், மேற்படி, பக். 129
4. மேற்கோள், மேற்படி.
5. Micheal Roberts, (1797), P. 2578
6. விடுதலை, 15-11-1968
7. Rohan Gunaratna, SriLanka : A lost Revolution? The inside story of the jvp, Colombo, (1990), p. p. 356-358
8. A. C Alles, Insurgency - 1971, Colombo, (1979), p.p 24-25
9. L. Piyadasa, p. p. 83 - 84.
10. Cited in Ibid, p. 88.
11 The Island, 30-9-1990
12. A. J. Wilson, The break - up of srilanka : The sinhalese - Tamil conflict, London, (1988), p. 203
13. Stanley Jayaweera, "India planned to Invade lanka in '84'', The Island, 6-10-91.
14. Political wing Ltte, Indo - sriLanka accord [Prabhakaran's Public address at Jaffna (Suthumalai) on 4-8-87].


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏழாம்

# அத்தியாயம்

## பல்லின அரசமைப்பு தோல்வி அடைந்தமை: பொதுவான தர்க்கம்

தேசிய இனப் பிரச்சினை என்பது அடிப்படையிற் தேசிய இனப்பிரச்சனையேதான். நவீன உலகில் பல தேசிய இனங்கள் ஒன்றுகூடி பல்லின அரசுகள் வாழ்வது சாத்தியமாக உள்ள போதிலும் இலங்கை நிலைவரம் அவ்வாறில்லை. பொதுவாக உலக நிலைவரம் இவ்வாறிருக்க இலங்கைத்தீவில் சிங்கள - பௌத்த தேசிய இனம் ஏன் ஏனைய இனங்களை அரவணைக்காது ஒடுக்குகின்றது?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணம் பொருளாதாரப் பிரச்சினை என்றும், வர்க்கப்பிரச்சினை என்றும், சாதிப்பிரச்சினை என்றும், காலனித்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துவ ஆதிக்கத்தின் விளைவு என்றும், நாடாளுமன்ற ஜனநாயக முறைமையின் விளைவு என்றும் பதவிப் போட்டியின் வெளிப்பாடு என்றும், பெரும்பான்மை இனத்தினர் தம்மைச் சிறுபான்மையினராக எண்ணும் ஓர் அச்சம் காரணம் என்றும் இதற்கான விளக்கங்கள் பலவாக உள்ளன.

பெரும்பான்மையினர் தம்மைச் சிறுபான்மையினராகக் கருதுவதை வெளிப்படையாகக் கூறி அதன் பெயரால் ஏனைய இனங்களை ஒடுக்குவதை நியாயப் படுத்துவதாகவும் உள்ளது. இவ்வாறு பல ஆராய்ச்சியாளர்கள் விளக்கமளிப்பதுமுண்டு. இப்படியான விளக்கத்திற்குள் இப்பிரச்சினையின் பரிமாணங்களை குறுக்கிவிடவும் முடியாது. எவ்வாறாயினும் இவ்வாறு கூறப்படும் இக்காரணி பற்றிய நியாயப்பாட்டை இங்கு தர்க்கித்தல் அவசியம்.

சிங்கள - பௌத்தர் தம்மைச் சிறுபான்மையினராக விளக்குவது பற்றிய காரணி பல அம்சங்களைக் கொண்டது அவற்றை நோக்குவோம்.

I. சிங்கள - பௌத்தர்களுக்கு இலங்கையைத் தவிர போவதற்கு வேறொரு நாடுமில்லை; ஏனெனில் இலங்கையில் மட்டுமே சிங்கள - பௌத்தம்உண்டு. இதனைச் சற்று பரிசீலிப்போம்: தேசிய இனம் - தேசிய அரசு அல்லது தேசிய இனங்களின் அரசு என்பதைக் கொண்ட ஒரு யுகமே நவீன உலகம். எனவே தேசிய இனம் என்னும் போது அது ஒரு குறிப்பிட்ட இனத்தையும், குறிப்பிட்டபிரதேசத்தையும், குறிப்பிட்டவரலாற்றையும், குறிப்பிட்ட மரபுகளையும் உடையது. இங்கு தேசிய இனம் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துடன் இணைந்தபதம் என்பதால் எந்தவொரு தேசிய இனத்திற்கும் தான் வாழும் நாட்டுக்கு அல்லது பிரதேசத்திற்கு அப்பால் அவ்வினம்போவதற்கு வேறொரு நாடிருக்காது. உண்மை இப்படியிருக்க போவதற்கு

வேறொரு நாடும் இல்லாதவர்கள் தாம் மட்டுமே என்று சிங்கள - பௌத்தர்கள் ஏன் கருதவேண்டும்?

சிங்கள - பௌத்தம் இலங்கையில் மட்டுமே உண்டு என்று கூறும் காரணத்தை இன்னொருவாறும் நோக்கலாம். சிங்கள - பௌத்தம் இலங்கையில் மட்டும் உண்டு என்பதால் ஏனைய இனங்கள் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது ஒடுக்கப்பட வேண்டும் என்பது தான் இதன் பொருளாயின் றஷ்யர் எனும் தேசிய இனம் சோவியத் யூனியனில் மட்டும் இருப்பதால் அந் நாட்டிற் காணப்படும் ஏனைய இனங்கள் ஒடுக்கப்பட வேண்டும் என்று றஷ்யரும், உக்கிரேனியர் எனும் தேசிய இனம் சோவியத் யூனியனில் மட்டும் இருப்பதால் ஏனைய இனங்கள் ஒடுக்கப்பட வேண்டுமென உக்கிரேனியரும், ஹிந்திக்காரர் எனும் தேசிய இனம் இந்தியாவில் மட்டும் வாழ்வதால் அங்கு ஏனைய இனங்களை ஒடுக்கவேண்டும் எனக் ஹிந்திக்காரரும், தெலுங்கர் எனும் தேசிய இனம் இந்தியாவில் மட்டும் வாழ்வதால் அங்கு ஏனைய இனங்கள் ஒடுக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்திடலாமா? அப்படியாயின் ஓர் இனம் ஒரு நாட்டில் மட்டும் வாழும் போது அது ஏனைய இனங்களை அழிக்க உரிமையுடையது என்ற கருத்திற்கே வந்துசேர வேண்டும். இப்படி ஒரு முடிவிற்கு ஒரு முட்டாள் கூட வரமுடியாது பயித்தியக்காரர்களைத் தவிர.

இலங்கையிலுள்ள இந்தப் பௌத்தர்களின் வாதத்தின் பொருட்டே இன்னொரு கருத்தை நோக்குவோம். பௌத்தம் இலங்கையில் மட்டும்தான் உள்ளதா? பௌத்தம் உலகிற் சிறுபான்மையா? பௌத்தம் இலங்கைக்கு வெளியே பலநாடுகளில் உண்டு. உலகிற் பெரும்பான்மையான முதலாவது மதம் பௌத்தம் தானே. முஸ்லீம்கள் பல இன, மொழிகளைக் கொண்டவர்களாக இருக்கின்ற போதிலும்



மதரீதியாக அவர்களை ஓர் அலகாகக் குறிப்பிடுவது போல பௌத்தர்களும் ஏன் தம்மை ஓர் அலகாக உலகின் பெரும்பான்மையினர் என்று கூறிக்கொள்வதற்குப் பதிலாகத் தம்மைச் சிறுபான்மையினராகக் கருதித் தாழ்வுச் சிக்கலுள் வீழ்ந்து ஏனைய இனங்களை ஒடுக்கவேண்டும்.

II. தென்னாசியாவிற் சிங்கள - பௌத்தர் சிறுபான்மையினராக உள்ளனர் என்ற கருத்து.

தென்னாசியாவிலுள்ள முழுச்சனத் தொகையையும் எடுத்துக் கொண்டு இங்குள்ள எந்தவொரு தேசிய இனத்தையும் அளவீடு செய்தால் எந்தவொரு தேசிய இனமும் தனித்தனியே இங்கு சிறுபான்மை இனமே. அப்படிப் பார்த்தாற் ஹிந்திக்காரர்கூடச் சிறுபான்மை இனம் தான்.

III. தமிழகத்திலுள்ள தமிழருடன் இலங்கைத் தமிழரையும் சேர்த்துப்பார்க்கையில் சிங்களவர் சிறுபான்மையினராயும் தமிழர் பெரும்பான்மையினராயும் உள்ளதால் என்ற கருத்து.

உண்மையில் தேசிய இன அடிப்படையிற் பார்த்தால் தமிழகத் தமிழர் வேறு தேசிய இனம், ஈழத்தமிழர் வேறு தேசிய இனம். அதேவேளை இன்னொன்றையும் நோக்குவோம். அப்படியாயின் இவர்கள் தமிழரை மட்டும்தான் ஒடுக்கினார்கள் என்றில்லை. முதலில் சிங்கள - கிறிஸ்தவர்களை சிங்கள - பௌத்தர் ஒடுக்கினர். பின்பு முஸ்லீம்களை ஒடுக்கினர். பின்பு மலையாளிகளை ஒடுக்கினர். அதன் பின்பு தோட்டத்தொழிலாளர்களை ஒடுக்கினர். இறுதியாக ஈழத் தமிழருக்கு எதிராக ஒடுக்கினர். எனவே இவர்கள் ஈழத்தமிழரைத் தான் ஒடுக்கினார்கள் என்றில்லை. சிங்கள - பௌத்தர் அவ்[illegible]ஏனைய இனங்கள் அனைத்தையும் ஒடுக்கினார்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கள். இங்கு பௌத்தம் அல்லாத எதுவும் எதிர்க்கப்பட்டுள்ளது. அதிற் தமிழ் என்றும் சிங்களம் என்றும் வேறுபாடு காட்டப்படவில்லை. அதாவது சிங்களவர் கிறிஸ்தவர்களாய் இருந்தமைக்காக எதிர்க்கப்பட்டனர்.

கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் இலங்கையில் இருந்த மகாசங்கத்தினர் தமது மகா சங்க நலன் கருதி 'தம்மதீப' எனும் ஐதீகத்தை உருவாக்கினர். மகா சங்கத்தின் நிறுவனத் தன்மை தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்ததால் அது தனது பண்டைய ஐதீகத்தை நவீனவரலாற்றுக்குள்ளும் செலுத்தி சராசரிச் சிங்கள மக்களின் மனதில் 'தம்மதீப' ஐதீகத்தை ஒரு கருத்துருவமாக வளர்த்தெடுத்து விட்டது. இது உண்மையில் நவீன வாழ்வு முறைக்கும், நவீன தேவைகளுக்கும், நவீன சமூக அமைப்புக்கும் முரணானது.

இந்த ஐதீகம் வரலாற்றுச் சூழலில் வளர்த்தெடுக்கப்படவுள்ள யதார்த்தத்தைச் சோகத்துடன் புரிந்து கொள்வோம். வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பெருமாற்றங்கள் ஏற்பட்டவண்ணமாயிருந்தன. இந்தியாவிலிருந்து மக்கள் வருகை, பண்பாட்டு வருகை, தொழில்நுட்ப வருகை இவ்வாறு பல. இவற்றுள் ஒன்றே பௌத்த மதத்தின் வருகையாகும்.

இந்தியாவிற் தோன்றிய பௌத்தம் இலங்கைக்கு பரவியது. ஆனால் தோன்றிய இடத்தில் அது அருகத் தொடங்கியது. இந்தியாவில் பௌத்தம் வளர்ந்து இலங்கைக்குப் பரவியது போலவே, அங்கு இந்து மதம் பெரிதும் தலையெடுத்து இங்கு பரவும் என மகாசங்கத்தினர் அஞ்சினர். வரலாற்றியல்பின்படி புவிசார் வரலாற்றின் பிரகாரம் இந்தியாவில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கையிற் பரவும் என்பது இயல்பு. ஆனால்



இலங்கையின் பௌத்த மகாசங்கம் ஒரு நிறுவனமாகத் திரட்சி பெற்றிருந்த நிலையில் தீவு என்னும் ஒரு வாய்ப்பையும் பயன்படுத்தி தமது நிறுவனத்தைப் பேணுவதற்கான முயற்சிகளைச் செய்வதும் ஓரளவு சாத்தியமாயிற்று. இவ்வாறான முயற்சிகளில் ஒன்றாகவே 'தம்மதீப' எனும் கோட்பாட்டை முன்வைத்தனர். ஆரம்பத்தில் இது இலங்கைத் தீவை பௌத்தத்திற்கென உரிமை கோருவதாக மட்டுமே இருந்தது. இதில் இனம், மொழி, அரசு எனும் அம்சங்கள் இணைந்திருக்கவில்லை. இந்துமதம், மகாயான பௌத்தம் என்பவற்றிற்கு எதிராக சிங்கள - தமிழ் பௌத்த பிக்குகள் ஒன்றாக நின்று வாதிட்டுள்ளனர். ஆனால் பிற்காலத்தில், தென்னிந்தியாவில் மகாயானம் பரவி அங்கிருந்து தமிழ் பிக்குகள் இலங்கைக்கு வந்து தேரவாத பௌத்தத்திற்கு எதிராகச் செயற்படலாயினர். அதுவரை தமிழின எதிர்ப்பை மகாசங்கம் கொள்ளவில்லை. மகாயான தமிழ்ப் பிக்குகளின் வருகையைத்தொடர்ந்து தேரவாத பௌத்தத்தைச் சிங்கள இனத்திற்கே மட்டுமுரியதாக மகாசங்கத்தினர் விளக்கமளிக்கத் தொடங்கினர். இதனால் 'தம்மதீப' எனும் கோட்பாடு பிரதேசம், இனம், மொழி, அரசு எனும் பல அம்சங்களும் பொருந்தியதாக வளரலாயிற்று.

யூதர்களின் புவியியல் வரலாற்றுச் சூழலில் "வாக்களிக்கப்பட்ட பூமி" ("promised land") என்ற ஐதீகம் உருவாகியது போலவே சிங்கள-பௌத்தர்களும் தமது சூழலுக்கேற்ப "தம்மதீப" எனும் ஐதீகத்தை உருவாக்கலாயினர். வாக்களிக்கப்பட்ட பூமி என்ற ஐதீகத்தை நோக்கும்போது யூதர்கள் வாழ்ந்த எபிரேயப் பகுதி வளமற்ற பூமியாக இருந்ததனால் இவர்கள் காலத்திற்குக் காலம் புலம்பெயர நேர்ந்தது. இவ்வாறு புலம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழும் போதெல்லாம் இவர்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கள் அங்கு பெரும் இன்னல் படுத்தல்களுக்கு உள்ளாகினர். இவ்வாறாக இவர்கள் எகிப்தில் வாழ்ந்த காலத் துயரங்களின் நிமித்தமாக அப்பிரதேசத்தை விட்டுத் தமது பழைய இடத்திற்கு வந்து வாழும் சூழலில் இந்த எபிரேயப் பகுதியே தமக்கு இறைவனால் வாக்களிக்கப்பட்ட பூமி என்ற கொள்கையை முன்வைக்கலாயினர். அதேபோல இலங்கைத்தீவில் வாழ்ந்த பௌத்த மகாசங்கத்தினரும் இந்நிலையிலிருந்து வரக்கூடிய மாற்றங்களைத் தடுத்து தமது பௌத்த நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கு புத்த பிரானால் பௌத்தத்தைப் பேணிப்பாதுகாப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் இலங்கையே என்ற ''தம்மதீப'' எனும் கருத்தை முன்வைக்கலாயினர். எனவே ஓர் ஐதிகம்கூட வரலாற்றுச் சூழலின் நிமித்தம் அல்லது அதனைப் பயன்படுத்தி உருவாகின்றது என்ற உண்மையையும் கருத்திற்கெடுத்தல் அவசியம். எப்படியாயினும் சிங்கள-பௌத்தம் மட்டுமே இத்தீவில் வாழவேண்டும் அல்லது வாழலாம் என்ற முடிவுக்கு இம்மகாசங்கத்தினர் போனது தவறு. எப்படியோ இத்தீவிற்கு சிங்களவர்களைப் போலவே தமிழர்களும் உரிமையாளர் என்பதே உண்மை. சிங்கள - பௌத்தர்களை மண்ணின் மைந்தர்களாகவும், தமிழரை அந்நியராகவும் வர்ணிப்பது தவறு. கி. மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் இத்தீவில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக ஒரு தனிப்பண்பாட்டுப் பிரிவினராக வாழ்ந்து வருகின்றார்கள். ஒரே தென்னிந்திய பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டத்திலிருந்து இலங்கைத்தீவில் உருவான இரு பண்பாட்டுப் பிரிவினரே தமிழரும், சிங்களவருமாவர். எனவே சிங்களவர்களைப் போலவே தமிழரும் தமக்கென தனித்துவமான உரிமையுடையவர். ஆதலினால் இத்தீவின் ஒரு பகுதியில் உரிமை கோர தமிழர் முழு அருகதையும் உடையவர். இந்த



வகையில் இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்குப் பகுதி தமிழரின் தாயகமாக உரிமை கோரப்படத்தக்கது-

இதனை இன்னொரு வகையிலும் வாதிடலாம். தேசிய இனம் என்பது நவீன கருத்துருவமும் நடைமுறையுமாகும். நவீன காலத்தில் தமிழர் இலங்கைத்தீவின் வட-கிழக்கு பகுதியை தமது வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய சகல அம்சங்களையும் கொண்டுள்ளனர். எனவே அவர்கள் வாழும் வடக்கு-கிழக்கு அவர்களது தாயகமேயாகும். இதற்கு எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள், கல்வெட்டாதாரங்கள் உண்டா என்ற வாதம் அவசியமில்லை. இதற்கு ஒரு சிறிய உதாரணம் போதும். 15 ஆம் நூற்றாண்டின் பின்பு அமெரிக்காவிற் குடியேறிய ஐரோப்பியர்களுக்கு அமெரிக்கா தாயகமென்றால், அவ்வாறே 16 ஆம், 17ஆம் நூற்றாண்டுகளின் பின்னர் கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிற் குடியேறிய ஐரோப்பியருக்கு அந்த நாடுகள் தாயகமாக முடியுமென்றால், மத்திய காலத்தில் பாகிஸ்தானுள் புகுந்த முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் தாயகமாக முடியுமென்றால் குறைந்தபட்சம் கி. பி, 13ஆம் நூற்றாண்டில் தமக்கெனத் தனியான அரசுடன் வாழ்ந்தவர்கள் என்ற தெளிவான ஆதாரத்தைக் கொண்ட தமிழர், ஐரோப்பியர் வருகையின்போது வடக்குக் கிழக்கில் வாழ்ந்தவர்கள் எனப்படும் தமிழர் ஏன் தமது பிரதேசத்தை தாயகம் என்று கூறமுடியாது? எப்படியோ நீண்ட வரலாற்று விளக்கத்தின்படியும், நவீன தேசிய இன வரலாற்று அர்த்தப்படியும் தமிழர் ஈழத்திற்கு உரிமையானவர்கள். அதன் அடிப்படையில் அவர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனத்தவர்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மகாசங்கம் தன்னைப் பாதுகாப்பதற்கு இனம், மொழி, பிரதேசம், அரசு ஆகிய அனைத்து அம்சங்களையும் தனக்கு அரணாகக் கொண்டு "தம்மதீப" எனும் கொள்கையை முன்வைத்துச் செயற்பட்டு வந்த போதிலும் வரலாற்றின் தவிர்க்கமுடியாத இயல்பின் பிரகாரம் தமிழர்கள் தமக்கெனத் தனியரசு அமைத்து வாழ்வதை அவர்களாற் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாண அரசு வலிமையுடன் வளரலாயிற்று. ஐரோப்பியரின் வருகைதான் யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்டு இறுதியில் தமிழரைச் சிங்களவரின் கையிற் கொடுப்பதாய் அமைந்தது.

எப்படியோ நவீன நிலைமைகளின் பிரகாரம் சிங்கள பௌத்தர்களுடன் இணைந்து நவீன இலங்கையர் அரசை உருவாக்கத் தமிழ்த் தலைவர்கள் முற்பட்டனர். இதன் பொருட்டுச் சேர். பொன். இராமநாதனின் முன்முயற்சிகள் பெரிதும் கவனத்திற் கொள்ளத் தக்கது. 1880 களில் உருவான பௌத்த மறுமலர்ச்சிக்கு இராமநாதன் பெருந்தொண்டாற்றினார். சில உதாரணங்களை மட்டும் இதிற் குடுப்பிட்டாற் போதும். வெசாக் தினத்தை விடுமுறை தினமாக்க வேண்டும் என்று இராமநாதன் குரலெழுப்பி அவ்வாறே அது விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட காரண கர்த்தாவானார். பௌத்த மதமும், பௌத்த பிக்குகளும் பிரித்தானியர்களாலும், கிறிஸ்தவர்களாலும் புறக்கணிக்கப்படுவதாகவும், அவமதிக்கப்படுவதாகவும் வேதனைப்பட்டு 1888ஆம் ஆண்டு சட்டநிருபண சபையிற் பேசலானார் (1). பௌத்தமத நிர்வாகம் சம்பந்தமான பிரேரணை தொடர்பாக இவர் 1888 ஆம் ஆண்டு பேசுகையில் பௌத்த பிக்குகள் புத்தபிரானுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கத் தக்கவர்கள் என்ற மேற்கோளை எடுத்துக் காட்டினார் (2). உலகிலுள்ள எந்தவொரு துறவிகள்



அமைப்பையும்விட இலங்கையின் பௌத்த பிக்குகள் தமது மன்னர் காலத்தில் அதிக தூய்மையுடன் இருந்துள்ளனர் (3) என வாதிட்டார். பௌத்தர்களின் நன்மைக்காக இராமநாதன் வாதிட்டமைக்காக இலங்கையிற் பௌத்த மறுமலர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவரான ஒல்கொட் 1889ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி இராமநாதனுக்கு எழுதிய கடிதத்தில் பௌத்த சமூகத்திற்கு இராமநாதன் ஆற்றிய தொண்டைப்பற்றிப் புகழாரம் சூட்டியிருந்தார் (4). இவற்றுடன் ஆனந்தா கல்லூரியை உருவாக்கும் முயற்சிகளிலும் இவர் பங்கெடுத்தார். பௌத்தத்திற்காகப் பாடுபட்ட வெள்ளையரான ஒல்கொட்டை சிங்கள-பௌத்தர்கள் அரவணைத்தது போல, சிங்கள-பௌத்த கலாச்சாரத்திற்காக உழைத்த கலாயோகி ஆனந்த குமாரசாமியை இவர்கள் அரவணைத்தது போல தமது மதத்திற்காகப் பரிந்து பேசிய சேர். பொன். இராமநாதனையும் ஓர் எல்லைவரை ஆதரித்தனர். ஆனால் அந்த எல்லைக்கு அப்பால் இந்து - பௌத்த இணைவின் நிமித்தமான சிங்கள-தமிழ் இணைவுக்கு மகாசங்கத்தினர் தயாராகவில்லை.

தமது பௌத்த மதவளர்ச்சிக்கு உதவினார். பாடுபட்டார் என்பதற்காக 1912 ஆம் ஆண்டு கற்ற இலங்கையர்க்கான தேர்தலில் கிறிஸ்தவர் பின்னணியைக் கொண்ட மாக்கஸ் பெனாண்டோவுக்கு எதிராக இராமநாதனுக்கு கற்ற சிங்கள - பௌத்தர் வாக்களித்தனர். பௌத்தமறுமலர்ச்சிக் காலத்தில் கிறிஸ்தவ எதிர்ப்பு தலையாய இடத்தைப் பெற்றிருந்தது. எனவே கிறிஸ்தவ பின்னணியைக் கொண்ட மாக்கஸ் பெனாண்டோவிற்கு எதிராக, தமது பௌத்த நலனின் பொருட்டுப் பாடுபட்ட இராமநாதனுக்கு வாக்களித்தனர். பௌத்தர் எதிர்பார்த்தது போலவே நம்பியபடியே 1915 ஆம் ஆண்டு பௌத்த-முஸ்லீம் கலகத்தின் போது இராமநாதன் பௌத்தர் பக்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிற்கலானார். இவ்வாறு தமக்காக அவர் பாடுபட்டவர் என்றதன் பேரிலும் இனியும் பாடுபடுவார் என்ற நம்பிக்கையின் பேரிலும், பௌத்தர்கள் இராமநாதனை தனிப்பட்ட முறையில் ஒரு கொழுகொம்பாகப் பற்றிக்கொண்ட போதிலும் இந்து - பௌத்த ஐக்கியம் பற்றிய இராமநாதனின் நிலைப்பாட்டை அவர்கள் ஆதரிக்கவில்லை.

1989 ஆம் ஆண்டு இந்து - பௌத்தக் கல்லூரிகளை நிறுவுவதற்கென இந்துக்களும், பௌத்தர்களும் இணைந்த ஒரு செயற் குழுவை இராமநாதன் உருவாக்க முயன்றார். அதற்கென 25,000 ரூபா பணத்தையும் இவர் நன்கொடையாக வழங்கினார். (அக் காலகட்டத்தில் 25,000 ரூபா பல பிரமாண்டமான கட்டிடங்களை கட்டப்போதுமானது). ஆனால் இவ்வாறு இந்து - பௌத்த கல்லூரிகளை ஆரம்பிக்க சிங்கள - பௌத்தர்கள் விரும்பவில்லை. அவர்கள் தனியாகப் பௌத்தக் கல்லூரிகளையே அமைக்க விரும்பினர். இதன்பின்பு பௌத்தர்களுக்கெனத் தனிக்கல்லூரிகளும் இந்துக்களுக்கென தனியான கல்லூரிகளும் ஆரம்பமாகலாயிற்று (5). கொழும்பில் இந்து-பௌத்தர் இணைந்த கல்லூரிகளை உருவாக்கும் இராமநாதனின் முயற்சி தோல்வியடைந்தமையாற்தான் இந்துக்களுக்கென தனிப்பட்ட கல்லூரிகளை யாழ்ப்பாணத்தில் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார்.

கிறிஸ்தவப் பின்னணியைக் கொண்ட சிங்கள அரசியற் தலைவர்களை விடவும் இராமநாதன் பௌத்த வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் என்ற காரணத்திற்காக இராமநாதனைச் சிங்கள - பௌத்தர் ஆதரித்திருந்த போதிலும் தமிழரும் சிங்களவரும் இணைந்த இலங்கையர் தேசியத்திற்கான அடிப்படை விடயத்தில் அவர்கள் விட்டுக்கொடுக்கவில்லை. சேர். பொன். இராமநாதன் கலாச்சார அரசியற் தளத்



தில் சிங்கள-பௌத்தர்களுடன் தத்துநின்றது போலவே அவரது சகோதரன் சேர். பொன். அருணாசலமும் இலங்கையில் தேசியத்தை அரசியல் ரீதியில் உருவாக்க முயன்று தோல்வி கண்டார். இராமநாதன் சகோதரர்கள் இலங்கையில் தேசியத்திற்கான முன்முயற்சிகளைச் செய்தபோதிலும் அதனைச் சிங்கள-பௌத்தர் ஏற்க மறுத்த நிலையில் அவர்களே (சகோதரர்கள்) இறுதியிற் சிங்கள அரசியலில் விரக்தியுற்றனர். எனவே தமிழர் தலைவர்கள் சிங்கள - தமிழ் இனங்கள் இணைந்த ஐக்கிய இலங்கைக்காக கை நீட்டிய போதிலும் சிங்கள - பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் ஏனையவற்றை நிராகரித்து சிங்கள-பௌத்தம் என்ற ஒரே கொள்கையின் பால் வளரலாயிற்று.

1898 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் அனுராதபுரத்தில் இந்துக்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்த போது பௌத்த பிக்குகள் அக்கூட்டத்தைக் குழப்பியமை பற்றி விவேகானந்தர் தனது குறிப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> “ஒருமுறை அனுராதபுரத்தில் இந்துக்களிடையே - புத்தர்களிடையிலன்று - ஒருவர் சொத்துமில்லாத ஒரு திறந்த மைதானத்திலே சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது புத்தபிக்குகளின் கூட்டம் ஒன்று ஆண், பெண்களுடைய பாமரக்கூட்டம் பின்தொடர தம்பட்டங்களை அடித்துக்கொண்டும் ஜாலராகங்களைத் தட்டிக் கொண்டும், பெரும் சத்தத்தைக் கிளப்பிக் கொண்டும் வந்தது. சொற்பொழிவு நின்று போயிற்று. இரத்தக்களரி உண்டாவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. அவர்கள் அஹிம்சையை கடைப்பிடிக்காவிடினும் நாமாவது கடைப்பிடிப்போம் என்று நான் இந்துக்களுக்கு எடுத்துக்கூறி நிலைமையைச் சமாதானப்படுத்தினேன். பின்னரே அமைதி நிலவிற்று” (6)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விவேகானந்தர் ஒரு தமிழன் அல்ல. ஆயினும் அவரை பிக்குகள் எதிர்த்தனர். பிறமதங்கள் எதனையும் எதிர்ப்பது மகாசங்கத்தின் பண்பு. விவேகானந்தர் ஓர் இந்து; ஓர் இந்தியன், எனவே அவரையும் அவர் நடாத்திய கூட்டத்தினையும் எதிர்த்தனர்.

இந்து-பௌத்த ஐக்கியத்துக்காக இராமநாதன் எடுத்த முயற்சிகளை இவர்கள் நிராகரித்ததில் இருந்தும் விவேகானந்தரின் கூட்டத்தை குழப்பியதில் இருந்தும் இந்து மதம் சம்பந்தமாக பௌத்த நிறுவனம் கொண்டிருந்த மனப்பாங்கு தெளிவாகத் தெரிகிறது. இங்கு இவர்கள் தமிழன் - சிங்களவன் என்ற வேறுபாட்டை விடவும் மதத்திற்குள்ளாகத் தான் பிரச்சினையை பெரிதும் பார்த்துள்ளனர். ஆனால் மொழி, இனம் என்ற கருத்துருவம் அவர்களின் பௌத்த நிறுவனத் தேவைக்கு ஓர் அணிகலனாக அமைந்தது. இந்தியனாகிய விவேகானந்தர் வந்து இந்துமத பிரசங்கம் செய்தமை பௌத்தர்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியதென்றே கூற வேண்டும். அவர்களிடம் ஊறி இருந்த இந்திய எதிர்ப்பு இதற்குள் பளிச் என வெளிப்பட்டதெனலாம்.

பௌத்த நிறுவனத்தினர் அடிப்படையில் இந்தியாவுக்கு எதிரான சிந்தனையையே கொண்டிருந்தனர். புவிசார் - வரலாற்று நிலைமைகளின் பிரகாரம் இந்தியாவில் இருந்தே அவர்களது பௌத்த நிறுவனத்துக்கான சவாலை எதிர் நோக்கினர். ஆனால் 16 ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து ஐரோப்பியர் வருகை ஏற்பட்டதால், உலகளாவிய ஒரு வரலாற்று மாற்றப் போக்கின் பிரகாரம் பௌத்த நிறுவனத்தின் புதிய எதிரிகளாக ஐரோப்பியர் அமைந்தனர். ஐரோப்பியரிடம் ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் பிரகாரம் இலங்கை - இந்திய புவிசார் வரலாற்றுப் போக்கை கடந்த வகையில் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து ஐரோப்பியர்



இலங்கைக்கு வருவது சாத்தியமாகியது. பௌத்தர்கள் எதிர்பார்த்த இந்திய சவாலுக்கு பதிலாக எதிர்பாராதபடி ஐரோப்பாவில் இருந்து சவால் வந்தது. இவ்வாறு பௌத்தர்களின் முதல் எதிரிகளாக ஐரோப்பாவில் இருந்து வந்த கிறிஸ்தவமும் அது சார்ந்த அரசியலும் அமைந்தது. தமது பாரம்பரிய எதிரியை இப்பொழுது இரண்டாம் பட்சமாக்கி புதிய எதிரியை பௌத்தம் எதிர் கொள்ளலாயிற்று.

இந்நிலையிற்தான் நவீன வரலாற்றில் கிறிஸ்தவ எதிர்ப்புடன் பௌத்தம் தனது போர்க் கொடியை 1880 களில் உயர்த்தியது. அது தனது இரண்டாவது எதிரியாகக் கருதியது முஸ்லீம்களை. அதற்கு எதிராக தனது போர்க்கொடியை பௌத்தம் 1910களில் உயர்த்தியது. அது தனது அடுத்த எதிரியாக கருதியது புதிதாக வந்து கொண்டிருந்த மலையாளிகளை. அவர்களுக்கு எதிராக 1930 களில் அது போர்க் கொடி உயர்த்தியது. அடுத்ததாக 1940 களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியது. இறுதியாக 1950 களில் இலங்கைத் தமிழருக்கு எதிராக போர்க் கோலம் பூண்டது. இவ்வாறாக ஒவ்வொரு காலகட்டத்திலும் பிற இன, மதத்தவருக்கு எதிராக அது தனது நிலைப்பாட்டை படிப்படியாக எடுக்கலாயிற்று.

'' சுதந்திரத்தின் '' பின் அரசியல் அதிகாரத்தை சிங்கள பௌத்தத்தின்கையில் முழுமையாக எடுக்கவும், ஏனைய இன, மத, மொழி அனைத்திற்கும் எதிரான ஒரு முழுமையான நிலைப்பாட்டை எடுத்து பௌத்தத்தை முதன்மைப்படுத்தவும் அது முயன்றது. குடும்ப அரசியல் ஆதிக்கப் போட்டியின் பிரகாரம் சேனநாயக்க குடும்பத்துடன் முரண்பட்ட பண்டாரநாயக்க தனது அரசியல் பதவி அபிலாசைகளை அடைவதற்குரிய இலகுவான வழியாக பௌத்த நிறுவனத்தை பயன் படுத்தலானார். இந்நிலையில் மேற்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூறிய சிங்கள - பௌத்த நிறுவனத்திற்கு அரசியற் தலைமை கொடுப்பவரானார். சிறுபான்மை இனத்தவரின் பாதுகாப்பிற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அற்ப 29 சரத்தையும் மீறி பண்டாரநாயக்க அரசாங்கம் செயற்படலாயிற்று. அவ் வழிமுறையை ஐ. தே. காவும் முழுமையாக கடைப்பிடிக்கலாயிற்று. இவ்வாறான பதவிப் போட்டியின் காரணமாய் சிங்கள-தமிழ் இனப்பிரச்சினை முழு வடிவம் பெறலாயிற்று.

கிறிஸ்தவத்தையும், இஸ்லாத்தையும் பணிய வைத்தபின்பு பௌத்தர் தமது பாரம்பரிய எதிரியாகக் கருதிய இந்தியாவிற்கு எதிராக முனைப்படையலாயினர். இதன் பொருட்டு மலையாளிகளின் எதிர்ப்பு, தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் எதிர்ப்பு என்பவற்றை மேற்கொள்ளலாயினர் (முஸ்லீம்களும் இந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்தனர் என்பதை கருத்தில் கொள்ளலும் அவசியம்). கள்ளக் குடியேற்றத் தடுப்புமுகாம் எனப்பெயரிட்டு வடக்கில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டமையும் கருத்தில் கொண்டால் இலங்கைத் தமிழரை இந்தியாவில் இருந்து வந்த "கள்ளத் தோணிகள்" என்ற கருத்துருவினையே அவர்கள் கொண்டிருந்தனர் என்பதும் தெரியவரும். எப்படியோ இந்திய எதிர்ப்பின் வெளிப்பாடாகவே இலங்கைத் தமிழரையும் இவர்கள் கருதிய போக்கு தெளிவாகிறது.

சிங்களவரின் கண்ணுக்கு புலப்படாத எதிரி என்ற அர்த்தத்தில் 1970 ஆம் ஆண்டு சிறில் மத்தியூ எழுதி வெளியிட்ட ஒரு நூலின் முன்புற, பின்புற அட்டையில் உள்ள வரைபடங்கள் இங்கு கவனத்தில் கொள்ளப்படத்தக்கன. இந்தியாவில் இருந்து ஓர் இராட்சதக் கால் வடக்கு - கிழக்கில் தனது காலைப் பதிப்பதாக முன்புற அட்டையிலும், இந்தியாவில் இருந்து



ஓர் இராட்சதக் கை இலங்கையின் கழுத்தில் கயிற்றை வீசி இந்தியாவுடன் இழுத்துக் கட்டுவதாய் பின் புறத்திலும் படம் வரையப்பட்டுள்ளது.

முன்புற அட்டையின் மூலம் இலங்கைத் தமிழரை இந்தியாவின் அரசியற் பிரதிநிதிகளாகப் பார்த்ததுடன் இந்த வழியிற் போனால் இந்தியா இலங்கையுடன் இணைக்கப்பட்டு விடும் என்ற பொருளில் பின்புற அட்டைப்படமும் அமைந்துள்ளது. எனவே இந்திய ஆதிக்கத்தின் ஓர் அங்கமாக தமிழரைப் பார்க்கின்றனர் என்பதும் அதன் பெயரால் தமிழரை பெரிதும் ஒடுக்குகின்றனர் என்பதும் ஐயம் திரிபற தெளிவாகின்றது.

அண்டை நாடொன்றில் இருந்து ஒரு நாட்டுக்குத் தாக்கம் ஏற்படுவது இயல்பு. அதற்காக அவற்றைத் தமது மதக்கண்ணோட்டத்தில் நின்று கொண்டு தமிழரை ஒடுக்க வேண்டும் என்றில்லை. சிங்களவருக்கு இத்தீவு எவ்வாறு சொந்தமோ அவ்வாறே தமிழருக்கும் இத்தீவு சொந்தம் இவர்கள் மதக்கண்ணோட்டத்தில் இருந்து இந்தியாவின் மீதான அச்சத்தின் பெயரால் தமிழரின் தனித்துவத்தை, கூட்டுத் தன்மையை கரைத்து விடப்பார்க்கிறார்கள்.

அயல் நாட்டுடன் ஏதாவது பிரச்சனை இருந்தால் அதனை அதற்குரிய வழியிற் தீர்க்க வேண்டுமே தவிர ஓர் அயல் நாட்டின் மீதான அச்சத்தின் பெயரால் உள்நாட்டில் வாழும் ஒரு மக்கள் கூட்டத்தின் உரிமையை நசுக்குவது சற்றும் பொருத்தமற்ற மிக அநியாயமான செயலாகும்.

ஒரு பொதுப் பண்பாட்டு மூலத்தில் இருந்து உருவாகிய இரு பண்பாட்டுக் கூறுகளே சிங்களமும் தமிழும். அவ்வாறான இரு பெரும் பண்பாட்டுக் கூறுகளினதும் பிறப்பிடம் இலங்கைத்தீவு. எனவே நவீன



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிலைமைகளுக்கு ஏற்ப தமிழரும் சிங்களவரும் நவீன இலங்கையின் இன ஸ்த்தாபகர்கள் (Co - Founders) இணை உரிமையாளர்கள் (Co - Owners) என்ற அடிப்படையில் ஒரு புதிய பல்தேசிய அரசை உருவாக்கியிருக்க வேண்டும். கனடாவில் ஆங்கிலேயரும், பிரென்சுக்காரரும் Co - Founders Of A New Nation [7] என்று இணைந்து கொண்டது போல இலங்கையிலும் இரு தேசிய இனங்களும் Co - Owners என அங்கீகரிக்கப்பட்டுச் செயற்பட்டிருக்கலாம். ஆனால் இத்தகைய நவீன போக்கிற்குத் தடையாக சிங்கள - பௌத்தர் செயற்பட்டனர். பல்தேசிய இன அரசை கட்டி எழுப்புவதற்கு குந்தகமாக சிங்கள - பௌத்தர் செயற்பட்டதன் மூலம் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பெரும் எதிரிகளாகவும் இருந்தனர். எனவே இலங்கையின் தேசிய ஐக்கியத்தை குழப்பியது சிங்கள பௌத்தர்களே.

மிக மிருகத்தனமாக ஒடுக்கப்பட்ட தமிழர் தாம் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதன் அடிப்படையில் தமக்கென தனியான ஓர் அரசை அமைக்க முற்படலாயினர். இது தமிழர்களின் பிறப்புரிமை, வாழ்வுரிமை, ஜீவாதாரவுரிமை.

தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசியத் தன்மை உள்ளவர்களாக இருப்பதைச் சிங்கள - பௌத்தர்கள் விரும்பவில்லை. தமிழர்கள் இலங்கையில் எங்கும் வாழலாம். அவர்கள் தாம்விரும்பும் மதத்தை அனுஷ்டிக்கலாம். அதேபோல சிங்களவர்களும் எங்கும் குடியேறலாம் என்று இப்படி ஒரு நியாயத்தை கூற முற்பட்டுள்ளனர். விவாதத்தின் பொருட்டு இதனை எடுத்துக் கொண்டால் இங்கு இவர்கள் கூறுவது தனிப்பட்ட உரிமையே தவிர (Individual Rights) கூட்டுரிமையல்ல (Collective Rights). தமிழ்த் தேசிய இனம் என்பது அதன் கூட்டுரிமையிலேயே உள்ளது. தமிழ் மண்ணில் சிங்கள குடியேற்றங்களை ஏற்றுக்



கொண்டால் தமிழ் மக்களின் தேசியத் தன்மை கரைந்துவிடும் ஆனால் முழுத் தமிழரும் சிங்களப் பிரதேசங்களில் சென்று குடியேறினாலும் சிங்களவரின் தேசிய தன்மை கரையாது. எனவே தமிழர்கள் போராடுவது தமது கூட்டுரிமைக்காக என்பதை சிங்கள - பௌத்தர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து நடைமுறையிற் தனிப்பட்ட வாழ்வுரிமையை எடுத்துக் கொள்வோம் தென்னிலங்கையில் சாதாரணமாக வாழ்ந்து வந்த தமிழருக்கு 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் என்ன நடந்தது? தனிமனித உரிமையைப் பற்றி சிங்கள - பௌத்தவாதிகள் கதைக்கும் போது அதில் ஒரு மனிதாபிமானச் சாயல் அடிக்கும். ஆனால் அதனை அடிப்படையில் பார்த்தால் அது ஒரு தேசிய இனக் கருச்சிதைவு அல்லவா?

இலங்கையில் இந்திய எதிர்ப்பு மேலும் மேலும் வளர்ந்தது. 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே. ஆர். அரசாங்கம் இந்திய எதிர்ப்பிற் காலூன்றி மேற்கைத் தேச சார்பாக பெரு வடிவம் பெற்றது. வெளிப்படையாகவே இந்தியாவுடன் தமிழரைச் சம்பந்தப்படுத்தி தமிழரை மேலும் மேலும் ஒடுக்கினர். இவற்றின் மறு பக்க விளைவாக இந்தியா தமிழரின் பெயரால் இலங்கையில் நேரடியாகத் தலையிடலாயிற்று.

ஆனால் உண்மையில் இந்தியா தமிழ் மக்களின் நலனுக்காக இலங்கையில் தலையிட்டது என்றில்லை. அது தனது நலனின் அடிப்படையிலேயே தலையிட்டது. இலங்கை — இந்திய ஒப்பந்தம் நிகழ்ந்த காலத்திலும் இந்திய இராணுவம் இலங்கைக்குத் தருவிக்கப்பட்ட போதிலும் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்தவரும், தற்போது இந்தியாவின் வெளியுறவுச் செயலாளராக உள்ளவருமான ஜே. என். டிக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஷிற் இலங்கை — இந்திய ஒப்பந்தம் சம்பந்தமாகவும், இலங்கைக்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது சம்பந்தமாகவும் இந்திய பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளர் மற்றும் இராஜதந்திரிகள் மத்தியிலும் 1989 ஆம் ஆண்டு உரையாற்றுகையில் " இலங்கைக்கு நாம் சென்றதன் [ இராணுவத்தை அனுப்பியதன் ] பிரதான நோக்கம் எமது தேசத்தின் சொந்த ஒருமைப்பாட்டை பேணிக் கொள்வதற்காகவே " [8] என்று கூறினார். அவர் தொடர்ந்து விளக்குகையில் இது சம்பந்தமாக இரண்டு காரணங்களைத் தெளிவாக்கினார் அதாவது 1960 களில் தென்னிந்தியாவில் தமிழர்கள் மத்தியில் பிரிந்து செல்வதற்கான தனிநாட்டுக் கோரிக்கை எழுந்ததென்றும், இலங்கைத் தமிழர் மத்தியில் தற்போது தலையெடுத்துள்ள தனிநாட்டுப் போராட்டம் எதிர்காலத்தில் தமிழகத்தில் பிரிவினைப் போராட்டம் எழ வழிவகுக்கலாம் என்றும் விளக்கினார். அத்துடன் இலங்கையில் அந்நிய சக்திகளின் வருகை இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகமாக இருந்ததாகவும் இந்த வகையில் இலங்கை மண்ணிற் கால்வைத்துள்ள மொசாட், சினி — மினி என்பனவற்றைக் குறிப்பிட்டும், பாகிஸ்தான் இலங்கையிற் கடற்படைப் பயிற்சி அளிப்பதையும், இலங்கையில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா சம்பந்தமான விவகாரங்களைக் குறிப்பிட்டும் இவற்றையெல்லாம் தடுக்கும் வகையிற்தான் இந்திய — இலங்கை ஒப்பந்தம் அமைந்ததென்றும், இந்திய இராணுவம் அனுப்பப்பட்ட தென்றும் விளக்கினார் [9]. இவர் கூறிய இந்த இரண்டு காரணங்கள் மூலமும் இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டமை இந்தியாவின் சொந்தநலன் சம்பந்தமானதே என்பதைத் தெளிவாக்கி நிற்கின்றன.

இதில் நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில் இந்தியாவுடன் இலங்கைத் தமிழரைச் சம்பந்தப் படுத்தி சிங்கள — பௌத்தர் தமிழரை மோசமாக



ஒடுக்கினர். அதேவேளை டிக்ஷிற் கூறிய முதலாவது விளக்கத்தின்படி தென்னிந்தியத் தமிழருடன் ஈழத் தமிழரைச் சம்பந்தப்படுத்தி அதன் நிமித்தம் ஈழத் தமிழரை இந்திய அரசு ஒடுக்கியதென்பதே. அதாவது இலங்கையில் இந்திய ஆதிக்கத்திற்குத் தமிழர் வழி வகுத்துவிடுவர் எனக் கூறித்தான் சிங்கள அரசு தமிழரை ஒடுக்கியது. ஆனால் ஈழத்தமிழர் இந்தியாவின் ஐக்கியத்திற்குப் பாதகமாய் அமைந்துவிடுவர் என எண்ணிய இந்திய அரசு தமிழகத்திற் தனிநாட்டுப் போராட்டம் எழாது தடுக்க வேண்டும் என்பதற்காக ஈழத்தமிழரை மிக மோசமாக ஒடுக்கியது. இந்தியாவுடன் தமிழரைச் சம்பந்தப்படுத்தியே சிங்களவரும், ஆங்கிலேயரும், இந்தியரும் தமிழரை ஒடுக்கியுள்ளனர். இந்தியாவின், பெயரால் காலம் காலமாக ஒடுக்கப்பட்டுவந்த தமிழரை இந்திய அரசும் ஒடுக்கிய இந்தச் சோகத்தை, இந்த வரலாற்று இருதலை நிலையை எப்படி வர்ணிப்பது?

**ஏழாம்**

## அத்தியாயம்

**ஆதாரங்கள்**


1. Hansard, 5 - 12 - 1888.
2. The Ceylon Daily, News Press, Select Speeches of Ponnampalam Ramanathan Delivered in the Legislative Council of Ceylon, Colombo ( 1929 ) P. 170.
3. IBID, P. 175.
4. M. Vythilingum, The Life of Sir Ponnampalam Ramanathan, Vol. 1, Colombo ( 1971 ), PP. 282—283.
5. IBID, PP. 540 — 541.
6. சுவாமி விவேகானந்தர் ஞானதீபம், சுடர், 8, பக். 161.
7. Report of The Royal Commission, Bilingualism and Biculturalism Ottawa, ( 1967 ).
8. J. N. Dixit, " What Brought the Ipkf Here ? " Lanka Guardian, Vol. 12, No. 17, ( January 1990 ) P. 11.
9. IBID PP. 11 — 12


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## முடிவுரை

புவிசார் - வரலாற்றுச் சூழலின் பிரகாரம் பௌத்தமதக் கண்ணோட்டத்தில் இருந்து இந்திய எதிர்ப்பை மையமாகக்கொண்ட "தம்மதீப" எனப்படும் சிங்கள - பௌத்த கருத்துருவம் மகா சங்கத்தினரால் உருவாக்கப்பட்டு அதன் மூலம் இந்திய ஆதிக்கத்தின் ஓர் அம்சமாகத் தமிழரை எண்ணிப்பேரினவாத ஒடுக்குமுறையை நிறுவனப்படுத்தலாயினர்.

சிங்களவர் பக்கம் ஏற்படும் அரசியற், பொருளாதார - வர்க்க, பதவிப் போட்டிப் பிரச்சினையின் போதெல்லாம் தமிழருக்கு எதிரான இனவாதத்தைச் சிங்கள அரசியல்வாதிகள் கையில் எடுத்து தமது பிரச்சினைகளைத் தீர்க்கவோ அல்லது தமது இலக்குக் களை அடையவோ முற்படலாயினர். இதற்கு "தம்மதீப" கருத்துருவம் இவர்களுக்குக் கைகொடுக்கலாயிற்று. எனவே பௌத்த நோக்கு இனவாதமென்பது ஒவ்வொரு காலகட்ட நிலைமைக்கும் ஏற்ப அவ்வக்காலகட்டப் பிரச்சினைகளுடன் இணைந்து புதுவடிவமும் பல்பரிமாணமும் பெறலாயிற்று.

தமிழ் மக்களின் உரிமைகளை ஆரம்பத்திற் பல சிங்களத் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருந்த போதிலும், அவ்வாறு ஒப்புக் கொண்டிருந்த அத்தலைவர்களே பின்பு காலகதியில் தீவிர இனவாதிகளாய் உருவெடுத்த போது, தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்கள் எவரின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாதவர்களாயினர்.

சிங்களத் தலைவர்கள் தமது சந்தர்ப்பவாதத்திற்கும் ஏனைய பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் இனவாதத்தையே ஒரு கருவியாகப் பயன்படுத்தி உள்ளனர். இலங்கையில் இராணுவத்தை வளர்க்கவும், இராணுவத்தை அரசியல்மயப்படுத்தவும் அவர்கள் இனவாதத்தை பயன்படுத்தினர். தமிழரின்முழு ஜனநாயக உரிமைகளையும் சிங்கள ஆட்சியாளர்கள் மீறியதுடன் சிங்களமக்கள் மத்தியிலான ஜனநாயக உரிமைகளை மீறவும் இந்த இனவாதத்தையே பயன்படுத்தினர். இவற்றின் மூலம் இலங்கையிலுள்ள சகலவிதமான பிற்போக்கு நடவடிக்கைகளின் மையமாக சிங்கள-பௌத்த இனவாதம் உள்ளதெனலாம்.

இலங்கையின் ஐக்கியத்தை விரும்பியவர்கள் தமிழர்கள். ஆனால் இலங்கையினது ஐக்கியத்தின் எதிரிகளாகச் செயற்பட்டவர்கள் சிங்களத் தலைவர்கள். சிங்களத் தலைவர்கள் நவீன சிந்தனைக்கேற்ப மக்களை வழிப்படுத்தித் தலைமைதாங்கவில்லை. மாறாக பௌத்தமத நிறுவனத்திடம் காணப்பட்ட பிழையான



சிந்தனைப்போக்கை தமது அற்ப அபிலாசைகளுக்கான அரணாகக் கொண்டு சிங்கள மக்களைக் கெடுத்தனர். இந்தவகையில் நாகரிகத்தின் பக்கத்தில் நின்று பார்க்கும்போது சிங்களத் தலைவர்கள் அசிங்கத்தின் பிரதிநிதிகளாய்க் காட்சியளிப்பர்.

தேசிய இனப்பிரச்சனைக்கு இந்த நவீன உலகம் பலவகைத் தீர்வுகளைக் கண்டுள்ளது. அரைச் சமஷ்டி, சமஷ்டி, கூட்டாட்சி எனப் பலவாறான தீர்வுகள் உள்ளன. இவைகள் முடியாதபட்சத்திற்தான் தனிநாட்டுக் கோரிக்கை எழுவதுண்டு. சிங்கள-பௌத்தர்கள் சாதாரணமான மாவட்டசபை ஆட்சி முறைக்குக்கூடத் தயாரில்லாத சூழலிற்தான் தமிழீழப் போராட்டம் எழுந்தது. தமிழ் மக்களைத் தனிநாட்டுக் கோரிக்கையின்பாற் தள்ளியவர்கள் சிங்களவர்களே.

இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைபற்றிய பல்வேறு காரண காரியங்களையும் பார்த்தோம். இதில் தமிழ்மக்கள் பக்கம் எல்லாவித நியாயமும் உண்டு என்பது தெளிவாகின்றது. எல்லாவற்றிற்கும் அப்பால் இன்று தமிழ் மக்கள் மிருகத்தனமாக ஒடுக்கப்படுகின்றனர் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இப்போது இந்தப் பிரச்சினைக்கான தீர்வு ஒடுக்கப்படும் தமிழ்மக்களை அவர்கள் விரும்பியவாறு அவர்களின் தலைவிதியை அவர்களே நிர்ணயிக்க விடுவதுதான். 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தாம் விரும்பும் வழி தமிழீழ அரசமைப்பது என்று கூறிவிட்டனர். எனவே இலங்கையில் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதென்பது தமிழர் விரும்பும் தமிழீழக் கோரிக்கையை அங்கீகரிப்பதிலிருந்தே ஆரம்பமாகவேண்டும். ஜனநாயகத்தைப் போதிக்கும் எந்தவொரு நாடும், எந்தவொரு சிங்கள நபரும் முதலில் இதனைத்தான் செய்யவேண்டும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# SELECT BIBLIOGRAPHY


1. Abeyasinghe Tikiri **Portuguese Rule in Ceylon 1594 - 1612**, Colombo, ( 1966 ).
2. Arasaratnam . S , **Ceylon**, New Jersey, ( 1964 ).
3. Arunachalam . P, **Collected Speeches and Writings**, Colombo ( 1936 )
4. Balasingam . K , Selected **Speeches**, Colombo, ( 1929 ).
5. Bandaranaike . S. W. R. D. , **Hand Book of the Ceylon National Congress 1919 - 1928, Colombo**, ( 1928 ).
6. **Speeches and Writings**, Colombo ( 1963 )
7. **Towards A New Era**, Colombo, ( 1961 ).
8. Buddhist Committee of Enquiry, **The Betrayal of Buddhism**, Colombo ( 1956 ).
9. De Silva . K. M. ( E D. ), University of Ceylon - History of Ceylon Vol. I (1959 ), Vol. II ( 1960 ) and Vol. III ( 1973 ), Colombo.
10. **A History of Sri Lanka**, California, ( 1981 ).
11. Dharmapala Anagarika, **Return To Righteousness**, Colombo ( 1965 ).
12. Farmer, B. H. **Ceylon : A Divided Nation**, London, ( 1963 )
13. Fernado. J. L. **Three Prime Ministers of Ceylon**, Colombo, ( 1963 ).
14. Geiger W. ( Trans ), **Culavamsa**, London ( 1927 ).
15. **Mahavamsa**, London ( 1912 )
16. Government Publication, Papers **Relating to the Constitutional History of Ceylon**, 1908 - 1924, Ceylon, ( 1927 ).
17. **Ceylon Report of the Special Commission on the Constitution** Colombo, ( 1928 ).
18. **Ceylon Report of the Commission on** Constitutional Reform, London, ( 1945 ).
19. **The Constitution**, of Sri Lanka, 1972, Colombo, 1972 ).
20. The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, 1978, Colombo, ( 1978 ).
21. Jayawardene, J. R. **Selected Speeches**, Colombo, ( 1964 ).
22. Jayawardena Kumari, **Ethnic and Class Conflicts in Sri Lanka** Colombo ( 1990 ).
23. Kearney, R. **Communalism and Language in the Politics of Ceylon**, ( 1967 ).
24. Kodikara, S. V. Indo - Ceylon Relations Since Independence Colombo, ( 1965 ).
25. Mendis, G. C. **Ceylon Today and Yesterday Main Currents of Ceylon** History Colombo, ( 1963 ).
26. Ceylon Under The British, Colombo, ( 1944 ).
27. Pathmanathan. S, **The Kingdom of Jaffna**, Colombo, (1978).
28. Perera, N. M. **Critical** Analysis, of the New Constitution of the Sri Lanka Government, Colombo, ( 1979 ).
29. Phadnis . V, Religion and Politics in Sri Lanka, New Delhi, ( 1976).
30. Piyadasa. L, **Sri Lanka**: The **Holocaust and** After, **London 1984.**
31. Ponnambalam. G. G. Tamils **and Political Reforms.**
32. Ponnambalam Satchi, Sri Lanka: **The National Question and the Tamil Liberation Struggle**, London ( 1983 )
33. Ragupathy . P, **Early** Settlements in **Jaffna: An Archaelogical Surrey** Madras. ( 1987 ).
34. Rahula Walpola, **History of Buddhism in Ceylon** - The **Anuradhapura Period** Colombo, ( 1956 )
35. Roberts Michael ( E D. ), Collective Identities, Nationalisms and Protest in Modern Sri Lanka, Colombo. ( 1979 )
36. Russel Jane, **Communal Politics Under The Donoughmore Constitution**, ( 1931 - 1947 ) Sri Lanka, ( 1982 ).






தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

37. Vittachi Tarzie, Emergency' 58: The Story of Ceylon Race Riots, London (1958).

38. Wijewardene D. C, Revolt in the Temple, Colombo (1953)

39. Wilson A. J. The Break-UP of Sri Lanka the Sinhalese - Tamil Conflict London (1988).

40. ——— Politics in Sri Lanka 1947 - 1979, London (1979).

41. Wriggins Howard, Ceylon: Dilemmas of A New Nation. Princeton, (1960).

42. உதயகுமார் அ. ஸி., இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் அரசியலும் வல்லரசுகளின் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைத் தாக்கங்களும், யாழ்ப்பாணம் (1990).

43. சமூக விஞ்ஞானிகள் சங்கம், இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், யாழ்ப்பாணம் (1985).

44. நித்தியானந்தன். வி, இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி, யாழ்ப்பாணம் (1989)

45, பாலசிங்கம். ஏ. எஸ், தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம், கொழும்பு (1980).




## நன்றி

பல்வேறு சிரமங்கள் நிறைந்த காலத்தில் இந்நூல் உருவானது. இதற்கு மானசிகமாக ஒத்துழைப்பு வழங்கியோர் பலர். யாழ்- பல்கலைக்கழக நூலகம், ஈர்பிலின் இரத்தினம் நூலகம் என்பனவற்றை இதற்குப் பெருமளவு பயன்படுத்தினேன். நூல்களைத் தந்துதவிய பல தனிநபர்களும் உண்டு. பல்கலைக்கழக நூலகத்தில் சகல ஊழியர்களும் என்னுடன் நன்கு ஒத்துளழத்தனராயினும் திருமதி ஆர். பராசசிங்கம், திருவாளர்கள் எஸ் பத்மநாதன், வி. தனபாலசிங்கம் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். ஈர்பிலின் இரத்தினம் நூலகத்தில் செல்வி சோ. ஜெயகௌரி போதியளவு ஒத்துழைத்தார். நூல்களைத் தந்துசவிய தனிநபர்களுள் திருவாளர்கள் பொன். பூலோக

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கசிங்கம், எஸ். எஸ். வம்போதரன் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். அத்துடன் மயிலங்கூடலூர் திரு. க. நடராசன் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

கி. பி. 1ஆம், 2 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் நிலவிய வரலாற்றுச் சூழல் பற்றி என்னுடன் உரையாடியதுடன் றொபேட் நொக்ஸ் பற்றிய சந்தேகம் ஒன்றையும் தீர்க்க திரு. சி. சிவசாமி உதவினார். இலங்கையில் போர்த்துக்கேயர் கால வரலாற்று நிலைமை பற்றி திருமதி சோ. கிருஷ்ணகுமாருடனான உரையாடலும், பௌத்த மறுமலர்ச்சிக்கு சேர் பொன். இராமநாதன் ஆற்றிய பணி பற்றி திரு. கௌரி காந்தனுடனான உரையாடலும் பலனுள்ளனவாய் அமைந்தன. ஒவ்வொரு அத்தியாயத்தையும் வாசித்து ஆர்வத்துடன் தனது அபிப்பிராயங்களை திரு. ரவி என்னுடன் பகிர்ந்துகொண்ட முறையானது அடுத்த அத்தியாயங்களை புத்துணர்வுடன் எழுத எனைத் தூண்டியது. இந்நூலுக்கான அட்டைப் படத்தை திரு. நிலாந்தன் வரைந்து தந்தார்.

இவ்வாறு நேரடியாக எனக்கு உதவி புரிந்தவர்கள் மட்டுமன்றி மறைமுகமாக உதவிபுரிந்தோரும் பலர். இதில் உதவி புரிந்த அனைவருக்கும், தமிழ்த்தாய் பதிப்பினருக்கும் அச்சக ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றி.

ஆசிரியர்.

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| முன்னுரை | 2 | 5 | புத்த | புத்தி |
| 4 | 3 | 2 | cf | of |
| 5 | 1 | 1 | பொருயளில் | பொருளியல் |
| 6 | 1 | 12 | பற்றி | பற்றிய |
| 6 | 3 | 3 | பிணைத்துள்ளது | பிணைந்துள்ளது |
| 7 | 3 | 5 | Coatent | Content |
| 8 | 2 | 8 | Sovereignihy | Sovereignty |
| 13 | 1 | 1 | பலியா | பலியாகி |
| 15 | 2 | 4 | Terriforial | Territorial |
| 20 | 5 | 5 | Plebiseile | Plebiscite |
| 23 | 3 | 5 | 1974 | 1972 |
| 29 | 3 | 5 | முகிழ்ந்தது | முகிழ்த்தது |
| 30 | 3 | 4,5 | குடியேற்றம் | குடியிருப்பு |
| 37 | 2 | 1 | பௌத்த | பௌத்தத் |
| 40 | 2 | 6 | யிலிருந்து | யிலிருப்பது |
| 42 | 2 | 6-7 | பௌத்தத்தால் | பௌத்தத்தில் |
| 52 | 1 | 3 | ஆழ் | ஆள் |
| 54 | 2 | முழுவதையும் 52 ஆம் பக்கத்தில் அடிக் குறிப்பாகச் சேர்த்துக் கொள்க. | | |
| 56 | 4 | 2 | பிரித்... சிங்கள... | சிங்கள... பிரித் |
| 60 | 2 | 12 | கமலாதேவி. | கமலாதேவி |
| 64 | 3 | 2 | நம்பிட | தம்பிட |
| 64 | 5 | 6 | ஏற | ஏற் |
| 75 | 3 | 5 | கயைின் | கலின் |
| 80 | FN 10 | | 1938 | 1988 |
| 82 | FN 38 | | Famer | Farmer |
| 84 | 1 | 27 | தவறின் | தவறின |
| 86 | 3 | | குணாணந்த | குணானந்த |
| 87 | 1 | 2 } | கணாணாத் | கனாணாத் |
| 92 | 1 | 11 } | | |
| 96 | 1 | 11 | Exsodus | Exodus |
| 100 | 3 | 2 | காசியப்பனை மகன் | காசியப்பன் தந்தையை |
| 105 | FN 3 | | Gananth | Gananath |
| 108 | 3 | 11 | நூலின் | நூலில் தாமி வித்தாச்சி |
| | 4 | 3 | யூனியன் | யூனியஸ் |

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 109 | 1 | 1 | பாணியிலான | பாணியிலான கிறீஸ்தவ |
| 109 | 2 | இறுதி | கட்சிகளாயினர் | கட்சிகளாயின |
| — | பொது | | ஐ. தே. கா. | ஐ. தே க. |
| 129 | 1 | 5 | கித்தர | கித்த |
| | 1 | 18 | காசி | தாசி |
| 129 | 1 | 25 | லட்சதித்ற்கு | லட்சத்திற்கு |
| | 2 | 3 | பொருளாகாரணம் | பொருளாதாரம் |
| 132 | 2 | 7 | எஸ். | எஃப். |
| 133 | 2 | 4 | யுத்தத்தில் | நடவடிக்கையில் |
| 136 | 1 | 1 | யாருமெ | யாரும் |
| 138 | 4 | | கர்க்க | தர்க்க |
| 153 | 3 | 16 | இளிமினி | கிளிமினி |
| 156 | 2 | 17 | செயலில் | செயல் |
| 156 | 2 | 18 | 13 | 12 |
| 161 | 5 | 10 | தமிழருக்கு எதிராக | தமிழரை |
| 168 | 1 | 4 | ாநதனை | நாதனை |
| 168 | 2 | 1 | 1989 | 1789 |
| 169 | 1 | 1 | தத்து | ஒத்து |
| 174 | 1 | 2 | இன் | இணை |
| 176 | 1 | 20 | சினி | கினி |

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இலங்கையில் தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடு சிக்கலானது. சிக்கலான இவ்விடயத்தை மிக எளிமையாக விளக்க இந் நூல் முயன்றுள்ளது. அதில் வெற்றியும் கண்டுள்ளது.

தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடுகள் முற்றிலும் புதியகோணத்தில் பார்க்கப்பட்டுள்ளது. அதற்கான தரவுகள் ஆழமாக ஆராயப்பட்டு அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் முன்னரும் பல பெயர்களில் அரசியல் நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

''உதயன்'' என்ற பெயரில்:-

- ''இலங்கையின் இனங்கள், இனப்பிரச்சினை என்பவற்றின் தோற்றம்'' (1984)
- ''யாருக்காக இந்த ஒப்பந்தம்'' (1987)
- ''இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஓர் அமெரிக்கசதி'' (1989)

''சர்மா'' என்ற பெயரில்:-

- ''தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியாவும்'' (1985)

தனது இயற்பெயரில்:-

- ''புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு'' (1991)

என்ற நூல்களையும்;

உதயன் என்ற பெயரில் விஜயன் என்பவருடன் இணைந்து:-

- ''இந்து சமுத்திரப் பிராந்தியமும்: இலங்கையின் இனப்பிரச்சினையும்'' (1986) என்ற நூலையும் எழுதியுள்ளார்.

இத்துடன் ''சாரணன்'' என்ற பெயரில் பல அறிவியல், அரசியல் கட்டுரைகளை ''சாளரம்'' திங்கள் இதழிலும், ஈழநாதம் தினசரி பத்திரிகையிலும் எழுதி வருகின்றார்.

தமிழ்த்தாய் பதிப்பகம்,
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive